
அவசியம்
பக்கம் 02


உதவும்
பக்கம் 04


நிரந்தர சிகிச்சை
பக்கம் 15


சம்பியன்
பக்கம் 20

20.00

www.onlineuthayan.com

பக்கங்கள்: 64

★

# உதயன்

சுடர் 27
கதிர் 120

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 12 ஞாயிற்றுக்கிழமை (25/03/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

### சாதாரண தரப் பெறுபேறு அடுத்த வாரம்

நடந்து முடிந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் அடுத்த வாரத்தில் வெளியிடப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. தற்போது பெறுபேறுகள் பரிசீலிக்கப்பட்டு வருவதாகப் பரீட்சைகள் ஆணையாளர்நாயகர் எம்.எம்.ஜே. புஸ்பகுமார தெரிவித்தார். கடந்த டிசெம்பர் மாதம் முடிவடைந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் பாடசாலை மற்றும் தனியார் பரீட்சாத்திகள் 5 லட்சத்து 32 ஆயிரம் பேர் தோற்றியிருந்தனர்.

### மெய்பாதுகாவலர் மரணம்

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் மெய்ப்பாதுகாவலர் நேற்றுக் காலை மாரடைப்பால் மரணமானார். பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது இவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதாகவும் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் மரணமானதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

### ரயில் மோதி ஒருவர் பலி

கொள்ளுப்பிட்டிக் கடற்கரைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில், ஓடும் ரயிலில் மோதுண்டு நபரொருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் குறித்த சடலம் பிரேத பரிசோதனைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். இச்சம்பவம் தொடர்பாக மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

### மருந்து இறக்குமதி

அமைச்சரவையின் தீர்மானத்துக்கு அமைய மருந்து வகைகளைத் துரிதமாக இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இது தொடர்பான தரப்பினருக்கு, அறிவுறுத்தலை விடுத்துள்ள ஜனாதிபதி, சில மருந்து வகைகளை உள்நாட்டிலே உற்பத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயும்படியும் தெரிவித்துள்ளார்.

### ரிதிகமவில் ஒருவர் வெட்டிக் கொலை

ரிதிகம - உடஹொராம்புவ பகுதியில் நேற்றுக் காலை 7.45 மணியளவில் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பிரதேசவாசிகளிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டவரின் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர். 54 வயதுடைய ரூபசிங்க ஜயவீர என்பவரே இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டவராவார். கொலை தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படாத நிலையில் ரிதிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசு ஒருபோதும் அடிபணியாது

## ஜெனிவா தீர்மானம் குறித்து தெற்கில் எதிர்ப்பு வலுக்கிறது

கொழும்பு, மார்ச் 25

ஜெனிவா மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள இலங்கை மீதான தீர்மானத்தை ஒருபோதும் ஏற்கப் போவதில்லை எனவும் சர்வதேச அழுத்தங்களுக்கு அடி பணிய மாட்டோம் எனவும் தெற்கு அரசியல் தலைவர்கள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்காவின் தலைமையில் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானம் இலங்கையை எந்த விதத்திலும் கட்டுப்படுத்த மாட்டாது எனவும் அவர்கள் கூறியுள்ளனர். ஜெனிவா தீர்மானத்தை முற்றாக எதிர்க்கும் வகையிலேயே தெற்கில் உள்ள அரசசார்புக்கட்சிகளின் கருத்துகள் அமைந்துள்ளன. ஜனாதிபதி உட்பட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தீர்மானத்துக்கு எதிரானகருத்தையேவெளியிட்டு வருகின்றனர்.

முக்கியமாக அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களும், ஜே.வி.பியின் உறுப்பினர்களும், பேரினவாத அமைப்புகளின் தலைவர்களும் இந்தக் கருத்துகளை வெளியிட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் களுத்துறை மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி,

"இது சுயாதீனமான நாடு. இங்கு அநாவசியமான அழுத்தங்களைப் பிரயோகிக்க எவருக்கும்இடமளிக்கமுடியாது. இலங்கையரான

04↘

### ஐரோப்பாவில் தூதரகங்களை மூடுகிறது இலங்கை அரசு

கொழும்பு,மார்ச் 25

ஐரோப்பிய நாடுகளில் செயற்படும் சில இலங்கைத் தூதரகங்களை மூடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜெனிவா மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பிலான பிரேரணை நிறைவேற்றப்பட்டதை அடுத்துவெளிநாட்டு சேவைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இலங்கையுடனான இராஜ தந்திர உறவுகளை உரியமுறையில் முன்னெடுக்காத நாடுகளிலுள்ள தூதரகங்களையே மூடுவதற்குத் தீர்மானித்துள்ளதாகக் கொழும்பில் இருந்து வெளியாகும் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும் பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன்

04↘

## ஆணைக்குழுப் பரிந்துரைகள் தொடர்ந்து கண்காணிக்கப்படும்

### ஆயர் இல்லத்தில் கனேடிய எம்.பிக்கள்



யாழ்ப்பாணம், மார்ச் 25

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணங்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் எந்தளவுக்கு அமுல்படுத்தப்படுகின்றது என்பதை கனடா உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கும்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்குச் சர்வதேச ரீதியான அழுத்தங்களையும் கனடா கொடுக்கும்.

இவ்வாறு யாழ். ஆயர் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போது கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், சமாதானத்துக்கும்

04↘

## சர்வதேச விசாரணை வரும்

### அரசை எச்சரிக்கிறது ஐ.தே.க.

கொழும்பு,மார்ச் 25

தேசியப் பிரச்சினையை தீர்ப்பதற்கு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளை உடனடியாக அரசு செயற்படுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் இலங்கைக்கு எதிராகத் தடைகளும் சர்வதேச விசாரணையும் கொண்டுவரப்படலாம் என ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்திருக்கிறது.

'கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளை அமுலாக்காதுவிடின் நாட்டில் பெரும் அரசியல், பொருளாதார சிக்கல்கள் தோன்றும். சர்வதேச விசாரணை ஒன்று

04↘

### ஜெனிவா சென்ற இலங்கைக் குழு நாடு திரும்பியது

கொழும்பு, மார்ச் 25

ஜெனிவா மனித உரிமைகள் சபையின் மாநாட்டில் கலந்து கொள்ளவெனச் சென்றிருந்த இலங்கை குழுவினர் நேற்றுக் காலை நாடு திரும்பியுள்ளனர்.

அமைச்சர் மஹிந்த சமரசிங்கவின் தலைமையில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் உட்பட பல அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள்,நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஜெனிவா சென்றிருந்தனர்.

இலங்கை தொடர்பில் அமெரிக்கா முன்வைத்த பிரேரணை குறித்துச் சர்வதேச நாடுகளுக்குத் தெளிவுபடுத்தும் நோக்கில் இவர்கள் ஜெனிவா சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## இந்திய உயர்குழு வருகை இரத்து

### கொழும்பு சீற்றத்தில் உள்ளமையே காரணம்

புதுடில்லி, மார்ச் 25

இந்தியாவின் அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் இலங்கைப் பயணம் இப்போது இடம்பெறாது எனப் புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தப் பயணம் ரத்துச் செய்யப்படலாம் அல்லது பின்தள்ளிப் போகலாம் எனவும் டில்லியின் இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தில் அமெரிக்கா இலங்கை மீது கொண்டுவந்த தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவாக வாக்களித்துள்ளமையே இந்த நெருக்கடி நிலைக்குக் காரணம் என்று தெரியவருகிறது. இந்தியாவின் இந்த முடிவால் கொழும்பு கடும் ஆத்திரம் அடைந்துள்ளதாகப் புதுடில்லிக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் இதனால் இந்தப் பயணம் இப் போதைக்கு உகந்தது அல்ல என

04↘

## மனித உரிமை குறித்து இலங்கை போதிய கவனம் செலுத்தவில்லை

### கனடா வெளிவிவகார அமைச்சர் குற்றச்சாட்டு

ஒட்டோவா, மார்ச் 25

இலங்கை அரசு மனித உரிமைகள் தொடர்பில் இன்னும் போதிய கவனம் செலுத்தவில்லை. இறுதிக் கட்ட போரின்போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் போர்க் குற்றங்கள் தொடர்பில் நீதியான விசாரணை நடத்த வேண்டும் எனக் கனேடிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் பெயார்ட் தெரிவித்துள்ளார்.

போர் முடிவுக்கு வந்து மூன்று ஆண்டுகள் ஆகியும் மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை அரசு இதுவரை கவனம் செலுத்தவில்லை. அத்துடன் இலங்கை அரசின் சர்வாதிகாரப் போக்கு மேலோங்கி வருவதையே காணக்கூடியதாக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டமையினை கனடா வரவேற்கிறது.

கனடிய அரசானது இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின்போது நடைபெற்ற


04↘

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மனித உரிமை ஆர்வலர் மீதான அழுத்தங்களை கண்டிக்கிறோம்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கை




நியூயோர்க், மார்ச் 25

இலங்கையின் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் கண்டிக்கப்பட வேண்டியவை என மனித உரிமைகள் கண்காணிப் பகம் தெரிவித்துள்ளது.

குற்றச் செயல்களுக்குத் தண்டனை விதித்தல் தொடர்பில் சர்வதேச சமூகத்தின் வலுவான ஆர்வத்தையே இலங்கை தொடர்பான தீர்மானம் வெளிப்படுத்தி நிற்பதாகவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக் காட்டியுள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் இலங்கை அரசு உரிய முறையில் விசாரணை நடத்தவில்லை என்றே சர்வதேச சமூகம் கருதுகின்றது எனவும், அதன் வெளிப்பாடே இந்தத் தீர்மானம் எனவும் மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஜெனீவா பிரதிநிதி ஜுலியட் டி ரிவிரோ தெரிவித்துள்ளார்.

பாரிய குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதே பல நாடுகளின் கருத்தாக அமைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்த ஐக்கிய நாடுகள் அமைப்பு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தீர்மானத்துக்கு ஆதரவாகச் செயற்பட்ட மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீதான அடக்குமுறைகள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். அமர்வுகளில் பங்கேற்ற மனித உரிமை செயற்பாட்டாளர்கள் துரோகிகள் என இலங்கை அரச ஊடகங்கள் சித்திரித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.(த)

### சுயகட்டுப்பாடு ஊடகங்களுக்கு அவசியமானது



கொழும்பு, மார்ச் 25

ஊடகங்கள் சுய கட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டும் என்று பதில் ஊடக அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடு தொடர்பான சில விடயங்கள் குறித்து ஊடகங்கள் நிதானமாகச் செயற்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஊடக சுதந்திரம் காணப்படுகின்றது எனவும், எனினும் ஊடகங்கள் சில விடயங்களை மிகவும் நிதானமாக கையாள வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் நன்மதிப்புக்குக் களங்கம் ஏற்படக் கூடிய விடயங்களில் ஊடகங்கள் சுயதணிக்கைகளைப் பயன்படுத்த வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (த)

### 92 பணிப் பெண்கள் சவுதி சிறையில்

றியாத், மார்ச் 25

சவுதி அரேபியாவுக்கு வேலை வாய்ப்பினைப் பெற்றுச் சென்ற இலங்கையைச் சேர்ந்த 92 பேர் தற்போது அநாதரவான நிலையில், சவுதி அரேபியாச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பணிப்பெண்களாகச் சென்ற இவர்கள் வேலை வழங்குநரால் பல்வேறு துன்புறுத்தலுக்கு உள்ளான நிலையில், தற்போது சவுதி அரேபியாவில், சட்ட விரோதமாக தங்கியுள்ள இலங்கைப் பணிப்பெண்களே இவ்வாறு சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இவர்களை இலங்கைக்கு மீட்டுக்கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளில் சவுதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதுவராலயம் ஈடுபட்டு வருகிறது. (த)

# முறையான செயல் திட்டத்தை விரைவில் உருவாக்குங்கள்

## இலங்கையிடம் தொடர்ந்து வலியுறுத்துகிறது அமெ.



வாஷிங்ரன், மார்ச் 25

ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கெதிராகக் கொண்டு வந்த தீர்மானம் வெற்றிபெற்ற கையுடன், பொறுப்புக்கூறுதல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான உறுதியான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அதற்கான முறையான செயல் திட்டத்தை உருவாக்குமாறும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கான முறைப்படியான திட்டம் ஒன்றையும் கூடிய விரைவில் உருவாக்குமாறும் அமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ளது.

இது • தொடர்பாக, வோஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்ரோரியா நுலன்ட் தெரிவித்ததாவது:-

கடந்த நவம்பர் மாதம் தொடக்கம் நாம் கேட்டு வருவதற்கும் இதற்கும் எந்த வித்தியாசமும் இல்லை. இலங்கை அரசு தமது மக்களுக்கு நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை எவ்வாறு நடைமுறைப் படுத்தப் போகிறது என்பதே அனைத்துலக சமூகத்தின் கேள்வியாக உள்ளது.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு கூடிய விரைவில் நடைமுறைபடுத்த வேண்டும். இதனை நாம் முன்வைத்து பல மாதங்களாகக் கோரி வந்துள்ளோம்-என்றார் (த)

# நிலையான சமாதானத்துக்கு ஐ.நா. தீர்மானம் வழிகோலும்

## சர்வதேச மன்னிப்புச் சபை

லண்டன், மார்ச் 25

நிலையான சமாதானத்தை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைத் தீர்மானம் வழிகோலும் எனச் சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னரும் இலங்கையில் மனித உரிமை நிலைமைகள் திருப்தி அளிக்கும் வகையில் அமையவில்லை என சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிராந்திய வலயப் பணிப்பாளர் சாம் சர்ப்பாரி தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானத்திற்கு நைஜீரியா, இந்தியா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளும் ஆதரவளித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். எனவே இதனை வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான போராட்டமாகக் கருத முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தவறான திசையில் பயணிப்பதாகச் சர்வதேச சமூகம் கருதுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார். அமைதியான முறையில் விமர்சனங்களை வெளியிடுவோர் பகிரங்கமாக அச்சுறுத்தப்படுவது கண்டிக்கப்பட வேண்டியது என அவர் தெரிவித்துள்ளார்.

தீர்மானத்தைச் சரியான முறையில் அமுல்படுத்தச் சர்வதேச சமூகம் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (த)

### மாக்ஸிசம் நீண்ட காலம் நிலைக்காது

#### பாப்பரசர் 16ஆவது ஆசிர்வாதப்பர்

மெக்சிக்கோசிற்றி, மார்ச் 25

மெக்சிக்கோவுக்கு வரலாற்றுச் சிறப்பு மிக்க பயணத்தை மேற்கொண்டுள்ள பாப்பரசர் 16ஆவது ஆசிர்வாதப்பருக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெறும் போதைப் பொருளுடன் தொடர்புடைய வன்முறைகளுக்கு 16 ஆவது ஆசிர்வாதப்பர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இளைஞர்கள் இதுபோன்ற நடவடிக்கைகளில் இருந்து விடுபட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. மெக்சிக்கோவுக்கான மூன்று நாள் விஜயத்தை நிறைவு செய்த பின்னர், கியூபாவுக்குச் செல்லவுள்ள பாப்பரசர், மாக்ஸிசம் நீண்ட காலம் நீடிக்காது என கூறியுள்ளார்.

சித்தாந்தம் நீண்ட காலம் நீடிக்காது என சுட்டிக்காட்டிய பாப்பரசர், புதிய மாதிரிகள் கண்டறியப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார். சிந்தனை மற்றும் மத சுதந்திரம் சார்ந்ததாக தேவாலயங்கள் எப்போதும் இருக்கும் எனவும் பாப்பரசர் 16 ஆவது ஆசிர்வாதப்பர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போதைப் பொருள் தொடர்பான வன்முறைகளால் பாதிக்கப்பட்டுள்ள தமது நாட்டுக்குப் பாப்பரசர் பயணம் செய்துள்ளமை முக்கியமான ஒன்றென மெக்சிக்கோ ஜனாதிபதி பிலிப் கல்டரோன் கூறியுள்ளார்.

மெக்சிக்கோவில் இன்று நடைபெறவுள்ள ஆராதனையில் மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.(த)

# பயங்கரவாதிகள் உங்களையும் விட்டுவைக்க மாட்டார்கள்

## தீர்மானத்தை ஆதரித்த நாடுகளுக்கு ஜனாதிபதி மஹிந்த எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 25

ஜெனிவாவில் நாம் 15 வாக்குகள் பெற்றோம். மேலும் எட்டு நாடுகள் எமது வேலைத்திட்டங்களை ஏற்றுக்கொண்டுள்ளன. அந்த நாடுகள் கடும் அழுத்தங்கள் காரணமாகவே வாக்களிக்காமல் விட்டன.

எமக்கு வாக்களிக்காத நாடுகளுக்கு நான் ஒன்றை ஞாபகப்படுத்துகின்றேன். பயங்கரவாதிகள் அந்த நாடுகளிலும் கொடிகளை உயர்த்திக் கொண்டு செய்யப் போகும் பாதிப்புகளை அவர்களும் அனுபவிக்க நேரும் என்பதை மறந்து விடக்கூடாது. இது அவர்களுக்குப் பின்னர் புரியும்.

களுத்துறை மாவட்டத்தில் உள்ள பண்டாரகமவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

பயங்கரவாத நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வந்த நிலையில், நிரந்தரமான சமாதான சூழ் நிலையை எதிர்காலத்தில் கொண்டு செல்வதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மூன்று தசாப்த காலமாக இந்த நாட்டைச் சீரழித்த பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்து நாட்டில் அமைதியை ஏற்படுத்தி அபிவிருத்தியில் நாட்டைக் கட்டியெழுப்பி வரும் வேளையிலேயே நாட்டுக்கு எதிரான அழுத்தத்தை எதிர் கொள்ள நேர்ந்துள்ளது.

நாம் 2005 ஆம் ஆண்டு இந்த நாட்டைப் பொறுப்பேற்றபோது நாட்டு மக்கள் அபிவிருத்தியையோ வேறு எதையுமோ எம்மிடம் எதிர்பார்க்கவில்லை. பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டைச் சுதந்திரமாக்குமாறே கேட்டனர். அதை நாம் முழுமையாக நிறைவேற்றியுள்ளோம்.

பயங்கரவாதத்துக்குக் கப்பம் வழங்காமல் வெற்றி கொள்ளப்பட்ட யுத்தம் என்பதால் மக்கள் இன்று சுதந்திரமாகவும், கௌரவமாகவும் வாழக்கூடிய சூழல் உருவாகியுள்ளது. இதனூடாக சகல மக்களும் தமது பொருளாதாரத்தையும் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்திக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையராகிய எம்மை எவரும் அடிமைப்படுத்த முடியாத கௌரவம் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. சகல மதங்களும் இனங்களும் அவர்களின் வழிபாடுகள், கலாசார பண்பாடுகளைச் சுதந்திரமாக அனுபவிக்கும் நிலையைத் தோற்றுவிக்க முடிந்துள்ளது.

இவ்வளவு காலமும் வடக்குக்குப் போகாதவர்கள் ஜெனிவாவில் அமெரிக்கா பிரேரணையை முன்வைத்த பின்னர் வடக்குக்குச் சென்று அங்குள்ள மக்கள் மத்தியில் விசமத்தனமாகப் பேசுகின்றனர்.

இப்போது புலி ஆதரவாளர்களும் புலம்பெயர் தமிழர் அமைப்புகளுமே எமது தோல்வியில் மகிழ்ச்சி காண்கின்றனர் என்பதை மக்கள் உணர வேண்டும்.

இது சுயாதீனமான நாடு. இங்கு அநாவசிய அழுத்தங்களைப் பிரயோகிக்க எவருக்கும் இடமளிக்க முடியாது-என்றார். (த)

# தமிழ்நாட்டு மச்சானுக்காகவே தம்பியை எதிர்த்தார் அக்கா

## தீர்மானத்தை இந்தியா ஆதரித்தமை குறித்து அமைச்சர் டிலான் விளக்கம்



கொழும்பு, மார்ச் 25

இலங்கையின் மூத்த சகோதரியான இந்தியா, இலங்கை மீது அன்பு இல்லை என்ற காரணத்துக்காக அமெரிக்காவுக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை. தமிழ் நாட்டு மச்சானுடன் இருக்கும் திருமண பந்தத்தைக் காப்பாற்றிக் கொள்ளவே ஆதரவு வழங்கியது என அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஹாலி-எல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளைத் தோற்கடித்தபோது, இந்தியா இலங்கைக்குப் பெரும் உதவிகளைச் செய்தது. எனினும் இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் நாட்டு மச்சான் சின்னச் சண்டையைப் போட்டார். மூத்த அக்காளின் கணவர் தானே இந்த மச்சான். இந்த முறை தம்பிக்கு உதவ முடியாது. அப்படி உதவினால் நான் விவாகரத்துச் செய்வேன் என மச்சான் கூறினார். அவர் வெறுமனே அப்படிக் கூறவில்லை. இதனால் விருப் பமின்றியேனும் திருமணத்தைக் காப்பாற்ற வேண்டிய தேவை அக்காவுக்கு நேர்ந்ததுடன் தனது சின்னத் தம்பிக்குஎதிராக வாக்களித்தார்.

அமெரிக்காவின் சண் டித்தனத்துக்கு அஞ்சி, அக்கா, தனது சின்னத்தம்பிக்கு எதிராகவும் வாக்களிக்கவில்லை. அவர் தனது திருமணத்தைக் காப்பாற்றிக்கொள்ளவே ஆதரவு வழங்கினார். இதனால் அடுத்த முறை அமெரிக்கா, சண்டித்தனம் செய்யும்போது, மூத்த அக்கா, தம்பியின் பக்கம் இருப்பார் எனவும் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசிப்பு வைத்திருந்தவருக்கு அபராதம்

சாவகச்சேரி,மார்ச் 25
கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணத்தை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மீசாலை மேற்கைச் சேர்ந்த பெண்ணுக்கு சாவகச்சேரி நீதி மன்றில் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தது.

சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அந்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் பெண்ணைக் கைது செய்ததுடன் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் ஆகியவற்றையும் கைப்பற்றினர்.

பொலிஸார் இந்தப் பெண்ணையும் கைப்பற்றப்பட்ட பொருள்களையும் நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் பெண் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் மூன்று மாதங்கள் சாதாரண சிறைத் தண்டணை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (ம-9)

# காளையை வெட்டத் தடை

### யாழ். அரச அதிபர் திடீர் நடவடிக்கை

*யாழ்ப்பாணம், மார்ச் 25*
*சுமார் 2 ஆயிரத்து 500 இறாத்தல் எடைகொண்ட காளை மாடு ஒன்றை இறைச்சிக்காக விற்பனை செய்வதற்காக அதன் உரிமையாளர் அதனை வீதிகளில் காட்சிப்படுத்தி விளம்பரம் செய்ததையடுத்து அந்தக் காளைமாட்டை இறைச்சிக்காக வெட்டக்கூடாது என யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் பொலிஸார் ஊடாக உத்தரவிட்டுள்ளார்.*



கடந்த 22 ஆம் திகதி திருநெல்வேலி கால் நடை பண்ணையில் ஏலத்தில் வாங்கப்பட்ட காளை மாட்டை அதன் உரிமையாளர் நகர்ப் பகுதியில் காட்சிப் படுத்தியதையடுத்து சமூக, சமய அமைப்புகள் விசனம் அடைந்திருந்தன. இதனை அடுத்தே அரச அதிபர் மேற்படி உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதன்படி கொல்கலத்துக்குச் சென்ற பொலிஸார் நாளை (இன்று) அதனை கொல்லக்கூடாது என்று பணித்ததுடன் அதற்கு பொலிஸ் காவலும் இட்டுள்ளனர்.

ஐரோப்பா இனத்தைச் சேர்ந்த பல லட்சம் ரூபா பெறுமதியான இந்தக் காளை மாடு பார்வையிடுவதற்காக நேற்றும் நேற்று முன்தினமும் யாழ்.நகர வீதிகளில் கட்டப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள அரச பண்ணைகளில் வளர்க்கப்பட்ட மாடுகளில் இது மிகப் பெரிய இனமாகக் கருதப்படுகிறது. இந்த மிகப் பெரிய காளையை மக்கள் கூடி நின்று பார்வையிட்டனர். மாடு காட்சிக்காக கட்டப்பட்ட இடங்களில் துண்டுப் பிரசுரம் ஒன்றும் விநியோகிக்கப்பட்டது. அதில் இந்தக் காளை மாடு இன்று ஞாயிற்றுக்கிழமை இறைச்சிக்காக வெட்டப்பட்டு, குறித்த ஒரு இடத்தில் உள்ள இறைச்சிக் கடையில் விற்பனை செய்யப்படும் என அந்த துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மக்கள் கூடிநின்று இந்தக் காளை மாட்டைப் பார்வையிட்டனர். மாட்டின் இறைச்சியை விற்பனை செய்வதற்காகவே, இவ்வாறு உரிமையாளர் இந்த விளம்பரத்தை மேற்கொண்டதாகத் தெரியவருகிறது. யாழ்ப்பாணத்தில் மாடு ஒன்று இப்படி விளம்பரப்படுத்தி விற்பனை செய்யப்பட்டமை இதுவே முதல் முறை என அதனைப் பார்வையிட்ட முதியவர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தக் காளைமாடு இவ்வாறு வீதி வீதியாகக்கொண்டு சென்று இறைச்சிக்காக வெட்டப்படவுள்ளதாக விளம்பரப்படுத்தப் பட்டமை பலரையும் விசனம் அடையச் செய்தது. ஏற்கனவே யாழ்.குடாநாட்டின் சில இடங்களில் இடம்பெற்று வரும் வேள்விகள் குறித்துப் பலரும் அதிருப்தியும் கண்டனமும் தெரிவித்து வரும் நிலையில் இந்த மாடு இப்படி விளம்பரப்படுத்தப்பட்டமை குறித்துப் பலரும் தமது கண்டனத்தைத் தெரிவித்தனர்.

இவ்வாறான நடவடிக்கை இந்துக்களைப் புண்படுத்தும் செயல் எனவும் இதனை இங்கு அனுமதிக்க முடியாது எனவும் பசு மற்றும் இடபங்களைப் பாதுகாக்கும் அமைப்பின் உறுப்பினர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் அவர் கூறினார். இதேவேளை நாவாந்துறை மாட்டிறைச்சிக்டை உரிமையாளரான காளை மாட்டின் சொந்தக்காரர் தாம் பெறப்படவேண்டிய அனைத்து அனுமதிகளையும் பெற்றே அதை கொல்களத்துக்கு எடுத்துச் சென்றதாகவும் அதன் போது மக்கள் வீதிகளில் நின்று பார்வையிட்டதோடு கொல்களத்திலும் பார்வையிட்டனர் என்றும் இதைவிட வேறு விளம்பரம் செய்யவில்லை என்றும் உதயனுக்குத் தெரிவித்தனர்.

குறித்த காளை மாட்டை இறைச்சிக்காக வெட்டுவது தடைசெய்யப்பட்டுள்ள நிலையில் தமக்கு லட்சக் கணக்கில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் இது குறித்து நாளை (இன்று) வடமாகாண ஆளுநர் ஜனாதிபதி ஆகியோருக்கு தெரியப்படுத்த உள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணையகத்தில் முறையிட உள்ளதாகவும் தெரிவித்தனர். (த-10-17)

## பெண் விடுதலை பற்றி புத்தகம் எழுதுவேன்

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 25
பெண் விடுதலைக் குரிய அடையாளமாக என்னைப் பார்க்கின்றனர். நான் பெண் விடுதலைக்காகப் போராட எப்போதும் பின் நிற்க மாட்டேன். சேவையில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் பெண்களுக்கு நடந்த துஷ்பிரயோகங்கள், வன்முறைகள், அசம்பாவிதங்கள் பற்றியும் அவற்றுக்கான தீர்வுகளையும் உள்ளடக்கி புத்தகம் ஒன்றை வெளியிடுவேன் -

இவ்வாறு தெரிவித்தார் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்.

யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமாரைக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ். மாவட்ட கூட்டுறவு சமூகத்தின் ஏற்பாட்டில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் கலை, கலாசார, பண்பாட்டிற்கு களம் பதித்த பிரதேசம். இதை உணர்ந்து இங்கு பணியாற்றும் ஒவ்வொரு உயர் அரச அதிகாரிகளும் தமது சேவையை மனச்சாட்சியின் அடிப்படையில் மக்களுக்கு வழங்க வேண்டும். சமுதாயத்தை சீர்திருத்தும் பண்பு நீதித்துறையினருக்கும் காவல் துறையினருக்கும் வைத்திய துறையினருக்கும் உண்டு. பண்பாடுடைய சமுதாயத்தில் உள்ளவர்களில் சிலர் கீழ்த்தரமான செயற்பாடுகளில் ஈடுபடுவதை எப்போதும் அனுமதிக்க முடியாது. அரச பதவிகளில் இருக்கும் ஒவ்வொருவரும் சமூகத்தில் நடக்கும் அனைத்துக்கும் பொறுப்புக் கூற வேண்டும்.

இப்போதெல்லாம் சமூகத்தில் நடக்கக் கூடிய வன்முறைச் சம்பவங்களை தட்டிக் கேட்டால் அவர்களுக்கு கடுமையன ஆபத்து நெருங்கி வருகின்றது. இவற்றுக்கு மத்தியிலேதான் எல்லோரும் பணியாற்ற வேண்டியுள்ளது.

வன்முறைச் செயற்பாடுகளுக்கு காலம் பதில் சொல்லும். உலகம் போற்றும் அளவில் நான் சேவையாற்றி வருகின்றேன். எனது எஞ்சிய வாழ்நாளிலும் பெண்களுக்காகவும் சமூகத்துக்காகவும் பாடுபடுவேன் -என்றார்.(10-13-17)

## போதையுடன் வீதியில்; ரூ. 4,000 அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 25
யாழ். நகரில் மதுபோதையில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தவருக்கு யாழ். நீதிமன்றம் 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

யாழ். பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்து நீதிவான் மா.கணேசராஜா முன் நேற்று முன்னிலைப் படுத்தினர்.

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பழனியாண்டி காண்டீபன் என்ற நபர் மன்றில் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். அதை அடுத்து அவருக்கு 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார் நீதிவான். (ஒ-4)

## 'டைனமெற்' பயன்படுத்தி மீன்பிடி இருவருக்கு ரூ. 1 லட்சம் அபராதம்

### மீனை ஏற்றிச்சென்ற சாரதிகளுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 25
'டைனமெற்' வெடிபொருளைப் பயன்படுத்திக் கடலில் மீன் பிடித்தமை சம்பந்தமான வழக்கில் அதற்குப் பயன் படுத்தப்பட்ட இரண்டு படகுகளின் உரிமையாளர்களுக்கும் 1 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அவ்வாறு பிடிக்கப்பட்ட மீன்களை ஏற்றிச் சென்ற வாகனச் சாரதிகள் நீதிமன்றினால் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டனர். அவர்களின் வாகனங்களை ஒப்படைக்க உத்தரவிட்ட நீதிவான், எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டால் வாகனங்கள் மற்றும் படகுகள் பறிமுதல் செய்யப்படும் என்றும் எச்சரித்தார்.

கடந்த ஜனவரி 12 ஆம் திகதி குருநகரில் வைத்து சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப் பட்டிருந்தனர்.

சுமார் ஆயிரத்து 700 கிலோவுக்கும் அதிகமான பாரை மீன்களைச் சட்ட விரோதமாக 'டைனமெற்' வெடிபொருளைப் பயன்படுத்திப் பிடிக்கப்பட்டிருந்தன.

கடந்த வியாழக்கிழமை நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போதே தலா 50 ஆயிரம் ரூபா வீதம் படகுகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. வாகனச் சாரதிகள் இருவரும், தாம் சட்ட விரோதச் செயல் என்பதை அறிந்திருக்கவில்லை என்றும் தாங்கள் வாடகைக்கு வாகனம் ஓடுபவர்கள் என்றும் தெரிவித்தனர். அதனால் அவர்கள் மீதான வழக்குகளை யாழ். கடற்றொழில் நீரியல் வளத் துறைத் திணைக்களத்தினர் வாபஸ் பெற்றுக்கொண்டனர்.

(ஒ-4)

# நிகழ்வுகள்

### நடன அளிக்கை

யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் கலைத்தூது அழகியல் கல்லூரி ஆஸ்திரேலியா தூதரகத்தின் அனுசரணையுடன் நடத்தும் யாழ். மாணவர்களின் நடன அளிக்கைகள் பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலாதேவி சாந்தசீலன் கலந்து கொள்வார். (ம-14-9)

### நூல்கள் வெளியீடு

அகில இலங்கை இந்துமாமன்றமும், ஆலயம் வெளியீட்டகமும் இணைந்து நடத்தும் நூல்கள் வெளியீட்டு விழா பிற்பகல் 3 மணிக்கு அகில இலங்கை இந்து மாமன்ற யாழ்.பிராந்திய அலுவலக [illegible] ஆராய்ச்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கலைவாணி இராமநாதன் எழுதிய ''இந்திய மெய்யிற் சிந்தனையில் வேதாந்தம்-சித்தாந்தம் கூறும் கடவுட் கொள்கை'', பண்டிதர் த.சுப்பிரமணியம் எழுதிய ''சைவ புண்ணியம்'' மறுபதிப்பு ஆகிய நூல்கள் வெளியிடப் படவுள்ளன. (ம-13)

### பணிநயப்பு விழா

வடமராட்சி தெற்கு பிரதேச சபையில் பணியாற்றி பதவி உயர்வுபெற்ற வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனின் பணி நயப்பு விழா பிற்பகல் 2 மணிக்கு தெல்லிப்பழை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் விருந்தினராக கலந்துகொள்வர்.(ம-8)

### குருபூசை தினம்

தேரடி செல்லப்பா சுவாமிகளின் 97ஆவது வருட குருபூசைத் தினம் காலை 8 மணிக்கு செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

### பொதுக்கூட்டம்

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் காங்கேசன் துறை கட்டுப்பிட்டி மயான அபிவிருத்தி தொடர்பான பொதுக் கூட்டம் மாலை 4 மணிக்கு வலி.வடக்கு பிரதேச சபை தலைமை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தலைவர் சோ.சுகிர்தன் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை மத்தி, துர்க்காபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த சமூக மட்ட அமைப்புகளை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

### பொதுக்கூட்டம்

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு சபைத் தலைவர் சிகைலைநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-28)

### வரவேற்பு நிகழ்வு

2012 ஆம்ஆண்டுமுதல் கலை, வர்த்தக வெளிநிலை தேர்வு மாணவர்கள் நடத்தும் 2013ஆம் ஆண்டு புகுமுக மாணவர்களுக்கான வரவேற்பு உபசாரவிழா காலை 9.30 மணிக்கு புதிய உயர் கலைக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக புதிய உயர் கல்லூரி நிர்வாகிகளான எஸ்.சண்முகநாதனும் திருமதி அருள்நங்கை சண்முகநாதனும் கலந்துகொள்ள உள்ளனர். (4-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று அரசியல் தீர்வு காண இந்தியா உதவும்

## ஜனாதிபதி மஹிந்தவுக்கு மன்மோகன் கடிதம்



கொழும்பு,மார்ச் 25

13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இந்திய அரசு உதவி அளிக்கும் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி உள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.



ஜெனிவாவில் இலங்கை மீது அமெரிக்கா கொண்டு வரும் பிரேரணையை இந்தியா எதிர்க்க வேண்டும் எனக் கோரி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்துக்கு அனுப்பிய பதிலிலேயே மன்மோகன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கை மக்கள் அனைவரினதும் இன அடையாளங்களை மதித்து, நீதியை நிலைநாட்டி கௌரவத்துடனும், சமத்துவத்துடனும், சுயமரியாதையுடனும் அவர்கள் நடத்தப்படக் கூடிய வகையில் 13 ஆவது திருத்ததுக்கு அப்பால் சென்று இனப் பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்கு இந்தியா உதவி அளிக்கும்.

இந்த விடயம் தொடர்பாக ஏற்கனவே உள்ள இந்தியத் தூதுக்குழுவை அவர்களின் சகாக்களான இலங்கைக் குழுவுடன் நெருங்கிய தொடர்பில் இருக்குமாறு அறிவுறுத்தி உள்ளேன். இந்திய வெளியுறவு அமைச்சைச் சேர்ந்த இந்தத் தூதுக் குழுவினர் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதில் தொடர்ந்தும் செயற்படுவார்கள் - என்று உள்ளது. (த)

# வெளிவிவகார அமைச்சின் பெண் அதிகாரி மீது சந்தேகம்

## ஐ.நாவில் இலங்கைக்கு எதிராகச் செயற்பட்டாராம்

கொழும்பு, மார்ச் 25

ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நாட்டுக்கு எதிராகச் செயற் பட்ட வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த பெண் அதிகாரி ஒருவர் பற்றிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேசத்துக்கு விரோதமான முறையில் வெளிநாட்டுச் சக்திகளுக்குக் குறித்த பெண் அதிகாரி ஆதரவு வழங்கியுள்ளதாகப் புலனாய்வுப் பிரிவினர் தெரி விக்கின்றனர்.

மனித உரிமைகள் சபை அமர்வுகளில் கலந்து கொண்ட இலங்கைப் பிரதிநிதிகள் குழுவில் இந்த அதிகாரி அங்கம் வகித்ததாகக் குறிப்பிடப்படுகி றது.

**இந்தப் பெண் அதிகாரி, மிகவும் நுட்பமான முறையில் எதிர்த்தரப்பினருக்கு தகவல்களை வழங்கியுள்ளார்.**

அமர்வுகள் நடைபெறுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னதாகப் பிரபல அரச சார்பற்ற நிறுவனமொன் றின் முக்கியஸ்தர் ஒருவருடன் இவர் நான்கு மணி நேரம் பேச்சு நடத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவன முக்கியஸ்தரும் ஜெனீவா சென்று நாட்டுக்கு எதிராகப் பிரசாரம் செய்துள்ளார்.

இந்தப் பெண் அதிகாரி அமெரிக்க உளவுப் பிரிவுடன் தொடர்புகளைப் பேணுகின்றாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இலங்கைப் பிரதிநிதிகளுடன் ஜெனிவா விஜயம் செய்த இந்தப் பெண் அதிகாரி, மிகவும் நுட்பமான முறையில் எதிர்த்தரப்பினருக்கு தகவல்களை வழங்கியுள்ளார்.

இந்தப் பெண் அதிகாரி சில ஐரோப்பிய நாடுகளில் தூதுவராகக் கடமையாற்றியுள்ளார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (த)

# இந்திய உயர்குழு வருகை இரத்து

இந்திய மத்திய அரசின் ஆலோசகர்கள் பிரதமர் மன்மோகன் சிங்குக்குச் சுட்டிக் காட்டியுள்ளதாகவும், இந்தியா மீதான கோபம் தணிந்த பின்னர் இது பற்றிச் சிந்திக்கலாம் எனக் கூறியுள்ளதாகவும் நம்பகரமாக அறியமுடிந்தது.

''இந்தப் பயணம் சாத்தியப்படுமா அல்லது பிற்போகுமா என்பது குறித்துத் தற்போதைக்கு எம்மால் கூற முடியாது'' என காங்கிரஸ் கட்சி மாநிலங்களவை உறுப்பினரும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவருமாகிய பீ.எஸ்.ஞானதேசிகன் தெரிவித்தார்.

இலங்கை அரசுடன் இந்தியா தொடர்ந்தும் உறவு வைத்துள்ளதா என வெளிவிவகார அமைச்சு அறிவிக்கும் எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக்த்தின் மீது இலங்கை அரசியல்வாதிகள், அரச ஊடகங்கள் கோபத்துடன் இருப்பதாகவும் இந்தியப் பிரஜைகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட ஞானதேசிகன், பாரதிய ஜனதா கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ், இலங்கை செல்லும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவைப் பெயரிட்டுள்ளதாகவும் வசதிப்படி இலங்கைப் பயணத் திகதியை அவரால் நிர்ணயிக்க முடியும் எனவும் தெரிவித்தார். (த)

# அரசு ஒருபோதும் அடிபணியாது

எம்மை யாரும் கட்டுப்படுத்த இயலாது'' - என்று தெரிவித்திருந்தார்.

அதேபோன்று மூத்த அமைச்சரான வாசுதேவ நாயணக்கார,

''இலங்கையின் சுயாதிபத்தியத்தை ஜெனிவாத் தீர்மானம் ஒன்றும் செய்யாது. அதற்கு நாங்கள் இடமளிக்கவும் மாட்டோம். சர்வதேசத்தின் தேவையற்ற தலையீடுகள் இலங்கையின் இறையாண்மையைப் பாதிக்கும்.'' - என்று ஜெனிவா தீர்மானம் தொடர்பில் கருத்து வெளியிடும்போது கூறியிருந்தார்.

அமைச்சர் விமல் வீரவன்ஸ இதே கருத்தையே வெளியிட்டார்.

''சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணிந்து இலங்கை மிரண்டுவிடாது. அமெரிக்காவின் இந்தத் திட்டமிட்ட சதியை எதிர்த்துப் போராடுவோம். சர்வதேசதலையீட்டை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். தேவையற்ற சர்வதேச தலையீடுகள் எமக்குப் புதியவை அல்ல. இவ்வாறு அமெரிக்கா பல தடவை முயன்றிருக்கிறது. இதற்கு மேற்குலக நாடுகள் சிலவும் ஆதரவு வழங்குகின்றன என்று வீரவன்ஸ குற்றம் சாட்டியிருந்தார்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க, அமைச்சர் மேர்வின் சில்வா, ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவ மேத்தானந்த தேரர், ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத் தலைவர் அமரசேகர ஆகியோரும் ஜெனிவா தீர்மானத்துக்கு எதிரான கருத்துகளைத் தீவிரமாக வெளிப்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை, ஜெனிவா தீர்மானத்துக்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டப் பேரணிகளையும், எதிர்ப்பு நடவடிக்கைகளையும் தீவிரமாக முடுக்கி விடுவதற்கான செயற்பாடுகளும் திரைமறைவில் மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவருகிறது.

ஜெனிவா தீர்மானத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றை அரசுடன் சேர்ந்தியங்கும் கட்சிகள் மிகப் பெரிய அளவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் இருந்தவேளை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை அமெரிக்கா வருமாறு அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளிங்டன் அழைத்துள்ளமையை அடுத்து அந்த ஆர்ப்பாட்டம் ஒத்திப்போடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பின் பல இடங்களிலும் ஒலிபெருக்கிகள் மூலம் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொழும்பு கோட்டை ரயில் நிலையம் உட்படப் பல இடங்களில் நேற்று ஜெனிவா தீர்மானத்தை எதிர்த்தும் அமெரிக்காவைக் கண்டித்தும் ஒலிபெருக்கிகளில் பிரசாரங்கள் ஒலிக்க விடப்பட்டிருந்தன. அத்துடன் இது தொடர்பான சுவரொட்டிகள் கொழும்பின் பல இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளதுடன் துண்டுப் பிரசுரங்களும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

தீர்மானம் தொடர்பில் தெற்கு அரசியல் தலைமைகள் கடும் சீற்றத்தில் உள்ளதை அவர்களின் கருத்துகள் வெளிப்படுத்துவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். எதிர்வரும் நாள்களில் தீர்மானத்துக்கு எதிரான கருத்துகள் மேலும் வலுவடையும் சாத்தியங்கள் உள்ளதாகவும் அவர்கள் கூறினர். (த)

# சர்வதேச விசாரணை வரும்

எம்மீது திணிக்கப்பட முன், நாம் இவ்வருடமே எமது விசாரணையைச் செய்ய வேண்டும். நாம் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளை நடைமுறைக்கு கொண்டு வராது விடுவோமாயின் எமது நாடு சர்வதேச சமுதாயத்தின்முன் தன்னைத் தானே மெதுவாக அழித்துக் கொள்ளும்' என லக்ஷ்மன் கிரியெல்ல நேற்றுக் கூறினார்.

'இலங்கைக்கு எதிரான இந்தியாவின் வாக்கு, இந்த நாடு ஏனைய நாடுகளின் ஆதரவைப் படிப்படியாக இழந்து வந்ததன் விளைவாகும். இந்தியாவுடனான இலங்கையின் உறவு பலமானதாக இருக்க வேண்டும் என்னும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் பிரதான நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்க இந்த அரசு தவறிவிட்டது. சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இந்த பிரச்சினைவரை இலங்கைக்குச் சர்வதேச விவகாரங்களில் இந்தியாவின் ஆதரவு கிடைத்து வந்தது' என அவர் கூறினார்.

இலங்கைக்கு எதிராக 2009 இல் கொண்டுவரப்பட்ட பிரேரணையில் இலங்கை வெற்றி கண்டது. ஆனால் அதை மீண்டும் செய்ய முடியவில்லை. சர்வதேச அளவில் முக்கிய சக்திகளை வென்றெடுக்க இலங்கை தவறிவிட்டதே இதற்கான காரணமாகும்.

துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைதல், தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் பெயர்ப்பட்டியலை வெளியிடுதல், 17 ஆவது திருத்தத்தை அமுலாக்குதல் என்பன தொடர்பில் சர்வதேச சமுதாயத்துக்கு வழங்கிய பல உறுதிமொழிகளை அரசு நிறைவேற்றத் தவறியுள்ளதால் அரசே இதற்கு பொறுப்பானதாகும்' என அவர் கூறினார். (த)

# மனித உரிமை குறித்து இலங்கை போதிய கவனம் செலுத்தவில்லை

மனித உரிமை மீறல்கள் போர்க் குற்றங்கள் தொடர்பில் நீதியான விசா ரணை நடத்த வேண்டும் என தொடர்ந்தும் வலியுறுத்துகிறது.

அதனடிப்படையில் இலங்கை அரசு மனித உரிமைகள் தொடர்பான உரிய செயற்திட்டம் ஒன்றை செயற்பாட்டிற்கு கொண்டு வருவதுடன் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து செயற்பட வேண்டும் -என்றார். (த)

### ஐரோப்பாவில் தூதரகங்களை மூடுகிறது இலங்கை அரசு

போன்ற நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் தொடர்ந்தும் செயற்படும்எனவும் அதில் குறிப்பிடப்பட் டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கத்துவம் வகிக்கும் சிறிய தேசங்கள் அனைத்தையும் உள்ளடக்கும் வகையில் எதிர் காலத்தில் ஓர் தூதரகத்தை அமைக்கவுள்ளதாக உயர்மட்டதகவல்களை அடிப்படையாகக் கொண்ட அந்த பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் மூடப்படும் தூதரகங்களுக்குப் பதிலாக தென்னாபிரிக்க, இலத்தீன் அமெரிக்க மற்றும் ஆசியாவின் நட்புறவு நாடுகளில் புதிய தூதரகங்களை நிறுவவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. உகண்டா மற்றும் கொங்கோ ஆகிய நாடுகளில் வெகுவிரைவில் இலங்கைத் தூதரகங்கள் நிறுவப்படவுள்ளதாகவும் அந்த செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# ஆணைக்குழுப் பரிந்துரைகள் தொடர்ந்து கண்காணிக்கப்படும்

நல்லிணக்கத்துக்குமான மக்கள் குழுவிடம் உறுதியளித்தனர்.

யாழ்.மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் சுமார் ஒரு மணி நேரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதில் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்களான கிறிஸ் அலெக்சாண்டர், செனட்டர் வேர்னன் வைற் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகள் இதுவரையும் எந்தளவுக்கு அமுல்படுத்தப்பட்டுள்ளன என்ற விடயத்தை நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில் மிக ஆர்வமாகக் கேட்டறிந்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையானது பாதுகாப்பு சபை அல்ல. எனவே ஆணைக்குழுவின் பரிந்துரைகள் எவ்வாறு அமுல்படுத்தப்படுகிறது என்பதை உன்னிப்பாக அவதானிப்போம். அதனை அமுல்படுத்துவதற்கான அழுத்தங்களை சர்வதேச ரீதியாக வழங்குவோம் எனக் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது தெரிவித்தார்.

அத்துடன் போருக்குப் பின்னரான தற்போதைய நிலவரம் தொடர்பாகவும் அவர்கள் விரிவாகக் கேட்டறிந்துள்ளனர்.

போர் முடிவடைந்த பின்னரும் போருக்குக் காரணமான முரண்பாட்டுக் காரணிகளுக்குத் தீர்வு காணப்படவில்லை. அரசியல் தீர்வு காணப்படவில்லை. அரசியல் தீர்வு நோக்கி நகர்வதே காலத்தின் தேவையாக இருக்கிறது. இதையேகடந்த கால வரலாறுகள் கற்றுத் தந்துள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தச் சந்திப்பின் போது சுட்டிக் காட்டப்பட்டது.

ஜனநாயகம், நல்லிணக்கம் தொடர்பாக மிகக் கடினமான பாதையிலேயே பயணிக்க வேண்டியுள்ளது. காந்திரமான அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அரசு, பிரதான எதிர்க் கட்சிகளும் தடையாக இருக்கின்றன.

இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும். மக்கள் சுதந்திரமாகத் தொழில் புரிய அனுமதிக்கப்பட வேண்டும். மக்களின் இழப்புகளுக்கு ஏற்ற நஷ்டஈடுகள் வழங்கப்பட வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும். பாரபட்சமற்ற அபிவிருத்தி, அரசின் அறிக்கைகள் அனைத்தும் நடைமுறைக்க வரவேண்டும். சிறைகளில் அடைக்கப்பட்டவர்கள், காணமாற் போனவர்களுக்கு அரசு பதில் தர வேண்டும் என இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான மக்கள்குழுவின் பிரதிநிதிகள் கனே டிய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வலியுறுத்தினர். (த-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சமூக விநாசத்தைத் தகர்க்க மன எழுச்சி பிரதான தேவை

பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான வன்முறைகளைக் கண்டித்து யாழ். நகரிலும், நெடுந்தீவிலும் ஊர்வலங்கள் நடத்தப்பட்டுள்ளன. இரண்டிலுமே பெரும் எண்ணிக்கையில் பெண்கள் பங்கு கொண்டனர். இரு தரப்பினர்கள் மீதான வன்முறைகள் எந்தக் காலத்திலும் இல்லாதவாறு குடாநாட்டில் நாளாந்தம் வேகமாக அதிகரித்து வருவதற்கான குறியீடே அவை.

பெண்கள், சிறுமிகளுக்கு எதிரான பாலியல் வன்முறைகள், கொலைகள் மற்றும் எழுத்தில் வடிக்க முடியாத துன்புறுத்தல்கள், அநாகரிகமான, கீழ்த்தரமான செயற்பாடுகள் எப்போதும் என்றும் இல்லாத அளவுக்கு, வீட்டுக்கு வீடு வாசற்படி என்ற அளவுக்குக் குடாநாட்டில் பல்கிப் பெருகி வருகின்றன.

பெண்கள், சிறுமிகள் விடயம் என்றால் தட்டிக் கேட்க எவரும் இல்லையென்ற அளவுக்கு, கட்டு மீறி அதிகரித்துச் செல்வது குடாநாட்டில் அநாகரிக சமூகமொன்று எக்காலத்திலும் இல்லாதவாறு தோற்றம் கண்டுள்ளது என்ற நிலை உருவாக்கப்பட்டு வருகிறது.

புதிது புதிதாகத் தோற்றம் கண்டு வரும் சமூகப் பிறழ்வுக் கூறுகள், தம்மை விஞ்சி எவரும் எதுவும் செய்யமுடியாது என்ற "மிதப்புடன்", யாழ். சமூகத்தை முழு அளவில் அமுக்கி நசுக்கி விடுவதற்காக -

பெண்கள் மீதான வன்முறைகள் மற்றும் மனரீதியான நசுக்குதல்களை ஆயுதங்களாக்கி உள்ளனரோ என்று சந்தேகமுறும் அளவுக்கு, பாதக நிலைமை நாளும் பொழுதும், மறைமுக மார்க்கங்களால் அதிகரிக்கத் தூண்டப்படுகின்றன.

பெண்கள் மீதான வன்முறைகள் பெருவீச்சில் அதிகரிப்பதற்கான காரணிகளைக் கண்டறிய வேண்டிய கடப்பாடு இப்பகுதியில் வாழும் சகல பொதுமக்களுக்கும் உரிய பொறுப்பே. அதில் அக்கறை காட்டவேண்டிய முதல் பொறுப்பு சம்பந்தப்பட்ட குடும்பங்களின் தலைவர்களையே சாரும்.

பெண்கள் பாலியல் ரீதியாக பாதிப்புக்கு ஆளாக்கப்படுவது மட்டும் அவர்கள் மீதான வன்முறைகள் என்று வகுத்துக்கொள்ள முடியாது. ஆண் ஆதிக்க வன்மங்களால் - தமது பெற்றோர், சகோதரர்கள், கணவர்கள், நெருங்கிய இரத்த உறவுகளால் உருவாக்கப்படும் பாதிப்புகளும் வன்முறைகள் என்று வகைப்படுத்தப்பட வேண்டியவையே.

மேலும், பெண்கள் தரப்பில் அவர்கள் வன்முறைக்கு ஆளாகும் நிலைமை, பின்வரும் தரப்புகளிடம் குறிப்பிட்ட சில காரணங்களால் உள்ளதாக வகுப்பது தவறன்று;

* கணவனை இளவயதில் இழக்க நேர்ந்த விதவைகள், தமது வீட்டில் தனித்திருக்க வேண்டிய சூழ்நிலை.

* பாதுகாப்பற்ற நேரங்களில் பிற இடங்களில் தங்க நேரிடும் தெரிவு. தொழில் காரணமாக குறிப்பிட்ட நேரத்துக்குப் பின்னரும் தங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுதல்

* பெற்றோரின் பாதுகாப்பை இழந்து வேறு இடங்களில் தங்க நேரிடும் பெண் பிள்ளைகள்.

* பெண்களில் ஒரு சாரார், நவீன நாகரிக நடைமுறைகளில் அதீத ஆர்வமும் ஈர்ப்பும் கொண்டு, தாமே விதித்துக் கொள்ள வேண்டிய கட்டுப்பாடுகளை அளவுக்கு அதிகமாகத் தளர்த்துவதாலும் பல சங்கடங்களை எதிர்நோக்குதல்.

இவற்றுக்கும் மேலாக, கொடிய போர் காரணமாக, சிறுமிகள், சிறுவர்கள் பெரும் எண்ணிக்கையில் அநாதைகளாக மாறியுள்ளனர். வடமாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் பதிவுகளின் பிரகாரம், 10,404 பிள்ளைகள் தாயையோ, தந்தையையோ இழந்த நிலையில் வாழ்கிறார்கள்.

அதேபோன்று, 10,878 சிறுமியர், சிறுவர்கள் உறவினர்களுடன் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இத்தகைய பாதிக்கப்பட்ட சிறுமிகளின் ஆதரவற்ற நிலைமையும் அவர்களின் வாழ்க்கை வசதிகளை ஊறுபடுத்தவே செய்யும்.

இவ்வாறான பல வகையறாக்களையும் கருத்தில் கொள்ளும் போது, தமிழ்ப் பெண்களின் வாழ்க்கை, பல வகைகளாலும் பல காரணங்களாலும் சீர்கெடுத்தப்படுகின்றன.

பெண்களின் உரிமைகள் பலவும் சட்டரீதியாக வகுத்து வரையறுக்கப்பட்டுள்ள போதிலும், அவை தமக்குச் சேரவேண்டும் என்பதில் அக்கறையுடன் செயற்பட்டு உரிய வடிவத்தில், வகையில் பலன் பெறவோ, அழுத்தம் கொடுக்கவோ உரிய செயற்பாடுகள் அவர்கள் பால் மிகக் குறைந்து காணப்படுகின்றன.

விட்டுக்கொடுப்பு என்ற வகை சேர்ந்த பெண்களின் நெகிழ்ச்சித் தன்மை, அடங்கிப்போதல் என்று ஆண்களால் அர்த்தப்படுத்தப் படுவதால், குடும்பங்களில் ஆண் ஆதிக்க மனோபாவம் எமது சமூகக் கட்டமைப்பில் பெருமளவில் ஊறிப்போயுள்ளது. அதனைத் தடுப்பதற்கான குடும்பநல உறவுகள் மெலிந்துபோன நிலையிலேயே உள்ளன என்பதும் மறைக்கப்பட முடியாத, மறுக்க முடியாத ஒன்றாகும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, ஆணுக்குப் பெண் சமம் என்ற நிலை சட்ட ரீதியாகவும், சமூக ரீதியாகவும் அங்கீகரிக்கப்பட்ட போதிலும், "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்ற பாரதியின் பாடல், தமிழர் சமூகத்தில், மேலெழுந்து செயல் வடிவம் கண்டதைப் பொறுக்காத, சமூக விரோத சக்திகளே -

தமிழ்ப் பெண்கள் மீதான வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டு தமிழ் மக்களின் சமூகப் பெறுமானங்களையும் மேன்மைகளையும் வேரறுக்க முனைகின்றன; தூண்டுகின்றன; தூபம் போடுகின்றன.

அதனைத் தெரிந்தும் தெரியாமலும், தமிழர் சமூகத்தில் ஒருசாரார், எங்கள் வாழ்க்கை, குடும்ப மகத்துவங்களை அழித்துப் புதைக்க, மலினப்படுத்தத் துணை போகின்றனர். இந்தச் சமூக விநாசத்தைத் தடுக்க, தகர்க்க தமிழர் மத்தியில் அதீத விழிப்புணர்வும் மன எழுச்சியும் அவசியமானவை; அவசரமானவை.

கலி அழிப்பது பெண்க ளறமடா
கைகள் கோத்துக் களித்துநின் றாடுவோம் - மகாகவி பாரதியார்.

# மாகாணக் கூட்டுறவுக் கல்லூரியை செயற்பட வைப்பதற்கு உதவுங்கள்

### அரச அதிபருக்கு கூட்டுறவுச் சபை மனு

யாழ்ப்பாணம், மார்ச் 25

மாகாணக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியின் குருநகரில் அமைந்துள்ள கட்டடத்தை விடுவித்து அதன் செயற்பாடுகள் சுதந்திரமாக நடைபெற வசதி செய்யுமாறு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான மனு ஒன்றை அதன் தலைவர் இ.ராஜாராம் யாழ். அரச அதிபரிடம் கையளித்துள்ளார்.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கைத் தேசிய கூட்டுறவுச் சபையால் வடகிழக்கு மாகாணத்துக்கென நிர்வகிக்கப்பட்டு வந்த மாகாணக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி கடற்கரை வீதி, குருநகரில் அமைந்துள்ளது. இந்தக் கட்டடத்தில் இடம் பெயர்ந்த குடும்பங்கள் நீண்டகாலமாக குடியிருக்கின்றார்கள். இங்கு வசித்துவரும் குடியிருப்பாளர்களுக்கு மாற்று வசிப்பிட ஏற்பாடு செய்து இப்பயிற்சி நிறுவனத்தை விடுவித்துத் தருமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக விநியோகிக்கப்படும் சமுர்த்தி மற்றும் உலக உணவுத் திட்ட விநியோகத்துக்கு இரண்டு ரூபா சேவைக் கட்டணம் வழங்கப்படுகின்றது. அண்மைக் காலங்களில் நான்கு தடவைகள் எரிபொருள் விலையேற்றம் செய்யப்பட்டதன் காரணமாக அதிகரித்த எரிபொருள் செலவை ஈடுசெய்யும் வகையில் சேவைக் கட்டணத்தை 4 ரூபாவாக அதிகரித்துத் தருமாறு கோருகின்றோம்.

சமுர்த்தி நிவாரண விநியோகத்துக்கான பொருள்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கொள்வனவு செய்து விநியோகிப்பதன் மூலம் சங்கங்கள் கணிசமான இலாபத்தை ஈட்ட முடியும். இது தொடர்பாக தங்களது ஒத்துழைப்பை வழங்குமாறு கோருகின்றோம்.

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வரும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்களைப் பாதுகாப்பதற்கான உத்தரவாதத் தன்மையைப் பெற்றுத் தருமாறு கோருகின்றோம் - என்றுள்ளது. (த-17)

# நீதிவான் இல்லம் முன் துப்பாக்கி சகிதம் நடமாடிய வழக்கின் தீர்ப்பு செவ்வாயன்று

யாழ்ப்பாணம், மார்ச் 25

நீதிவான் ரி.ஜே.பிரபாகரன் சாவகச்சேரி நீதிவானாக கடமையாற்றிய வேளையில், அவரது இல்லத்துக்கு முன்பாக துப்பாக்கியுடன் நடமாடிய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் இருவர் மீதான வழக்கின் தீர்ப்பு, நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை வழங்கப்படவுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் திருச்செல்வம் கபில்நாத்தின் (வயது-16) படுகொலையுடன் தொடர்புபட்ட சந்தேக நபர்களைக் கைது செய்ய சாவகச்சேரி நீதிவானாகக் கடமையாற்றிய ரி.ஜே.பிரபாகரன் பிடியாணை பிறப்பித்திருந்தார்.

அதனையடுத்தே அவரது இல்லத்துக்கு முன்பாக ஈ.பி.டி.பியைச் சேர்ந்த குறிப்பிட்ட இருவரும் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் துப்பாக்கியுடன் நடமாடினார்கள் என்று யாழ்.நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அதனையடுத்து ஈ.பி.டி.பியின் சாவகச்சேரி முகாம் பொறுப்பாளராக இருந்த சாள்ஸ் என்று அழைக்கப்படும் சூசைமுத்து அலெக்சாண்டர் மற்றும் யாழ்.மாநகர சபை பிரதி மேயராக இருந்த றீகன் என்று அழைக்கப்படும் துரைராஜா இளங்கோ ஆகியோரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு யாழ்.நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஏழு தடவைகளுக்கு மேல் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதும், பொலிஸார் மேலதிக அறிக்கைகள் எதனையும் தாக்கல் செய்திருக்கவில்லை. இந்த நிலையில் இந்த வழக்கு தொடர்பான கட்டளை எதிர்வரும் 27 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

2010 மார்ச் 27 ஆம் திகதியே மாணவன் கபில்நாத் சடலமாக மீட்கப்பட்டிருந்தான். நாளை மறுதினம் 27ஆம் திகதி இரண்டு வருடங்களாகின்றன.

மாணவன் படுகொலை செய்யப்பட்ட குற்றச்சாட்டிலேயே சந்தேகத்தின் பேரில் கைதான ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் தொடர்பான வழக்கு விசாரணையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

# வவுனியா வரும் 'இன்ரர்சிற்றி'யில் அடிப்படை வசதிகள் இல்லை

### பயணிகள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

வவுனியாவுக்கும் கொழும்புக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டு வரும் இன்ரர்சிற்றி ரயிலில் போதிய அடிப்படை வசதிகள் இல்லாமல் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர் நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ரயிலில் உள்ள மலசல கூடங்கள் போதிய துப்பரவு இல்லாமையில் துர்நாற்றம் வீசுகின்றன.

அத்துடன் இந்த ரயிலில் போதிய குடி தண்ணீர் வசதியும் ஏற்படுத்தப்படவில்லை என பயணிகள் கூறுகின்றனர்.

ரயிலின் வெளித் தோற்றம் மட்டுமே அழகாக இருப்பதாகவும் உள்ளே வசதிகள் இல்லாமையினால் தாம் தொடர்ந்து அல்லல் படுவ தாகவும் அடிக்கடி இந்த ரயிலில் பயணம் செய்யும் அரச அதிகாரி ஒருவர் விசனம் தெரிவித்தார்.

இந்த ரயிலில் பயணம் செய்யும் பயணி ஒருவரிடம் இருந்து, இரண்டாம் வகுப்பு இருக்கைக்கு 450 ரூபாவும், மூன்றாம் வகுப்பு இருக்கைக்கு (சாதாரண) 270 ரூபாவும் அறவிடப்படுகின்றது. இதில் கூடுதலாக அரச உத்தியோகத்தர்களே பயணம் செய்தும் வருகின்றனர்.

வவுனியாவில் இருந்து காலை 5.45 இற்கு புறப்படும் இந்த ரயில் முற்பகல் 10.45 மணிக்கு கொழும்பு கோட்டையை சென்றடைகின்றது. மீண்டும் மாலை 4.20இற்கு அங்கிருந்து புறப்பட்டு இரவு 10.15 மணிக்கு வவுனியாவை வந்தடைகின்றது.

இந்த ரயிலில் பயணிப் போரின் வசதி கருதி உரிய வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு பொதுமக்கள், அரச பணி யாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-17)

# பொங்கல் நாள்களில் மின்தடை செய்யாதீர்

தென்மராட்சி, மார்ச் 25

பங்குனித் திங்கள் பொங்கல் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான ஆலயங்களில் இடம் பெறுகிறது.

இந்த நிலையில் திங்கட்கிழமைகளில் பிரதேசத்தில் மின் தடை ஏற்படுவதால் ஆலய நிர்வாகத்தினரும் அடியார்களும் சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் பங்குனித் திங்கள் திருவிழா காலமான எதிர் வரும் 26, ஏப்ரல் 2,9 ஆகிய திங்கட் கிழமைகளில் பிரதேசத்தில் மின் தடை செய்வதை நிறுத்தி உதவுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ம-9)

# 2 ஆயிரத்து 212 கோடி ரூபாவைக் கடனாக கேட்கின்றது ஸ்ரீலங்கா விமான நிறுவனம்

கொழும்பு, மார்ச் 25

வெளிநாட்டு வங்கி ஒன்றிடம் இருந்து 2 ஆயிரத்து 212 கோடி ரூபாவை ஸ்ரீலங்கா விமான நிறுவனம் கடனாகக் கேட்டுள்ளது.

கடன்களைச் செலுத்தி முடிப்பது மற்றும் அத்தியாவசிய செலவினங்களை நிறைவு செய்வது தொடர்பாகவே இந்தப் பெரிய கடன் தொகை பெறப்படவுள்ளது.

பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துக்கு எரிபொருள் தொடர்பாக செலுத்தப்பட வேண்டியுள்ள கடன் உட்பட, கடன் காரர்கள் மற்றும் குறுகிய கால வங்கிக் கடன்களைச் செலுத்தி முடிப்பதற்கும் நிதி முதலீடுகள் தொடர்பாகவும் இந்தக் கடனைப் பயன்படுத்திக் கொள்ள இந்த விமான நிறுவனம் கடனை எதிர்பார்க்கிறது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ராச்சியத்தின் வங்கி ஒன்றிடம் இருந்தே இந்தக் கடன் தொகை பெறப்படவுள்ளதோடு, அது தொடர்பான ஒழுங்குகள் ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது குறித்த 175 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான கடன் முறி ஒன்றை வழங்குமாறும் இந்த விமான நிறுவனம் திறைசேரிக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இதே வேளை இந்த நிறுவனம் கடந்த மாதத்தின் 29 ஆம் திகதி வரையில் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துக்கு செலுத்தப்பட வேண்டியிருந்துள்ள கடன் தொகை ஆயிரத்து 500 கோடி ரூபாயைக் கடந்து சென்றிருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் பிள்ளைகளும் ஆங்கிலத்தில் சரளமாக பேச வேண்டுமா?

**ELOCUTION CLASSES**

சிறுவர்களிற்கான ஆங்கிலப் பேச்சுக் கலை வகுப்புகள்

WITH BRITISH NEW ERA ACADEMY'S EXAM & CERTIFICATES

| | | |
|---|---|---|
| Duration | : | 9 Months |
| Place | : | spectra skills<br>19, Stanley Road, Jaffna<br>[2nd Floor of Peoples' Bank] |
| Time | : | Saturdays @ 9:00 am |
| Tel | : | 0212221422 / 1423 |
| Mobile | : | 0772116733 /0754616296 |



## யாழ்ப்பாணத்தில் Spectra Skills நிறுவனத்தினர் நடத்தும் மாபெரும் கருத்தரங்குகளும் பயிற்சிப்பட்டறை நிகழ்வுகளும்

2 நாள்கள் கொண்ட இந்த நிகழ்வு **Spectra Skills** இன் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறும். இந்த நிகழ்வு அனுபவமும் திறமையும் மிக்க தொழில் வல்லுநர்களாலும், விரிவுரையாளர்களாலும் நடத்தப்பட உள்ளது. இந்தக் கருத்தரங்கிலும் பயிற்சிப் பட்டறைகளிலும் பங்குபற்றுபவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளது. பங்குபற்றும் ஆர்வமுள்ளோர் 29.03.2012 முன்னர் பெயர்களைப் பதிவு செய்யவும்.

### அனுமதிகள் முற்றிலும் இலவசம்

| | |
|---|---|
| 1ஆம் நாள் நிகழ்வு : | 31.03.2012 சனிக்கிழமை |
| (முதலாம் அமர்வு) | காலை 9.00 - 11.00 |
| இலக்குக் குழுவினர் : | விற்பனைத்துறையிலும் சந்தைப்படுத்தல் துறையிலும் பணியாற்றுபவர்கள் (சந்தைப்படுத்தல் முகாமையாளர்கள், விற்பனை நிறைவேற்று அதிகாரிகள், விற்பனையாளர்கள்) அனுமதிக்கப்படுவர். |
| விடயம்: | விற்பனையும் சந்தைப்படுத்தலும் தொடர்பான பயிற்சிப்பட்டறை |
| (இரண்டாம் அமர்வு) | மாலை 13.00 - 15.00 |
| இலக்குக் குழுவினர் : | சுற்றுலாத்துறை சம்பந்தப்பட்டோர், ஆர்வமுடைய இளையோர், சுற்றுலாப்பயண ஹோட்டல்களில் வேலை செய்வோர். |
| விடயம்: | சுற்றுலாத்துறையும் விருந்தோம்பலும் (Hospitality Management) பயிற்சிப் பட்டறை. |
| 2ஆம் நாள் நிகழ்வு: | 01.04.2012 ஞாயிற்றுக்கிழமை<br>காலை 10.00 - 12.00 |
| இலக்குக் குழுவினர் : | க.பொ.த. உயர்தர வகுப்பில் கல்விகற்கும் மாணவர்களும் க.பொ.த. சாதாரண தரத்தில் பரீட்சை எழுதிய மாணவர்களும் அனுமதிக்கப்படுபவர். சாதாரணதர, உயர்தரத்தின் பின் பாடசாலையை விட்டு விலகியோரும் அனுமதிக்கப்படுவர். |
| விடயம் : | உங்களுக்கான பாடத்தெரிவுகளும் உங்கள் தகுதிக்கு அமைவான தொழில்வாய்ப்புகளும், ஆலாசனைகளும். |

spectra skills

**19, Stanley Road, (Peoples' Bank Building) Jaffna.**
**Tel: 021 222 1422 / 1423**



## வேலையாள்கள் தேவை

யாழ். நகர் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் பிரபல மொத்த, சில்லறை பலசரக்கு வியாபார நிலையத்துக்கு கீழ்வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.

1. சிட்டை எழுதுநர் (பில் கிளாக்)
2. பொதி கட்டுபவர் (சேல்ஸ்மன்)

முன்அனுபவம் விரும்பத்தக்கது.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

இல. 344, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே. 0777768835


## மரண அறிவித்தல்

✝ ✝



✝ ✝

✝ ✝

### வினி எல்வினா ஞானகரன்

எட்வின் ஞானகரனின் (நைஜீரியா) அன்பு மனைவியும் கெசூரனின் ஆருயிர் தாயாருமான வினி எல்வினா கடந்த பங்குனி 22ம் திகதி இயேசுவின் கரங்களுக்குள் சரணடைந்தார். இவர் காலஞ்சென்ற சங்ரோ அரியதேவாவினதும், ஜோய் அரியதேவாவினதும் அன்பு மகளும், சஞ்சியா (லண்டன்), யோவேட் சனா (கொழும்பு), எட்கார் (மலேசியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், டாக்டர் சந்திரகரன்+அனோமி, பிரபாகரன்+காமல் பாஸ்டர் சுதா (லண்டன்), ஜீவா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். அன்னாரது நல்லடக்க ஆராதனை திங்கட்கிழமை 26. 03. 2012 அன்று நைஜீரியாவில் இடம்பெறும்.

தகவல் : ஜோய் அரியதேவா (தாயார்)



### அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய பொதுக் குளிர்த்தி விழாவும் ஏல விற்பனையும்

நாளை (26.03.2012) திங்கட்கிழமை பொதுக் குளிர்த்தி விழா வெகு சிறப்பாக நடை பெற உள்ளது என்பதனையும், ஆலயத்தில் திருப்பணி வேலைகள் நடைபெற் றுக் கொண்டிருக்கின்றன. ஆலயத்தில் பழைய திராந்திகள் (ஊசிக்கால்) உள்ளன அவை 01.04.2012 ஞாயிற்றுக் கிழமை மு.ப 10 மணிக்கு ஏல விற்பனையும் நடைபெறும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

**அம்பிகை சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்**

(15056) (6,10)

பரிபாலன சபை.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 ★ 04 ★ 1924 | 24 ★ 02 ★ 2012 |

*அமரர்*

### வேலுப்பிள்ளை அருமைத்துரை

எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று (25.03.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வி.எம்.றோட்,
பருத்தித்துறை

(C1148)(6-9-8)

மீளாத்துயருடன்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## கந்தையா மகேந்திரன்

**(வேலும் மயிலும் லொறி உரிமையாளர், டிப்பர் மகேந்திரன்)**

மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் 17 A, சிவன் புது வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகேந்திரன் நேற்று (24.03.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், வண்ணமலரின் பாசமிகு கணவரும், தெய்வேந்திரம், தேவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சுபத்திராதேவி மற்றும் சுரேஸ்குமார் (பிரான்ஸ்), சிவகுமார், மயூரன் (பிரான்ஸ்), சுதர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாகரன் (பிரான்ஸ்), நிசா (பிரான்ஸ்), ரஜீபா, பிரிதா (பிரான்ஸ்), றதீசன் (லண்டன்), ஆகியோரின் பாசமிகு மாமனுரும், சாருஜன், பவிநயனி, தஷானிகா, நெல்லிசா, அலெக்ஸ், கிருத்திகா, பவிசான், சுபத்திரன், ஜெய்டன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.03.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17 A, சிவன் புது வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(15061) (7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத நெற்செய்கை; கடும் சட்ட நடவடிக்கை

கிளிநொச்சி,மார்ச் 25

**கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தின் கீழ் இந்த வருடம் மேற்கொள்ளப்படவுள்ள சிறு போக நெற்செய்கையின் போது மேற்கொள்ளப் படும் அத்துமீறிய செயற்பாடுகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என்று நீர்ப் பாசன பிரதித் திட்டப் பணிப்பாளர் என்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.**

இரணைமடுக் குளத்தின் கீழான இந்த வருட சிறு போகச் செய்கைக்கான கூட்டம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் றூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

இரணைமடுக் குளத்தில் தற்போது 25 அடி ஒன்பது அங்குலம் நீர்மட்டம் அதாவது 59 ஆயிரத்து 700 ஏக்கர் கன அடி நீர் உள்ளது. இதில் ஐம்பதாயிரம் ஏக்கர் கன அடி நீரின் அளவுக்கு ஏற்ப சிறு போகம் செய்ய முடியும். ஏனைய 9 ஆயிரத்து 700 கன அடி நீரும் குளத்தில் இருக்க வேண்டும். இதன்படி 7 ஆயிரத்து 450 ஏக்கர் தொடக்கம் 8000 ஏக்கர் வரையில் சிறு போக செய்கை மேற்கொள்ள முடியும். கடந்த ஆண்டு 29 அடி தண்ணீர் இருந்தபோது பத்தாயிரம் ஏக்கர் எனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அதைவிட ஆறாயிரம் ஏக்கரில் மேலதிகமாக சட்ட விரோதமாக பயிர் செய்யப் பட்டுள்ளது. இதனால் கூடுதலான வயல்கள் அழிவடைந்தன. இந்த முறை சட்டவிரோதமான அத்துமீறிய செய்கைகளுக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குளத்து நீரை வீண் விரயம் செய்யாது விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். மாறாகச் செயற்படுபவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப் படும் - என்றார்.

மாவட்ட அரச அதிபர் றூபாவதி கேதீஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோர் கருத்துத் தெரிவிக்கும் போது கடந்த ஆண்டு பல்வேறு கமக்கார அமைப்புக்கள் மற்றும் விவசாயிகள் பொறுப்பற்ற விதத்தில் என்றுமில்லாதவாறு குளத்து நீரைத் தவறாகப் பயன்படுத்தியமையால் கூடுதலான ஏழை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த முறை அவ்வாறு இல்லாமல் தீர்மானத்துக்கு அமைவாக பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துமீறிய செய்கைகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அத்துமீறிய செய்கைகள் அழிக்கப்பட்டு, அவர்களுக்கு எதிராக பொலிஸாரின் உதவியுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (10-6)

## சிறுவன் காயம்

வவுனியா, மார்ச் 25

வவுனியா நகர்ப்பகுதியில் ஏ-9 வீதியில் இடம் பெற்ற வாகன விபத்தொன்றில் சிறுவன் ஒருவன் காயமடைந்து வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இரவு 7.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் பூங்கா வீதி, வவுனியாவைச் சேர்ந்த விதிர்ஷன் (வயது-17) என்பவரே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

வவுனியா மணிக்கூட்டு வீதியில் மஞ்சல் கோட்டுக் கடவையில் வீதியைக் குறித்த சிறுவன் கடக்க முற்பட்டபோது எதிரே வந்த பொலிஸ் வாகனம் ஒன்று இவரை மோதியதாகவும், சம்பவத்தில் காயமடைந்த சிறுவனை பொலிஸார் வாகனத்தில் ஏற்றிச் சென்று மருத்துவமனையில் அனுமதித்ததாகவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் உதயனிடம் தெரிவித்தனர். (10)

## கஞ்சாவுக்கு அபராதம்

கிளிநொச்சி,மார்ச் 25

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் சுமார் ஏழு கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப் பட்ட சந்தேகநபருக்கு பத்தாயிரம் ரூபா தண்டப் பணமும் பத்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஆறுமாதகால கடூழிய சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் 7 கிராம் கஞ்சாவை தனது உடைமைகளுடன் வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் ஒருவரை கிளிநொச்சி பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் முற்படுத்தினர். சந்தேக நபரை விளக்க மறியலில் வைத்து விசாரணைகள் மேற்கொண்டதையடுத்து நேற்றுமுன்தினம் குறித்த குற்றச்சாட்டுத் தொடர்பாக சந்தேக நபர் மன்றில் முற்படுத்தப்பட்டார். இதன் போது அவருக்கு பத்தாயிரம் ரூபா தண்டப் பணம் விதிக் கப்பட்டதுடன் பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாத கால கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப் பட்டுள்ளது. (10-6)

## புதிய கமக்காரர் அமைப்பு

### வன்னேரிக்குளத்தில் தெரிவு செய்யப்பட்டது

அக்கராயன், மார்ச் 25

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தில் புதிய கமக்காரர் அமைப்புத் தெரிவு செய்யப் பட்டுள்ளது.

இதன் தலைவராகக் கா.யோகராசாவும், செயலாளராக எஸ்.கனகசபையும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் ஏனைய நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை வன்னேரிக்குளத்தின் கீழ் 135 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப் படவுள்ளது.

கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

ஆறு தொடக்கம் பத்து வாய்க்கால்களில் இந்தப் பயிர்ச் செய்கை இடம் பெறும். இதற்கென வாய்க் கால்களின் புனரமைப்பு வேலைகள் இடம்பெறவுள்ளன.

தொடர்ச்சியாகச் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டதால் நிலத்தின் பசளைத் தன்மை குறைந்து காணப்படுகின்றது. இதனால் இந்த முறை செய்கைக்கான நிலப் பகுதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஆறு தொடக்கம் 10 வரையான வாய்க்கால்களில் நீரைப் பாய்ச்சுவதில் சிரமங்கள் காணப்படுகின்றன.

ஆயினும் விவசாயிகளின் ஒத்துழைப்புத் தொடர்பாக வலியுறுத்தப்பட்டுள்ளது. (க-18)

## தேசிய மட்டத்தில் மாணவர்கள் சாதனைகள் புரிய வேண்டும்

### முன்னாள் துணுக்காய் கல்விப் பணிப்பாளர்

அக்கராயன்,மார்ச் 25

மாணவர்கள் தேசிய மட்டத்தில் சாதனை புரியக் கூடியவர்களாக தங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு முன்னாள் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த. மேகநாதன் தெரிவித்தார்.

துணுக்காய் வலய விளையாட்டுப்போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்வியும், விளையாட்டும் மாணவர்களின் வளர்ச்சிக்கு உதவுபவை. பல ஆளுமைப் பண்புகளை விளையாட்டு மாணவர்களிடையே உருவாக்குகின்றது. வெற்றியை மட்டும் மாணவர்கள் ஏற்றுக் கொள்ளாமல் தோல்விகளை[illegible] வெற்றிக்குரிய பாதைய[illegible] ஏணிப்படிகளாக மாற்ற வேண்டும்

துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி லூட்ஸ் [illegible]லினி வெனிற்றன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாண்டியன் குளம் மகா வித்தியாலயம் முதலாம் இடத்தையும், பாலிநகர் மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தையும், கற்சிலை மடு அ.த.க பாடசாலை மூன்றாவது இடத்தையும் பெற்றுக் கொண்டன. கோட்ட ரீதியில் ஒட்டுசுட்டான் கோட்டம் முதலாவது இடத்தையும், இரண்டாம் இடத்தை மாந்தை கிழக்குக் கோட்டமும் துணுக்காய்க் கோட்டம் மூன்றாவது இடத்தையும் பெற்றுக் கொண்டன. (க-18)

## கலந்துரையாடல்

அக்கராயன்,மார்ச் 25

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சண்முகரத்தினம் வித்தியாலயத்தின் கல்வி மற்றும் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் பிற்பகல் 2.30 மணியளவில் மாங்குளம் மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் துணுக்காய் கல்விப் பணிப்பாளர் மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். (க-18)

## இடமாற்றத்தில் இடர்களை எதிர்கொள்ளும் ஆசிரியர்கள்

### வன்னியில் பணிபுரியும் ஆசிரியர்களும் இவ்வாறான நிலை

துணுக்காய்,மார்ச் 25

துணுக்காய்க் கல்வி வலயத்தில் நீண்ட காலமாகப் பணியாற்றிய ஆசிரியர்கள் சிலர் தமது சொந்த இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதில் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் இங்குள்ள அதி கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றி வருகின்றனர். மேலும் தமது சொந்த இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதற்கான சகல தகைமைகளையும் இவர்கள் கொண்டுள்ளனர். ஆனால் இந்தமுறை வெளிவந்த முதலாவது இடமாற்றப் பட்டியலில் இவர்களது பெயர்கள் இடம்பெறவில்லை. இதனால் இவர்கள் மிகுந்த மனக் கவலையும், விசனமும் அடைந்துள்ளனர்.

இதேவேளை, வன்னிப் பிரதேசத்தில் இவர்களை விடக் குறைந்த ஆண்டுகள் சேவை புரிந்த ஆசிரியர்கள் முதலில் இடமாற்றப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

இது தொடர்பாக இவர்கள் தமது அதிகாரிகளைக் கேட்ட போது இரண்டாவது பட்டியலில் அவர்களின் பெயர் வருமென்ற மழுப்பலான பதிலே இவர்களுக்குக் கிடைத்திருக்கின்றது.

வன்னியின் வேறு மாவட்டங்களில் பணிபுரியும் ஆசிரியர்களும் இவ்வாறான நிலையிலேயே உள்ளனர்.

பல ஆண்டுகளாக பல்வேறு இடர்களுக்கு மத்தியில் தமது சொந்த இடங்களை விட்டு விலகி, வன்னியில் கடமையாற்றும் இந்த ஆசிரியர்கள் இலவு காத்த கிளிகளின் நிலைக்கு ஆளாகியுள்ளனர். (க-415)

## கமக்கார அமைப்புக்கள் புதிதாக தெரிவு செய்யப்படல் வேண்டும்

அக்கராயன், மார்ச் 25

அக்கராயன் குளத்தின் கீழான சகல கமக்கார அமைப்புக்களையும் புதிதாகத் தெரிவு செய்யுமாறு விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மையில் இடம் பெற்ற அக்கராயன் சிறு போகக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கையை விவசாயிகள் விடுத்துள்ளனர்.

15 ஆண்டுகளுக்கு மேலாக கமக்கார அமைப்புக்களில் அங்கத்தவர்கள் இயங்கி வருகின்றனர். இதனால் இந்த அமைப்புக்களில் முறைகேடுகள் இடம் பெற்றுள்ளன என்றும் அதனால் புதிய நிர்வாகங்களை ஏற்படுத்துவது அவசியம் என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

விவசாயிகளின் வேண்டுகோளுக்குப் பதிலளித்த மேலதிக அரச அதிபர் இந்தக் கூட்டம் கமக்கார அமைப்பைத் தெரிவு செய்யும் கூட்டம் அல்ல சிறுபோக நெற்செய்கைக்கான கூட்டமே இதுவாகும்.

இந்தக் கூட்டத்தில் கமக்கார அமைப்பினைத் தெரிவு செய்யமுடியாது; அத்துடன் திட்ட முகாமையாளரும் அக்கராயன் குளத்துக்கு நியமிக்கப்படவில்லை.

திட்ட முகாமையாளர் நியமிக்கப் பட்ட பின்னர் சகல கமக்கார அமைப்புக்களும் விரைவில் புதிதாகத் தெரிவு செய்யப் பட்டுவிடும் எனவும் தெரிவித்தார். (க-18)

## அவரவர் வீடுகளில் வைத்தே முதியோருக்குச் சிகிச்சை

முல்லைத்தீவு, மார்ச் 25

முல்லைத்தீவிலுள்ள முதியவர்களுக்கு, அவர்களது வீடுகளில் வைத்துச் சிகிச்சை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

முல்லைத்தீவில் வைத்தியசாலைகளுக்குச் சென்று சிகிச்சை பெற முடியாத நிலையிலுள்ள முதியவர்களை இனம் கண்டு சனிக்கிழமைகளில் அவர்களுக்குச் சிகிச்சை வழங்குவதற்கான நடவடிக்கைகளில் முல்லைத்தீவுப் பிரதேச வைத்திய அதிகாரி ஈடுபட்டுள்ளார்.

இத்தகைய முதியவர்கள் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்யுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.(க)

**தவறிவிட்டது**

க. விக்னன் ஆகிய எனது தே.அ.அட்டை, பல்கலைக்கழக மருத்துவபீட அ.அட்டை, மோட்டார் சைக்கிள் இன்சுரன்ஸ், ரக்ஸ், லேணேர்ஸ் அனு மதிப்பத்திரம் ஆகியவற்றுடன் நாச்சிமார் கோயிலுக்கும், கொக்குவிலுக்கும் இடையில் பேர்ஸ்சுடன் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் இந்த இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு : 0776030212, 021 3206329


(16043)(6-14-8)

நாவலர் வெளியீடு
வெளிவந்து விட்டது

1ஆம் தவணைக்கான வினாத்தாள்கள்
தரம் 1 முதல் O/L வரையான சகல பாடங்களுக்கான வினாத்தாள்கள்

[illegible]
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
[illegible]
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



*சிதம்பரப்பிள்ளை சண்முகநாதன்*
*(சாத்திரியார்)*

கரம்பொன், அய்த்தாம்பலத்தைப் பிறப்பிடமாகவும், மறவன்புலோவை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சண்முகநாதன் (23.03.2012) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற பூமணி ஆகியோரின் அன்புக் கணவரும், சங்கீதா, ஷர்மிளா, கிரிசாந்தி, சரோஜினிதேவி, சாந்தினிதேவி, சத்தியசீலன், சத்தியலிங்கன், சத்தியதேவன், சத்தியமூர்த்தி, சசிதேவி, சகுந்தலாதேவி, சசிகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தகுமார், அன்ரன், கந்தகுமார், திருவருட்செல்வன் ஆகியோரின் அன்பு மாமனும் கனகசபை (ஆஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான கந்தையா (நொத்தாரிஸ்), அம்பிகா (ஆசிரியை), சாவித்திரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 90, 2ஆம் குறுக்குத்தெருவில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (25.03.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 90, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ச. பரமேஸ்வரி
(மனைவி, பிள்ளைகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடை வாடகைக்கு

கொக்குவில் சந்தியில் உள்ள கடை (நீளம் 50 அடி X அகலம் 15 அடி) வாடகைக்கு உண்டு. தொடர்புக்கு : 021 2225101

## விரிவுரைக் கதிரைகள் விற்பனைக்குண்டு

புதிய குசன் விரிவுரைக் கதிரைகள் உடன் விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு - 0786722209

## தேவை

யாழ். நகரிலுள்ள அலுவலகம் ஒன்றுக்கு சாதாரண தொழிலாளர்கள் தேவை (இருபாலாரும்).
தொடர்புகளுக்கு - 0786722209

## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு சந்தியிலிருந்து 100M தூரத்தில் பருத்தித்துறை வீதியில் 4 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை).
தொடர்புகளுக்கு - 0718724064

## வீடு விற்பனைக்கு

தெகிவளையில் Galle Road இற்கு அருகாமையில் அமைதியானதும், பாதுகாப்பானதும் ஆன சூழலில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள Apartment இல் 3BR, 2 BR மற்றும் 1BR வீடுகள் சாதாரண விலையில் விற்பனைக்குண்டு. Fully Payment செய்பவர்களுக்கு விசேஷட விலைக்கழிவுண்டு.

மேலதிக விபரங்களுக்கு 0777368764

## உங்களுக்கு சுத்திகரிப்புத் தேவைகளில் பிரச்சினையா?

உங்களுக்கான எமது சேவைகள்
நிறுவனங்கள், வீடு, ஹோட்டல், Tiles, அல்ஹபோன் பார்டிஷன், ஷோ றூம், Show Room Glass, Floor Polishing / Vaccine / Carpet Shampoo போன்ற சுத்திகரிப்புச் சேவையைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

**Specialized Janitorial Services**

தொடர்பு: இல. 536/1 கே.கே.எஸ். வீதி, மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P: 021 4921108, 0777286069

## 50 ஆவது பிறந்த தின வாழ்த்துக்கள்



### நற்குணம் நற்குணராஜா

பாடசாலையின் பாலர் வகுப்பு அனுமதிக்காக தனது கையினால் எனது கையைப் பிடித்துக் கொண்டு சேர்த்திட்டவரும் இன்று வரை எனது நலன்களில் அக்கறை உடையவரும். பொறுமையின் இலக்கணமாக விளங்குபவரும், கடமையில் கண்ணியமாக செயற்படுபவருமாகிய எனது மாமனாரின் 50 ஆவது பிறந்த தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாசில் அகம்
ஆவரங்கால், புத்தூர். (10039) (45-6-9)

அன்பு மருமகன்
ப. கிருஷ்ணகுமார் (ஆசிரியர்)

## திருமண வாழ்த்து

இன்று 25.03.2012 ஞாயிற்றுக்கிழமை ''ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில்'' இல்லற வாழ்வில் இணையும்

திருநிறைச் செல்வன் **பரமேஸ்வரன்** — திருநிறைச் செல்வி **தேவிகா**

ஆகிய இருவரும் எல்லாச் செல்வங்களும் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துவோர்.

ம.ம.வி. வீதி,
நெல்லியடி.


வைஸ்ணவி புடைவை மாளிகை,
அனுஸ்காந்த், சுபத்திரா, வைஷ்ணவி, வைஷ்சாலினி.

## தேவை

தமிழ் ரைப்பிங் (Typing) நன்கு தெரிந்த பெண்கள் உடன் தேவை. திறமைக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழுங்கப்படும்
தொடர்பு- 0212220775
University of Jaffna முன்பாக

## வாடகைக்கு விடப்படும்

ஒரு மணித்தியாலத்துக்கு ரூபா 4,000/-
தொடர்புக்கு - 0771919328



## COMPUTER COURSES

Diploma in Computerized **Accounting** — Tally, Quick Book, Accpac M.Y.O.B

Diploma in **Video Editing** — Premiere Pro CS4, particleillusion, Pinnacle Studio, Adobe After Effe. Nuendo,

Diploma in **AutoCAD** — 2D & 3D Modeling

Adv. Dip. in **Hardware & Networking**

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
DMI COMPUTER EDUCATION
DMI COMPUTER EDUCATION

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403 |
| நெல்லியடி | M.M.V. வீதி (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel. : 021-226 2470 |
| சாவகச்சேரி | No.174, கண்டி வீதி, HNB அருகில் Tel. :021-227 0243 |
| சுன்னாகம் | KKS வீதி, ஜெட் மோட்டேஸ், NSB அருகில். Tel. :021-224 1970 |

## வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளராக, தொகுப்பாளராக இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

**DIPLOMA IN MASS MEDIA**



வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பு, நிகழ்ச்சி தயாரிப்பு, விளம்பரம் தயாரித்தல் செய்தி வாசிப்பு

கல்வித் தகைமை (O/L, A/L)
சர்வதேச தரத்திலான UKAP (U.K.) சான்றிதழ்

ஆரம்பம் 28.03.2012 புதன்

கட்டணம் 15,000/-

T.P. 0770584658, 0750445070, 0777630708.

பதிவுகளுக்கு
Greewich College,
No, 39, 3rd Lane, Power Hounse Road, Jaffna

## Special Discount Offer

சகலருக்கும் பங்குபற்ற அரிய சந்தர்ப்பம்

**Hardware, Network Administration & CCNA**

1st Class Free

தொழில்வாய்ப்பை அதிகரிக்கும் நோக்குடன் 15 வருடம் தேர்ச்சி பெற்ற ஆசிரியரால் தமிழ் விளக்கத்துடன் பயிற்றுவிக்கப்படும்.

**Call : 0772 017 988 / 0716 107 779**

**ENT Systems Engineering.** #22/3, Mayura Mw, Bellanvilla, Dehiwela.

## சேவைகள்

அனுபவமும், தகைமையும் உள்ளவரினால் கணக்கு பதிவியல், கணக்காய்வு, கம்பனிச் செயலாளர்கள் சேவை மற்றும் எல்லா வகையான வரிகள் சம்பந்த மான ஆலோசனைகளை நியாயமான கட்டணங்களில் செய்து தரப்படும் T . P: 077 3746884

## வீடு வாடகைக்கு

கொக்குவில் மேற்கில், விசாலமான நிலப்பரப்பில் அமைந்த வீடு வாடகைக்கு உண்டு. களஞ்சிய சாலையாக பாவிப்பதற்கு ஏற்றது.
தொடர்புக்கு : 075 8348395

## விற்பனைக்கு

ஜெனரேற்றர்
KIPOR
5.K.V
Disel, Selstart, Sound Proof
T . P : 077 8448726

## மரண அறிவித்தல்



### சந்திரசேகரம் சுஜித்தா

(மயிலணி சைவ மகா வித்தியாலய மாணவி)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் சுஜித்தா நேற்றுமுன்தினம் (23.03.2012) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ந.ப. 12 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரேசன் வீதி,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்,
நண்பர்கள்.

## அகவை 75இல் வாழ்த்துகின்றோம்



### சி.வை. சபாரத்தினம்

(முன்னாள் அதிபர் யா/ நயினாதீவு நாகபூசணி வித்தியாலயம்)

அன்னை நாகபூசணியின் அருள் ஆசியோடு அகவை 75இல் இன்று (25.03.2012) கால்தடம் பதிக்கும் எங்கள் குடும்ப ஒளிவிளக்கு மேலும் சீரும் சிறப்புமாய் நூற்றாண்டு விழா காண நயினை நாகபூசணி தாயின் பாதங்களை வணங்கி வாழ்த்துகின்றோம்.

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## திருமண வாழ்த்து

இன்று 25.03.2012 திருமணபந்தத்தில் இணையும் மணமக்களான



திரு. திருமதி பத்மநாதன் தம்பதியரின் புத்திரன் திருநிறை செல்வன் **பரமேஸ்வரன்** உதவி முகாமையாளர், செலான் வங்கி, நெல்லியடி.

திரு. திருமதி பத்மநாதன் தம்பதியரின் புத்திரி திருநிறை செல்வி **தேவிகா**

ஆகிய இருவரும் ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் திருமண பந்தத்தில் இணைகின்றனர். இவர்களைப் பல செல்வங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்

நண்பன்

**திரு. வன்னிமரம் அரவிந்தன்**
B.A. Hons 2nd UPPER, Political Science Special,
(M.A (P) Public Add)
**திருமதி அரவிந்தன் சமீரா.**

## சுய தொழில் ஆர்வம் உள்ளவர்களுக்கு விளம்பரத்துறையில் உடனடி வேலை வாய்ப்பு பயிற்சிப்பட்டறை

உள்ளடக்கம்:-
- வாடிக்கையாளர் நலம் பேணுதல் (Customer Care Relationship)
- அலுவலக நடைமுறைக்கோட்பாடு (Office Ethics)
- அடிப்படை வியாபார ஆங்கிலம் (Basic English For Business)
- விளம்பரத்துக்கான தொடர்பாடல் (Marketing Communications)

எமது குழும நிறுவனங்களின் சேவையை விரிவுபடுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்படும் இத் தெரிவில்.......

பருத்தித்துறை, நெல்லியடி, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, சுன்னாகம், மானிப்பாய், சங்கானை, தீவுப்பகுதி, கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, வவுனியா

போன்ற இடங்களிலிருந்து விண்ணப்பிப்போருக்கு பயிற்சியின் இறுதியில் இடம் பெறும் வேலை வாய்ப்புக்கான தெரிவின் போது பிரதேச அடிப்படையில் தலா 2 பேருக்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

அடிப்படை தகுதிகள்
- தன்னம்பிக்கை
- விடாமுயற்சி
- கடின உழைப்பு
- நிதானம்
- வேலையில் ஈடுபாடு
- உரையாடல் திறன்




கட்டணம் 4000/= மட்டுமே

எதிர்பார்க்கப்படும் கல்வித் தகுதிகள்
O/L PASS (ஆங்கில அறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

வேலை வாய்ப்பு பயிற்சி பட்டறை
இடம் :- யாழ்ப்பாணம் பஸ் நிலையம் அருகில்,
காலம் :- 07-04-2012 தொடக்கம் 21-04-2012 வரை
செயன்முறையுடன் கூடிய 50 மணித்தியாலங்கள்.

சுய விபரக் கோவைகள்(cv)30.03.2012 க்கு முன்னதாக.....
V4 EDUCATIONAL CONSULTANCY
23,MODERN MARKET
VALVETTITHURAI, JAFFNA.
என்னும் முகவரிக்கு அல்லது mail@v4edu.com என்னும் E-mail முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
மேலும் தொடர்புகளுக்கு:-0774836084

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் மல்லாகம்பதி

# அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரப் பெருமான் தேவஸ்தான

# மகா கும்பாபிஷேக சிறப்புமலர் - 2012

## பிரதமகுரு ஆசியுரை



அகந்தை கொண்ட தக்கன் திரிபுர சம்கார மூர்த்தி சர்வேஸ்வரனை மகாயஞ்ஞத்தில் அவமதித்து அவிர்பாகம் கொடாது நடத்தியதினால் இறைவன் வெருண்டு தனது கேசத்தில் இருந்து தோற்றுவித்து தக்கனைத் தடிந்தவரே வீரபத்திரப் பெருமான் ஆவார். இவ்வாறான எம் பெருமான் மல்லாகம் பதியில் பன்னெடும் காலமாக அடியார்களின் வல்வினைகளைப் போக்கி அருள் பாலித்துக்கொண்டிருக்கின்றார். இன்று பங்குனி மாதம் 12 ஆம் நாள் (25.03. 2012) ஞாயிற்றுக்கிழமை அச்சுவினி நட்சத்திரத்தில் மகா கும்பாபிஷேக பெரும் சாந்தி விழா நடைபெறுவது இவ்வூர் அடியார்கள் செய்த பெரும் புண்ணிய கைங்கரியமாகும். கும்பாபிஷேகம் என்பது 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழ்வதாகும். இது ஆலயத்திற்கும் ஊருக்கும் புனித தன்மையை ஏற்படுத்துவதாகும். அருவத் திருமேனி கொண்டு அக்கினி மூலம் வெளிப்பட்ட இறைவன் கும்பத்திலே மந்திரத்தின் மூலம் அருவுருவத்திருமேனியாகி பூசைகள், ஓமங்கள் செய்து பின் உருவத்திருமேனியாகிய இறைவனுக்கு அந்த கும்பத்தினால் அபிஷேகம் செய்தலே மகாகும்பாபிஷேகமாகும்.

இதனால் உருவத்தில் திரு ஏறுகின்றது. இத்தகையான புண்ணிய வழிபாடுகள் ஆலயங்களிலே நடைபெறுவதனால் மானிடராக பிறந்த மனிதர்கள் மனித நேயத்துடன் வாழ ஏதுவாகும். இன்று நடைபெறுகின்ற கும்பாபிஷேகமானது புனராவர்த்தன நவகுண்ட மகா கும்பாபிஷேகமாக வீரபத்திரப் பெருமானுக்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுக்கும் ஏனைய நூதன மூர்த்திகளான விநாயகர், வள்ளி தேவசேனாசமேத சுப்பிரமணியர், தட்சணாமூர்த்தி, சண்டேஸ்வரர் ஆகியோர்க்கும் மற்றும் இடபம், பலிபீடம், வைரவர் ஆகிய மூர்த்திகளுக்கும் நடைபெறுவதையிட்டு அனைத்து அடியார்களுக்கும் ஆசி கூறுவதோடு நாட்டில் சாந்தி, சமாதானம், சுபீட்சம் நிலைத்திட பிரார்த்திப்போமாக.

பிரதிஸ்டா பிரதமகுரு
சிவஸ்ரீ ச. ஸ்ரீ சண்முகானந்தக் குருக்கள்
மயிலணி, சுன்னாகம்.

## தக்கனது பெருவேள்வி தகர்த்து சிவபரத்துவத்தை நிலை நிறுத்திய வீரபத்திரப்பெருமான்




பிரம்மபுத்திரனாகிய தக்கன், தனது மகளைச் சிவன் வதுவை புரிந்தமையால்தான் மாமனெனக் கர்வங்கொண்டு, சிவனை மதியாது சிவனுக்கு அவிர்பாகம் கொடுக்காமல் யாகம் செய்து சிவநிந்தை புரிந்தான். இவனின் ஆணவத்தை அடக்கி அவனுக்கு மெய்ஞ்ஞானத்தைத் தருவதற்காக சிவபெருமான் தன்னிடமிருந்து அகோரவீரபத்திரப் பெருமானைத் தோற்றுவித்து தக்கனது சிரசதனைக்கொய்து யாகாக்கினியில் பஸ்மமாக்கினார். பின் பிரம்மா வேண்ட யாகத்தில்மாண்ட ஆட்டின் தலையை அவன் உடலில் பொருத்தி உயிர்ப் பிச்சை அளித்து அவனுக்கு நல்லருள் புரிந்தார். சிவனை இகழ்ந்த தக்கனும் அவனுக்கு அடிப்பணிந்த தேவர்களும் சிவனை நினைத்து சிவபூஜை செய்து பெறற்கரிய பேறு பெற்றனர்.

இவ்வாலயம் ஆரம்பத்தில் சிறு ஆலயமாக ஸ்தாபிக்கப்பட்டு காலத்துக்குகாலம் பல திருப்பணிகளைக்கொண்டு, இன்று மல்லைப்பதியில் மிளிரும் சிறப்புமிகு ஆலயங்க ளில் ஒன்றாக விளங்குகின்றது. ஆகமநெறிமுறைகளுக் கமைய பன் னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் புனராவர்த்தன மஹாகும்பாபிஷேக வைபவம் இன்றைய தினம் நடைபெறத் திருவருள் கைகூடியமையையிட்டு பெருமகிழ்வெய்துகின்றோம். ஆலய சிவாச்சாரியார்களின் கிரியாநெறிமுறைகளும், பரிபாலகர்களின் அயராத உழைப்பும் வழிபடும் அடியார்களின் தாராளசிந்தையும் இவ்வாலய வளர்ச்சிக்கு உந்துசக்திகளாக விளங்குவது போற்றப்பட வேண்டியவிடயமாகும்.

அடியார்கள் அனைவரும் இக்கும்பாபிஷேகப் பெருவிழாப் பொலிவுகண்டு அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திரப் பெருமானின் மலரடி தொழுது அவனருள் பெற்றின்புற வேண்டுமெனவும் நாடுநலம் பெற்று நல்லறங்கள் ஓங்க வேண்டுமெனவும் எம்பெருமான் பாதாரவிந்தங்களைப் பணிந்து போற்றுவோமாக.
வீரபத்திரர் திருவருள் பாரெங்கும் பொங்கிப் பொலிவதாக

சிவத்திரு வ. குமாரசாமி ஐயர்.



## வீரபத்திரர் வழிபாட்டின் தொன்மை



உலகில் ஆதி இலக்கியமாகிய வேதங்களில் வீரபத்திரர் வழி பாட்டுக் கூறுகளைக் காணமுடிவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். யஜுர்வேதத்தில் வீரபத்திரர் பற்றிய குறிப்புக்கள் சிலவற்றை அவர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். தேவீ மஹாத்மியம், தேவீ பராக் கிரமம் முதலிய பழைமை வாய்ந்த நூல்களில் காளியைப் பற்றி நிறையவே காணமுடிகிறது. மஹாபாரதத்தில் சாந்திபர்வத்தில் வீரபத்திரர் பற்றிக் காணப்படுகிறது. சிவமகா புராணத்திலும் ஸ்காந்த மகா புராணத்திலும் வீரபத்திரர் வரலாறுகள் இடம்பெறுகின்றன. ஸ்காந்தம் கூறும் செய்திகளைத் தமிழில் கூறும் கந்தபுராணம் வீரபத்திரரின் அருட் செயல்களை அற்புதமாக விவரிக்கிறது.

விஷ்ணுபுராணங்களில் ஒன்றான ஸ்ரீமத் பாகவதத்திலும் தட்ச யாகம் பற்றியும் வீரபத்திரரின் வீரச் செயல்களும் வர்ணிக்கப்படுகின்ற. பாக வதத்தைத் தமிழில் தந்த செவ்வைச் சூடுவார் என்னும் பெரும் புலவர் அவற்றை அழகாக எடுத்துரைக்கிறார்.

தக்கன் வேள்வி அழியவேண்டுமென பிருகு முனிவர் சாபமிட்ட செய்தியும் சிவபெருமான் தமது சடை முடியைத் தரையில் அடித்தவுடன் அங்கிருந்து வீரபத்திரர் நெடிய உருவத்துடனும் தீப்போன்ற நிறத்துடனும் தோன்றினார் என்ற செய்தியும் அங்கே கிடைக்கின்றன. "முக்கண் அடலவீரன்" என அவர் கூறுவதன் மூலம் மூன்று கண்களுடன் தோன்றிய வீரபத்திரர் சிவாம்சமே எனத் தெளிவாகிறது.

வழமைபோல ஒரு முறை தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே போர் மூண்டபோது அசுரர்களின் வேண்டுதலுக்கிணங்க அவர்களது குல குருவாகிய சுக்கிராச்சாரியார் வீரமார்த்தாண்டன் என்னும் அசுரனைத் தோற்றுவித்து அனுப்பினார். அவனது கொடூ ரத்திலிருந்து தப்பமுடியாமல் தேவர்கள், சிவனிடம் முறையிட்ட போது அவர் வீரபத்திரரை அனுப்பி அவனை அடக்கினார் என்பதும் ஒரு வரலாறு. தென்னகத்தில் வீரபத்திரர் வழிபாடு பரந்துள்ளதை அவர்களின் நடனக் கலை வடிவங்கள் மூலம் உணரலாம்.

கேரளக் கதகளியிலும் கர்நாடக யக்ஷ கானத்திலும் வங்காள சௌவி நடனத்திலும் வீரபத்திரர் இடம்பெறுகிறார்.

சோழர்காலக் கலை வடிவங்களில் மிக முக்கியமான சிற்பக்கலை வடிவங்கள் மூலமும் நாம் வீரபத்திரரைக் கண்டு மகிழ முடிகிறது.

வீரபத்திரர் காயத்திரி மந்திரம்

"ஓம் விரபத்ராய வீத்மஹே சூலஹஸ்தாய தீமஹி
தந்தோ வீர பரசோதயாத்"

M.K. தவராஜா
இளைப்பாறிய ஆசிரியர்
தர்மகர்த்தாவும் திருப்பணிச் சபைத் தலைவரும்

## திருவருட்கடாட்சம் கிடைக்கட்டும்



எமது ஊரின் காவல் தெய்வமான மல்லாகம் பத்திரகாளி சமேத வீரபத்திரர் பெருமான் எமது பகுதி மக்களின் அத்தனை இடர்களையும் பாது காத்து வேண்டுபவர்கள் எல்லோருக்கும் வேண்டுவன வழங்கிவருகின்றார். இன்றைய தினம் இடம் பெறும் கும்பாபிஷேகத்திற்கும் திருப்பணி வேலைகளுக்கும் சகல விதத்திலும் உதவிய அத்தனை தரப்பினருக்கும் நன்றியுடன் எம்பெருமானின் திருவருட்கடாட்சம் கிடைக்கவேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

வ. நந்தீஸ்வரன்
ஆலய திருப்பணிச் சபைச்
செயலாளர்

## ஆலயகுருவின் ஆசிச்செய்தி



ஈழமணித்திருநாட்டின் சென்னி எனப் போற்றப்படும் யாழ்ப்பாணத்தின் வடபால் சகல வளங்களையும் கொண்ட தாக தமிழ் மணமும், சைவநெறியும் மிளிர்ந்து கொண் டிருக்கும் மல்லாகம் பதியின் கண்ணே கோயில் கொண்டு - வீற்றிருந்து அருள் பாலிக்கும் - தக்கன் யாகமழித்து யாகேஸ்வரன், யாகேஸ்வரி யாகிய சிவன், பார்வதிக்கு யாகவழிபாடுகளின்போது அவிர் பாகம் வழங்கப்படுவதை நிலை நாட்டிய - ஸ்ரீ பத்திரகாளி உடனுறை ஆதி வீரபத்திரப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் இன்று (25.03.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணிமுதல் 10. 15 மணிவரையுள்ள சுப முகூர்த்தத்தில் நவகுண்டபக்ஷ புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

"பிரம்மண ஆகாசாத் சம்பூர் - ஆகாசாத் வாயு
வாயோர் அக்னி - அக்னோர் ஆப
அத்ப்பஹ ப்ருதுவீ"

என்கின்றது உப நிடதவாக்கியம். பிரம்மமானது ஆகாயத்திலிருந்து வாயுவுக்கும், வாயுவிலிருந்து அக்கினிக்கும், அக்கினியிலிருந்து நீருக்கும், நீரிலிருந்து நிலத்திற்கும் படிப்படியாக இறங்கிவருகின்றது என்பதே இதன் பொருளாகும். இவ்விதம் பிரம்மத்தினைப் பக்தர்களுக்கருள் பாலிப்பதற்காகப் படியிறங்கி வரச்செய்யும் கிரியையே கும்பாபிஷேகம். அதாவது, ஆகாய வெளியில் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருளை மந் திர உச்சாடனங்கள் மூலம் காற்றலை வடிவில் யாககுண்டத்தில் பூஜிக்கப்பெறும் அக்கினிக்கு வருவித்து, அங்கிருந்து நாடீசந் தானம் மூலம் நீரைக் கொண்ட கும்பத்திற்குக் கொண்டுவந்து பூஜித்து அக் கும்பநீரை நிலம் - கல்லாலான மூல விக்கிரகத் திற்கு அபிஷேகம் செய்வதன் மூலம் அவ்விக்கிரகத்தில் இறை சாந்நித்தியத்தினை ஏற்படுத்துவதே இக்கும்பாபிஷேகமாகும்.

சிவதர்மங்களிற் சிறந்ததாகிய இக்கும்பாபிஷேகம் நிகழ அருள்பாலித்த வீரபத்திரப் பெருமானை மனதிலிருத்தி, இப்பணியிலீடுப்பட்ட அனைத்து அடியார்களுக்கும் அன்பர்களுக்கும் சகல செல்வயோகம் மிக்க வாழ்வு சித்திக்க நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுபமஸ்து

பிரம்மஸ்ரீ ச. பிரணதார்த்திகரசர்மா
ஆலயகுரு, ஸ்ரீ வீரபத்திரர் தேவஸ்தானம், மல்லாகம்

## பிரதேச சபைத் தலைவரின் வாழ்த்து



எனது பிரதேச சபைக் குட்பட்ட மல்லாகம் வீரபத்திரர் கோயில் கும்பாபிஷேக மலருக்கு செய்திவழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தியில் இப்பகுதி மக்கள் எல்லோரது கூட்டு பங்களிப்பு அவசியமாகும் இப் பகுதி மக்கள் எல்லோரது கூட்டு முயற்சியால் ஆலயம் பெருமளவு அபிவிருத்திகளைக் கண்டுள்ளது. இன்று நடைபெறுகின்ற கும்பாபிஷேகம் சிறப்பாக இடம் பெற உழைத்த அத்தனைபேரையும் வாழ்த்தி மகிழ்கின்றேன். அனைவருக்கும் வீரபத்திரரின் திருவருள் கிடைக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

சோ.சுகிர்தன்

## வாழ்த்துரை



யாழ்ப்பாண மாநகரின் வடபால் பக்தி மணங்கமழும் மல்லாகம்பதியில் கோயில் கொண்டமர்ந்து அடியார்களுக்கு இன்னருள் பாலித்துவரும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரப்பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் இன்று (25.03.2012) நவகுண்டபக்ஷ புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

இக் கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்வதற்கு எம் குலதெய்வமான வீரபத்திரப்பெருமானின் அருளும், அனைத்து அன்பர்களின் ஒத்துழைப்புமே காரணமாகியுள்ளன. அவ்வகையில் ஆலய கட்டடத்திருப்பணிகளில் ஈடுபட்ட நூதனமூர்த்திகளை வடிவமைத்த ஸ்தபதிகளுக்கு புதிய ஆலயங்கள் மற்றும் விக்கிரங்களை அமைக்க உதவிய உபயகாரர்கள், நிதி, பொருளுதவிகள் அளித்த அன்பர்களுக்கும், ஆலயத்தொண்டுகளில் ஈடுபட்டவர்களுக்கும் அருந்தொண்டர்களுக்கும் இக் கும்பாபிஷேகத்தின்போது உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் வீரபத்திரப்பெருமான் அருளால் சகல செல்வ, யோகம் மிக்க வாழ்வு கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

(ஆலய பொருளாளர்)

மலர் அமைப்பு:
ஆலய திருப்பணிச் சபையும், தொண்டர் சபையும்

சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.No. 021 2226972
கிளை நிறுவனம்
சிவா நகை மாடம்
கண்டி வீதி, சாவகச்சேரி
இணை ஸ்தாபனம்
சாரங்கா ஜீவல்லறி
55, செட்டியார் தெரு, கொழும்பு-11

டயமன் ரேடேர்ஸ்
No.12, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

மெடி கெயார்
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

மெடிக்கல் கிளினிக்
டென்ரல் கிளினிக்,
சுன்னாகம்

கிருஸ்ணா
உலோகத் தொழிலகம்
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

Fine Selection Fancy Goods & Electrical Items
K.K.S. Road Chunnakam

பெஷன் ஹவுஸ்
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ஜெகன் களஞ்சியம்
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்

ஜெயகிருஸ்னா
ஹாட்வெயார்
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

றஞ்சனாஸ்
ரெக்ஸ்ரைல்
No.04 மத்திய சந்தை சுன்னாகம்.

சாந்தி ஸ்ரோர்ஸ்
வீரபத்திரர் கோயிலடி,
மல்லாகம்

பத்திராபதி
ரிலேடர்ஸ் ...
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தர்சன் பான்சி
அழகுசாதனப்பொருள்
விற்பனை நிலையம்,
K.K.S. Road, Mallakam

குகன்
வைத்தியசாலை
மல்லாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு,காணி விற்பனைக்கு

நுணாவில் கிழக்கு சாவகச்சேரியில் (துர்க்கை அம்மன் வீதி) கண்டி வீதியிலிருந்து 1 கிலோ மீற்றருக்குள் 3 Rooms, 2 Hall, Kitchen உடனான புதிய நிலையில் உள்ள வீடு 4½ பரப்புக் காணியுடன் உடன் விற்பனைக்கு உண்டு. (Bank Loan இற்கான சகல ஆவணங்களும் உண்டு)

தொடர்பு : 0777724469

## காணி விற்பனைக்கு

மானிப்பாய், யாழ்ப்பாணம் வீதியில் பொன்னப்பா வீதிக்கு அருகில், யாழ்.இந்துக் கல்லூரிக்கு 1½ km தூரத்திலும் யாழ். மருத்துவ சாலையில் இருந்து ¾ km தூரத்தில் சிறிய வீட்டுடன் கூடிய 2½ பரப்பு காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு : 077 7587947




## மஹா கும்பாபிஷேகம்

கொடிகாமம் - கச்சாய் தெற்கு

### அருள் மிகு மாவடிப் பிள்ளையார் தேவஸ்தான மஹாகும்பாபிஷேகம்

காலம்:- 25.03.2012 ஞாயிற்றுக்கிழமை 9.12 மணிமுதல் 10.12 மணிவரை

ஆலய பிரதமகுரு வேதாகம கிரியா கலாபூஷணம்
சிவப்பிரம்மஸ்ரீ தி.கிருஷ்ண மூர்த்திக் குருக்கள் BA (கல்வயல்)
(விஞ்ஞான ஆசிரியர் - ஸ்ரீ கணேசா வித்தியாலயம்) தலைமையில்
பிரதிஷ்டா பிரதம குரு கலாபூஷணம் - பாலகுருமணி
சிவப்பிரம்ம ஸ்ரீ பரராஜசேகரக்குருக்கள் - மீசாலை
ஆலய நித்தியபூசகர் சிவத்திரு சிவப்பிரகாசம் ஐயா - மிருசுவில் வடக்கு
சுபமஸ்து

அனைவரும் வருக. ஐங்கரன் அருள் பெறுக!

கச்சாய் தெற்கு,
கொடிகாமம். (சி/2966) (2-6-9) - ஆலய பரிபாலன சபையினர்.

### தரச்சான்றிதழ் வழங்கப்படுகிறது

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட உணவு கையாளும் நிலையங்களுக்கான தரச் சான்றிதழ்கள் நேற்று தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட 24 உணவு கையாளும் நிலையங்களில் 20 நிலையங்களுக்கு நேற்று இவை வழங்கப்பட்டன. இவற்றில் நான்கு 'ஏ' தரச் சான்றிதழ்களும் 16 'பி' தரச் சான்றிதழ்களுமாகும். 4 நிலையங்கள் ''சி'' தரத்தில் காணப் பட்ட போதிலும் அவற்றைச் சீர்செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதால் குறித்த கால அவகாசத்துக்குள் வேலை பூர்த்தி செய்யப்படாவிடின் கடைகள் மூடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)


இத்தாலி நாட்டிற்கு பயணிப்பதற்கான இலவச ஆலோசனை வழங்கப்படும்
மேலதிக தகவல்களுக்கு 077 687 4660


## மணமகள் தேவை

யாழ்.இந்து, கௌரவ, 78 இல் பிறந்த 12 இல் செவ்வாய் கிரக பாவம் 18, தனியார் துறையில் கௌரவமான தொழில் பார்ப்பவருக்கு மெல்லிய, சிவந்த மணமகள் தேவை. பொருத்தமானோர் கீழ் காணும் முகவரிக்கு தங்கள் ஜாதகக் குறிப்புடன், தொடர்பிலக்கத்தையும் குறித்து அனுப்பி வைக்கவும்

விளம்பர இல: 4344
மே/பா உதயன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Asian Pacific Institute of Further Education
மேலதிக விபரங்களுக்கு: 0777033323 / 0777900069
OUR SUCCESS VISAS FROM MANCHESTER WORLD CLASS CONSULTANCY - Branch




Now Admission OPEN for MAY / JUN / JUL / OCT / SEP 2012 Intakes

Student Visa
Visit Visa
Tourist Visa
Migration
Refusal
Appeal
Reapply



BENEFIT TO OUR STUDENTS:
Minimum Qualification G.C.E.O/L
Part-Time Employment GUARANTEED
Accommodation GUARANTEED
More than 200 Courses Available in any field
100% Quick DEPARTURE
Air Ticket Service
Sponsor Arrangement

No. 109 A, 1st Floor, Galle Road, Colombo 04. Hot: +94 (0) 11 456 8888 / 9999
Email: info@apifelk.com Website: www.apifelk.com


# அறிவித்தல்

**நிறுவனங்கள் அவற்றின் பெயரின் அல்லது விபரணத்தின் ஒரு பகுதியாக 'நிதி', 'நிதியளித்தல்' அல்லது 'நிதிசார்' என்ற சொற்களைப் பயன்படுத்துவது தொடர்பானது**

1. 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம் 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தினை நீக்கும் பொருட்டும் அதற்குப் பதிலாகவும் 2011.11.09ஆம் நாளன்று இயற்றப்பட்டது. நிதித்தொழில் சட்டத்தின் 10ஆம் பிரிவின் நியதிகளின்படி, உரிமம் பெற்ற நிதிக் கம்பனி தவிர்ந்த வேறு எந்தவொரு நிறுவனமும் 'நிதி', 'நிதியளிப்பு' அல்லது 'நிதிசார்' என்ற சொற்களை அவற்றினது பெயரினது அல்லது விபரணத்தின் ஒரு பகுதியாகவோ பயன்படுத்தக்கூடாது.

2. இதற்கமைய, உரிமம் பெற்ற நிதிக் கம்பனி தவிர்ந்த வேறு ஏதேனும் கம்பனி அதன் பெயரின் அல்லது விபரணத்தின் ஒரு பாகமாக 'நிதி', 'நிதியளிப்பு' அல்லது 'நிதிசார்' என்ற சொற்களை அல்லது அதன் உருப்பெயர்ப்புக்களுள் எவற்றையும் அல்லது வேறேதேனும் மொழியில் அவற்றிற்குச் சமமானதைப் பயன்படுத்துகின்றவிடத்து அத்தகைய சொற்களை அவற்றின் பெயர் மற்றும் விபரணத்திலிருந்து 2012 மே 09ஆம் நாளன்றோ அல்லது முன்னதாகவோ நீக்கிவிட வேண்டும். இத்தேவைப்பாடு பின்வரும் நிறுவனங்களுக்கு ஏற்புடைத்தாகாது.

   அ) 'நிதி', 'நிதியளித்தல்' அல்லது 'நிதிசார்' என்னும் சொல்லை அல்லது அதன் உருப்பெயர்ப்புக்களை அல்லது வேறேதேனும் மொழியில் அதற்குச் சமமானதை அவற்றினது பெயரின் ஒரு பாகமாக கொண்டிருப்பதற்கு எந்தக் கம்பனி நாணயச் சபையினால் தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்தக் கம்பனி;

   ஆ) நிதிக் கம்பனிகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட அவர்களின் கழகம்

   இ) தொழிற்சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் (அத்தியாயம் 138) பதிவு செய்யப்பட்டதும் ஒரு நிதிக் கம்பனியின் ஊழியர்களாகவுமுள்ள வேலையாட்களின் கழகம் அல்லது இணைப்பு ஒன்றாகவுள்ளதுமான தொழிற்சங்கமொன்று;

   ஈ) எந்நிறுவனம் தொடர்பில் அத்தகைய வழக்காறு சட்டத்தினால் அல்லது சர்வதேச உடன்படிக்கையினால் தாபிக்கப்படுகின்றதோ அல்லது ஏற்று அங்கீகரிக்கப்படுகின்றதோ அந்நிறுவனமொன்று;

   உ) கல்வி அல்லது ஆலோசனைப் பணிகளை பிரத்தியேகமாக வழங்குகின்ற கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று;

3. எவ்வாறெனினும், மேலே பந்தி 2(அ) – (உ) இன் விதிவிலக்கல்களுக்குப் புறம்பாக, நுண்பாக நிதித்தொழிலை கொண்டு நடத்துகின்றதும் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம் நடைமுறைக்கு வரும் நாளிலிருந்து, பின்வரும் சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டதுமான ஏதேனும் கம்பனிகள்/ அமைப்புக்கள் உத்தேச நுண்பாக நிதிச் சட்டம் இயற்றப்படும் வரை 'நுண்பாக நிதி' என்ற சொற்களை அவர்களது பெயரின் அல்லது விபரணத்தின் ஒரு பாகமாகத் தொடர்ந்து பயன்படுத்த முடியும்.

   அ) 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கம்பனி;

   ஆ) 2007ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் கீழும் 1980ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க தன்னிச்சையான சமூகப் பணிகள் அமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வையும்) சட்டத்தின் கீழும் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் அரசல்லா அமைப்புக்கள்;

   இ) சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் (அத்தியாயம் 123) பதிவு செய்யப்பட்ட ஏதேனும் சங்கம்.

## இலங்கை மத்திய வங்கி

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்
தொலைபேசி: 2477500, 2477504 தொலைநகல்: 2477738
மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk


# Study Abroad

இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

**UK (London)** University of Glynder (London Campus)
அடிப்படைத் தகமை A/L or O/L
3 1/2 வருட வீசா
20 மணித்தியால பகுதி நேர வேலைவாய்ப்பு
IELTS அவசியம் இல்லை.
IELTS 4.0 உள்ளவர்களுக்கு
விசேட வாய்ப்புகள் காணப்படுகின்றன்

Spot Admissions & Interview

**Canada**
Student Visa
கனடிய கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும்
June மாதத்திற்கான பாடநெறிகள் ஆரம்பம்
அடிப்படைத் தகமை O/L மட்டுமே

27th - 29th March 2012
9am - 6pm
Jaffna Greenwich College
0777630708

**Cyprus** (ஐரோப்பியக் கண்டம்)
June மாதத்திற்கான அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன
அடிப்படைத் தகமை O/L or A/L மட்டுமே
கல்லூரிக் கட்டணமும்
Visa விற்குப் பின்னரே செலுத்த வேண்டும்.
NO IELTS
NO INTERVIEW
NO SPONSOR

Care Giver to Canada
முதியோர் பராமரிப்பாளர்கள் கனடா நாட்டிற்கு அதிகளவில் தேவைப்படுகின்றனர்.
அடிப்படைத் தகமை A/L 3 Pass

**Singapore**
Hotel முகாமைத்துவத் துறையில்.
6 மாதங்கள் சிங்கப்பூரில் கற்கைநெறி
பின்னர் – 6 மாதங்கள்
சம்பளத்துடன் கூடிய வேலைவாய்ப்பு.
அடிப்படைத் தகமை O/L or A/L மட்டுமே.

SCHOLARSHIPS
சிறந்த தகைமை உள்ளவர்களுக்கு புலமைப் பரிசிலும் வழங்கப்படும்.

**New Zealand Student Visa**
அரசாங்க வியாபார பதிவிலக்கம் PV67191
விண்ணப்ப முடிவு திகதி 15.04.2012

City & Guilds Approved Centre

வெளிநாடுகளுக்கு சென்ற மாணவர்களின் புகைப்படங்களை நேரில் வந்து பார்வையிடலாம்.

GREENWICH COLLEGE
39, 3rd Lane,
Power House Road,
(மின்சார நிலைய வீதி),
Jaffna.

Head Office
GREENWICH COLLEGE (PVT) LTD
34, Galle Road, Dehiwala.
Tel : (011) 2713214, 2726237
E: info@greenwich.lk,
w: www.greenwich.lk

மேலதி விபரங்களுக்கு Mob: 0777630708


# நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
## கந்தையா நடராசமூர்த்தி
(ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர், விடத்தற்பளை)

24.02.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கந்தையா நடராசாமூர்த்தி அவர்களின் மரணச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி மூலமும் இரங்கலும், ஆறுதலும் தெரிவித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (25.03.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.09, உடையார் ஒழுங்கை, பழம் வீதி, கந்தர்மடம். - குடும்பத்தினர்.

(16026) (2-7-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடக்கில் மலிபன் பால் உற்பத்தி விநியோகஸ்தர்கள் தேவை

இலங்கையின் மிகவும் பிரபல்யம்வாய்ந்ததும் நன்கு ஸ்தாபிதமானதுமான பால் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் முன்னோடியான மலிபன் மில்க் புரடக்ற்ஸ் (பிறைவேட்) லிமிட்ட் நிறுவனம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் அதன் பால் உற்பத்திகளுக்கென புதிய விநியோகஸ்தர்களை நியமிக்க விரும்புகிறது.

## விநியோகஸ்தர்கள் பின்வரும் தகுதிகளை உடையவர்களாக இருக்க வேண்டும்:

- ஏற்கனவே விநியோக பணியில் இருந்திருக்க வேண்டும்
- FMCG பண்ட விற்பனையில் அறிவும் அனுபவமும் உள்ள ஊழியர்களை கொண்டுள்ளவர்களாக இருக்க வேண்டும்
- சிறந்த நிதிவள பின்னணியை பேணுவோராக இருக்க வேண்டும்
- வங்கி உத்தரவாதத்தையும் பிரதேச வளத்தை அடிப்படையாக கொண்ட தொழில் மூலதனத்தையும் காண்பிக்க தயாராக இருக்க வேண்டும்
- உயர்ந்த தரமுள்ள களஞ்சிய வசதியை கொண்டிருக்க வேண்டும்
- விநியோகத்திற்கென வாகனம் ஒன்றை வழங்க வேண்டும்
- சவால்களை எதிர்கொள்வதில் நீண்டகாலம் எம்முடன் தோளோடு தோள் நின்று பணியாற்ற தயாராக இருக்க வேண்டும்

தேவையான சகல விபரங்களுடனும் உங்கள் விண்ணப்பத்தை 7 நாட்களுக்குள் கீழ்காணப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விநியோகஸ்தர் விண்ணப்பம்
வியாபார அபிவிருத்தி முகாமையாளர் (வட பிராந்தியம்)




**மலிபன் மில்க் புரடக்ற்ஸ் (பிறைவேட்) லிமிட்ட்**
389, காலி வீதி, இரத்மலானை
தொடர்பு தொ.பேசி: திரு.ராஜ் 071 8717115
மின்னஞ்சல்: radiantt.raj@gmail.com



சிறந்த சேவையினை வழங்க வாழ்த்துகிறோம்

Northern Central Hospital

# Northern Central Hospital



யாழ்.நகரில் சர்வதேச தரத்திலான சேவையை வழங்குவதற்காக நிர்மாணிக்கப்பட்ட Northern Central Hospital யாழ்.குடாநாட்டு மக்களுக்குச் சர்வதேச தரத்திலான சிகிச்சைகளை வழங்கும் நோக்கில் நிர்மாணிக்கப்பட்ட இந்த மருத்துவமனை வடபகுதி மக்களுக்கும், யாழ்.மக்களுக்கும் சிறந்த சேவையினை வழங்க வேண்டும் என்றும் இன்று (25.03.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.00 மணியளவில் மங்களகரமாகத் திறந்து வைக்கப்படவுள்ளதை மனதார வாழ்த்துவதோடு, இந்த மருத்துவமனையின் ஸ்தாபகரான திரு.எஸ்.பி.சாமியும், பணிப்பாளரான திரு.பி.கேசவராஜாவும் எமது மக்களுக்கும் இந்த மருத்துவமனை மூலம் சிறந்த சேவையை வழங்க வேண்டும் என்றும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- வேலணை மக்களும்,

**G.T.V.ENTERPRISES (PVT) LTD.**
**VIJEYA ENTERPRISES MAHARAJA FOOD PRODUCTS**
HD Office: No.18/3, Dr.E.A. Cooray Mawatha, Colombo - 06
Tel: 011 2360926, 011 4654444, Fax: 011 2361139
Jaffna Branch: Kasthuriyar Road, Jaffna. Tel: 021 222 4338


**Branches:**
No.170, Central Road, Colombo - 12. Tel:0112448928.
No.288, George R.De.Silva Mw, Kotahena, Colombo - 13. Tel:0114378162
No.G-2 146,Nogombo Road, Wattala (Pearl Park) Tel:0112938152
No.37/4, Trinco Road, Batticaloa.Tel:065 222 7982
**Factory: No.570/4, Werallathuduwa, Mobola, Wattala.** (15032)(2-6-9)



# சேவை நலன் பாராட்டு

06.08.80 – 30.09.81 – மாநகர சபை, கொழும்பு. 01.10.81 – 31.07.84 – நகர சபை, பருத்தித்துறை. 01.08.84 – 31.12.02 – வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம். 01.01.03 – 25.03.12 – வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை. ஆகிய சபைகளில் எழுதுநர், முகாமைஉதவியாளர், பொறுப்பதிகாரி, பிரதமமுகாமைஉதவியாளர், செயலாளராக கடமையாற்றி தனது 60வது அகவையில் உள மகிழ்வுடன் ஓய்வுபெறும் திருமதி யோகேஸ்வரி காசிலிங்கம் அவர்களின் சேவையை பாராட்டி வழங்கப்பெறும்

## சேவை நலன் பாராட்டு மடல்




பொன் கொழிக்கும் கடல் வளமும்
மண்ணை பொன்னாக்கும் நிலவளமும்
விமானநிலையமும் துறைமுகமும் ஒருங்கமைந்த
வலிகாமம் வடக்கு பிரதேசமாம் காங்கேசன்துறையில் !

பெயரில் யோகத்தைக் கொண்ட யோகேஸ்வரி
துயருறும் மக்களின் துயரைத் துடைத்திட - தான்
பிறந்த மண்ணில் சேவை செய்ய எண்ணி
கடமை ஏற்றார் வலிவடக்கின் செயலாளராய் !

உயர்ந்த உருவம் பணிவான தன்மை !
நரைத்த தலை நகைச்சுவைப் பேச்சு !
பயந்த சுபாவம் பயப்படாத எண்ணக்கரு !
சிரித்த முகம் சிந்திக்க வைக்கும் முடிவு !
மிடுக்குடன் அவர் ஆற்றும் பணிகள் ஆயிரம் !
நற்பணிகள் பல ஆற்றி நற்பெயரை எடுத்திட்ட
செயலாளர் யோகேஸ்வரியே வாழ்க பல்லாண்டு !
துர்க்கை அம்மனின் துணையுடன் வாழ்க பல்லாண்டு
தொடர்க உங்கள் சேவை உம் மக்களுக்காய் !





பாராட்டி வழங்குவோர்,
தவிசாளர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள், வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை. (மல்லாகம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2012 / 2013 Chemistry Personal Class

2012/2013 Batch English/ Tamil Medium General, Organic, Inorganic Physical Chemistry கடந்த கால வினாக்கள் தனியாகவோ, குழுவாகவோ ஆசிரியரால்: B.Sc,M.Sc (Chemistry) (SRI Jayewardenepura University) செய்து விடப்படும் தொடர்பு:- 0776038913

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்குத் தெருவில் சகல வசதிகளுக்கும் ஏற்ப நல்ல நிலையிலுள்ள 2¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 077 6943532

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். அரசினர் ஆஸ்பத்திரிக்கு அருகில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 077 3448863, 077 1636090

## வீடு வாடகைக்கு

யாழ். நகர மத்தியில் பொஸ்கோ பாடசாலை முன்பாக (6Room 2Hall, Attached Bath room,Vehicles Parking) மேல்மாடி வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் VIP, N.G.O. விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு : 077 4220713

## வீடு /காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு, பழனிகோயில் வீதியில் 3 பரப்புக்காணியில் வீடும், வெறும் காணி 4 பரப்பு, 3பரப்பும் விற்ப னைக்குண்டு.

தொடர்பு : 078 4671111

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் (சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் ரூ.450/= மட்டுமே)

நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்,
யாழ்ப்பாணம்.

## வீடு விற்பனைக்கு

கண்டிக்குளி, விநாயகர் வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: S.S நாதன், இல. 16/3 விநாயகர் வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே. 077 614 6434

## மணமகன் தேவை

நாற்பத்திநான்கு வயதான இந்து கௌரவ மண மகளுக்கு மணமகன் தேவை. தாரமிழந்த விவாகரத்து பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம் சைவ போசனம் விரும்பப்படுவர். தொடர்பு : 077 8591276

## வீடு விற்பனைக்கு

ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் 3 பரம்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. (காணி பிரித்தும்) கொடுக்கப்படும்.

தொடர்பு: 0776146434

## வீடு வாடகைக்கு

கடற்கரை வீதியில் (Holy Cross) வைத்தியசாலைக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு ஏற்றது. நேரில் பார்வையிடவும்.

தொடர்புகளுக்கு : 0779989960, 0770259877, 0773118354

## மல்லாகத்தில் காணி விற்பனைக்கு

மல்லாகம் கே.கே.எஸ். வீதியிலிருந்து, 50 மீற்றரில் குழாய்க்கிணற்றுடன் 5 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 075 0422656

## கடைகள் வாடகைக்கு

இல. 409, மானிப்பாய் வீதியில் (ஐந்து சந்திக்கு அருகில்) இரு கடைகள் வாடகைக்கு உண்டு. சகல வியாபாரங்களுக்கும் உகந்த இடம் விஸ்தீரணம் ஒரு கடை 12 அடி அகலம் 15அடி நீளம். தொடர்புகளுக்கு : 071 4896711

## உங்களது அடுத்த இலக்கு??

ஆங்கிலத்தில் சரளமாக பேச வேண்டுமா?
ஆங்கில மொழிமூல பாடநெறிகளை தொடர வேண்டுமா?
கணனியறிவையும் விருத்திசெய்து கொள்ள வேண்டுமா?

கண்டியில் 02 Months FULL TIME

கணனி பயிற்சியுடன் கூடிய ஆங்கில பாடநெறி

தினமும் 02 மணித்தியாலத்துக்கு அதிகமான பேச்சுப் பயிற்சி

# ENGLISH + IT & SKILLS TRAINING

360 HOURS TRAINING

Mon - Sat
8:30am to 4:30pm

Admission Fee: 2,000/=
Course Fee: 19,500/=

பாடநெறி ஆரம்பம் 29.03.2012

தரம்வாய்ந்த 03 சான்றிதழ்கள்

ஆண், பெண் இருபாலாருக்கும் பாதுகாப்பான தங்குமிட வசதி

HOTLINE 0777 44 62 52

GOLDEN COLLEGE
CITY CAMPUS
548, Peradeniya Road, Kandy.
0812 20 55 44
0777 91 25 97
0718 03 29 67

A training institute registered with the TVEC under P09/0148


## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

அமரர்
செல்லம்மா
செல்லத்துரை



கடந்த (27.02.2011) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தாயாரின் மறைவைக் கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறி எமது துயரில் பங்கேற்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (25.03.2012) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.77,கச்சேரி- நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள்,
குடும்பத்தினர்
திருமதி செ.ரகு (மகள்)

(15957) (2-6-7)


## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் 5 Rooms, 2 Toilets, 1 Kitchen, Hall உடனான வீடு வாடகைக்கு உள்ளது.
நிறுவனம்/ NGO/ Guest House போன்றவை விரும்பத்தக்கது.

தொடர்பு: 075 7131027

(15944)

## FOR SALE



TOYOTA REGIUS WHITE
PA XXXX SINGLE OWNER
IN TOPING CONDITION 3.2 MILLION
CONTACT NO :
077 3520777 0777870391





## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சு.இரத்தினராசா

(முன்னாள் கல்விப் பணிப்பாளர், வலயம் 1)

மலர்வு 26★12★1942 உதிர்வு 30★03★1998

"கேடில் விழுச் செல்வம்
கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றையவை"

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"மாணிக்கம்",
கொக்குவில் மேற்கு.

(15975) (2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகரில் இருந்து 6 கி.மீ. சுற்று வட்டாரத்தில் 2 பேர் கொண்ட குடும்பத்துக்கு சிறிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: 0771067394

## வீடு வாடகைக்கு

இல.10, அம்மன் வீதி, கந்தர்மடத்தில் 4 படுக்கை அறைகள், Attach Bath room என்பவற்றுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தனியார் நிறுவனங்கள், நிறுவன ஊழியர்களுக்கு மட்டும்.

தொடர்பு: 0778574315

## மணமகன் தேவை

யாழ். இந்து, 1981, சுவாதி 7 இல் செவ்வாய், சுக்கிரன், சூரியன் சேர்ந்துள்ளது. பாவம் 51, உயரம் 5' 4" பட்டதாரி, சைவ போசனமுள்ள தகுந்த மணமகன் தேவை.
தொடர்பு:- 0718473977, 0212241740

## வாழ்க்கைத் துணை தேவை

யாழ். இந்து உயர் கௌரவ குடும்பம் சிறந்த குடும்ப பின்னணியைக் கொண்ட, சொந்தமாக பிரசித்தி பெற்ற சிறு நிறுவன உரிமையாளர் வயது 51 விவாகரத்து பெற்றவர். இளமையான தோற்றம் கொண்ட 8ல் செவ்வாய் நட்பு பெற்றது. இவருக்கு அதே உயர் கௌரவ குடும்பத்தில் வாழ்க்கைத் துணை தேவை. குறிப்பு, தொலைபேசி மற்றும் விவரங்களுடன்தொடர்புகொள்ளவும்.

மே/பா. உதயன்
விளம்பர இல. 4341, 361,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## நாயால் அவலம்

பூநகரி, மார்ச் 25

சீரற்ற வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் வேகமாக ஓடி வந்த நாய் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும் மகளும் தூக்கி வீசப்பட்டுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் பூநகரி கறுக்காய்த் தீவில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கலையானந்தசிவம் சிவசுகந்தினி (வயது 32) இவரது மகளான கலையானந்தசிவம் டேனுகா (வயது31/2) ஆகியோர் காயமடைந்தனர்.

இவர்கள் பூநகரி பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலைக்குஅனுப்பி வைக்கப்பட்டனர்.

(ம-9)


## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்





தோற்றம்:- 10.11.1957 தோற்றம்:- 27.09.1982

மறைவு :- 25.03.2009

திதி :- சதுர்த்தஷி - 21.03.2012

4ம் வட்டாரம் முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

*அமரர்கள்*

**திருமதி.பரமேஸ்வரன் ஜெயரஞ்சினி**

**செல்வி.பரமேஸ்வரன் ஜெனோஜா**

ஆண்டு மூன்று சென்றாலும் உம்
நினைவுடன் ஆத்மா சாந்திக்காக
தினம் தினம்பிரார்த்திக்கின்றோம்
உம் பிரிவில் துயருற்றிருக்கும் கணவர் பிள்ளைகள்

தகவல் : கு.முல்லைக்குமார்(உபஅதிபர் வ/இறம்பக்குளம் ம.ம.வி)

## வியாழக்கிழமை ஆரம்பமாகின்றது

# திருமறைக் கலாமன்றம்

தயாரித்து வழங்கும்

*தவக்கால ஆற்றுகை*

# வேள்வித் திருமகன்

(திருப்பாடுகளின் காட்சி)



காலம் : மார்ச் 29,30,31, ஏப்ரல் 01-2012
(வியாழன்,வெள்ளி,சனி,ஞாயிறு)-நான்கு நாள்களுக்கு

நேரம் : மாலை 6.45 மணி (வெள்ளிக்கிழமை மட்டும் இரவு 7.30 மணி)

இடம் : திருமறைக்கலாமன்ற அரங்கு

பார்வையாளர்கள் ஆசனங்களுக்கான பதிவுகளை யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் இன்றுமுதல் மேற்கொள்ளலாம்.

*இம்முறை 'வேள்வித் திருமகன்' நாடக நூலினையும் பெற்றுக்கொள்ளலாம்.*

இறைமகனின் பாடுகளின் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2393.

திருமறைக் கலாமன்றம்.

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1982 இல் பிறந்த அச்சுவினி, 4 இல் செவ்வாய் கிரகபாவம் 36 உடைய, கனடாவில் பணிபுரியும் மணமகனுக்கு கனடாவில் குடியுரிமையுடைய மணமகள் தேவை.
தொடர்பு:- 0776983872

## திருமண சேவை

சுலபமான சுயதெரிவு முறையில் மணமக்களைத் தெரிவு செய்வதற்கு குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனிடம் செவ்வாய், வியாழன் தவிர்ந்த மற்றைய நாள்களில் மு.ப. 11.00 - பி.ப.1.00 மணிக்குள் விவரங்களை விசாரித்தறிக!
Tel : 0114873929, 0112360488

## மணமகள்தேவை

இந்து கௌரவ குடும்பம், 1983 இல் பிறந்த அவிட்டம் -3, கிரகபாவம் 9¾, 6' உயரம் உடைய Work Premit இல்UK இல் வசிக்கும் M.Sc பொறியியலாளருக்கு AUSTRALIYA, UK or CANADA PR உள்ள படித்தபெண் தேவை.

விளம்பர இல: 4235
உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(15699)(6-9-8)

## வீடு வாடகைக்கு

இல. 84, நாவலர் வீதியில் அமைந்திருக்கும் இரண்டு அறை, ஒரு கோல் கிச்சின் அடங்கலான மாடிவீடு வாகனத் தரிப்பிட வசதியுடன் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:- 0752612250
0775796657

## யா/வைத்தீஸ்வராவின் கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் பழைய மாண வனும் முன்னாள் பழைய மாணவர் சங்கத் தலைவரும் கல்லூரியின் அபி மானியுமாகிய

**திரு.T.லோகநாதன்**

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் கவலையும் அடைந்தோம். அமரரின் ஆத்மா சாந்தி அடைய வைத்தீஸ்வரப் பெருமானை பிரார்த்திப்பதுடன் பிரிவினால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

அதிபர், பிரதிஅதிபர்,
மாணவர்கள்.


# கேள்வி அறிவித்தல்

## பிரதம செயலாளர் செயலகம்
## வட மாகாணம்

### 2012/13 ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்புச் சேவைக்கான விலைமனுக் கோரல்

1. பிரதம செயலாளர் பெறுகைக்குழுவினால் வடமாகாண சபையின் தலைமைக் காரியாலயங்களுக்கு 2012/13 ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்புச் சேவை (Cleaning Service) வழங்குவதற்கு தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்வி மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. பெறுகை தாரர் தனிநபராகவோ அல்லது நிறுவனமாகவோ சுத்திகரிப்புச் சேவையை வழங்கும் நிறுவனமாக பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.

3. பெறுகைதாரரின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ். நகரிலிருந்து 10 km சுற்றுவட்டத்திற்குள் அமைந்திருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமிழ்மொழி மூலமான கேள்வி ஆவணங்களை எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பெயரில் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1,000/= ஐ காசாகச் செலுத்தி 26.03.2012 தொடக்கம் 02.04.2012 வரை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை அலுவலக நாள்களில் மாகாணத் திறைசேரி, வடமாகாணம், 79/2, றக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் - என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

5. கேள்வி ஆவணங்கள் 10.04.2012 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு "தலைவர், பிரதம செயலாளர் பெறுகைக் குழு, மாணாத் திறைசேரி, வடமாகாணம், 79/2, றக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது பிரதிப் பிரதம செயலாளர் - நிதி அவர்களின் அறையிலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

6. கிடைக்கப்பெற்ற கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவே நிராகரிப்பதற்கும் மீள் கேள்வி கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

ர. விஜயலட்சுமி
தலைவர், பிரதம செயலாளர் கேள்விச் சபை,
187, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

19.03.2012

## வட மாகாண சிறந்த நூற்பரிசுத் தேர்வுப் போட்டி-2011

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வருடா வருடம் வடமாகாண எழுத்தாளர்களை ஊக்குவிப்பதை நோக்கமாக கொண்டு மேற்படி போட்டிகளை நடத்தி வருகின்றது. இப் போட்டிக்கான நிபந்தனைகள் பின்வருமாறு.

01. நூல்கள் யாவும் 2011 ஜனவரி 01 ஆம் திகதிக்கும் 2011 டிசெம்பர் 31ஆம் திகதிக்கும் இடையில் அச்சில் வெளிவந்தவையாகவும், முதல் பதிப்பாகவும் இருத்தல் வேண்டும்.
02. நூலாசிரியர் வடமாகாணத்தின் 05 மாவட்டங்களில் ஒன்றினை பிறப்பிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி)
03. ஒருவர் எல்லாத்துறை போட்டிகளிலும் பங்குபற்றலாம். நூலின் ஆசிரியர் ஒருவராக மட்டும் இருத்தல் வேண்டும்.
04. நூலின் 04 பிரதிகள் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
05. பின்வரும் துறைகளில், போட்டிகள் இடம்பெறும். நூலாசிரியர் தான் எந்தப் பிரிவில் தனது ஆக்கத்தை சேர்த்துக் கொள்ள விரும்புகின்றார் என்பதை கட்டாயம் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| **1. உயர்கல்வி** | **3. பல்துறை** | **5. சிறுகதை** | **7. நாடகம்** |
| **2. ஆய்வும் விமர்சனமும்** | **4. கவிதை** | **6. நாவல்** | **8. சிறுவர் இலக்கியம்** |

06. நூலகள் தமிழ் மொழி மூலம் ஆக்கப்பட்டிருப்பதுடன் நூலில் பதிப்பித்த ஆண்டும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்
07. நூல்களை பதிவுத் தபாலின் மூலமாகவோ அல்லது வலயக் கல்விப்பணிமனை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ நேரடியாக ஒப்படைக்கலாம்.
08. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
09. விண்ணப்ப முடிவு திகதி 2012.04.23 ஆகும். இத் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக

**பணிப்பாளர்,**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,**
**வலயக் கல்வித் திணைக்களம்,**
**யாழ்ப்பாணம்.** - என்ற முகவரிக்கு

அனுப்பி வைத்தல் வேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கும் நூற்பிரதிகள் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது.


★ போட்டிக்காக அனுப்பி வைக்கப்படும் நூல்கள் மீண்டும் கையளிக்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு 021-3202990 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்,
கல்வி அமைச்சு, வடமாகாணம்.

(C9173) (6,9,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். கைத

# திருவருள்மிகு ஸ்ரீ கற்பக வி

# மஹா கும்பாபிஷே

# சிறப்பு மலர் உ

# (ஞாயிற்று

## ஆலய வரலாறு

ஈழமணித் திருநாடின் சிகரமென விளங்கும் யாழ்ப்பாண பட்டணத்தின், கைதடி கிராமத்தில் கற்பக விநாயகர் எனும் நாமத்துடன் ஏ 9 வீதியில் கைதடிச் சந்தியிலிருந்து சாவகச்சேரிக்கு இடையில் தனக்கெனப் பிரமாண்டமான இராஜ கோபுரத்துடன் இன்றைய தினம் (25.03.2012) காலை வளர்பிறை திருதியை திதியும், அஸ்வினி நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய புண்ணிய தினத்தில் காலை 9 மணிமுதல் 10.15 வரையுள்ள இடப லக்கின சுப முகூர்த்தத்தில் ஆவர்த்தப் பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேக மஹா சாந்திப் பெருவிழா நிகழ்த்த திருவருள்பாலித்துள்ளதால் இன்றைய தினம் மஹா கும்பாபிஷேக பெருவிழா நடைபெறுகின்றது.

ஆலயத்தின் பிரதம குருவான கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ இ.நகுலேஸ்வரக் குருக்கள் ஸ்ரீவித்தியா உபாசகர் - நீர்வேலி அவர்களின் தலைமையில் பல்வேறு சிவாச்சார்யார்கள் தமது பணியினை செய்கின்றனர். தொடர்ந்து 45 நாள் மண்டலாபிஷேகம் நடைபெற்று விழா நிறைவு பெற சித்தம் கைகூடியுள்ளது.

**கிரியாகால விவரம் :**

கர வருடம் பங்குனி மாதம் 8ஆம் நாள் (21.03.2012) காலை 8 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பித்து நடைபெறுகின்றது. 24.03.2012 எண்ணெய்க் காப்பு நிகழ்வு காலை 8 மணிமுதல் மாலைவரை நடைபெறும்.

**ஆலயத்தை கட்டிய விற்பனர்கள்:**

ஆலய அமைப்பினை-அராலியூர் தங்கேஸ்வரன் குழுமத்தினர் நிறைவேற்றி தந்துள்ளனர்.

**ஆலய விக்கிரகங்களை** - அராலியூர் தி.விஜயகுமார் அவர்கள் அற்புதமாக செதுக்கி தந்துள்ளார்.

**ஆலயத்தின் வர்ணம்** - திரு. ரவியின் கைவண்ணத்தினால் உயிரோட்டமாக கருதப்படுகின்றது.

**ஆலயம் உருவான கதை:**

கைதடி கிழக்கைச் சேர்ந்த சிதம்பரர் நாகர் அவர்களால் ஆலயம் தோற்றுவிக்கப்பட்டது. நாகர் குடும்பத்தினரால் 1977 ஆம் ஆண்டு பல கஷ்டங்களுக்கு மத்தியில் சிறிய காணித்துண்டொன்று தங்க நகை விற்ற பணத்தில் வாங்கப்பட்டது. இவர்களது தோட்டத்தில் ஒரு நாகப்பாம்பு காணப்பட்டது. அதனைக் கண்ட மகனின் அலறல் சத்தத்தை கேட்டு அயலவர்கள் வந்து பார்த்தபோது அங்கு பாம்பு காணப்படவில்லை. சில நாட்களின் பின்னர் நாகர் உறக்கத்தில் இருந்த போது விநாயகர் கனவில் தோன்றி நான் உனது தோட்டத்தில் குடியிருக்கப்போகின்றேன் என்று கூறி மறைந்தார். அதை எஜமானார் பொருட்படுத்தவில்லை. மீண்டும் ஒருமுறை கனவில் விநாயகர் தோன்றி காட்சிதர அவர் மனதில் ஆலயம் கட்டவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. இதன் விளைவாகவே இவ் ஆலயத்தின் தோற்றம் இடம்பெற்றது.

**ஆலய உருவாக்கமும் பிள்ளையார் வழிபாடும்:**

தற்போது வீதியோரத்தில் வழிபடப்படும் விநாயகப் பெருமான் 1977ஆம் ஆண்டு வைக்கப்பட்டதாகும். கடந்த 3 தசாப்தமாக வழிபடப்பட்டுவருவது யாவரும் அறிந்ததே.

**தட்டேந்தி பணம் சேகரிப்பும், திருப்பணியும்:**

ஆறுமுகம் சுப்பிரமணியர் அவர்கள் என்னுடன் சகல திருப்பணி வேலைகளிலும் தோழோடு தோழ் நின்று உழைத்தவர். வாகனங்களை மறித்து பணம் சேகரிக்கும் பணியை ஆரம்பித்து வைத்தவர். இன்று இக்கோயில் திருப்பணி நிறைவுபெற இவரது பணி அளப்பெரியதாகும்.

"கனகவாரிதி"
விஜயரத்தினம்-கனகராசா
B.A.(Hon). Dip.in.Ed. m.Phil.Ed.



## பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ இ.நகுலேஸ்வரக்குருக்கள் ஸ்ரீ வித்யா உபாசகர், நீர்வேலி அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி

விநாயகப் பெருமான் அடியார்களே

சிவ பூமியாம் ஈழ மணித் திருநாட்டின் சிரசென விளங்கும் யாழ்ப்பாணத்திலே சைவமும் தமிழும் தழைத்தும் இயற்கை வளமும் சூழ்ந்த நெல் வயல்களுக்கு மத்தியிலே கைதடி எனும் பதியில் கண்டி வீதியின் அருகில் அமர்ந்து சகல ஆத்மாக்களுக்கும் எந்த ஆபத்தும் வராமல் பயணங்களில் இடையூறு வாராமலும் வேண்டுவோர்க்கு வேண்டும் வரங்களை அள்ளிக் கொடுத்து அருளாட்சி புரியும் ஸ்ரீகற்பக விநாயகப் பெருமானுக்கு அடியார்கள் தங்களது பயணங்கள், காரியங்கள் சித்தியடைந்த ஆனந்தத்தில் கருங்கற்களினால் மதி நுட்பமான சிற்ப சாஸ்திர வேலைப்பாடுகளுடன் கூடிய ஆலயமும் கம்பீரமான துவாரபாலகர்களுடன் கூடிய இராஜகோபுரத்தையும் கொண்ட விநாயகர் முப்பது ஆண்டு காலத்திற்கு மேலான திருப்பணிகள் நிறைவடைந்து இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட கற்பக விநாயகர், கஜலட்சுமி, நவக்கிரக்தேவர்கள், சுப்பிரமணியர், வைரவர், நாகதம் பிரான், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகளுக்கு இன்றைய தினம் பங்குனி மாதம் 12 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 25.03.2012 அஸ் வினி நட்சத்திரமும் திருதியை திதியும் கூடிய சுபமுகூர்த்தமான 9 -10.15 மணிவரையுள்ள இடப லக்கினத்தில் ஆவர்த்தன பிரதி ஷ்டா மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகின்ற நேரத்தில் அடியார் களுக்கு கற்பகவிநாயகரின் அருள் கிடைக்கப் பிரார்த்தனை செய்து எல்லோருக்கும் எனது நல் ஆசியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.



## அருளாசி செய்தி விநாயகர் அடியார்களுக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் எழுந்தருளி இருக்கும் கற்பக விநாயகருக்கு நடைபெற்ற கும்பாபிஷேகத்தினை நிலை நிறுத்தும் பொருட்டு அபிஷேகமலர் வெளியிடுவதனையிட்டு மகிழ்வடைகின்றோம். சிவபூமியாம் இலங்காபுரியில் வட புலம் யாழ்ப்பாணத்தில் சைவசமயம் சமயப் பண்பாடும் நீண்ட காலமாக மக்களால் வழிநடந்து வரப்படுகின்றன. இப்பாதையில் ஆலயங்களுடைய பங்களிப்பு மிக நிறைவாக உள்ளது. இதனை ஆதாரமாக் கொண்டே கண்டி வீதியூடாக பயணம் செய்யும் ஒவ்வொருவருடைய பங்களிப்பினால் உருவாகிய இந்த ஆலயம் வரலாற்று அடையாளமாகும். ஒவ்வொரு ஆலயத்துக்கும் வரலாறுகள் தனியாக உண்டு. இவ்வாலய வரலாறு சற்று மாறானது இப் பாதையின் ஊடாக பயணிக்கும் அன்பர்களுடைய ஆதரவினால் ஒளிப்பட்டது இவ்வாலயம் ஆகும். எங்கும் பரந்து விரிந்திருக்கும் இறைவன் இவ் வாலயத்தின் விநாயகப் பெருமானாக எழுந்தருளியுள்ளார். விநாயகர் அருள் அனைவருக்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம். பல வரலாறுகளைக் கொண்ட கைதடி பிரதேச இவ்வாலயமும் ஓர் வரலாற்று அடையாளம் ஆகும். அனைவரும் இறைவனைப் பிரார்த்தித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக "என்றும் வேண்டும் இன்பம்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

## இந்து சமயப் பேர...
## செயலாளர் திரு. சி...
## வழங்கிய ஆ...

கண்டி வீதி கைதடியில் எழுந்தருளி...
ஸ்ரீ கற்பக விநாயகப்பெருமானின்...
பொட்டி வெளியிடும் மலருக்கு...
வதையிட்டு மட்டற்ற மகிழ்சியடை...
இப்பெருமானை ஆத்மீக உ...
புறத்தும் நெடிதுநான் நினைந்து இவ்...
றமை சிறப்பிற் குரியதாகும். இதனை...
மனக்கோயில் எம் நினைவிற்குவருகி...
பிரணவப் பொருளின் வடிவம...
பெருமானை வலி வலம் உறையும் சி...
கொடையாக வழங்கியுள்ளார்கள் என...
சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளி உள்...
இத்தகைய பெருமைமிக்க பெருமா...
பெருஞ் சாந்தி விழா நிகழ்வதன் மூ...
கள் தீர்ந்து இன்புற்று வாழ வழிபி...
அருள் உலகெங்கும் அபரிமிதமா...
போமாக.

சி. ச...
இந்து சமய பேரவை...



## வாழ்த்துச் செய்தி அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் கைதடி

1982 இல் ஆரம்பித்து 30 வருடங்களாக தனது கோயில் திருப்பணிகளை நிறைவேற்றி 2012 இல் கும்பாபிஷேகம் காண்கின்றார், எமது கைதடிப் பிள்ளையார் இவரை அறியாதவர் எவருமில்லை அதாவது நெற்றிச் சந்தனம் பிள்ளையாரது அடியவரைத் துல்லியமாகப் பறைசாற்றும் கைதடிப்பதியிலே ஏ-9, பாதையோரம் வீற்றிருந்து பாதையால் பயணிக்கும் அடியவர்களை தாகசாந்தியோடு தனது அருளையும் பாலித்துக் காத்து வருகின்றார்.

1995 காலப்பகுதியில் இப்பதியானது இங்கு தஞ்சமடைந்த மக்களுக்குரிய உயிர்காக்கும் புகலிடமாக விளங்கியது மனங்கொள்ளத்தக்கதாகும். எனவே எல்லா மக்களும் விநாயகரது அருட்கடாட்சம் கிடைக்கப்பெற்று வாழ வேண்டும் என வேண்டி எம்மடியவர்களின் நீண்ட நாள் கனவை நனவாக்கிப் பிள்ளையாரை அழகாகக் கோயிலிலே அமரவைத்து கும்பாபிஷேகப் பெருவிழாவை நிறைவேற்றியிருக் கின்ற தலைவர் சி. நாகர் அவர்களுக்கும் அவரோடு முழுமூச்சாக நின்று அர்ப்பணிப்போடு பணியாற்றிய குழுவினருக்கும் இறையாசிகள் கிடைக்கவேண்டும் எனப் பிரார்த்தித்து நல்லதோர் வைபவத்தைச் ... பிரதேச செயலகம் ... வாழ்த்துக்களை ... கொள்கின்றேன்.

பிரதேச செயலர்,
பிரதேச செயலகம், தென்மராட்சி.

## அடியார்களுக்கு அருள் அள்ளி வழங்குபவன்



தொன்மை மிகு வளங்கள் பல மலிந்த
தென்மராட்சியின் நன் செய் நிலங்களும்,
தென்னை, பனை வளங்களும் கல்விச்
செல்வமும் நிறைந்த கைதடிப்பகுதியில்
கமலம் நிறைந்த நன்னீர் கரைக்கருகில்
கண்டிவீதிக்கண்மையில் தனது வதிவிடமாய்

அமர்ந்து அடியார்களுக்கு அருள் அள்ளி வழங்கும் ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமானின் ஆவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் 25.03.2012 இல் நடைபெறும் நாள் தென்மராட்சிப் பெருமக்களுக்கல்ல இப்பூவுலகில் வாழும் அனைத்து ஜீவராசிகளுக்கும் ஓர் சிறந்த நன்நாள், சிறுகச் சிறுகச் சேர்த்த சதங்கள் ரூபாய்களாகி இன்று அட்டதளக் கோபுரத்துடன் அராலி கைதேர்ந்த ஸ்தபதிகளின் நிர்மாண அளவுகளுடன் ஆலயம் ஓங்கி நிமிர்ந்து ஒளி வீசி நிற்பது என்றால் அது மக்களின் பக்தி உணர்வும் பிள்ளையாரின் அருளும் என்றால் மிகையாகாது. அங்கு சகிக்கமுடியாத இக்கட்டுக்கு முகம் கொடுத்து மக்களைக் காப்பாற்றுகின்றார் முறிகண்டிப் பிள்ளையார். இங்கு எம்மை எல்லாம் அன்புடனும் காப்பாற்றப் போகின்றார் கைதடிப் பிள்ளையார்.

ஔவையார் கூற்றின் படி
"நற்குஞ்சரகன்றை நண்ணில் கலை ஞானம்
கற்குஞ்சரக்கன்று காண்"
"பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்
கோலம் செய் துங்கக் கரிமுகத்து தூமணியே - நீ எனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா" என வேண்டி எமக்கு

விநாயகப் பெருமான் அருட்கனை நோக்குவார் என அவர் அருளாலே அவரை வணங்கி அபிஷேகம் சிறப்புடனும் கீர்த்தியுடனும் ஏற்றமாய் நிறைவேற சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்.

செல்வி தர்சினி தியாகராஜா, செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.

## கற்பக விநா...



ஆலயம் தொழுவது சாலவு...
பாரம்பரியத்தை மேன்மை...
மிளிரவும் மக்களை வாழ்வ...
கனவிலே தோன்றி எனது...
பிறவித்துன்பத்தில் இருந்து மீட்டெடுக்க...
பிறப்பித்த கருணைக் கடலை யான் என்ன...
அன்பர்கள் அனைவருக்கும் கோடி இன்பம்...
தருமச் செயற்பாடுகள், தாக சாந்திகள் என்...
சபையினருக்கும் இறையருள் கிடைக்கட்டு...
ஓம் சாந்தி! ...



## பா...

கோவில் இல்லா ஊரில் ...
அழகிய கிராமத்தில் எழுந்...
வாழவைக்கப்போகின்றான் ...
சிற்ப, ஓவியம், இராஜ...
வளர்ச்சியடைந்துள்ளது. இத் திருப்பணி...
நிற்கிறேன்.



## பா...

பொருள் இல்லார்க்கு இவ்...
கைதடி - கற்பகவிநாயகர்...
வருடமாக பணதினை சி...
அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் புத்திய...
வாழ பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...தடி கண்டி வீதி
# ...விநாயகர் தேவஸ்தானம்
## ...ஷேக பெருவிழா
## ...25.03.2012
## ...(ழக்கிழமை)



### ...் பேரவைக்கௌரவ ...திரு. சி. சக்திகிரீவன் ...ய ஆசிச் செய்தி

...ழுந்தருளி அருள்பாலிக்கும் உக்களை ...ருமானின் குடமுழுக்கு விழாவை ...லருக்கு ஆசிச் செய்தி வழங்கு ...சியடைகிறேன்.

...மீக உணர்புபெற்றவர்கள் அகத்தும் ...ந்து இவ் வாலயம் அமைக்கப் பெற் ... இதனை எண்ணுங்கால் பூசலாரின் ...ற்குவருகிறது.

... வடிவமாக அமைந்துள்ள விநாயகப் ...றையும் சிவபிரான் தனது மிகப் பெரிய ...ர்கள் என திருஞான சம்பந்த மூர்த்தி ...ருளி உள்ளார்.

... பெருமானுக்கு மஹா கும்பாபிஷேகப் ...வதன் மூலம் அனைவரும் விக்கினங் ...ழ வழிபிறப்தோடு அப்பெருமானின் ...பரிமிதமாகச் செளியப் பிரார்த்திப்...

சி. சக்திகிரீவன்.
... பேரவைக் கௌரவ செயலாளர்.

### தென்மராட்சிக்கு கிடைத்த பொக்கிஷமாக



தமிழ் மணமும், சைவ நெறியும் ஓங்கிவள ரும் ஈழத்திருநாட்டில் யாழ்ப்பாணக் குடா நாட்டின் தென்மராட்சிப் பிரதேசத்தின் கண்டி வீதி கைதடியில் பெருமைக்குரிய ஊரின் கண்ணாக அமைந்துள்ள அருள் மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மஹா கும்பாபி ஷேகவிழா நடைபெறுவதை சைவசமய வழிபாட்டின் முழுமுதற் கடவுளாக விளங்கும் விநாயகப் பெருமானை, இராஜகோபுரத் துடன் கண்டி வீதியில் அமைந்த இவ் வாலயம் மிகச் சிறப்புப் பெற்றுள்ளது. கட்டடக் கலை தங்கேஸ்வரன் குழுவினர் மிகவும் சிறப்பாக அமைத்துள்ளனர். சைவ வரலாற்றுச் சான்று ஒன்று தென்மராட்சிக்கு பொக்கிஷமாக கிடைத்தமை பெருமைக்குரிய விடயமாகும். மேலும் இவ் வாலயமானது ஆலயப் பணியுடன் மக் களாலும் எம்மாலும் ஆன உதவியுடன் அமைந்ததை இட்டு நான் பெருமைப் படுகின்றேன். இவ்வாலயமானது சிறிய ஆலயமாக இருந்து இன்று இராஜகோபுரத்துடனும் அதிக பக்தர்கள் வழிபடும் தலமாக அமைந்துள்ளது. இவ்வாலய கும்பாபிஷேகத்தின் மூலம் நாட்டின் சாந்தியும் சமாதானமும் மற்றும் ஆலயகுருமார்கள், உபயகாரர்கள், விநாயகர் அடியார்கள் அனைவருக்கும் நல் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன். பெருமைகள் பெரிதும் கொண்ட இவ்வாலயம் மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெரு மையடைகின்றேன். உதவிய எல்லோருக்கும் நன்றியை தெரி விக்கிறேன்.

ஆ. சுப்பிரமணியம்.
(ஆலய ஸ்தாபகர்)

### ஏ 9 பாதை பயணிகளின் காவலன்

ஏ 9, பாதையில் பயணம் செய்யாதவர்கள் பெரும்பாலும் இருக்க மாட்டார்கள். வாகனங்கள் கைதடிப்பிள்ளையார் ஆலயத்தில் தரித்துச் செல்வது யாவரும் அறிந்தது குடில் ஒன்றில் பிள்ளையார் அமர்ந்திருக்க அருகில் கருங்கல் ஆலயம் அமைக்கப்பெற்று வந்தது. நாட்டில் அமைதியில்லாத அந்தக் காலத்திலிருந்து - நீண்ட காலமாக இதே நிலையில் காணப்பட்ட விநாயகர் ஆலயம் முழு மைபெற்று கும்பாபிஷேகம் நடைபெறவிருப்பது அறிந்து மட்டில்லா மகிழ்ச்சியடைந்தேன்.

ஆலயத் திருப்பணிக்காக அரும்பாடுபட்ட "ஐயா" அவர்களின் பணி வணக்கத்திற்குரியது. காசுகள்தேடி ஆலயத்திருப்பணி முடித்துள்ள அவர் சேவை நமக்கு வழிகாட்டும் விக்கினம் தீர்க்கும் விநாயகர் அவருக்கு என்றும் வழிகாட்டுவார். ஆலயம் அமைப்பது என்பதை விட, ஆலயத்தை மக்கள் உரிய வழிபாட்டு இடமாகக் கொண்டு உண்மையான பக்தியுடன் மனதை எல்லோரும் துன்பம் நீங்கி வாழ வேண்டும் என்ற உயர் சிந்தனைக்கு உட்படுத்தி ஆன்மாவை இலக்கு நோக்கி இட்டுச்செல்ல வேண்டும். திருமூலர் கூற்றுப்படி இறைவனை புந்தியில் - மனதில் வைத்து வழிபட வேண்டும் கணபதியை மிக உயர்ந்த கடவுளாக வழிபடும் முறை காணபத்தியம் என்றழைக்கப்படுகிறது. ஓம்கார வடிவமாக கணபதி கருதப்படுகிறார், யானைத் தலையுடனும் பானைவயிறுடனும் காட்சி தரும் அவர் சர்வஞானி.

கைதடி விநாயகர் புதுப் பொலிவு அடையும் நன்நாள் நாட்டிற்கும் மக்களுக்கும் துயர் நீங்கி இன்பம் தொடரும் நாளாக அமையப் பிரார்த்தனை செய்வோமாக.

'சொல்லின் செல்வர்'
இரா. செல்வவடிவேல்



### செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

ஆத்மிக ஞானிகள் வாசம் செய்த புண்ணிய பூமி கைதடி. இத் திருவூரில் பெருந்தெருக் கரையில் அற்புதம் நிறைந்த ஆனை முகப் பெருமான் குடிசையில் கொலுவிருந்து திருவருள் பாலித்த மையை அறியாதவர்களில்லை. கொட்டிலில் இருந்த விநாயகப் பெருமான் கோபுரத்தோடு கூடியமாடக் கோயிலில் காட்சி கொடுக்கும் நாள் நனவாகிவிட்டது. கையில் தட்டம் ஏந்தி, தும் பிக்கையானுக்கு கோயில் கட்டத்துணை செய்யுங்கள் என்று கூவி அழைத்த பக்தனின் கனவுக்கோயில் இன்று நனவாகிவிட்டது. நினைத்துப்பார்க்க ஆச்சரியமாகவுள்ளது. கல்லுப் பொழிந்து காலங்காலமாக நிலைபெறக் கட்டிய கற்கோயில் இக்கோயிலின் வரலாறு தனித்துவமானது பக்தியால் சாதிக்க முடியாதது ஏது மில்லை என்பதை மீளவும் நினைவூட்டும் நிஜ வரலாறு அருள் நிறைந்த ஆனைமுகப் பெருமானின் மகா கும்பாபிஷேகம் சிறக் கப் பிரார்த்திக்கிறேன் வீதியில் வீற்றிருந்து பயணிகள் காரியம் கீர்த்தி பெறத் திருவருள் பாலிக்கும் அத்திமுகலன் இம் மண் ணின் அறம் காக்க அருள் வேண்டி வாழ்த்தி அமைகிறேன்.

"யாவர்க்குமாம் இன்னுரை தானே"

கலாநிதி ஆறு திருமுருகன்
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
சிவபூமி அறக்கட்டளை, தலைவர்

### ...க விநாயகப் பெருமானின் பாதம் பணிந்து

...து சாலவும் நன்று என்பதற்கு இணங்க, எமது தென்மராட்சி மக்களின் சைவ, தமிழ் ...மைப்படுத்தவும், தமிழர்களது வரலாற்றுப் பாரம்பரியத்தின் நிலைக்களனாக ... வாழ்வாங்கு வாழ வைக்க எம்பெருமான் தானாக எழுந்தருளுகிறார். என் ...ி எனது உடலை வருத்தி சமுதாயத்தை சீர்மைப்படுத்தவும், ஆன்மாக்களை தமது ...டுக்கவும், வழிப்படுத்த இவ்வாலயம் அடித்தளமாக அமைக்கும்படி கட்டளை ... என்னவென்று எடுத்துரைப்பேன். இவ்வாலயம் பிரமாண்டமாக அமைய உதவிய ... இன்பம் கிடைப்பதாகுக! "தட்டேந்தி" நிதி சேகரித்து, ஆலயப்பணி, அறப்பணி ...கள் என்றும் 30 வருடகாலம் எம்பணி தொடர தோழோடு தோழ் நின்ற பரிபாலன ...க்கட்டும். இவையாவும் கற்பக விநாயகர் கருணையேயன்றி வேறில்லை. ...சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சி. நாகன் (ஆலய ஸ்தாபகர்)
பரிபாலன சபை, தலைவர்

### பரிபாலன சபைச் செயலாளரின் செய்தி

...ஊரில் குடியிருக்க வேண்டாம் இவை ஆன்றோர் மொழியாகும் கைதடி எனும் ...ல் எழுந்தருளி அடியார்கள் குறைநீக்கி அருள் அழித்து மக்களை வாழ்வாங்கு ...கின்றான் எம் கற்பகவிநாயகப் பெருமான் இவ்வாலயம் பிரமாண்டமான கட்ட, ... இராஜகோபுரம், பரிகாரமூர்த்திகள் என்று புதிய பரிமாணம் பெற்று ...ருப்பணியில் பங்கேற்ற அனைத்து உள்ளங்களுக்கும் அருள்பாலிக்க வேண்டி

சு. சந்தர்மகுலசிங்கம் செயலாளர், பரிபாலனசபை

### பரிபாலன சபை பொருளாளரின் செய்தி

...கு இவ்வுலகம் இல்லை அருள் இல்லார்க்கு அவ்வுலகமில்லை எனும் கூற்றுப்படி ...விநாயகர் பெருமானது திருப்பணிகள் தங்கு தடையின்றி தொடர கடந்த 30 ...னை சிற... பெருவெள்ளமாக தாராள மனப்பான்மையுடன் தந்து உதவிய ... புத்தியும், சித்தியும் பெற்று பதினாறு பெரு நிதிகளும் கிடைத்து வாழ்வாங்கு

இ. சிறீதரன், பொருளாளர்

விளம்பர அனுசரணை

SRI MUTHUMARIAMMAN TRADERS
342,344, Hospital Road, Jaffna
GENERAL MERCHANTS & COMMISSION AGENTS
Authorized Distributor For
Prima Ceylon (Private) Limited
Lanka Milk Food (cwe) PLC
TEL : 021 222 8666
021 567 4110
SMT
FAX : 021 222 8666

LG
M. Mukunthan
Managing Director
0777 738715
JAFFNA ELECTRICAL
DEALERS IN ELECTRICAL & ELECTRONIC
Authorized Dealer for Abans Ltd.
DEALERS FOR KML CABLES AND KTK PVC PIPES
94(6), Stanley Road, Jaffna.
Tel: 021-222 2353
Fax: 021-222 4302
Email:matheesan16@yahoo.com

V.M.K. Mills
Pointpedro Road,
Chavakachcheri

விவா எலக்றிக்கல் அன் ஹாட்வெயர்
கண்டி வீதி, கைதடிச் சந்தி,
கைதடி.
உரிமையாளர்: கதிரவேல் சசிகுமார்
T.P: 021 3216341

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DANISH DEMINING GROUP

DDG DANISH DEMINING GROUP

Danish Demining Group (DDG) has been in operations in Sri Lanka since 2003. Presently the work force consists of 400 personnel which is expected to increase to 470, including deminers. DDG presently operates in Jaffna, Killinochchi and Vavuniya districts.

DDG is an active participant in the global effort to reduce the effects of landmines. The objective of DDG is to contribute towards the goals and objectives of the National Mine Action Program in Sri Lanka, which aims to reduce the threat of mines and other unexploded ordnance from priority areas.

## 1. Vacancy Announcement - Camp Administrator – Omanthai (Vavuniya)

The position is based in Omanthai. As a Camp Administrator in the organization the main responsibilities would be:

**Administration**

a. Be responsible to coordinate all day to day LOG/ ADMIN / HR related activities at the field camp/s in Vavuniya and to report to the Jaffna Office accordingly.
b. Fully responsible and for security of the DDG camp compound and maintenance of the camp and the equipment.
c. Be Familiar with DDG policies and procedures in relation to purchase (in case of emergency) and delivery.
d. Ensure that Attendance sheets are properly marked daily and are in order
e. Responsible of Petty cash handling and proper documentation of all purchases.
f. Casual staff wages Preparation & Documentation
g. Submit data and reports to relevant staff.

**Supply chain/Logistics**

h. Fully responsible of the Store / Warehouse in the Camp
i. Ensure storerooms are well organised, clean and secure at all times (includes fire hazards, storage of hazardous materials and response procedures).
j. Assist the Logistics Manager/Senior Logistics Officer to conduct inspections of warehouse/s.
k. Issue and receive items of equipment inspecting every item for cleanliness and serviceability.
l. Maintain the field Store stock cards for all the types of items that have been received, transited, or remain within the storerooms.
m. Provide information on the availability of items from the inventory to the Logistics Officer when requested.
n. Update & circulate monthly operation requisitions each team wise, uniform / tools issuing data base
o. Update of local purchase, item received database according to the procurement plan
p. prepare and update materials outgoing waybills ,update of tools repairing database

### MINIMUM QUALIFICATIONS AND EXPERIENCE REQUIRED

- Sri Lankan National and Completed Secondary School Education.
- HR management, Inventory and stock control skills
- Ability to work proactively and with initiative, Team approach, Good interpersonal skills, Flexible, reliable and trustworthy.
- Good level of English & Tamil (verbal and written) and at least basic level in Sinhala Language.
- 3 years' work experience at a supervisory level, preferably in the field of Administration and/or Logistics.

## 2. Vacancy Announcement - Logistics Assistant – Omanthai (Vavuniya)

Summary of the Position: Provide day-to-day management of DDG fleet management, procurement, general maintenance in Vavuniya. Maintain the security and an accurate, independent record of the inventory.

**Administration**

- Be familiar with DDG policies and procedures in relation to supply matters.
- Receive office items requiring, repairs and keep record of it.
- Coordinate & organize to the Office, compound, Experts residence general maintenance
- Make sure & maintain all DDGs properties, machineries & equipment in proper order with good condition
- Organize accommodations & transport arrangements to the officials visitors
- provide assistance to the administration to organize conference

**Fleet Management, Procurement and Warehouse/ Stock management**

- Collect repairing request, prepare PSR and submit to direct supervisor to the process
- Responsible of vehicle inspection (Documents, Condition) and reported to direct supervisor
- Control of fuel filling and documentation
- Prepare and submit monthly fleet report to the direct supervisor on time and prepare & update vehicle allocation schedule and organize movements
- Control and guide DDG Vavuniya logistics staff according to the DDG standard
- Update & circulate monthly operation requisitions each team wise, Update, submit monthly procurement spread sheet
- Update & submit monthly fuel summary,prepare and update materials outgoing waybills ,update of tools repairing database, Issue and receive items of equipment inspecting every item for cleanliness and serviceability
- Maintain a good knowledge of the nomenclature and be able to recognise by type all items of equipment included in the fixed assets register and responsible for documentation of asset transfer (Repair, issuing, transfer to other offices or Disposal) with S.log officer, Log manager written approval
- Assist the Logistics Officer to conduct an annual, 100% fixed assets and inventory check of all items in the master inventory.

### Minimum Qualifications and Experience required

- Sri Lankan National and Completed High School Education.
- Inventory and stock control skills, ability to work proactively and with initiative,Team approach.
- Good interpersonal skills, Flexible, reliable and trustworthy.
- Basic level of English (verbal and written).
- Minimum 2 years work experience in the related field

## 3. Vacancy Announcement – Back Hoe Operator – Omanthai (Vavuniya)

Requirements:

- Valid License to operate such machinery.
- Availability to work all parts of Sri Lanka
- Minimum one year experience in the related field.
- Fluency in Tamil. Ability to speak and understand Singhala and English will be added qualifications.

**How to Apply**

Applications should accompany a cover note to DDG, stating why and how they fit the selection criteria and attach a copy of CV with contact details and names of two non related referees to the following address **on or before 28th March 2012.**

Only candidates who meet all the above requirements will be invited for an interview/test.

**DANISH DEMINING GROUP**
456. Main Street, Chundukuli, Jaffna
E-mail: adminjaffna@ddg.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சாமஸ்ரீ தேசிய பட்டமளிப்பு விழாவில்
எமது நண்பனும் பாஷையூர் மண்ணின்
மைந்தனுமாகிய

திரு. மரியநாயகம் சுவீர்சன் B.B.A (Hons)

"சாமஸ்ரீ தேச கீர்த்தி"
எனும் தேசிய விருதை
24-03-2012 சனிக்கிழமை பெற்றதையிட்டு

இவரை பாஷையூர் மக்கள் சார்பாக
வாழ்த்துவதோடு அவரது சேவை
மேலும் சிறக்க பிரார்த்திக்கின்றோம்
- நண்பர்கள் -

0779053645

கண்டியில்
தமிழ் மொழி மூலம்

DIPLOMA IN
AIR CONDITIONING
& REFRIGERATION

Learn with a highly qualified & Experienced Lecturer in a 100% Practical environment

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சிறந்த வருமானத்தை ஈட்டித்தரும் தொழில்வாய்ப்பொன்றை பெற்றுக் கொள்வதற்கேற்றவாறான
100% செயல்முறைகளுடன் கூடிய பாடநெறி

FOR MORE INFORMATION & REGISTRATION - CONTACT 0716 606 755

Duration: 03 Months
(Weekdays/Weekends)
Course Fee: 19,500/=

STUDY FREE: HOUSE WIRING

GOLDEN COLLEGE
548, Peradeniya Road Kandy. 0812 20 55 44, 0777 912 597

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
திருமதி சிவபாலன் இராஜேஸ்வரி

மலர்வு
22.09.1949

உதிர்வு
25.02.2012

கடந்த 25.02.2012 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் இறுதிக் கிரியைகளில் நேரில் வந்து கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தியைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் 26.03.2012 திங்கட்கிழமை மு.ப. 11.30 மணிக்கு இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

பனங்காமம்,
நட்டாங்கண்டல் (மல்லாவி)

குடும்பத்தினர்

நான்காம் ஆண்டு
நினைவஞ்சலி

அமரர்
முருகேசு துரைராஜா



அன்னை மடியில்
30.08.1930

ஆண்டவன் அடியில்
25.03.2008
திதி: சதுர்த்தி

ஆண்டுகள் நான்கு ஆகிடினும்
ஆறவில்லை எம் துயரம்
நீங்கள் இல்லாத வாழ்வை
நினைத்துப் பார்க்க முடிகிறதா
துன்பக் கடலில் மூழ்கியே
துவண்டு துடிக்கின்றோம்
உயிர் உள்ளவரை உம்மை மறவோம்
உமக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

95, சிவன் பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

உமது பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

# கொழும்பிலிருந்து வந்த நிபுணர் குழுவின் உதவியுடன் இதய நோயாளர் 13 பேருக்கு நிரந்தர சிகிச்சை

## 32 வருடங்களின் பின்னர் 'வால்வு' சுருக்கத்துக்கு தீர்வு





தரமான சிகிச்சை (Qualitative treatment) என்பது நவீன மருத்துவத்துறையில் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம். வசதியானவர்கள் மட்டும்தான் அத்தகைய தரமான சிகிச்சை முறையை அனுபவிக்க இயலும் என்பதும், தனியார் வைத்தியசாலைகளிலேயே அத்தகைய சிகிச்சை முறைகளைப் பெற முடியும் என்பதுமே பொதுவான கருத்தாகிவிட்டது. அதனால் சாதாரண மக்கள் அத்தகைய சிகிச்சையை பெறுகின்ற உரிமை அற்றவர்களா என்று கேள்வி எழுப்பும் நிலையும் தோன்றியுள்ளது.

ஆனால், தனியார் வைத்தியசாலைகளில் வழங்கப்படுகின்ற சிகிச்சைக்குச் சமமான சிகிச்சை முறை, யாழ். போதனா வைத்தியசாலை ஹன்டி ஞாபகார்த்த இதய சிகிச்சைப் பிரிவால் அனைவருக்கும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது பலருக்கும் ஆச்சரியத்தை தரலாம். போதனா வைத்தியசாலையிலுள்ள கதீற்றர் ஆய்வு கூடத்தில் இதயம் சம்பந்தமான நோய்களுக்கு அளிக்கப்படுகின்ற சிகிச்சை கொழும்பில் தனியார் வைத்தியசாலைகளில் அளிக்கப்படுகின்ற சிகிச்சையை ஒத்ததே.

கடந்த வருடம் ஜூலை மாதம் முதல் கதீற்றர் ஆய்வுகூடம் யாழ். போதனா வைத்தியசாலையில் செயற்படத் தொடங்கியுள்ளது. அது முதல் இதுவரை சுமார் 550 நோயாளர்கள் பயன டைந்துள்ளனர். அவர்களுள் மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் மற்றும் வன்னி மாவட்ட நோயாளர்களும் அடங்குவர்.

இவர்களில் பெரும்பாலான நோயாளர்களுக்கு "அன்ஜியோகிராம்" (Angiogram) என்ற பரிசோதனை செய்யப்பட்டது.

அன்ஜியோகிராம் என்ற பரிசோதனை இதயத்துக்கு இரத்தத்தை விநியோகிக்கின்ற முடியுரு நாடிகளில் (Coronary Arteries) ஏதாவது அடைப்பு (Block) காணப்படுகின்றதா என்பதைக் கண்டறிவதற்கான பரிசோதனை முறையாகும். இப் பரிசோதனையின் பின்னர் எந்தெந்த இரத்தக் குழாய்களில், எத்தனை வீதமான அடைப்புக்கள் காணப்படுகின்றன என்பதைப்பொறுத்து, நோயாளிக்கு எத்தகைய மேலதிக சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்படும்.

பொதுவாக இரண்டு வகையான மேலதிக சிகிச்சை முறைகள் இதய வைத்திய நிபுணரால் குறிப்பிடப்படுகின்றன. ஒன்று; அன்ஜியோ பிளாஸ்ரி (Angioplasty) முறை. மற்றையது சத்திரசிகிச்சை (By pass surgery) முறை ஆகும்.

### வெளிமாவட்ட வைத்தியசாலை செல்லும் நிலை

யாழ். போதனா வைத்தியசாலையில் 'கதீற்றர்' ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த 'அன்ஜியோகிராம்' பரிசோதனை முறை இதுவரை நோயைக் கண்டறிகின்ற ஒரு மருத்துவ முறையாக மட்டுமே காணப்பட்டுள்ளது. மேலதிக சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் அதற்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கோ அல்லது கண்டி வைத்தியசாலைக்கோ செல்ல வேண்டி ஏற்பட்டது.

வசதியானவர்கள் கொழும்பில் தனியார் வைத்தியசாலைகளில் தமது சிகிச்சைகளை பெற்றுக்கொண்டனர். ஏனைய நோயாளிகள் கொழும்பு, கண்டி வைத்தியசாலைகளில் இத்தகைய சிகிச்சைக்கான காத்திருப்பு பட்டியல் காரணமாக இன்னமும் சிகிச்சை பெற முடியாமலும் உள்ளனர்.

எனினும், கடந்த ஜனவரி மாதம் 24 ஆம் திகதி மல்லாவியைச் சேர்ந்த இளம் நோயாளர் ஒருவருக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் முதன்முதலாக "அன்ஜியோ பிளாஸ்ரி" சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்தச் கிசிச்சை முறை முற்றிலும் இலவசமாகவே அவருக்கு அளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அதன்பின்னர் இப்போது, மார்ச் மாதத்தில் பத்தாம், பதினொராம் திகதிகளில் (சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில்) யாழ்.போதனா வைத்தியசாலையில் ஹன்டி ஞாபகர்த்த இதய சிகிச்சைப் பிரிவும் ஸ்ரீ லங்கா இதய சிகிச்சைக் கழகத் தினரும் இணைந்து பணிக்கூடம் (Work shop) ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

அதில் ஸ்ரீ லங்கா இதய சிகிச்சைக் கழகத்தின் 'Srilanka Heart Association' தலைவர் இதய சிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி அஜிரா சேனாரத்னா, கொழும்பு தேசிய வைத்தியசாலையை சேர்ந்த சிரேஷ்ட இதய வைத்தியர்களான வைத்தியகலாநிதி சாந்தராஜ், வைத்திய கலாநிதி நரேந்திரன் மற்றும் வைத்திய கலாநிதி கோத்தாபே ரண சிங்க, வைத்தியகலாநிதி திலக் சிறிசேனா, வைத்தியகலாநிதி தனியா பெரேரா, வைத்தியகலாநிதி நிமால் பெர்ணான்டோ, மட்டக்களப்பு பொது வைத்தியசாலை இதய வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி அருள்நிதி மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தாதியர்கள் துணை மருத்துவ உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதன்போது மொத்தம் பதின்மூன்று நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

### 32 வருடங்களின் பின்னர்

அவர்களில் வவுனியா மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த இரண்டு நோயாளிகளுக்கு இதய சோணை அறைகளில் காணப்பட்ட துவாரத்துக்கு (ASD) நிரந்தரமான சிகிச்சை அளிக்கப்பட்டது.

இது பிறப்பில் காணப்படுகின்ற ஒரு நோய் ஆகும். 1980 களில் இதய சத்திர சிகிச்சை பிரிவு இயங்கிய போது இதற்கான சிகிச்சை யாழ்.போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை மூலமே செய்யப்பட்டது. 32 வருடங்களின் பின்னர், இப்போது இரண்டு நோயாளிகளுக்கு சத்திர சிகிச்சை இல்லாமல் நிரந்தரமான சிகிச்சை அளிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க விடயம் ஒன்றாகும்.

இதய சோணை அறைகளுக்கிடையில் காணப்படுகின்ற துவாரத்தை அடைக்கின்ற சிகிச்சை முறையானது (ASD Device Closure) சத்திரசிகிச்சை இல்லாமலேயே துவா ரத்தை தட்டு (Device) ஒன்றினால் மூடுவதன் மூலம் செய்யப்படுவதாகும். (அவ்வாறான தட்டு ஒன்றின் பெறுமதி 1,50,000 ரூபாவிலி ருந்து 1,75,000 ரூபா வரை ஒன்றாகும்).

இதுதவிர மூன்று நோயாளர்களுக்கு இதயத்தில் உள்ள இரு கூர்வு வால்வில் (Term) காணப்பட்ட சுருக்கத்துக்கு (Mitral Valve Stenosis) சிகிச்சை (Balloon Valvular plasty) அளிக்கப்பட்டது.

இதயத்தின் இடது சோனை அறைகளிலிருந்து இதய அறைக்கு குருதி இந்த இரு கூர்வு வால்வு வழியாகவே செல்கிறது. பின்பு இடது இதய அறையிலிருந்தே உடலின் எல்லாப் பகுதிகளுக்குமான குருதி தொகுதிப் பெருநாடி மூலம் விநியோகிக்கப்படுகின்றது. எனவே இரு கூர்வு வால்வு சுருக்கம் போதுமான குருதி விநியோகிக்கின்ற செயற்பாட்டைப் பாதிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய இருகூர்வு வால்வு சுருக்கத்துக்கான சிகிச்சை யாழ்.போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைப் பிரிவு இயங்கிய போது சத்திரசிகிச்சை மூலம் அளிக்கப்பட்டது. எனினும் 1984 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே கடைசியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சுருக்கத்துக்கான (Closed Mitral Valvatomy) சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

இளவயதுப் பெண்கள் இந்தநோயால் பாதிக்கப்படுகின்ற தன்மை அதிகளவில் காணப்படுவதாக வைத்திய நிபுணர் ஒருவர் தெரிவித்தார். இவ்வாறான சிகிச்சை முறை தொடர்ந்தால் பல நோயாளர்கள் பயனடை வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

### 8 பேருக்கு சத்திரசிகிச்சையை தவிர்க்கும் அன்ஜியோ பிளாஸ்ரி

இந்த மாதம் கடந்த 10,11 ஆம் திகதிகளில் யாழ்.போதனா வைத்தியசாலையில் எட்டு நோயாளர்களுக்கு அன்ஜியோ பிளாஸ்ரி (Angioplasty) சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, அன்ஜி யோபிளாஸ்ரி என்பது இதயத்துக்கு குருதியை விநியோகிக்கின்ற முடியுரு நாடிகளில் அடைப் புக்கள் காரணமாக குறிப்பிட்ட நாடிகளில் சுருக்கம் ஏற்படும் போது அந்த அடைப்புக்கள் பலூன் மூலம் நீக்கி அந்த இடத்தில் 'ஸ்ரென்ற்' (Stent) ஒன்றை வைப்பதன் மூலம் செய்யப்படுகின்ற சிகிச்சை முறையாகும். இந்த அடைப்புகளை இனங்காண்பதற்கு முன்னதாக அன்ஜியோகிராம் (Angrogiam) பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்த சிகிச்சை முறை மூலம் இதய சத்திர சிகிச்சை (By Pass Surgery) இல்லாமல் நோயாளர்கள் பயனடையக் கூடியதாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதற்காகப் பயன்படுகின்ற சாதாரண 'ஸ்ரிரன்ற்' ஒன்றின் (Bare metal stent) பெறுமதி ஏறத்தாழ 1,25,000 ரூபா ஆகும். இதனை விட ஏறத்தாழ ரூபா 2,50,000- ரூபா 3,00,000 பெறுமதியான ஸ்ரென்ரையும் (drug cluting stent) வசதியுடையவர்கள் வாங்க முடியும்.

இவ்வாறான சிகிச்சைக்குட்படுத்தப்படுகின்ற நோயாளர்கள் தமக்குத் தேவையான ஸ்ரென்ரை விலைக்கு வாங்கிக் கொடுக்க வேண்டியுள்ளது. சிலவேளைகளில் ஒரு நோயாளிக்கு இரண்டு 'ஸ்ரிரன்ற்'கள் பொருத்தப்பட வேண்டியிருப்பின் அவர் இரண்டை யும் தானே வாங்கிக் கொடுக்க வேண்டிய நிலையும் உண்டு.

இந்த பணிக்கூடம் (Work shop) மூலம் தனது இதய நோய்க்கு சிகிச்சை பெற்றுக்கொண்ட யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர் ஒருவர் இதுபற்றி கருத்து தெரிவிக்கையில்:

"எனக்கு இதயத்துக்கு குருதியை வழங்கும் இரத்தக்குழாயில் அடைப்புக்கு சிகிச்சை பெற வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால் நான் கொழும்பு செல்லத் தயாராக இருக்கவில்லை. இந்தச் சிகிச்சை யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெற்றதால் நான் பயன் பெறக் கூடியதாக இருந்தது.

"இத்தகைய சிகிச்சைக்கான பணிகூடத்தை ஏற்பாடு செய்த ஹன்டி ஞாபகார்த்த இதய சிகிச்சை பிரிவினருக்கும் மற்றும் ஸ்ரீலங்கா இதய சிகிச்சை கழகத்தினர் (Srilanka Heart Association), யாழ்.போதனா வைத்தியசாலை இதய சிகிச்சைப் பிரிவின் நிபுணர்களான வைத்திய கலாநிதி P.லக்ஸ்மன், வைத்திய கலாநிதி M.குருபரன் ஆகியோரின் பணி பாராட்டத்தக்கது.

இது போன்று தொடர்ந்து சிகிச்சைகள் அளிக்கப் பட்டால் இத்தகைய சிகிச்சைகளுக்காக கொழும்பு செல்ல முடியாமல் காத்திருக்கின்ற பல நோயாளர்கள் பயனடைவர்" என்றார்.

சி.சங்கர்

### இதுவரை இங்கு கிடைக்காத 'ஸ்ரென்ற்'

இதுவரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஸ்ரென்ற் கிடைக்கவில்லை. இவ்வகையான ஸ்ரென்ற்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலை, காலி வைத்திய சாலை போன்றவற்றுக்கு அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப் பட்டிருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

(16 ஆம் பக்கம் பார்க்க.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** வெளிவட்டாரத்தில் யாரையும் விமர்சித்துப் பேசாதீர்கள். பண விடயத்தில் கவனமாக இருக்க வேண்டும். வாகனத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வரக்கூடும். போராடி வெல்லும் நாள்.

**இடபம்:** உணர்ச்சிப்பூர்வமாகப் பேசுவதை விட்டு அறிவுபூர்வமாகப் பேசுவீர்கள், செயற் படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள். எதிர்பாராத பண வரவு உண்டு. புதிய தொழில் தொடங்குவீர்கள். உத்தி யோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். சிந்தனைத் திறன் பெருகும் நாள். .

**மிதுனம்:** நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். உங்களிடம் பழகும் நண்பர்கள், உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார் கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். சாதிக்கும் நாள்.

**கடகம்:** பழைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. வாகனப் பழுது நீங்கும். வியாபாரத்தில் வேலையாள்கள் உதவுவார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**சிங்கம்:** சின்ன சின்ன வேலைகளையும் அலைந்து முடிக்க வேண்டி வரும். உறவினர், நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். சிலர் உங்களை குறை கூறினாலும் அதைப் பெரிதாக்க வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு. பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டிய நாள்.

**கன்னி:** பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயற்படுவார்கள். உங்களால் மற்றவர்கள் ஆதாயமடைவார்கள். கடையை மாற்றுவது குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத் தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். மாறுபட்ட அணுகுமுறையால் வெற்றி பெறும் நாள்.

**நாளை**

பங்குனி 13 திங்கட் கிழமை 26.03.2012
திதி: சதுர்த்தி பி.இ 04.09 வரை
நட்சத்திரம்: பரணி சித்தம் மு.இ. 08.09 வரை
சுபநேரம்: 12.14- 01.44 வரை
ராகு காலம்: 07.44- 09.14 வரை

**துலாம்:** குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். மனதுக்கு இதமான செய்திகள் வரும். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாள்களை தேடுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும்.

**விருச்சிகம்:** மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில் உண்மை யானவர்களை கண்டறிவீர்கள். பிரார்த்தனைகளை குடும்பத்தினருடன் நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். புதுமை படைக்கும் நாள்.

**தனுசு:** எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் வந்துப் போகும். வர வேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். நன்மை கிட்டும் நாள்.

**மகரம்:** குடும்பத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள். பழைய சொத்து சிக்கலில் ஒன்று தீரும். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பர். வெற்றி பெறும் நாள்.

**கும்பம்:** இங்கிதமாகப் பேசி கடினமாக காரியங்களையும் சாதிப்பீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். நேர்மறை சிந்தனைகள் தோன்றும். ஆடை, அணிகலன் வாங்குவீர்கள். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**மீனம்:** வேலைச்சுமையால் உடல் அசதி, மனச்சோர்வு வந்து நீங்கும். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் அலைச்சல் இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை உதாசீனப்படுத்த வேண்டாம். விட்டுக் கொடுத்துப் போக வேண்டி வரும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | 4 | 6 | | 8 | |
| | | 6 | | 5 | 8 | | | 3 |
| | 7 | | 9 | 2 | 1 | | | 6 |
| 9 | | | | 3 | 7 | 1 | | |
| | 3 | | | | | | 7 | |
| | | 4 | 6 | 1 | | | | 8 |
| 1 | | | 4 | 9 | 5 | | 2 | |
| 8 | | | 1 | 6 | | 3 | | |
| | 2 | | 8 | 7 | | | 9 | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 8 | 3 | 6 | 4 | 7 | 1 | 9 |
| 9 | 4 | 3 | 2 | 7 | 1 | 8 | 6 | 5 |
| 1 | 7 | 6 | 9 | 5 | 8 | 4 | 2 | 3 |
| 7 | 2 | 4 | 5 | 3 | 6 | 9 | 8 | 1 |
| 5 | 8 | 1 | 4 | 9 | 7 | 6 | 3 | 2 |
| 3 | 6 | 9 | 8 | 1 | 2 | 5 | 4 | 7 |
| 4 | 3 | 2 | 7 | 8 | 5 | 1 | 9 | 6 |
| 6 | 9 | 7 | 1 | 4 | 3 | 2 | 5 | 8 |
| 8 | 1 | 5 | 6 | 2 | 9 | 3 | 7 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத் தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## கொழும்பிலிருந்து வந்த....

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா இதய சிகிச்சைக் கழகத்தினர் இவ்வாறான தொரு பணிக்கூடம் ஒன்றினை ஏற்பாடு செய்தமை பாராட்டத்தக்க விடயம் ஆகும். இதேவேளை இந்தமாதம் பத்தாம் திகதியன்று (10.03.2012 இல்) யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் இதய வைத்திய நிபுணர்களான வைத்தியநிபுணர் ய.சாந்தராஜ், வைத்தியநிபுணர் ரோஹான் குணவர்த்தனா, வைத்திய நிபுணர் திலக் சிறிசேனா ஆகி யோரின் விரிவுரைகளும் ஏற்பாடு செய்யப்பட் டிருந்தன.

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஹன்டி ஞாபகார்த்த இதய சிகிச்சைப் பிரிவில் இதய சிகிச்சை நிபுணர்கள் இருவர் உள்ளனர். கதீற்றர் ஆய்வு கூடத்தில் பணியாற்ற பயிற்சி பெற்ற தாதியர்கள், துணை மருத்துவ உத்தியோகத்தர்கள் தயாராக உள்ளனர். எனினும் இவ்வகையான சிகிச்சை முறைக ளினை தொடர்ந்து மேற்கொள்ளத் தேவை யான கதீற்றர்கள், வயர் அதற்குரிய பலூன் போன்ற வன்பொருள்கள் (Hard ware) பற்றாக்குறையாக உள்ளது.

**நோயாளருக்கு ஆலயங்கள் உதவலாம்**

யாழ்.போதனா வைத்தியசாலையில் 'ஸ்ரென்ற்' சிகிச்சைக்காக ஒருவர் செலவு செய்கின்ற தொகை அதாவது 'ஸ்ரென்ற்' ஒன்றை வாங்குவதற்கான தொகை, அதே சிகிச்சையை கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் பெற செலவு செய்கின்ற தொகையை விட ஏறத்தாழ அரைவாசி என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதா கும்.

நலன் விரும்பிகளின் நன்கொடை மூலம் வசதி குறைந்த மக்களுக்கு இலவசமாக சேவைகளை வழங்குவதற்கான முயற்சிகளை ஹன்டி ஞாபகார்த்த இதய சிகிச்சை பிரிவு மேற்கொண்டு வருகின்றது.

எனவே வசதி படைத்த மக்கள் இத்தகைய சிகிச்சை முறைகளை அனைவரும் பெறுவதற்குத் தமது ஆதரவை நல்க வேண்டும். எல்லாவற்றுக்கும் அரசையே நம்பி இருக்கின்ற நிலை தொடர்ந்தால் வசதி குறைந்த நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவர்.

எமது மாவட்டத்தில் உள்ள ஆலயங்கள் கூட அதற்குப் பங்களிப்புச் செய்ய முடியும். ஆலயங்க ளில் இதற்கென ஒரு நிதியத்தை உருவாக்கி வசதி குறைந்த மக்களுக்கும் இத்த கைய சிகிச்சை முறைகளை பெற உதவ முடியும்.

ஹன்டி ஞாபகார்த்த இதய சிகிச்சை பிரிவு எல்லா மக்களுக்கும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றமை பாராட்டப்பட வேண்டியதாகும். இத்தகைய சேவையைத் தொடர்ந்தும் வசதி குறைந்த நோயாளர்களும் அனுபவிக்க நல் உள்ளம் படைத்த மக்கள் உதவ வேண்டும். அதற்கு முன்வர வேண்டும்.

## நிச்சயம் உறவு பாதிக்கும்

**- சம்பிக்க ரணவக்க**

இராஜதந்திர ரீதியில் இந்தியா முட்டாள்தனமான முடிவொன்றை எடுத்துள்ளது. இந்தியாவின் நிலைப்பாட்டால் அந்நாட்டுக்கே பாதிப்பு அதிகம். இனி மேல் காஷ்மீர் விவகாரத்திலும் அமெரிக்கா தலையிடும். அன்று விடுதலைப் புலிகளை வளர்த்துவிட்டு தவறிழைத்ததுபோன்று இன்று அமெரிக்காவுக்கு உதவப்போய் இந்தியா வரலாற்றுத் துரோகமிழைத்துள்ளது.

இந்தியாவின் இவ்வாறானதொரு முடிவால் இந்து சமுத்திரம் ஆட்டம்காணப்போகின்றது. ஆசிய பிராந்திய நாடுகளுக்கிடையே ஒற்றுமை - புரிந்துணர்வு அவசியம். அதனைக் கருத்திற்கொள்ளாது இந்தியா முட்டாள்தனமான முடிவை எடுத்துள்ளது. இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையிலான அரசியல் உறவு பாதிக்கப்படுமோ, இல்லையோ உள்நாட்டில் இந்தியாவின் முதலீடு உட்பட வர்த்தக நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடையலாம்.

## எதிர்கால செயற்பாடே தீர்மானிக்கும்

**லக்ஷ்மன் கிரியெல்ல**

அரசின் பலவீனமான வெளிநாட்டுக்கொள்கை காரணமாகவே அது இந்தியாவின் ஆதரவை இழந்துள்ளது. இந்தியாவுடன் சிறந்த முறையில் உறவைப் பேணுவதற்கு அரசுக்கு முடியாமல் போனால் வேறெந்த நாட்டுடனும் அதனால் உறவைக் கட்டிக்காக்க முடியாமல் போகும். அரசு இந்தியாவிற்குப் போலியான வாக்குறுதிகளை அள்ளிவீசி பம்மாத்து காட்டியதாலேயே இன்று அந்நாடு இலங்கையைக் கைவிட்டுள்ளது. அரசின் எதிர்கால செயற்பாடுகளிலேயே இந்திய - இலங்கை உறவின் ஆயுள் உள்ளடங்கியுள்ளது.

## உறவில் விரிசல் ஏற்படாது

**லக்ஷ்மன் யாப்பா**

இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையிலான உறவில் ஒருபோதும் விரிசல் ஏற்படாது.

இந்தியாவில் தேர்தல்கள் நடைபெறுகின்றன. அதேவேளை, தமிழகத்திலிருந்து மத்திய அரசுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. இதனையும் நாம் கருத்திற்கொள்ளவேண்டும். அந்நாட்டு அரசியல் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டே இந்தியா இவ்வாறானதொரு முடிவை எடுத்துள்ளது.

இதனால் எமது வரலாற்று ரீதியான உறவு பாதிக்காது. எதிர்காலத்தில் [illegible] எமக்கு இந்தியாவின் உதவி அவசியம்.

## அமெரிக்கப் பிரேரணைக்கு டில்லி ஆதரவு: இலங்கை - இந்திய உறவைப் பாதிக்குமா?

ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை இந்தியா ஆதரித்துள்ள நிலையில் அந்த நாட்டு நாடாளுமன்றில் பிரதமர் மன்மோகன்சிங் அறிவித்தார். பிரதமரின் இந்த அறிவிப்பையடுத்து இலங்கையில் இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அதேவேளை, இந்தியாவுடனான உறவை இலங்கை துடைத் தெறியவேண்டும் என்றும், கொழும்புக்கு டில்லி துரோகமிழைத்துவிட்டது என்றும் அரசதரப்பு அரசியல் பிரமுகர்கள் கருத்து வெளியிட்டனர். இந்தியாவின் இவ்வாறானதொரு நிலைப் பாட்டால் இலங்கை - இந்திய உறவில் விரிசல் ஏற்படும் என்றெல்லாம் விமர்சிக்கப்பட்டது. இந்நிலையில், இது தொடர்பில் உள்நாட்டு அரசியல் பிரமுகர்களிடம் நாம் கருத் துக்கேட்டோம்.

## இந்தியாவின் முடிவு மாறலாம்

**- சோமவன்ஸ**

யார் சொன்னது? ஜெனிவா மாநாடு நிறைவடைவதற்கு இன் னும் ஓரிரு நாட்களே உள்ளன. எனவே, இந்தியாவின் நிலைப்பாட்டுச் சக்கரம் எந்தப் பக்கம் சுழலும் என்பதை இறுதிநொடி வரை எவராலும் ஊகிக்க முடியாது.

அரசியல், பொருளாதார ரீதியி லான நலன்களைக் கருத்திற் கொண்டே இலங்கை விவகாரத் தில் இந்தியா தலையிட்டது. இனியும் அப்படித்தான் அது செயற்படும். எனவே, இலங்கை யில் ஏதோவொரு வகையில் இலாபம் இல்லாமல் இந்தியா இவ்வாறானதொரு முடிவை எடுத்திருக்காது என்பது தெட்டத்தெளிவு.

இலங்கையைப் பகைத்துக் கொள்ள இந்தியா விரும்பாது. அன்றுமுதல் இன்றுவரை அந்நாடு இலங்கைக்கு உதவிசெய்தே வந்துள் ளது என்பதும் குறிப்பிடத் தக்கது.

யுத்தம் முடிவடைந்த கையோடு பொறுப்புக்கூறும் கடப்பாடு தொடர்பில் அரசுக்கு விசேட வேலைத்திட்டமொன்றை ஜே.வி. பி. சமர்ப்பித்தது. ஆனால், அதனை அரசு பொருட்படுத்தவில்லை. இதன் காரணமாகவே இன்று சர்வதேச அழுத்தங்கள் நாட்டை வாட்டி வதைக்கின்றன.

எது எவ்வாறிருப்பினும், உள் நாட்டு விவகாரங்களில் வெளிநாட் டுத் தலையீடுகளை நாம் கண்டிக்கும் அதேவேளை, அதற்கு வழிசமைத் துக்கொடுத்த அரசின் செயற்பாடு களையும் கண்டிக்கின்றோம்.

## முதலில் டில்லி முடிவு உறுதியாகட்டும்

**- மனோ கணேசன்**

இந்தியாவின் நிலைப்பாடு குறித்து நான் அவசரப்பட்டுக் கருத்துக்கூற விரும்பவில்லை. ஏனெனில், அதற்குச் சில காரணங்களும் உள்ளன.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணையை இந்தியா ஆதரித்துவிட்டது. பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ள வாசகங்களின் இறுதி வரைவைப் பார்த்தபின்னரே இந்தியா இறுதியானதொரு முடிவை எடுத்துள்ளது. இந்தியாவின் அழுத்தத்தால் தாம் கொண்டுவந்துள்ள பிரேரணையில் அமெரிக்கா சில திருத்தங்களைச் செய்துள்ளது என ஊடகங்கள் வாயிலாக அறியமுடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எயார் ஏசியா. கொம் ஏற்படுத்தும் அனைவருக்கும் பறக்கும் வாய்ப்பு




தாய் எயார் ஏசியா தனது குறைந்த கட்டண தொய்வற்ற நடவடிக்கையை 2004 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. பாங்கொங்கைத் தளமாகக் கொண்டு இயங்கும் இந்த விமான நிறுவனம் இப்போது 12 உள்ளூர் சேவைகளையும் 16 சர்வதேச சேவைகளையும் நடத்தி வருகின்றது. தனது முற்றிலும் புதுமையான விற்பனை அலைவரிசைகள் மூலம் அந்தப் பிராந்தியத்தில் குறைந்த கட்டணப்புரட்சியை தாய்எயார் ஏசியா ஏற்படுத்தியுள்ளது. இதுவரை மூன்று கோடிக்கும் அதிகமான பயணிகளை தாய்எயார் ஏசியா சுமந்து சென்றுள்ளது.

இந்த நிறுவனத்துக்கு இப்போது 24 ஏயார் பஸ்களையும் A 320 விமானங்களும் சொந்தமாக உள்ளதுடன் இப்பிராந்தியத்தின் இளம் நிறுவனமாகவும் திகழ்கின்றது.

2003ஆம் ஆண்டில் பிராந்தியத்தின் குறைந்த கட்டணங்களைக் கொண்ட முன்னணி விமான நிறுவனமாக இருந்த எயார் ஏசியா மேலும் கட்டணங்களைக் குறைக்கும் நோக்கில் தாய்லாந்தின் ஷின் கோப்பரேஷனுடன் கைகோர்த்துக்கொண்டது. 'தாய் எயார் ஏசியா' - எனப் புதிதாகப் பெயர் சூட்டப்பட்ட நிறுவனத்தில் ஏசியா எவியேஷன் நிறுவனத்தின் கீழ் இயங்கும் ஷின் கோப்பரேஷன் 50 வீதப் பங்குகளையும் மலேசியாவைத் தள மாகக்கொண்ட எயார் ஏசியா குழுமம் 49 சதவீதப் பங்குகளையும் உரித்தாக்கிக்கொண்டன. மிகுதி ஒரு வீதப் பங்கு தனியார் ஒருவருக்கு உரித்தானது.

இரண்டு விமானங்களுடன் 2004 பெப்ரவரி 4ஆம் திகதி தனது சேவையை ஆரம்பித்த இந்த நிறுவனம் தனது தளமான பாங்கொங்கில் இருந்து ஹட்யாய் என்ற இடத்திற்கு தினசரி சேவையை நடத்தியது. அதனையடுத்து துரிதமாக உள்ளூர் மற்றும் சர்வதேச சேவைகள் விஸ்தரிக்கப்பட்டன. ஒரே வருடத்தில் தாய் எயார் ஏசியா நிறுவனம் எட்டு போயிங் 737-300 விமானங்களை பயன்படுத்தத் தொடங்கியது.

2007ஆம் ஆண்டில் இந் நிறுவனத்தின் ஆறு பணியாளர்கள் ஏசியா எவியேஷன் கொம்பனி லிமிட்டட்டின் 100 வீத பங்குகளை உரித்தாக்கிக் கொண்டனர்.

# இலங்கையின் சூடான பானவகை வர்த்தக நாமமாக 'அங்கர்'

உலகெங்கிலும் குடும்பங்களுக்குத் தேவையான தரமான பாலுணவுப் போஷாக்கு உற்பத்திகளை வழங்குவதில் 125 வருடங்கள் நீண்ட மகத்துவத்தைக் கொண்டுள்ள பொன்டேரா நிறுவனத்தின் ஒரு வர்த்தகநாமமான அங்கர் அண்மையில் இடம்பெற்ற SLIM Nielsen மக்கள் தெரிவு விருதுகள் 2012 நிகழ்வில் கடந்த வருடத்தில் மக்களின் ஏகோபித்த தெரிவாக அமையப்பெற்ற விரைவாக நகரும் நுகர்வோர் உற்பத்தித்துறை சூடான பானவகை வர்த்தகநாமமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அங்கர் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை மக்களுக்கு மிகச் சிறந்த பாலுணவுப் போஷாக்கை வழங்கிவந்துள்ளதுடன், அங்கரின் இணையற்ற தரம் மற்றும் சிறப்பின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கு இவ்விருது சான்று பகர்வதாக அமையப்பெற்றுள்ளது.

மக்களின் மனங்களில் நீடித்துநிலைபெற்றிருக்கும் வகையில் சிறந்த விளைவுகளைத் தோற்றுவித்துள்ள வர்த்தகநாமங்கள் மற்றும் நபர்களை இனங்கண்டு உரிய அங்கீகாரம் அளிக்கும் வகையில் SLIM Nielsen மக்கள் தெரிவு விருதுகள் வருடாந்தம் இடம்பெற்று வருவதுடன், இலங்கைச் சந்தைப் படுத்தல் நிலையம் இதனை ஒழுங்குசெய்து வருகின்றது.

(த)

# லண்டன் பல்கலைக்கழக கற்கை நெறிகள் யாழ்ப்பாணம் "Spectra Skills" இல்

வேலைவாய்ப்பு எம்மைத் தேடி வராது. எம்மைத் தகுதியானவர்களாக உருவாக்கிக் கொண்டு நாமே அதைத் தேடிக் கொள்ளவேண்டும். அதற்கான ஓர் அரிய வாய்ப்பு தற்பொழுது உங்கள் அருகில் யாழ். மண்ணில் 'Spectra Skills' ஊடாக லண்டன் பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படுகிறது.

நொடிக்கு நொடி மாறிவரும் உலகில் உங்கள் வாழ்வை மேம்படுத்தும் நோக்கில் உங்களுக்கு சர்வதேச தரத்திலான கற்கைநெறிகளை லண்டன் பல்கலைக்கழகம் வழங்கி வருகின்றது. நூற்றுக்கும் மேற்பட்ட பாடநெறிகளை உலகம் முழுவதும் ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு தற்பொழுது வழங்கிவரும் லண்டன் பல்கலைக் கழகம் மிகவும் தொன்மையும் தரமும் வாய்ந்தது. 1858 இலி ருந்து உலகளவில் பட் டதாரி களை உருவாக்கி வரும் இப் பல்கலைக்கழகம் தற்பொழுது 'Spectra Skills ' ஊடாக யாழ். மண்ணில் தடம் பதிப்பது இங்குள்ள இளையோருக்கு ஒரு வரப்பிரசாதம்.

நூற்றுக்கும் அதிகமான பட்ட மற்றும் பட்டப்பின் கற்கைநெறிகளை வழங்கி வரும் லண்டன் பல்கலைக்க ழகம் இலங்கையில் Royal institute of colombo மற்றும் CFPS Academy of Legal Studies ஆகிய கல்லூரிகளில் சர்வதேச தரத்தினாலான பல பட்டதாரிகளை உருவாக்கியுள்ளது. தற்பொழுது யாழ்ப்பாணத்திலும் 'Spectra Skills' ஊடாகதனது கல்விப் பணியை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளது.

சட்டத்துறை, கணக்கியல், வங்கி மற்றும் பல பொருளியல் துறைகளில் ஏராளமான முகாமையாளர்களை இதுவரை இலங்கையில் உருவாக்கிச் சாதனை படைத்துள்ள இலண்டன் பல்கலைக்கழகத்தை யாழ். மண்ணில் கொண்டு வந்த 'Spectra Skill' இன் நோக்கமும் அவ்வாறே யாழிலும் இளையோரின் வேலைவாய்ப்பினை மேற்குறித்த துறைகளில் உருவாக்க வேண்டும் என்பதாகும்.

நீங்கள் லண்டன் அல்லது இலங்கை A/L பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்து ஏதும் ஒரு பல்கலைக்கழக அனுமதி கிடைக்காமல் இருப்பவராயின் கவலையை விடுங்கள். உங்களையும் பட்டதாரிகளாக்கி வேலை வாய்ப்பினை நோக்கி வழிநடத்த உதவுகிறது 'Spectra Skills'

நீங்கள் எந்தப் பட்டத்தினைப் பின்பற்றி பட்டமற்றும் பட்டபின்படிப்பை பயில தகுதியானவர் என்பதைத்தெரிந்து கொள்ளவேண்டுமா? இதோ உங்களுக்கான போதிய தகவல்களை வழங்க பேராசிரியர் கெண்னி ஹமில்ற்ரன் லண்டன் பல்கலைக்கழகத்தில் இருந்து வருகை தருகிறார். சட்டத்துறை கற்கைநெறிகளுக்கான பட்டப்படிப்பு இயக்குனரான இவர் 31.03.2012, 01.04.2012 மற்றும் 02.04.2012 ஆகிய நாள்களில் 'Spectra Ski lls' ,19, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார். யாழ்ப்பாணத்தில் சட்டத்துறையில் இளையோரை ஈடுபடுத்தி வேலை வாய்ப்பை உறுதிப்படுத்த LLB கற்கை நெறி 'Spectra Skills' இனால் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளவத்தையில் கிங்ஸ்டன் நிலையம்




கொழும்பு 6 (சுபுன் ஆர்க்கேட்) இல் மெமரி எக்ஸ்குளுசிவ் (Memory Exclusive) லெப்டொப் நிலையத்தை திறந்துள்ளது.

மெமரி உற்பத்திகளோடு தொடர்புடைய இலங்கையின் முன்னணி விநியோகஸ்தர்களான மெமரி டெக்னொலஜீஸ் நிறுவனம் அதன் முதலாவது சில்லறை வர்த்தக நிலையத்தை கொழும்பில் திறந்துள்ளது. உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற சிலிக்கன் வெலி முத்திரை பதிக்கப்பட்ட கிங்ஸ்டன் உற்பத்திகளை அதற்கான அங்கீகாரம் அளிக்கப்பட்ட விநியோகஸ்தர்களிடமிருந்து பாவனையாளர்கள் நேரடியாகப் பெற்றுக்கொள்ள இது வழிவகுக்கின்றது.

மெமரி எக்குளுசிவ் என்ற இந்தப் புதிய காட்சியகம் வெள்ளவத்தை, கொழும்பு 6 சுபுன் ஆர்க்கேட்டில் உள்ள லெப்டொப் நிலையத்தில் அமைந்துள்ளது. கணினி விளையாட்டுக்களில் ஆர்வம் உள்ளவர்களுக்கு Hyper ஓ மெமரி உற்பத்திகளையும் அசல் கிங்ஸ்டன் நவீன தயாரிப்புக்களையும் இங்கு பெற்றுக் கொள்ளமுடியும். கொம்பியூட்டர் மெமரிப் பிரிவோடு தொடர்புடைய USBடிரைவ்ஸ் பிளேஷ் கார்ட்ஸ் என்பனவும் இங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள அனைத்து உற்பத்திகளும் கிங்ஸ்டனின் அசல் உத்தரவாதத்தோடு கிடைக்கின்றன.

# அனைவரும் உச்சரிக்கும் பானமாக இப்போது RED




அனைத்தும் இயற்கை மூலச் சேர்க்கை உள்ளடங்கிய ஒரு சக்தியூட்டும் பானமான RED (Revitalizing Exertion Drink மீள் ஆற்றலுடன் உற்சாக மூட்டும் பானம்) உள்நாட்டுச் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்ட சில காலப் பகுதிக்குள்ளாகவே சக்தியூட்டும் பான வகைச் சந்தையில் அனைவர் மத்தியிலும் சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. பிரதானமாக பழச்சாறுகளை உள்ளடக்கியவாறு அதிக இயற்கையான மூலக்கலவைகளையும், ஏனைய சக்தியூட்டும் பானங்கள் பலவற்றில் காணப்படுகின்ற செயற்கையான நிறமூட்டிகள் மற்றும் உட்சேர்வைகளினால் ஏற்படக் கூடிய ஆபத்தான பக்க விளைவுகளை தவிர்க்கும் ஆற்றல் மிக்க மிக உயர் தரத்திலான ஓர் உட்சேர்வையான Korean ginseng இனையும் RED பானம் உள்ளடக்கியுள்ளதுடன், PC Pharma நிறுவனம் நாடளாவிய ரீதியிலுள்ள தனது வலையமைப்பினூடாக இதனை சந்தைப்படுத்தி விநியோகித்து வருகின்றது. அத்துடன் அஜீரணம் மற்றும் ஏனைய பாதகமான பக்கவிளைவுகளை ஏற்படுத்தக் கூடிய trans-fatஎனப்படும் ஆபத்தான கொழுப்புச் சேர்வை அற்றதாக இருப்பதுடன், பிரதானமாக fructose சர்க்கரை மூலமாகவே சக்தியை அளிக்கின்றது.

உள்நாட்டுச் சந்தையைப் பொறுத்தவரையில் சக்தியூட்டும் பானவகை நுகர்வு அண்மைய காலங்களில் பல்வேறு காரணங்களுக்காக அதிகரித்து வந்துள்ளது.

(த)

# நொதேர்ண் சென்ரல் மருத்துவமனை திருநெல்வேலியில் இன்று திறப்பு விழா

யாழ்.குடாநாட்டு மக்களுக்கு சர்வதேச தரத்திலான சிகிச்சைகளை வழங்கும் நோக்கில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நொதேர்ண் சென்ரல் மருத்துவமனை (Northern Central Hospital) இன்று ஞாயிற்றுக்கிழமை காலை திறந்து வைக்கப்படவுள்ளது.

சர்வதேச ரீதியில் உயர்தர நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இம் மருத்துவமனையானது யாழ்ப்பாணம், பலாலி வீதியில் 342 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது.

1979 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் முதலாவதாக அமைக்கப்பட்ட தனியார் வைத்தியசாலையான சென்ரல் நேர்சிங் ஹோம் வட பிராந்திய மக்களுக்கு சுகாதார நல தீர்வுகளை வழங்கியது. எனினும் யுத்த காலத்தில் நிலவிய சூழ்நிலை காரணமாக இந்த நேர்சிங் ஹோமினை தொடர்ந்து நடத்த முடியாத நிலை நிலவியதால் 1996 ஆம் ஆண்டுடன் மூடப்பட்டது.

பின்னர் இந்த நேர்சிங் ஹோமானது 2000 ஆம் ஆண்டு மீளத்திறக்கப்பட்டது. இதன் விஸ்தரிப்பின் கட்டமாக கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நவீன சர்வதேச ரீதியிலான Northern Central Hospital ஐ நிர்மாணிப்பதற்கான ஆரம்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த மருத்துவமனையின் ஸ்தாபகராக எஸ்.பி.சாமியும் பணிப்பாளராக பி.கேசவராஜாவும் திகழ்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நவீன மருத்துவ சிகிச்சை வசதிகள் கொண்ட மருத்துவமனை ஒன்று இல்லாத காரணத்தால் மக்கள் தமது நேரத்தையும் பணத்தையும் செலவழித்து கொழும்பு மற்றும் வெளிநாடுகளில் அமைந்துள்ள உயர்தர மருத்துவமனைகளை நாட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருந்தது. ஆனால் தற்போது இம் மருத்துவமனையின் உருவாக்கம் யாழ்.மக்களுக்கான சிறந்த வரப்பிரசாதமாகும்.

இந்த மருத்துவமனையில் 100 படுக்கை வசதிகள் உள்ளன. அத்துடன் அதி தீவிர சிகிச்சைப் பிரிவுடன் (I.C.U) நேர்சிங் ஹோமில் ஒன்றுமாக இரு சத்திரசிகிச்சைக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து அடிப்படை சத்திரசிகிச்சைகளும் இங்கு மேற்கொள்ளப்படவுள்ளன. கதிரியக்க பிரிவு (X-Ray), அல்ட்ரா சவுண்ட் (Ultrasound), சிடி ஸ்கான் மற்றும் MRI வசதிகள் உட்பட சனலிங் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் போதிய சாதன வசதிகளுடன் கூடிய ஆய்வு கூடமும் அமைக்கப்பட் டுள்ளது.

60 தாதிமார் பயிற்சி பெற்றுள்ளனர். ஏற்கனவே நேர்சிங் ஹோமில் 40 தாதிமார் பணி புரிந்து வருகின்றனர். அத்துடன் பிஸியோ தெரப்பிஸ்ட்டுகள், மருந்தாளர்கள் ஆகியோர் மிகவும் தேர்ச்சியுடன் கூடிய பயிற்சியைப்பெற்று தமது சேவையை வழங்கக் காத்திருக்கின்றனர்.

எல்லாவித நோய்களுக்குமான மருத்துவ சிகிச்சை நிபுணர்களை எவ்வித சிரமுமின்றி இந்த வைத்தியசாலையில் அணுக முடியும். எதிர்கால விஸ்தரிப்புத் திட்டங்களுக்கிணங்க கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு பகுதிகளில் பிராந்திய நிலையங்களை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் நொதேர்ண் சென்ரல் ஹொஸ்பிட்டலின் சேவையை நேரடியாகப் பெற முடியும். அத்துடன் நடமாடும் சேவைகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் அம்புலன்ஸ் சேவைகளும் வழங்கப்படவுள்ளன.

எனவே வடமாகாண மக்கள் மிகவும் பழகிய கலாசாரம் நிறைந்த சூழலில் நம்பிக்கையுடன் கூடிய மருத்துவ சேவைகளை அனுபவிக்கக் கூடிய மிகச் சிறந்த வாய்ப்பை நொதர்ண் சென்ரல் வைத்தியசாலை இன்று முதல் வழங்குகின்றது. வட பகுதி மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகிறோம்



வேதனைகள் பல முன்வந்தபோதும் அது கண்டு கலங்காது அவற்றை சோதனைகளாக ஏற்று இன்று சாதனைகள் பல படைத்து யாழ். நகரின் பல்வேறு அமைப்புகளிலும் காலடி பதித்து தான் பிறந்த இடத்திற்கும் இணைந்த நண்பர்களுக்கும், உறவுகளுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் செயற்பட்டுவரும்

## கலாநிதி நாகலிங்கம் தனேந்திரன்

அவர்களின் பொதுச் சேவையினை கௌரவிக்கும் முகமாக அண்மையில் நீதி அமைச்சினால் சகல தீவுகளுக்குமான சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டமையையும் அது தொடர்பில் கடந்த 16.03.2012 அன்று யாழ். மாவட்ட நீதிபதி மா. கணேசராஜா அவர்கள் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்றுக்கொண்டமையையும் நாம் மனமகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் அவர் மக்கள் சேவையில் தொடர்ந்து செயற்பட எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு சகல சௌபாக்கியங்களையும் வழங்க வேண்டுமென பெருங்குளம் முத்துமாரி அம்மனும் தெல்லிப்பழை துர்க்கையம்மனும் துணை நிற்கவேண்டுமென இறைஞ்சி நிற்கிறோம்.

**யாழ். நகர், தீவகம் வாழ் நண்பர்கள்** (16041) (2-6-7)

---

கனடா, USA, அவுஸ்திரேலியா, நியூஸ்லாந்து, லண்டன், பிரான்ஸ், இத்தாலி, சுவிஸ், கொலன்ட், துருக்கி, கிறிஸ், றுமெனியா, ஜப்பான் நாடுகளிற்கான விசா ஒழுங்குகள்

அனைத்து நாடுகளிற்கும், அனைத்து வகையான விசாக்களிற்குமான பண வைப்புகள் (Bank Balance Sponsorship) சிறந்த வங்கிகளினூடாக செய்து கொடுக்கப்படும்.

**EURO PROFILE**
No - 16B, E.S Fernando Mawatha,
வெள்ளவத்தை
TP: 0773152327/0778885903

---

**தேவை** Receptionist, Cashier, House keeper, Supervisor, Room Boys, Girls, Bell Boys மற்றும் Book Binders, Type Setters தேவை
தொடர்பு:- Tourist Hotel Office
35, Frank Furt Place, Bambalapitiya

---

**கார் விற்பனைக்கு**

வைத்தியரின் பாவனையில் உள்ள கார் விற்பனைக்கு KIA SPECTRA 2002 MODEL, A/C, MP3, POWER MIRROR, POWERSHUTTER, ALLOW WHEELS, REMOTEKEY, GOOD CONDITION.
PRICE - 13.5 lks (negotiable)
Mobile - 0723420529

---

**அங்கயக்கன்னி திருமண சேவை**

(பதிவு செய்யப்பட்டது)
உள்நாட்டு/ வெளிநாட்டு இந்து, கிறிஸ்த்தவ மதத்தவர்களுக்கும், சகல இனத்தவர்களுக் குமான மணமக்களுக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

அங்கயக்கன்னி திருமண சேவை
புன்னாலைக்கட்டுவன் (கரவெட்டி)
தொடர்பு : 0774766339, 0774766340,0778733404

---

# நிர்மாணப் பணிகளுக்கு கட்டட ஒப்பந்தகாரரர்கள் தேவை

## ( Jaffna )

நிர்மாணத்திற்கான மூலப்பொருட்களை ஒப்பந்தகாரரர்கள் விநியோகிக்க வேண்டும்

96 வருடங்கள் பழமைவாய்ந்த 4 தலைமுறைகளாக கட்டிட நிர்மானத்துறையில் பிரசித்தி பெற்ற இலங்கையிலேயே அதிக வீடுகள் அமைக்கும் எமது நிறுவனத்துக்கு, நிரந்தர கட்டட ஒப்பந்தகாரரர்கள் தேவை. நிர்மானத்துறை சம்பந்தமான அனைத்து வேலைகளுக்கும் அதிசக்திவாய்ந்த வேகத்துடன் செய்யக்கூடியவர்கள் எங்கள் நிறுவனத்துக்கு தேவை. நிறைந்த பணவருமாணத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

ஒப்பந்தகாரர்கள் ஒப்பந்த பணியொன்றைப் பூர்த்திசெய்த பின்னர் மற்றுமொரு பணியை பொறுப்பேற்றுக்கொள்ள முடிவதுடன் 20 வருடங்களுக்கு நிலைக்கக்கூடிய ஒப்பந்தங்களுக்கான வாய்ப்பு

தொடர்புகளுக்கு - 0714 536 624

---

**காணி விற்பனைக்கு**

கொடிகாமம் கோயிலாமனையில் (A9 பாதையிலிருந்து 1/4 மைல் தூரத்தில்) 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

தொடர்புகொள்க
0770655835

---

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

- **A/L Commerce & Maths 2014**
- **Banking (CBF/DBF)**


Classes will be conducted in both Tamil and English medium.

spectra skills 19 Stanley Road Jaffna.
Tel:- 0212221422/1423

---



# HUNTERS
# புத்தாண்டுகால பரிசுகள்



மார்ச் 12ஆம் திகதியிலிருந்து ஏப்ரல் 11ஆம் திகதி வரை




**HUNTER & COMPANY PLC**
யாழ்ப்பாணம் - தொலைபேசி : 021-4923112.

டிப்பாட்மென்ட் ஸ்ரோர் - கொழும்பு 11. தொலைபேசி: 2328171. பார்க் ஸ்ட் ஷொப் - கொழும்பு 10. தொலைபேசி : 2693902 / 4715268. லிபர்டி பிளாசா - தொலைபேசி: 2301037 / 4715269. நாவல - தொலைபேசி: 4542416. தெஹிவளை - தொலைபேசி : 4209580. மஹரகம - தொலைபேசி : 4547128. கண்டி - தொலைபேசி: 0812234420. வத்தளை - தொலைபேசி: 4645252. K Zone Moratuwa - Tel : 071-8734905.

Hunters — Trusted Quality Since 1911

- விற்பனையின் பின்னர் செயல்திறனான சேர்விஸ் • Hunters உத்தரவாத கார்ட் வழங்கப்படும்.
- இலங்கையில் சகல முக்கிய கடன் அட்டைகளுக்கும் 0% வரையிலான வட்டி.

---

# மாருதி ரெடி மிக்ஸ்



- ★ JCB Works (வைகோ வேலைகள்)
- ★ கிறேன் வேலைகள் தரமான முறையில்
- ★ தரமான ரெடி மிக்ஸ் கொங்கிறீட் விநியோகம்
- ★ தரமான கொங்கிறீட் கற்கள் விற்பனைக்கு
- ★ ரெடிமிக்ஸ் ரக் வாடகைக்கு

இவை அனைத்துக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**மாருதி ரெடிமிக்ஸ்**
கேரதீவு வீதி, நாவற்குழி
T.P. 021 7912489, 0779678785, 0774207902, 0777083039, 0771512122

(சி/142) (2-7-9)

---

**காணி விற்பனைக்கு**

நவாலி தெற்கு மானிப்பாய் அரசடிப் பகுதியில் 10 பரப்பு பனை மரமுள்ள காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 0776571736

---

# ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்



பதக்கம் சிலை பாதுகை யந்திரம் ஆமை

Rs. 15,000/-



All-In-One
தீப ஆர்த்தி
flex அருள்
செல்வம் கொழிக்கச் செய்யுங்கள்
லக்ஷ்மியை அழைக்க எண்
Sri Lanka 0777 614 186

Rs. 2000/=
DEEPAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் **சுந்தரம் குகநேசன்** அவர்களின் அன்புத்தாய்.

*அமரர் சுந்தரம் பாக்கியம்*

அவர்களின் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு எமது கல்லூரிச்சமூகம் ஆழ்ந்த கவலை அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிசங்கம்
கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி.

(16035)(6-9-8)

# நந்தி ஓடுகள் விற்பனைக்கு



தென்மராட்சி பிரதேசத்தில் எமது தயாரிப்புகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

லக்ஸ்மி ரேடேர்ஸ்
டச்சு வீதி, சாவகச்சேரி.
தொ.பே. 077 225 0149,
077 271 8249.

மணியம் ஸ்ரோர்ஸ்
கொடிகாமம்.

(இ/2965(6-9-45)

# உள்ளத்தை உருக்கும் நினைவுகளோடு நாலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணுக்கு வந்தநாள்
25 ★ 07 ★ 1923



விண்ணுக்குச் சென்றநாள்
08 ★ 04 ★ 2008

அமரர் **முத்தையா பாலசுப்பிரமணியம்**
(ஓய்வு பெற்ற உப அதிபர்)

திதி: திருதியை 25.03.2012 ஞாயிற்றுக்கிழமை

பிரியமான உங்கள் துணையாள்! பசுமையான
உங்கள் நினைவுகளை நித்தம் நெஞ்சில் சுமக்கின்றாள்
அன்பு, பொறுமை, பண்பு, பாசம் என்பவைகளால்
எம்மைப் போற்றி வளர்த்த அன்பு அப்பா!
நீங்கள் என்றும் விண்ணில் இருந்து எங்களைக்
காவல் தெய்வமாக வழிநடத்த வேண்டுமென்று
இறைவனை அனுதினமும் வேண்டுகின்றோம்.

ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

*என்றும் உங்கள் நினைவுடன் வாழும்*
அன்பு மனைவி திருமதி த. பாலசுப்பிரமணியம்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
09 ★ 01 ★ 1936

மறைவு
06 ★ 04 ★ 1992

*அமரர்*
*சரவணமுத்து ஆறுமுகசாமி*
(ஓய்வு பெற்ற ஆசிரியர்
வட்டுக்கோட்டை)

திதி : 25.03.2012

குடும்பத்தின் ஒளிவிளக்காய் எங்கள்
வாழ்வுக்கு
வழிகாட்டிய தெய்வமே மனதில் இன்னும்
வருத்தம் ஆறவில்லை ஆனால் ஆண்டுகள்
உருண்டோடி விட்டன கண்களில் இன்னும்
கண்ணீர் ஓயவில்லை ஆனால் காலம்
ஓடிவிட்டது எத்தனை உறவுகள் இருந்தாலும்
ஈடாகுமா உங்கள் அரவணைப்புக்கு ?
எத்தனை வருடங்கள் சென்றாலும் உங்கள்
திருமுகம் நினைவுகள் எம்மை விட்டு நீங்காது
ஏங்கித் தவிக்கும் உள்ளங்களுடன்
உங்களுடன் வந்து சேரும் வரை உங்கள்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

ஆழ்வார் இணற்றடி,
பன்னாலை, தெல்லிப்பழை
தொ.பே : 021 3002344

மனைவி,
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

(16022)(6-9-8)

# எழுபத்தைந்தாவது பிறந்தநாள் வாழ்த்து



இன்று 25.03.2012 ஞாயிற்றுக் கிழமை தனது எழுபத்தைந்தாவது பிறந்தநாளை கொண்டாடும்

**திரு. வைரமுத்து சபாரத்தினம்**
**(ஐயா வாத்தியார்)**

அவர்களை பல்லாண்டு காலம் நோய் நொடி இன்றி வாழ வாழ்த்துகின்றோம்.

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு

வாழ்த்துவோர்கள்
மகன், மருமகள்,
பேர்த்தி.

# காணி விற்பனைக்கு

குப்பிளான் கேணியடி வைரவர் ஆலயத்துக்கு முன்பாக உள்ள வீதியோரக்காணி 4 பரப்பு 13.2 குளி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 3449978
077 1769424

(16052)(6-9-8)

# TRANSLATORS

Wanted on-call translators in English-Tamil-Sinhala for foreign mission work at Jaffna, Kilinochchi, Mullaitivu, Vavuniya and Mannar Districts. Preference for residents of respective Districts

Contact - 0773144861 or 021 2255137

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில், பருத்தித்துறை வீதியில் 2 பரப்புக் காணியில் (2000) இரண்டாயிரம் சதுரஅடி கொண்ட களஞ்சியசாலையும் (stores) (15) பதினைந்து வாகனங்கள் நிறுத்தி வைக்கக்கூடிய வாகனத்தரிப்பிடமும் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 011 2363742 ,0775487382 ,
021 7200467

# சேவை, துரித Visa சேவை

Germany, Italyபோன்ற நாடுகளுக்குள் நுழைவதற்கு அரியதோர் சந்தர்ப்பம் Pending ங்கில் உள்ள Visa க்களை ஒரு வாரத்தினுள் பெற்றுத் தருவதுடன் Work,Visit,Investor போன்ற Visa க்களுக்கான ஆலோசனைகளை வழங்கி Visa க்களை குறுகிய காலத்தினுள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு - முந்துங்கள் - T.P - 077 2484403
011 2363880
E - Mail - pricsrilanka@Yahoo.com

# தென்னந்தோட்டக் காணி விற்பனைக்கு

காரைநகர் கசூர்னா பீச்சுக்கு அருகில் 30 பரப்பு தென்னந்தோட்டக் காணி நல்ல குடிதண்ணீர் உள்ள இடம் உடனடியாக விற்பனைக்கு உண்டு. பண்ணை, வயோதிபர் இல்லம், விடுதி போன்ற வற்றிற்கு உகந்தது விலை நேரில் பேசித்தீர்க் கலாம் .

தொடர்பு: 077 976 1373

# வீடு வாடகைக்குண்டு

நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள வீடு வாடகைக்குண்டு

தொடர்பு: 077 104 3619

# வாகனம் வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம் , கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் வெளிநாட்டு நிறுவனத்தின் தேவைக்கு குளிரூட்டப்பட்ட பிரயாண வாகனம் வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 0773 144861, 021 225 5137

# காணி குத்தகைக்கு தேவை

யாழ்.நகருக்கு அண்மித்த பிரதேசங்களிலும், ஏ 9-வீதி, அரியாலை, மானிப்பாய் பிரதேசங்களிலும் பிரதான வீதியுடனும், நீர், மின்சார வசதியுடனும் 04 பரப்பு காணி தேவை.

தொடர்பு:077 029 4160

# காணி விற்பனைக்குண்டு

கட்டப்பிராய், குழுக்கண்டி வீதியில் 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

தொடர்பு:072 525 4201

(16054)(6-9-45)

# மணிவிழாக் காணும் நாயகனை வாழ்த்துகின்றோம்



*திரு. இராசையா கிருஸ்ணசாமி*
*(கல்விசார ஊழியர்)*

யா/வரணி மகா வித்தியாலயம் (06.08.2003 - 23.03.2012) 25 வருடகால கல்வயல் அம் பலவாணர் வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் நிர்வாக சபை செயலாளரும் எமது பாடசாலையின் 09 வருட கால சேவையினை பூர்த்தி செய்து ஓய்வுபெறுகின்ற மணிவிழா நாயகனை ஓய்வுக் காலத்தில் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

யா/ வரணி மகா வித்தியாலயம்,
வரணி.

*அதிபர், ஆசிரியர்கள்,*
*மாணவர்கள், கல்விசாரா*
*ஊழியர்கள்.*

*வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை*

# வெளிவாரிப் பரீட்சைகள் - 2011
## கலைமுதற் தேர்வு - 2010 (வெளிவாரி)
## மீள் பரீட்சார்த்திகளுக்கான அறிவித்தல்

கலை முதற் தேர்வு - 2009 பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப் பரீட்சையில் சித்தியடையத் தவறியபரீட்சார்த்திகளிடமிருந்து மீள் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 16.04.2012 (திங்கட்கிழமை) வரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு பாட அலகிற்கும் மீள் பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம் ரூபா 200/= ஆகும். யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படி வத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணபப்பப்படிவத்தைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/= க்கான காசுக் கட்டளை தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா 40/= பெறுமதி யுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 × 20 செ.மீ. அளவுடைய தபால் உறையுடன், உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள் பின்னர் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
22.03.2012

(சி/136) (2-7-6)

THE HALO TRUST

# சாரதிக்கான பதவி வெற்றிடம்

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 10 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக் கொண்டிருக்கிறன்றது.

ஹெலோ ரஸ்ரின் எதிர்கால வேலைக்காக சாரதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவர்களின் அத்தியாவசிய சேவைகளாவன, மிதிவெடி அகற்றும் அணிகளை மிதிவெடித் தளத்துக்கு நகர்த்திச் செல்வதும் அங்கு விபத்து நிகழ்ந்தால் அம்புலன்ஸ் சேவை வழங்குவதும் ஆகும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் AD ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.

ஆவர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிவரக் கோவை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விவரங்களுடன், அனுபவமுள்ளவர்கள் தங்கள் விவரங்களை கீழ் உள்ள முகவரிக்கு சமர்ப்பிக்கவும்.

**ஹெலோ ரஸ்ட், 450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**

அனைத்து விண்ணப்பங்களும் 29 பங்குனி 2012 வியாழக்கிழமைக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(14074) (6,9,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்

# 3 பிரிவுகளில் சம்பியன்

## யாழ்.வலய கரப்பந்தாட்டத்தில்


15 வயதுப் பிரிவு ஆண்கள்


15 வயதுப் பிரிவு பெண்கள்


17 வயதுப் பிரிவு ஆண்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்.வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் 3 பிரிவுகளில் சம்பியன் பட்டம்வென்று ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் சாதனை படைத்துள்ளது.

யாழ்.வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த 19ஆம் திகதி ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 15 வயது ஆண்கள், பெண்கள், 17 வயது ஆண்கள், பெண்கள் ஆகிய நான்கு பிரிவுகளிலும் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணிகள் இறுதிப் போட்டியில் விளையாட தகுதி பெற்றிருந்தன. இந்த நிலையில் சொந்த மைதானத்தில் போட்டிகள் நடைபெற்றதால் ரசிகர்களின் ஆதரவும் அந்த அணிக்கு அமோகமாக இருந்தது. இதனால் வழமையை விடவும் அதிக ஆக்ரோஷத்தோடு, ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் கரப்பந்தாட்ட அணிகள் எதிரணிகளோடு மோதிக்கொண்டன.

15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தை எதிர்த்து ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் களமிறங்கியது. அனல் பறந்த இந்தப் போட்டியில் ஆவரங்கால் மகாஜன சரிசமமாக ஆட்டத்திறனை வெளிப்படுத்தியபோது, இறுதியில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் வெற்றிவாகை சூடியது.

15 வயது பெண்களுக்கான இறுதிப் போட்டியில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தோடு மோதியது அத்தியார் இந்துக் கல்லூரி. ஆனாலும் இந்தப் போட்டியிலும் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் சிறப்பாக ஆடி சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

17 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மகாஜன வித்தியாலய அணி ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணியை எதிர்த்து விளையாடியது. இந்தப் போட்டியிலும் தன் ஆதிக்கத்தைச் செலுத்திய ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி வெற்றிக் கனியைத் தட்டிப் பறித்தது.

17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான இறுதிப் போட்டியில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி அத்தியார் இந்துவோடு விளையாடியது. ஆனால் இந்தப் போட்டியில் எழுச்சி கண்ட அத்தியார் இந்து அணியின் வீராங்கனைகள் வெற்றியைத் தம் பக்கம் திருப்பி, நான்கு பிரிவுகளிலும் சம்பியன் வெல்லும் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் கனவைத் தகர்த்தனர்.

எனினும் 17 வயதுக் குட்பட்ட பெண்கள் தவிர்ந்த ஏனைய 3 பிரிவுகளிலும் சம்பியனாகி சாதனை படைத்து மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்கேற்க ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் தகுதி பெற்றுள்ளது.

(ங)

# வென்றது சண்டிலிப்பாய் இந்து

## அராலி சரஸ்வதியின் போராட்டம் வீணானது

வலி. வடக்கு மார்ச் 25

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் கடும் போராட்டத்தின் பின்னர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

போட்டியில் முதல் பாதி ஆட்டம் மிகவும் பரபரப்பாக அமைந்தது. இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றமையால் எந்த அணி வெற்றிபெறப் போகிறது என்பதைக் கணிக்க முடியவில்லை. இந்த நிலையில் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தலா 10 புள்ளிகளைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் எப்படியேனும் தமது தரப்பின் புள்ளிகளை அதிகரித்து வெற்றியைத் தமதாக்கிக் கொள்ள வேண்டும் என்ற உத்வேகத்துடன் களம் புகுந்தன.

எனினும்போட்டி ஆரம்பமாகியதும் மீண்டும் முதல் பாதி ஆட்டத்தைப் போலவே இரு அணிகளும் புள்ளிகளைமாறிமாறிபெறத்தொடங்கின.

ஆனாலும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி தமது திறமைகளையும் நுட்பத்தையும் சரியான தருணத்தில் பயன்படுத்தி புள்ளிகளை மேலதிகமாக பெறத் தொடங்கியது.

இறுதியில் சண்டி லிப்பாய் இந்துக் கல்லூரி 12:08 புள்ளிகள் என்ற நிலை யில் முன்னனியில் இருந்த போது ஆட்டம் முடிவடைந்தது.

இதனால்ஆட்ட நிறைவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 22:18 புள்ளிகள் என்ற அடிப்படையில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தை வெற்றிகொண்டு வலயசம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

(ங-86)

# புத்தாண்டுப் போட்டிகள்

வடமராட்சி,மார்ச் 25

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தொண்டமானாறு விநாயகர் சனசமூக நிலையமும், ஒற்றுமை விளையாட்டுக்கழகமும் இணைந்து விளையாட்டுப் போட்டிகளை நடாத்தவுள்ளன. இந்தப் போட்டிகளில் யாழ். மாவட்டத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம், ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், கிறிஸ் கம்பம் ஏறுதல் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகள் சித்திரைப் புத்தாண்டுக்கு ஒரு வாரத்துக்கு முன்னரேயே ஆரம்பமாகி சித்திரைப் புத்தாண்டு வரை இடம்பெறவுள்ளன. இந்தப் போட்டிகளில் பங்கு கொள்ளும் கழகங்களுக்கும், வீரர்களுக்கும், பெறுமதி மிக்க பரிசுகளும் வழங்கப் படும். எனவே உடனடியாக கழகங்கங்கள், வீரர்கள் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு விளையாட்டுக்கழகத் தலைவர் சி. இராஜசிங்கம் தெரிவித்துள்ளார். (ங-8)

# சம்பியனானது அராலி சரஸ்வதி வித்தியாலயம்



வலி. வடக்கு மார்ச்25

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் சங்கானைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் சங்கானை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயமும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

ஏற்கனவே கோட்ட மட்டத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்திலும் இதே அணிகளே மோதியிருந்தன. வலய மட்டத்திலும் இந்த இரண்டு அணிகளும் மோதிக் கொண்டதால் போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது.

இரு அணிகளும் கடும் ஆக்ரோஷத்துடன் மோதிக் கொண்டமை பார்ப்பவர்களை பரவசப்படுத்தியது.

முதல் பாதி ஆட்டத்தில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம் 08:07 புள்ளிகள் என்ற முன்னிலை பெற்றிருந்த நிலையில் ஆட்டம்நிறைவுபெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் பயிற்றுவிப்பாளர்களின் ஆலோசனைகளைப் பெற்று புதிய வியூகங்களுடன் களமிறங்கின. இதனால் போட்டி மீண்டும்சூடுபிடித்துக்கொண்டது.

இரு அணிகளும் சளைக்காமல் மோதிக் கொண்ட போதிலும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்தி புள்ளிகளைப் பெறத் தொடங்கியது. பொன்னாலை வரத ராஜப் பெருமாள் அணி அதைத் தடுக்க முற்பட்ட போதும் அது கைகூடவில்லை.

இந்தநிலையில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் 09:04 புள்ளிகள் என்ற முன்னிலை பெற்றபோது இரண்டாம் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் 16:12 என்ற புள்ளிகள் அடிப் படையில் பொன்னாலை வரதராஜப் பெரு மாள் வித்தியாலயத்தை வீழ்த்தி வலயச் சம்பியனானது. (ங-86)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினரால் நடத்தப்படுகின்ற, அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகமும் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ங-23)

# சாதித்தது பற்றிமா

யாழ்ப்பாணம், மார்ச் 25

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் ஆதரவுடன் திருகோணமலை கரப்பந்தாட்டச் சங்கம் நடத்திய மஞ்சி கிண்ணத்துக்கான கரப்பந்தாட்ட சுற்றுத் தொடரில் ஆண், பெண் இருபாலாருக்குமான இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவிலும், பெண்கள் பிரிவிலும் பற்றிமா விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

முதலில் இடம் பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் பற்றிமா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வெள்ளமணல் விளையாட்டுக் கழக அணி மோதியது.

5 சுற்றுக்கள் கொண்ட ஆட்டத்தில் பற்றிமா விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற செற்கணக்கில் வெற்றியீட்டியது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பற்றிமா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கந்தளாய் ரணசமநல விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் பற்றிமா விளையாட்டுக் கழகம் 3:2 என்ற செற்கணக்கில் [illegible] கியது. (ங-23)

## செயலகப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 25

திருகோணமலை 12 பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கிரிக்கெட், கபடி போட்டிகள் எதிர்வரும் 1 ஆம் 2 ஆம் திகதிகளில் திருகோணமலை [illegible] மைதானத்தில் இடம்பெறும். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு தமிழக அரசு ரூ.25 கோடி ஒதுக்கீடு

## முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு



சென்னை, மார்ச் 25

இலங்கை தமிழ் அகதிகளுக்கான உடல்நலக் காப்புறுதித் திட்டத்தை நீடிக்குமாறு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் இலங்கை தமிழ் அகதிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள முகாம்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக 25 கோடி இந்திய ரூபாவைத் தமிழக அரசு ஒதுக்கியுள்ளது.

தமிழ் அகதிகளின் நலன் கருதி தனது அரசு மேற்கொள்ளும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக ஏழை மக்களுக்காக தற்போது வழங்கப்படும் இந்த திட்டத்தை விஸ்தரித்துள்ளதாகத் தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முகாம்களில் குடிதண்ணீர் விநியோகத்தை மேம்படுத்தும் பொருட்டு நான்கு கோடியே 33 இலட்சம் இந்தியா ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வீடுகளைப் புனரமைத்தல், வீதிப் புனரமைப்பு, நூலக நிர்மாணம் மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு 20 கோடியே 66 இலட்சம் இந்திய ரூபாய்களுக்கும் அதிகமான நிதியை தமிழக அரசு ஒதுக்கியுள்ளது.

அகதிகளாக உள்ள 416 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 41 இலட்சத்து 60 ஆயிரம் இந்திய ரூபாக்களை வழங்கவும் தமிழக முதலமைச்சர் தீர்மானித்துள்ளார்.

அகதிகள் குடும்பங்களிலுள்ள ஆயிரம் மாணவர்களுக்கு உயர்கல்வியை தொடர்வதற்காக ஊக்குவிப்பு கொடுப்பனவை அதிகரிக்குமாறும் ஜெயலலிதா பணிப்புரை விடுத்துள்ளார்.

20 இலட்சத்து 98 ஆயிரம் இந்தியா ரூபா நிதி இதற்கெனச் செலவிடப்படவுள்ளதாகத் தமிழக முதலமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அகதிகளின் முகாம்களில் குடிதண்ணீர். கழிவறை, மற்றும் தங்குமிட வசதிகள் மிகவும் மோசமாக உள்ளதாக குற்றஞ்சுமத்தப்பட்டு வந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. (த)

# இலங்கை மீது பொருளாதாரத்தடை

## அமெரிக்கா யோசனை

இலங்கை மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதிப்பதற்கான சாத்தியம் இருப்பதாக ரஷ்ய செய்தித்தாள் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஈரானிடமிருந்து எண்ணெய் இறக்குமதியை நிறுத்தாத அல்லது குறைக்காத நாடுகள் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என அமெரிக்கா எச்சரித்திருந்தது. இதன்படி 12 நாடுகள் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படலாம் என அமெரிக்க இராஜாங்க தகவல்கள் தெரிவித்திருந்தன.

இதில் இலங்கையும் அடங்கும். அமெரிக்கா இவ்வாறு பொருளாதாரத் தடை விதிக்கும் பட்சத்தில் இலங்கை மேலும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் என நிபுணர்கள் கூறியுள்ளனர்.

தனது எச்சரிக்கையைத் தொடர்ந்து ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 10 நாடுகள் ஈரானிடமிருந்து எண்ணெய்க்கொள்வனவை உடனடியாகக் குறைத்துள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளது.

இதேவேளை 4 நாடுகள் மீது அமெரிக்கா கடும் கோபத்தில் உள்ளது. அவை சீனா, இந்தியா, தென்கொரியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் ஆகும். இதில் முதலிரு நாடுகளும் ஈரானில் இருந்து பெருமளவில் எண்ணெய்க் கொள்வனவைச் செய்துவருகின்றன தவிர இந்தோனேசியா, மலேசியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், இலங்கை, தாய்வான், துருக்கி ஆகிய நாடுகளும் தொடர்ந்து ஈரானிடம் எண்ணெய்யைக் கொள்வனவு செய்து வருகின்றன.

அமெரிக்காவின் இந்த தடைவிதிப்பு சுயநலம் கொண்டது என அந்தப் பத்திரிகை விமர்சித்துள்ளது. (உ-10)

# ஆதரவின் விளைவை எதிர்நோக்கும் இந்தியா

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவளித்ததன் விளைவை இந்தியா அனுபவிக்கும் என்று இலங்கை நேற்று எச்சரித்துள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளரும் பதில் ஊடகத்துறை அமைச்சருமான லஸ்மன் யாப்பா அபேவர்த்தன இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கை மீது தமது வாக்குகளைப் பயன்படுத்திய நாடுகள் காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக ஒரு பிரேரணை கொண்டு வரப்படும்போது இந்தியாவுக்கு எதிராக வாக்களிக்க தாம் தயங்கமாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார். இருந்தாலும் இலங்கைக்கு எதிராக வாக்களிக்க இந்தியாவுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டது என்பதை இலங்கை கருத்தில் கொள்ளும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (உ-10)

# மூதாட்டியைக் கொலைசெய்து வீட்டில் கொள்ளை

கண்டி குருநாகல் வீதியில் மாவத்தகம பிரதேசத்தில் நேற்று சனிக்கிழமை 86 வயதான மூதாட்டி ஒருவரை கொலை செய்து விட்டு தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

மாவத்தகம பிரதேச வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளையர்கள் அங்கு இருந்த 53 வயது மகளை கதிரையில் கட்டி வைத்த பின் 86 வயதுடைய தாயின் கழுத்தை நெரித்துக் கொலை செய்துவிட்டு தங்க நகைகளை எடுத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மாவத்தகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்திவருகின்றனர்.



கோட்டை ரஜமகா விகாரையில் இடம்பெற்ற பிக்குகளின் படுகொலை சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நுகேகொட நீதவான் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டார்.

# விசேட தேவைகள் உடைய மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 25

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள விசேட தேவைகள் உடைய மாணவர்களுக்குச் சலுகை வழங்குவது குறித்து பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

அதன்படி சலுகையை எதிர்பார்க்கும் மாணவர்கள் விண்ணப்பப் படிவத்தை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன் தமக்குக் கிடைக்கும் வகையில் அனுப்பிவைக்குமாறு பரீட்சை ஆணையாளர் டபிள்யூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார அறிவித்திருக்கிறார். இது குறித்து விண்ணப்பப் படிவம் மற்றும் விவரங்களை கல்வி அலுவலகம் மற்றும் பாடசாலை அதிபர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-7)

# எரிகாயங்களுக்கு உள்ளான மாணவி சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 25

மண்ணெண்ணெய் விளக்குத் தட்டுப்பட்டு எரிகாயங்களுக்கு இலக்கானார் என்று கூறப்படும் மாணவி ஒருவர் எரிகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காது அங்கு மரணமானார்.

சம்பவத்தில் சுன்னாகம் ரயில் நிலைய வீதியைச் சேர்ந்த சந்திரசேகரம் சுஜித்தா (வயது-17) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

கடந்த திங்கட்கிழமை வீட்டிலிருந்து படித்துக் கொண்டிருந்தபோது மண்ணெண்ணெய் விளக்குத் தட்டுப்பட்டு தீப்பற்றியதாகக் கூறப்பட்டது. எரிகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த அந்த மாணவி சிகிச்சை பயனளிக்காது நேற்று முன்தினம் இரவு மரணமானார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவர் மயிலணி வித்தியாலயத்தின் மாணவி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-17)

# இலங்கையை ஐ.நா. தவறாக புரிந்து கொண்டுள்ளது

## நவநீதம்பிள்ளையின் கருத்துக்கு ஜனாதிபதி ஊடகப் பேச்சாளர் மறுப்பு

**அவதூறு பிரச்சாரமொன்றை இலங்கையில் புதினப் பத்திரிகைகளும், செய்தி வலையமைப்புகளும், தொலைக்காட்சிகளும் ஜனவரி மாதத்திலிருந்து தொடர்ச்சியாக நடத்தி வந்தன.**

கொழும்பு, மார்ச் 25

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக ஐ.நா. தெரிவித்த குற்றச்சாட்டை இலங்கை அரசு மறுத்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கையில் மனித உரிமை ஆர்வலர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது தொடர்பில் தனது எச்சரிக்கையை வெளியிட்டிருந்தார். இதற்கு பதில் அளித்துள்ள இலங்கை அரசு, ஐ.நா. இலங்கையை தவறாக புரிந்துணர்வை கொண்டுள்ளது என குறிப்பிட்டுள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளர் பந்துல ஜயசேகர கருத்து வெளியிடும்போது,

விவாதத்தில் பங்கு கொள்ள வந்திருந்த இலங்கை மனித உரிமைகள் ஆர்வலர்களுக்கு மனித உரிமைகள் சபை அமர்வின்போது முன்னொருபோதும் இல்லாத வகையில், மிரட்டல்கள், பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டதாகவும் தொல்லைகள் கொடுக்கப்பட்டதாகவும் இதற்கு 71 அங்கத்தவர்களைக் கொண்ட இலங்கை அரசின் தூதுக் குழுவின் அங்கத்தவர்கள் உட்பட பலர் காரணமாக இருந்ததாகவும் நவநீதம்பிள்ளையை மேற்கோள் காட்டி அவரின் பேச்சாளர் றுப்பேட் கொல்வின் கூறினார்.

ஜெனிவாவை சூழவுள்ள பகுதிகளில் சிவில்சமூக செயற்பாட்டாளர்களுக்கு தொல்லைகள் கொடுக்கப்பட்டதாகவும் மிரட்டல் விடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் மனித உரிமை செயற்பாட்டாளர்களின் படங்களை வெளியிட்டும், பெயர் குறிப்பிட்டும் அவர்களை 'என்.ஜி.ஓ.' கும்பல் என வர்ணித்தும் நாட்டை காட்டிக்கொடுப்போர், கூலிப்படையினர், பயங்கரவாதிகளுடன் தொடர்புடையோர் என குற்றம் சுமத்தியும் மிக மோசமான அவதூறு பிரச்சாரமொன்றை இலங்கையில் புதினப் பத்திரிகைகளும், செய்தி வலையமைப்புகளும், தொலைக்காட்சிகளும் ஜனவரி மாதத்திலிருந்து தொடர்ச்சியாக நடத்தி வந்தன.

இந்த அறிக்கைகளில் சில மறைப்பதற்கு அதிகம் எத்தணிக்காத ஆத்திரமூட்டும் வாசகங்களையும் பழி வாங்குவது தொடர்பிலான மிரட்டல்களையும் கொண்டிருந்தன. இவ்வகையான ஆக்கங்களை வாசித்தவர்கள் தெரிவித்த கருத்துக்களில் குறைந்தபட்சம் இரண்டு ஆக்கங்களில் பெயர்குறிப்பிடப்பட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் வீடுகளை எரிக்க வேண்டுமென வெளிப்படையாக கூறப்பட்டிருந்தன. எனவும் நவநீதம்பிள்ளை குறிப்பட்டிருந்தார்.

இந்நிலையில் ஐ.நா. மனிதஉரிமைகள் சபையில் இலங்கையின் மனித உரிமைகள் ஆர்வலர்களுக்கு மிரட்டல்கள் விடுக்கப்பட்டதென்ற குற்றச்சாட்டை ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் மறுத்துள்ளார்.


# விபத்தில் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 25

புலோலியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் புலோலி மேற்கில் இடம் பெற்றது.

இந்தச் சம்பவத்தில் புலோலி தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி வைகுந்தநாதன் (வயது-60) என்பவரே உயிரிழந்தவராவார். விபத்தில் படுகாயமடைந்த அவர் மந்திகை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் எனினும் இவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் வங்கியின் கோப்பாய் சேவை நிலையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா அண்மையில் இடம்பெற்றபோது விருந்தினர்களாக பிரதேச செயலர் ம.பிரதீபன், யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன், வங்கி முகாமையாளர் எ.எ.சதீஸ் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்கப்படுகின்றனர். (ம-121)




கரணவாயில் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியின்போது பாடசாலை அதிபர் ரி.இரவீந்திரன், கிராம அலுவலர் ரி.புவனேந்திரன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார், கரவெட் டிக் கோட்ட அதிகாரி சி.நற்குணலிங்கம் ஆகியோர் விருந்தினர்களாக பாண்ட் இசையுடன் மைதானத்துக்கு அழைத்து வரப்படுகின்றனர். (ம-253)



அச்சுவேலி தோப்பு அருள்நந்தி வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் கலந்துகொண்ட வித்தியாசாலை அதிபர் மு.இராசவரோதயம், புலம்பெயர் பழைய மாணவன் எஸ்.சத்தியதாசன் உட்பட விருந்தினர்கள் மைதானத்துக்கு அழைத்து வரப்படுகின்றனர். (ம-11)



ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளியில் புதிய கட்டடத் திறப்பு விழாவின்போது யாழ்.மாநகர சபை [illegible] கு.பற்குணராசா மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து [illegible]




அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் கடமையாற்றிய திருமதி அன்னமுத்து கணபதிப்பிள்ளை ஞாபகார்த்தமாக பாடசாலைக்கான பாண்ட் வாத்தியக் கருவிகளை கே.என்.கணபதிப்பிள்ளை, பாடசாலை அதிபர் திருமதி ஸ்ரீரதி முருகேசிடம் கையளித்தார். (ம-11)



வல்வை சிவகுரு வித்தியாலயத்தின் புதிய கட்டடத்தில் அமைக்கப்பட்ட நூலகத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றபோது வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இரஞ்சி குட்டித்தம்பி நாடாவெட்டித் திறந்து வைக்கிறார். அதனைத் தொடர்ந்து மாணவர்கள் நூலகத்தைப் பார்வையிட்டனர். (ம-253)



நெல்லியடி மெ.மி.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் கலந்துகொண்ட விருந்தினர்களை மாணவர்கள் பாண்ட் இசையுடன் வரவேற்றனர். (ம-253)



குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் கலந்துகொண்ட மருதங்கேணி உதவி அரச அதிபர் ந.திருலிங்கநாதன் தேசியக் கொடியேற்றுகிறார். (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உப்பூறலையும் கவனியுங்கள்

திருகோணமலை,மார்ச்25

திருகோணமலை மாவட்டத்தில், வெருகல் பிர தேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உப்பூறல் கிராமத்தில் அமைந்துள்ள தி/சிவசக்தி வித்தியாலத்தில் நிலவும் ஆளணி, பௌதிக வளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு அப்பகுதிப் பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

உப்பூறல் சிவசக்தி வித்தியாலயத்தில் தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரையிலான வகுப்புக்கள் உள்ளன. சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர் கல்வி பயில்கின்றனர்.

இங்கு மூன்று ஆசிரியர்கள் மாத்திரமே உள்ளனர். ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. இதனால் இந்தப் பாடசாலை மாணவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(உ-40)

## காசநோய் விழிப்புணர்வு...



சர்வதேச காசநோய் தினத்தையொட்டி திருகோணமலை மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தினர் நேற்றுமுன்தினம் விழிப்புணர்வு நடைபயணம் மேற்கொண்டனர்.

## குளத்துக்கு தமிழ் மன்னன் பெயர்

வாகரை, மார்ச் 25

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட திக்கானவெளிக் குளம் 'தினசிங்கன்குளம்' எனப் பெயர் மாற்றப்பட்டு மக்களின் பாவனைக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்தகால அசாதாரண சூழ்நிலை காரணமாக காடு மண்டி தூர்ந்துபோய் காணப்பட்ட இந்தக் குளம் 2011ஆம் ஆண்டுக்கான பிராந்திய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 14 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளது.

இந்தப்பிரதேசத்தினை தமிழ் மன்னன் ஆட்சி செய்ததாக வரலாறுகள் கூறுகின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டு இந்தக் குளத்துக்கு அந்த மன்னனின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. (10)

# இணைப்பை தீர்மானிப்பது கிழக்கு மக்களின் உரிமை

### வடக்கு தலைவர்கள் சொல்லமுடியாது: பிள்ளையான்



வவுணதீவு, மார்ச் 25

**வடக்கு, கிழக்கை இணைப்பதா இல்லையா என்பதை கிழக்கு மக்களே தீர்மானிக்க வேண்டும். கிழக்கு மாகாணத்தை வடக்குடன் இணைப்பதை வடக்கைச் சேர்ந்த தலைவர்கள் தீர்மானிக்க வேண்டியது அவசியமில்லை.**

இவ்வாறு தெரிவித்தார் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசந்துரை சந்திரகாந்தன்.

வவுணதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடத்தை நேற்று முன்தினம் திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கு இணைப்புப் பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பேசி வருகின்றனர். தற்போது கிழக்கு மாகாணம் சகல துறைகளிலும் துரிதமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. எமது மாகாணத்தின் கல்வித் துறையும் இன்னும் சிறந்ததாகவும் துரிதமாகவும் வளர்ச்சியடைய வேண்டுமென்பதே எமது நோக்கம். இதன் அடிப்படையிலேயே நாம் செயற்பட்டு வருகின்றோம்.

நவீன தொழில்நுட்ப யுகத்திற்கேற்ப நாம் எமது மாணவர்களைத் தயார்ப்படுத்த வேண்டும். எமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை பிரச்சினைக்கு வெகு விரைவில் தீர்வு கிடைக்கும்.

இவ்வாறான துரிதமான அபிவிருத்தி நோக்கிய பயணத்தில் அரசியலின் பங்கு அளப்பெரியது. நாம் கிழக்கு மாகாணசபையைப் பொறுப்பேற்ற பின்னர்தான் கிழக்கு மாகாணம் துரிதமாக அபிவிருத்தி அடைந்து வருகின்றது.

மாகாணசபை முறை மூலம் துரிதமாக கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்து வருகின்றோம். எமக்குப் பின்னரே கூட்டமைப்பினர் மாகாணசபை பற்றிப் பேசுகின்றனர்.

கிழக்கை வடக்குடன் இணைப்பதற்கு வடக்கு தலைமைகள் தீர்மானிக்க வேண்டிய அவசியமில்லை. கிழக்கை வடக்குடன் இணைப்பதா அல்லது இல்லையா என்பதை கிழக்கு மக்களே தீர்மானிக்கவேண்டும். கடந்தகால அனுபவங்கள் எமக்குப் பல படிப்பினைகளைத் தந்திருக்கின்றன. வடக்கு, கிழக்கு இணைந்திருந்தால் கிழக்கு மாகாணம் இவ்வாறு துரித அபிவிருத்தி காண முடியாது.

கடந்தகால கசப்பான அனுபவங்கள் எப்படி இருப்பினும் மாகாணசபை முறைமை மூலம் கிழக்கு மாகாணம் துரிதமாக அபவிருத்தியடைய வேண்டும். எமது மக்கள் நிம்மதியாக வாழ வேண்டுமென்பதே எமது எண்ணம். இதற்கிணங்க மக்களும் சிந்தித்து உண்மைகளை உணர்ந்து செயற்பட வேண்டும் - என்றார். (10)

## சுத்திகரிப்பற்ற வடிகால்களால் தாங்க முடியாத துர்நாற்றம்

### திருமலை நகர மக்கள் விசனம்

திருகோணமலை,மார்ச்25

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கிண்ணியா பிரதேசத்தில் சில வடிகால்கள் துர்நாற்றம் வீசுகின்றன.

வடிகால்கள் உரிய முறையில் பராமரிக்கப்படாமல் இருப்பதும், பொதுமக்கள் மற்றும் ஹோட்டல்கள் கழிவு நீரைக் தொடர்ந்தும் வடிகாலுக்குள் விடுவதாலும், நீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுகின்றது.

சின்னக் கிண்ணியா சந்திப் பள்ளியடி, மீன் சந்தைபோன்ற இடங்களில் வடிகால்களில் இருந்து தாங்க முடியாத துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் வியாபாரிகளும், மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனைச் சீர் செய்வதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமை குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். சந்தைக் குத்தகைக்காரர்களும் நகர சபையினரும் இது குறித்து அக்கறையற்று இருக்கின்றனர் என்று வியாபாரிகள் குற்றஞ் சாட்டுகின்றனர். (உ-40)

## தனிக் கோட்டமானது தோப்பூர் பிரதேச செயலகமும் தனியாகும்

திருகோணமலை,மார்ச் 25

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தோப்பூர்ப் பகுதி தனிக் கல்விக் கோட்டமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை மூதூர் கல்விக் கோட்டத்துடன் தோப்பூரில் உள்ள பாடசாலைகள் இணைக்கப்பட்டிருந்தன. தோப்பூருக்கான தனிக் கல்விக் கோட்ட அலுவலகத்தை அண்மையில் கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் எச்.எம்.எம் பாயிஸ் திறந்து வைத்தார். நிகழ்வில் கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர் நாசிக் பரீட்டும் கலந்து கொண்டார்.

தவிசாளர் பாயிஸ் அலுவலகத்தை திறந்து வைத்த பின் உறையாற்றுகையில், தனது அடுத்த இலக்கு தோப்பூரை தனிப் பிரதேச செயலகப் பிரிவாக உருவாக்குவதேயாகும் என்றார்.

மூதூர் பிரதேசத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் சகோதரத்துவத்துடனும், புரிந்துணர்வுடனும் வாழ்ந்து வருகின்றார்கள். அந்த ஒற்றுமை நீடிக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று - அவர் கூறினார். (உ-40)

## வீதி கையளிப்பு

வாகரை, மார்ச் 25

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஓமடியாமடு மற்றும் றிதிதென வீதிகளை இணைக்கின்ற வீதியை கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசந்துரை சந்திரகாந்தன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சரின் 2011ஆம் ஆண்டுக்கான பிராந்திய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 4 கிலோமீற்றர் தூரமான இந்த வீதி சுமார் 4 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டது.

(10)

## சிரமதானப் பணி



'இயற்கையின் கொடை வளங்களை பாதுகாத்தல்' என்னும் தொனிப்பொருளில் மூவினத்தவர்களும் இணைந்து மேற்கொள்ளும் நல்லுறவிற்கான சிரமதானப் பணிகள் மட்டக்களப்பு வாவியைத் தூய்மைப்படுத்தும் பணியுடன் நேற்று சனிக்கிழமை ஆரம்பமானது.

மூன்று நாள்களைக் கொண்ட இந்தச் சிரமதானப் பணிகளை கிழக்கு மாகாண முதலமைச்சரின் இணைப்புச் செயலாளரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான பூ.பிரசாந்தன் ஆரம்பித்து வைத்தார்.

மாவட்டக் கடற்றொழில் திணைக்கள முன்றலில் ஆரம்பமான இந்தச் சிரமதானப் பணிகள் பாலமீனமடு, [illegible] வரை மேற்கொள்ளப்படவுள்ளன. (10)

## அபிவிருத்திக் கலந்துரையாடல்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள திருக்கோவில், நாவிதன்வெளி பிரதேசங்களில் உள்ள அரசியல் தலைவர்களுடனான சந்திப்பொன்று கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதில் சமூக நல்லாட்சியுடான கட்டுமான வேலைத் திட்டத்தின் முன்னேற்றங்கள் பற்றியும், எதிர்காலத் திட்டங்கள் பற்றி ஆராயப்பட்டது.

இதனை கல்முனை கிறிஸ்தவ இல்ல மண்டபத்தில் பாம் பவுண்டேசன், பிரட்டிக்கல் ஆக்சன் நிறுவனமும் இணைந்து நடாத்தியது.

## ஸ்ரீகோணேஸ்வராவில் '6 எஸ்' திட்டம்

திருகோணமலை, மார்ச் 25

பாடசாலைகள் வள அபிவிருத்தி முன்னேற்றத் திட்டமான ஜப்பானிய ஜெய்கா திட்டத்தை அடிப்படையாகக்கொண்ட '6 எஸ்' திட்டத்தின் கீழ், திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் 'செய்றி' என்ற தூய்மைப் படுத்தலும் தேவையற்றவற்றை நீக்குதலும் செயற்பாடு நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

செயற்றிட்ட தேசிய இணைப்பாளர் பாபு முன்னிலையில் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு வளாகத்தில் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் பெற்றோர்களின் பங்களிப்புடன் இந்த செயற்றிட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது.

2012ஆம் ஆண்டு இலங்கை முழுவதிலுமுள்ள 10 தமிழ், சிங்கள பாடசாலைகள், மத்திய கல்வி அமைச்சினால் '6 எஸ்' திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளன. (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வின்றிச்

## 10 வரப்பிரசாதங்களுடன் ஐஸ்கிறீம் இயந்திரம்



50,000/- மேல் மாத வருமானம்

- சோயா வெனிலா சொக்லட் சுவைகள்
- இலவச பயிற்சி
- விற்பனையின் பின் சேவை

ஒரு வருட உத்தரவாதம்

விலை ரூ 99,000/- இல் இருந்து | புத்தம் புதியது

**WINRICH INTERNATIONAL (PVT) LTD.**
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.

தமிழில் தகவல்பெற (யோகேஸ்)
Hot Line: 077 391 8870, 077 477 4782


# வயோதிபரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருப்பகுதியில் உள்ள வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் வயோதிபர் ஒருவரின் சடலம் பொலிஸாரால் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளது.

வீட்டின் குளியல் அறைக்குள் ஜன்னல் கம்பியில் தூக்கில் தொங்கிய நிலையிலேயே சடலம் மீட்கப்பட்டுள்ளது. பொலிஸார் சடலத்தை யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவத்தில் சிதம்பரப்பிள்ளை சண்முகப்பிள்ளை (வயது-76) என்பவரின் சடலமே மீட்கப்பட்டது. (ஒ-15)


## புதிய பிரிவுகள் ஆரம்பம்

Weekday batch : Monday (26th March) 9.00 am
Weekend batch : Saturday (31st March) 9.00 am

IHD (International Higher Diploma) in Computer Networks — By Experienced Lecturer

edexcel - HND in Computer Networks — By Experienced Lecturer

CCNA | MCTS | ADCN — By Experienced Lecturer — Advanced Diploma in Computer Network

Tel : 021 222 9901
Mobile : 0775632056
#216, Navalar Road, Jaffna

IDM Nations Campus Jaffna Branch
Managed by Aharam Solution (Pvt) Ltd



## Register IELTS exam at Knowledge Universe®

- Free Mock Spoken Exam for IELTS (Get a Trial Result with aprox Band Score)
- Free IELTS guide book *(immediate Online registration)

(No 75,Temple Road, Jaffna. 021-3208342/ 0777302882
Visit more details at : www.kugroup.info



## பணியாளர்கள் தேவை

யாழ். நகரில் உள்ள வியாபார விற்பனை நிலையத்திற்கு கீழ்க் காணும் பணிநிலைக்கு பணியாளர்கள் தேவை.

1. சிட்டை எழுதுநர்
2. களஞ்சியப் பொறுப்பாளர்
3. சிற்றூழியர்கள் (பொருள்கள் பொதி செய்தல்)
4. சாரதி (பாரவூர்தி)
5. கிளினர்

மேற்படி பணிநிலைகளில் முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
விண்ணப்பிக்க விரும்புபவர்கள்
T.P 0772964937 உடன் தொடர்பு கொள்ளவும்.



# Methu's

## Kids N Baby Care



யாழ்.மண்ணில் சிறுவர்கள், குழந்தைகளுக்கான அனைத்து விதமான தெரிவுகளுக்கும்....



195, Navalar Road, Jaffna. T.P: 0773131622



# நிரந்தர வேலைவாய்ப்பு

**01) முதன்மை நிறைவேற்று அதிகாரி -CEO**

- ★ கடற்தொழில் துறையில் பட்டம் பெற்றவர் விரும்பத்தக்கது
- ★ வயது 45-60
- ★ வியாபார-முகாமைத்துவ பட்டம் அனுபவம்.
- ★ கடற்தொழில் துறையில் உள்ள விசேட திறமைகளுக்கு முன்னுரிமை
- ★ அனுபவத்திற்கு ஏற்ற கவர்ச்சிகர சம்பளம் . நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**02) கணக்காளர்**

- ★ கிராமசேவகரின் நற்சான்று பத்திரம் அவசியம்.
- ★ வயது 25-50
- ★ AAT பட்டம்
- ★ உங்கள் திறமைக் கேற்ப சம்பளம் -நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**03) வாகன சாரதி**

- ★ யாழ் - கொழும்பு வழி அனுபவம் அவசியம்
- ★ வயது 25-45
- ★ உங்கள் அனுபவம் மற்றும் திறமைக் கேற்ப சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

இதற்குத் தகுதியானவர்களிடம் இருந்து தகுதியான சான்றிதழ்களுடன் விண்ணப்பம் கோரப்படுகிறது.

உங்கள் விண்ணப்பங்களை Surafisheries,Inpasiddi,Pointpedro,Sri lanka என்ற முகவரிக்கும். அதன் ஒரு பிரதியை surafisheries@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பி வைக்கவும்

நேர்முகத்தேர்வு பற்றிய விவரம் அறியத்தர உங்கள் தொலைபேசி இலக்கத்தை தவறாமல் எமக்கு அறியத்தரவும்.



# முருகன் நகைமாளிகை

(இலங்கை வங்கி முன்பாக)
120, கண்டி வீதி, சாவகச்சேரி.

மேற்படி எமது நிறுவனமானது இல:120, கண்டி வீதி, சாவகச்சேரி எனும் இடத்தில் பல வருடங்களாக இயங்கி வருகின்றது என்பதனையும் எமக்கு கைதடி, கொடிகாமம் மற்றும் வேறு எந்த இடங்களிலும் கிளைகள் இல்லை என்பதனையும் எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

பழைய புதிய வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகை உண்டு. நேரடித் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி, முருகன் நகை மாளிகை
இல:120, கண்டி வீதி, சாவகச்சேரி



# STUDY IN UK

AFTER GCE O/L
GCE A/L
what next?

உங்கள் London செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

March/April Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

**நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்**

- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனையடைத்துக் கொண்டிருப்பதால்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
- GCE(O/L) தகைமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள்

HOTLINE : 021 7538395 / 021 2227230
011 7 555511/14

EXPONET Overseas Consultants
379 - ½, Galle Road, Colombo 06.
197,Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk


# மனமார்ந்த நன்றிகள்

எமது குடும்பத் தலைவி திருமதி.இரத்தினம் பஞ்சாபிகேசன் அவர்கள் 17.03.2012 அன்று இறைவனடி சேர்ந்த நேரம் முதல் 19.03.2012 நிகழ்ந்த இறுதிச்சடங்கு வரை எமக்கு அனைத்து உதவிகளும் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் இன்று வரை எமது துயரில் பங்கெடுத்தும் நேரிலும், தொலைபேசி மூலமும், மின்னஞ்சல் மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்த அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாதஸ்வர வித்துவான்
கலாநிதி K.M. பஞ்சாபிகேசன்
பிள்ளைகள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

சங்கம் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.


# பார்மசி விற்பனைக்கு

வடமராட்சியில் தற்போது நன்கு இயங்கிக் கொண்டிருக்கும் பார்மசி & குறோசரி விற்பனைக்குண்டு.
தொடர்பு - 0721380869



# பணிநிலை வெற்றிடம்

யாழ் நகரில் இயங்கி வரும் மொத்த விற்பனை நிலையத்துக்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவை. தகுதியானோர் எதிர்வரும் 05. 04. 2012 இற்கு முன்னர் கீழ்க் காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

1) சாரதி ( முதல் வகுப்பு )
2) விநியோக பையன்கள் ( Delivery boys )

**விளம்பர இல : 4342.**
**மே/பா உதயன்,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**



## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் 2ஆம் குறுக்குத்தெருவில் சகல வசதிகளுடன் கூடிய வீடு/Annexe வாடகைக்கு உண்டு. அரச சார்பற்ற நிறுவனங்கள்/கல்வி நிலையங்களுக்கு உகந்தது. தொடர்பு :- 0776179090



# Vivekananda Academy

திருமணம் முடித்து மற்றும் Sponsor மூலம் வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கான தூதரக பரீட்சைகளுக்கு தயார்படுத்தும்
ஜேர்மன் - Deutsch (டொச்)
நெதர்லாந்து - Dutch (டச்)

புதிய வகுப்புகள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன. மற்றும் French, Italian புதிய வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.

Vivekananda Academy

No - 221/1 Power House Road, Jaffna. Tel - 021-2220393, 021- 321 - 6928



# ONE MONTH FREE SMS ALERT !

உங்கள் வியாபார நிறுவனத்தில் அல்லது வீடுகளில் எவரும் இல்லாத நேரங்களில் அல்லது இரவு நேரங்களில் திருடர்களின் நடமாட்டம் தென்பட்டால் உங்களுடைய கைத்தொலைபேசிக்கு உடனடியாக SMS அனுப்பப்படும்.

- இணையத்தளம், கைத்தொலைபேசி மூலம் கண்காணிக்கும் வசதி.
- ஒரு வருட உத்தரவாதம்
- விற்பனைக்கு பிந்திய சேவைகள்.

மேலதிக விபரங்களுக்கு 075 9997798



Price - 47,500.00

உங்கள் வியாபார நிறுவனங்களை, வீடுகளை மற்றும் சொத்துக்களை திருடர்களிடம் இருந்து 24 மணிநேரமும் பாதுகாக்கும் நோக்குடன் யாழில் உங்களுடன் நாம்...


Hotline 021 5 676767


AJ SYSTEMS (PVT) LTD 315,1/2 பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
Tel : 0212219234 email: info@aj-sys.lk web: www.aj-sys.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


தெளிவான ஆதாரம் 08


பல்வேறு வழிவழிகளில் வதைப்பட்ட தமிழர்கள் 07


முன்னாள் ஆளுநர் ஆர்னோல்ட் 03


ஜெனிவாவில் நடப்பது என்ன? 21


தொடரும் போராட்டம் 17



# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

01

உதயன் 25 மார்ச் 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு




**30 சிங்கள மீனவர்களும் அவர்களின் குடும்பங்களும் இப்போது செம்மலைக் கிழக்குப் பகுதியில் நாயாற்றுக் கரையில் குடியேறியிருக்கின்றனர். தமிழர்கள் மீன்பிடித்து வந்த ஆற்றுத்துறைகளில் வந்தவர்கள் இறால் பிடிக்கின்றனர். கடற்றொழிலையும் ஆரம்பித்து விட்டனர் என்று மக்கள் கிசு கிசுக்கின்றனர்.**

■ ஜெரா

# நாயாற்றிலிருந்து நல்லிணக்கம்

கடந்த வாரத்தின் தொடக்கப் பகுதியிலிருந்து சுவிஸ் தலைநகர் கார சாரங்களால் களை கட்டியிருந்தது. பாவப்பட்ட, பழி வாங்கப்பட்ட மக்களின் கண்ணீரும் குருதியும் இன்னமும் காயாமல் இருந்ததாலேயே அதற்கு இவ்வளவு சூடு கிடைத்தது.

இலங்கையில் வாழும் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் ஏற்பட அரசு இனியாவது நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பது சுவிஸ்வாதிகளின் பிரதான வாதப்பொருளாக இருந்தது. அமெரிக்கா தலைமையிலான நாடுகள் - மனிதாபிமான ஆயுத நாடுகள் - இலங்கையில் இன நல்லிணக்கம் ஏற்படுவதற்கான பொறிமுறை ஒன்றை இறுக்கமான முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக அங்கு பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தன.

அதனை முற்றாக நிராகரித்து, தம் நாட்டில் இன நல்லிணக்கம் வலுவானதாக இருக்கின்றது என கட்சி கட்டி வாதாடிக் கொண்டிருந்தனர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான இலங்கை அணியினர். அமெரிக்கா தலைமையிலான நாடுகளை எதிர்க்கும் மற்றைய நாடுகளையும் தமது அணியில் இணைத்துக் கொண்டு உள்ளும் புறமுமாகப் போராடினர்.

இலங்கையில் இன நல்லிணக்கம் நூறு வீதம் உள்ளது, அங்கு ''மனிதாபிமானத்துக்காக'' நிகழ்த்தப்பட்ட போரில் ''தேவையற்ற மனிதர்கள்'' கொல்லப்படவில்லை, இப்போது தமிழ் மக்களுக்கு எமது நாட்டில் எவ்வித பிரச்சினைகளும் இல்லை, அந்தத் தமிழர்கள் இலங்கையில் சுதந்திரமாக வாழ்கின்றனர் - இவ்வாறு பல சுலோகங்களை ஒவ்வொரு நாள் உரைப் போராட்டத்திலும் இலங்கையின் பிரதிநிதிகள் கக்கினர்.

### நல்லிணக்க நேர அடி உதை

சமநேரத்தில் இலங்கையின் வட கரைப் பகுதியான செம்மலைக் கிழக்குப் புழுதித் தெருவில் இலங்கை சிங்கள இராணுவத்தினர் தமது வழமையான தொழிலில் ஈடுபட்டிருந்தனர். இரண்டு தமிழர்கள் மீது தொழில் நடத்தினர். பேருந்து நடத்துனர் மீதும் அதன் ஓட்டுனர் மீதும் நல்லிணக்க நேர காட்டுமிராண்டித்தனம் கட்டவிழ்க்கப்பட்டிருந்தது.

தடிகள் முறியும் வரை அடிகள் பலமாக விழுந்தன. தமிழர்கள் விட்டுக்கொடுக்கவில்லை. கடைசிவரை நின்று அடிவாங்கித் தம் கடன் நிறைவேற்றினர். பின்னர் பேருந்தை நகர்த்தாமல் தம் எதிர்ப்பைக் காட்டினர். துப்பாக்கிகளுக்கு இடையில் அந்த எதிர்ப்பும் துயரமாய் முடிந்து போனது.

### ஏன் அடித்தார்கள்?

கடந்த வாரத்திற்கு முதல் வாரம் கிட்டத்தட்ட நூறுவரையிலான படகுகளை நாயாற்றுக் கரையில் லொறிகளில் கொண்டு வந்து பறித்தனர். தீர விசாரித்ததில் அவைகள் நீர்கொழும்புப் பக்கமிருந்து வந்து செம்மலை கடற்பரப்பில் தொழிலில் ஈடுபடப் போகும் சிங்கள மீனவர்களுக்கான படகுகள் என்பது தெரிய வந்தது.

மக்கள் விடவில்லை. படகுகளுக்குத் தம் முணுமுணுப்பைக் காட்டினர். ஆயினும் அது கடற்தொழில் துறை சார்ந்த இலங்கை அமைச்சரிடத்திலும் அதன் பிரதி அமைச்சரிடத்திலும் செல்லுபடியாகவில்லை.

படகு அந்த மண்ணில் பறிக்கப்பட்டதிலிருந்து சில நாள்கள் கழித்து, முல்லைத்தீவு மீனவர்கள் சார்ந்த சங்கம் ஒன்றில் நடைபெற்ற கூட்டத்தில் இராணுவ உயரதிகாரி ஒருவர் 225 மீனவர்கள் முல்லைத்தீவு கடற்பகுதிகளில் தொழில் செய்வதற்கான அனுமதியைக் கேட்டார். அதனை தமிழ் மீனவர்கள் அடியோடு நிராகரித்து விட்டனர். ஆயினும் குறைந்தது 30 மீனவர்கள் அங்கு தொழில் செய்வதற்கான அனுமதியைப் பெற்ற பின்பே அவர் சென்றார்.

அடுத்த சில நாள்களில் முதற்கட்டமாக அனுமதி பெற்ற 30 மீனவக் குடும்பங்களும் நாயாறு நோக்கிப் படையெடுத்தன. படகுகள் லொறிகளில் ஏற்படுத்தப்பட்டன.

நாயாற்றுப் பாதை இப்போது தான் நீண்டதொரு இடைவெளியின் பின்னர் புழுதியால் நிரவப்படுகின்றது. அந்தத் தெருவில் நடந்து செல்வதே பெருஞ் சாதனை. பாதை நிலைமையைக் கவனித்து பயணிகளைத் தாலாட்டிச்சென்ற பேருந்தும், திருட்டுக் குடியேறிகளின் லொறியும் மோதுண்டன. குடியேறிகளுக்கு வந்தது கோபம். தம் படையினருக்கு உடனடியாக அறிவித்தனர். ஆவேசத்தோடு வந்த படையினர் தாம் பரந்தன் சந்தியில் கற்றுணர்ந்த பாடத்தைக் கட்டவிழ்த்தனர். துப்பாக்கித் தடிகள் முறிந்தன.

### அதற்குப் பிறகு

அதற்குப் பிறகென்ன பயணிகள் வெய்யிலில் கொதித்தனர். படையினர் குவிந்தனர். பேருந்து அசைய அடம்பிடித்தது. நேரம் செல்ல செல்ல துப்பாக்கிகளின் மொழி பேசும் என்ற பயம் நினைவுபடுத்தப்பட்டது. கிளர்ந்த மக்கள் அடங்கிப்போயினர்.

இந்த 30 சிங்கள மீனவர்களும் அவர்களின் குடும்பங்களும் இப்போது செம்மலைக் கிழக்குப் பகுதியில் நாயாற்றுக் கரையில் குடியேறியிருக்கின்றனர். தமிழர்கள் மீன்பிடித்து வந்த ஆற்றுத்துறைகளில் வந்தவர்கள் இறால் பிடிக்கின்றனர். கடற்றொழிலையும் ஆரம்பித்து விட்டனர் என்று மக்கள் கிசு கிசுக்கின்றனர். இப்போது தகவல் திரட்ட வெளியிலிருந்து யாரும் அங்கு செல்ல முடியாது. பிரச்சினையை எதிர்கொள்ளும் பிரதேச தமிழ்வாசிகள் அதை வெளியில் தெரியப்படுத்தவே அஞ்சுகின்றனர். அந்தச் சம்பவத்திற்குப் பிறகு பலரின் கைபேசிகள்

(23 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் முடிவுக்கு வராத தலைமைப் போர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்றக் குழுவின் உள்ளே ஜெனிவாவால் ஏற்பட்ட குளறுபடிகள் ஒருவாறு இப்போதுதான் அடங்கியிருக்கும் நிலையில், மற்றொரு பிரச் சினை பூதாகரமாகத் தலைதூக்க ஆரம்பித் திருக்கிறது. இது ஏற்கனவே உள்ளுக்குள் கனன்று கொண்டிருந்த விடயம்தான். ஆனால், இப்போது ஒரு சில உள்ளூராட்சி மன்றங்களில் வெடித்துக் கிளம்பி உள்ளது.

30 வருடப் போரின் பின்னர் வடக்கில் தேர்தல் ஒன்று நடந்ததால், ''அந்தக் கால'' அரசியல் வாதிகளை மக்கள் மறந்து போயிருந்தார்கள். அதனால் அனேகமான சபைகளில் இளைஞர் களே அதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெற் றார்கள். தங்களைத் தாங்களே அரசியல் மேதை களாக எண்ணிக் கொண்டிருந்த பலருக்கு இதைத் தாங்க முடியவில்லை.

அதிகூடிய விருப்பு வாக்குப் பெற்றவர் தலை வர் என்ற பொது இணக்கத்தின்படி பல சபை களுக்கு இளைஞர்கள் தலைவர்களாகிவிட்ட னர். ஆனால், பல 'பெரிசு'களுக்கு இன்ன மும் இதனை ஏற்க முடியவில்லை. எப்படியா வது, எந்தக் குளறுபடிகளைச் செய்தாவது தலை வர் ஆகிவிடத் துடிக்கின்றனர். எந்தவோர் அதிகாரமும் இல்லாத சபைகளின் தலை மையைப் பிடிப்பதற்குத்தான் இத்தனைபாடும்.

தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர் மானம் கொண்டு வருவது, சுழற்சி முறையில் தலைமைப் பதவியைத் தா என்று தலைவரை நெருக்குவது என்று தொடர்கின்றன இந்த முயற்சிகள்.

அதிகாரம் இல்லாத இந்தப் பதவிகளில் இளை ஞர்களை இருக்கவிட்டு, அவர்களுக்கு வழி காட்டி, சவால்களின்போது கூட இருந்து நெறிப் படுத்தி என்று அவர்களை வளர்த்தெடுப்பதை விட்டு, ''நானும் ஜெயிலுக்குப் போறேன்'' வடி வேலுவின் கதை கணக்காக, நானும் தலைவ ராய் இருந்தேன் என்று சொல்வதற்காக ஆலாய்ப் பறக்கின்றனர் இந்த ''மூத்த...'' அரசியல்வாதி கள்.

''இப்படிப்பட்ட உங்கள் பிரச்சினைகளை கட்சிக் குள் பேசித் தீர்த்துவிட்டு சபைக் கூட்டங்களுக்கு வாருங்கள்'' என்று எதிர்க்கட்சியினர் 'அட் வைஸ்' பண்ணுமளவுக்கு பிரச்சினை கேவல மாகப் போய்விட்டது. இதைப் பற்றியெல்லாம் கட்சித் தலைமைகளுக்கு அறிவித்தால் அவை ஒன்றையும் கண்டு கொள்வதேயில்லையாம் என்று இளசுகளும் பழசுகளும் புலம்பித் திரி கின்றன.

ஆரம்பத்தில் யாரைத் தலைவராகத் தெரிவு செய்வது என்ற நிலை ஏற்பட்ட போதும் இப்படித்தானாம் என்று குமுறித் திரிகின்றன மற்றும் சில தரப் புகள். சிறிய அதிகார சபை களுக்குள்ளேயே இத்தனை குத்துவெட்டு நடக்கிறதே என்று அங்கலாய்க்கும் ஆத ரவாளர்களுக்கும் எல்லா உறுப்பினர்களும் ஒன்றைச் சொல்கிறார்களாம். அது என்ன வென்றால், ''என்னைத் தலைவராக்கி இருந்தால் இந்தப் பிரச்சினை எல்லாம் வந்தி ராது'' என்பதுதா னாம்.



# தடுக்கி விழுந்தார் மஹிந்தர்

கடந்த சில வாரங்களில் மஹிந்தர் தனது கையில் 'பண்டேஜ்' கட்டுடன் திரிந்தார். பெப்ரவரி மாத இறுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தனைச் சந்தித்துப் பேசிய போதுதான் இந்தக் கட்டு புதிதாக முளைத்திருப்பது வெளியே தெரிய வந்தது. வழக்கம் போல் 'பாத்ரூ மில்' வழுக்கியிருப்பாராக்கும் என்று எல்லோரும் வாளாவி ருந்து விட்டனர். ஆனால், கால்பந்து விளையாடும் போது தடுக்கி விழுந்ததில்தான் அவ ரது கையில் அடிபட்டு கட்டுப் போட வேண்டியதாகிவிட்ட தாம்.

தியத்தலாவை இராணுவ முகா மில் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர் அதி காரிகளுக்கு நடத்தப்பட்ட பயிற்சியின் இடையே கால் பந்து விளையாடப் போய்த்தான் இந்த வினையே வந்துள்ளது.



# அமெரிக்காவுக்கே.....

அண்மைய நாள்களில் சாரத்தைக் கையில் தூக்கிக் கொண்டு சத்தம் போடுகிற நாட்டுப் பற்றா ளர்களுக்கு நாட்டில் பஞ்சம் இல்லை. வேட்டி பணி யனுடன் வருகின்ற அரசியல் சண்டியர், அமெரிக் காவுக்கு எதிரான தன்னுடைய செயற்பாட்டைக் காட்ட கடந்த வாரத்தில் ஒருநாள் பேர்போன விகாரை ஒன்றுக்கு அருகில் நின்றிருந்தார்.

அங்குபோய் நின்றதுடன் விட்டிருந்தால் பரவா யில்லை. ''அமெரிக்காவுக்கே கேம் கொடுக்கப் போகிறேன்'' என்று அங்கிருந்தவர்களிடம் கூறியி ருக்கிறார் அவர். ''இப்போது எனது பற்றரியைச் சார்ஜ் பண்ணி வருகிறேன். ஆனதும் அமெரிக்கா வுக்கே வேலை காட்டப் போகிறேன்'' என்று அவர் விட்ட சண்டித்தனத்தில், என்னாகுமோ ஏதாகுமோ என்று அங்கிருந்தவர்கள் பதறித்தான் போனார்கள்.

கடைசியில் ஜெனிவாவுக்குப் போய் வந்த பத்திரி கையாளர்களுக்கும் மனித உரிமைச் செயற்பாட் டாளர்களுக்கும் கால்களை முறிப்பேன் என்பதுடன் அவரது அமெரிக்க 'கேம்' முடிவுக்கு வந்துவிட்டது.

# சகுனி வேலை...

இரத்தினபுரி மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பிரமுகர் ஒருவர், பெரும் சிக்கலுக்குள் மாட்டிக் கொண்டார். அவரது உதவியாளர் ஒருவர் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப்பட்டமையால் வந்த சிக்கலே அது.

ஏற்கனவே இந்தப் பிரமுகரை எப்படிக் கட்சியிலிருந்து கழற்றி விடலாம் என்று 'ராஜபக்ஷ அன் கோ' சிந்தித்துக் கொண்டிருந்த நிலையில் இந்த விசயம் பழம் நழுவிப் பாலில் விழுந்த கதையாகிப் போய்விட்டதாம்.

இதனை அடுத்து இரத்தினபுரியிலுள்ள கட்சி ஆள்களுக்கு, ஜோன் அமரதுங்கவின் செல்வாக்கை, இதனைப் பயன்படுத்தி நாறடித்து விடுங்கள் என்று அன்புக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றனவாம். அப்படி நடந்தால் கட்சியிலிருந்து அவரைத் தூக்கி எறிவது இலகுவானது என்று கருதுகிறார்களாம்.

# கூகுள் சண்டியரின் ஆலோசனை

ஜெனிவா தீர்மானத்தின் பின்னர் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அரசுக்குப் பெரும் தலைவலியாக மாறிவிட்டது. இதிலிருந்து விடு பட, 'கூகுள்' எதிர்ப்புப் புகழ் சண்டியர், மஹிந்த ருக்கு ஒரு ஆலோசனை கூறியிருக்கிறாராம்.

நல்லிணக்க ஆணைக்குழு மீது எல்லாப் பழியையும் போட்டு அவர்கள் வெளி நாட்டுச் சதிக்குள் வீழ்ந்து இப்படிப் பட்ட ஓர் அறிக்கையை வெளி யிட்டு விட்டார்கள் என்று நாட்டு மக் களிடம்கூறி, அதனால்தான் இந்தச் சிக்கல்கள் எல்லாம் வந்தன என்று சமா ளித்துவிடலாம் என்றுதான் அவர் கூறி யிருக்கிறார்.

ஜனாதிபதி அதனை ஏற்றுக் கொண் டாரா இல்லையா என்பது தெரிய வில்லை. ஆனால், 'கூகுள்' சண்டி யர் ஏதாவது கூட்ட மேடைகளில் இதுபற்றி முழங்கக்கூடும்.



# சந்திரிகாவா கொக்கா

ராஜபக்ஷக்களுக்கு எதிராக சர்வதேசம் மெல்லத் திரண்டு வருகை யில் உள்ளூரில் உள்ள பகைகளைச் சமாளித்து தம்பக்கத்தில் வைத் துக் கொள்வதற்கு நாட்டை ஆளும் 'ராஜபக்ஷ அன் கோ' கடும் பாடு படுகிறது. இதன் ஓர் அங்கமாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவைச் சமாதானப்படுத்தி, தங்கள் பக்கம் இழுத்துக் கொள்வதற்கும் முயற்சி கள் நடந்துள்ளன.

சில வாரங்களுக்கு முன்னர், அனுர பண்டாரநாயக்கா ஞாபகார்த்த அமைப்பால் கம்பஹா மாவட்டத்தில் நிறுவப்பட்ட வைத்தியசாலை யைத் திறப்பதற்கு தானே முன்வந்து சென்றிருக்கிறார் மஹிந்தர். சந்திரிகாவினதும் பண்டாரநாயக்க குடும்பத்தினதும் கோபத் தைத் தணிப்பதற்கான நாடகமே இது என்று அவ ருக்கு நெருக்கமான வட்டாரங்கள் குசுகுசுக் கின்றன.

அது மட்டுமல்லாமல் மஹிந்தரின் மூத்த புத்திரர் நாமல் ராஜபக்ஷவும் இந்த முயற்சியில் களம் இறக்கப்பட்டார். அனுர பண்டாரநாயக்கவின் நினைவு தினம் அன்று நாமல், கங்காராம விகாரையில் போதி பூசையையும் பிக்குகளுக்குத் தானம் வழங்கும் நிகழ்வையும் ஏற்பாடு செய்தார்.

சந்திரிகாவைச் சாந்தப்படுத்துவதற் காக அவருக்கு அழைப்பு விடுத்த நாமல், நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச் சொல்லிக் கேட்டிருக்கிறார். சந்தி ரிகாவுக்கா இவர்களின் நடிப்புப் புரியாமல் இருக்கும்....., ''பண்டாரநாயக்க குடும்பத்தின் மீது என்ன திடீர் கரிசனை'' என்று நக்கலாகக் கேட்டிருக்கிறார். அனுராவுக்காகத்தான் செய்கிறோம் என்ற வகையில் நாமல் பதிலளித்தாலும் தன்னால் வர இயலாது என்று கூறிவிட்டார் சந்திரிகா.

''அப்படியானால் யசோதராவையாவது அனுப்புங்க ளேன்'' என்று நாமல் கேட்க, கோபத்தின் உச்சிக்கே சென்றுவிட்ட சந்திரிகா, ''இந்த ஊத்தை அரசியலுக்குள் எல்லாம் என் பிள்ளைகள் வரமட்டார்கள்; நான் ஒருபோதும் விடமாட்டேன்'' என்று காட்டுக் கத்தல் கத்திவிட்டு அழைப்பைத் துண்டித்து விட் டார் சந்திரிகா. பின்னர் தனக்கு நெருக்கமானவர்களிடம் ''என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் இவர்கள்?'' என்று சீறினாராம்.



# அவியாத பருப்பு



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரது யாழ்ப்பாணப் பயணத்தை வெற்றிபெற விடாமல் யாழ்ப் பாணத்திலுள்ள ஊடகங்கள் குழப்பியடித்து விட்டன என்று கட்சியின் உயர் மட்டத் தலைவர்கள் கவலைப் பட்டார்களாம். இந்த நிலைமையை மாற்றுவதற்கும் ரணில் தமிழர்களுக்கு நல்லதையே செய்வார் என்ற மனப் பதிவைத் தோற்றுவிப்பதற்கும் வேண்டிய அலுவல்களைப் பார்க்குமாறு கூடவே உள்ள ஒரு ஊடகக்காரருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டிருந்ததாம். ரணிலின் பயணம் யாழ்ப்பாணத்தில் பிசுபிசுத்துப் போய்விட்டது என்று செய்தி மஹிந்தருக்கும் அரசுக்கும் மேலும் தெம்பையும் தைரியத் தையும் கொடுத்துவிடும் என்ற அச்சமே அதற்குக் காரணமாம்.

இதனை அடுத்து ஊடகக்காரரும் குறிப்பிட்ட ஊடகங்களுடன் [illegible] அவை நசியவில்லை. தமிழ் மக்களுக்கு என்ன தீர்வை வைக்கப் போகிறீர்கள் என்பதை வெளிப் படையாகச் சொல்லுங்கள் அதை வேண்டுமானால் போடுகிறோம் என்று கைவிரித்து விட்டனவாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உலகில் இரண்டு நாய்களுக்காக ஒரு மில்லியன் (130 மில்லியன் ரூபாய்) அமெரிக்க டொலரில் நகரும் வீடுகளைக் கட்டிக் கொண்டவர் இப்போது சிக்கலில் மாட்டிக் கொண்டார். மிகப் பெரிய கிறிஸ்தவ தொலைக் காட்சியின் முன்னாள் ஊழியரான ஜோன் குரூச், ஊதாரித்தனமாகத் தொண்டு அமைப்பின் பணத்தைச் செலவிட்டார் என்பதே குற்றச்சாட்டு. அவரது சகாவான போலும் சேர்ந்து கொண்டே பணத்தை இப்படித் தண்ணீராய்ச் செலவிட்டுள்ளார்கள். கிட்டத்தட்ட 50 மில்லியன் டொலர்களை இவர்கள் இருவரும் வீணடித்திருக்கிறார்கள். இரண்டு ஜெட் விமானங்கள், 13 விடுதிகள் என்பவற்றை வாங்கியமையும் அதற்குள் அடக்கம். இந்தக் குற்றச்சாட்டை இப்போது முன்வைத் திருப்பவர் வேறுயாருமல்லர், ஜோன் குரூச்சின் பேர்த்திதான். நிறுவனத்தின் நிதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட பின்னர் தனது தாத்தா பாட்டியின் ஊதாரித்தனத்தை எதிர்த்து அவர் நீதிமன்றப் படியேறி இருக்கிறார். அவரை அந்தளவுக்குக் கோபப்படுத்தியது இந்த நாய் விவகாரம்தானாம்.

அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில் பலசரக்குக் கடைகளில் வார இதழ் ஒன்றைக் காட்சிப் படுத்த அதிகாரிகள் தடை விதித்துள்ளனர். கர்ப்பமாக இருக்கும் நடிகை ஜெசிக்கா சிம்ஸனின் ஆடை எதுவுமற்ற படம் அட்டையில் இருப்பது தான் அதற்கான காரணம். படத்தைப்பார்த்து இளசுகள் கெட்டுப் போகும் என்று மாநில அரசு காரணம் கூறி யிருக்கிறது.




கோபப்பட்டால் அல்லது எதிர்ப்பைக் காட்ட வேண்டுமானால் புகழ்பெற்ற நபர்களை நோக்கிச் செருப்பைத் தூக்கி எறியும் பழக்கம் வந்து நீண்ட நாள்களாகி விட்டது. அதனால் இப்போதெல்லாம் பறந்துவரக்கூடிய செருப்பைப் பாய்ந்து பிடிக்கும் பயிற்சிகளுடன் பிரபலங்களின் பாதுகாவலர்கள் களமிறங்கி விட்டார்கள். எதிர்ப்பாளிகளும் சளைத் தவர்களா என்ன? அவர்களும் புதிய யுத்திக்கு மாறி விட்டார்கள். அழகாக மேனி மினுக்கி வரும் பிர பலங்களை நெருங்கிச் சென்று எதையாவது அவர் கள் மீது வீசி, அசிங்கப்படுத்தி விடுகிறார்கள். அத் தகைய தாக்குதலுக்கு அண்மையில் இலக்காகி இருக்கிறார் கிம் கர்டஷன் என்ற பிரபல ஹொலி வூட் நடிகை. புதிய வாசனைத் திரவியத்தை அறிமுகப்படுத்தி வைக்கும் விழாவில் கலந்துகொள்ள கிம் வருகை தந்தபோது சம்பவம் இடம்பெற்றது. அருகில் நின்ற பெண் ஒருவர் கோதுமை மா பையை உடைத்து கிம் மீது அதனைக் கொட்டினார். கிம், மிருகத் தோலினால் ஆன ஆடைகளை விரும்பி அணிபவர் என்பதால் விலங்குரிமை அமைப்பு ஏதாவது இந்தத் தாக்குதலை நடத்தி இருக்கலாம் என்று சந்தேகம் உள்ளது. ஆனால் அந்த அமைப்புகள் அதனை மறுத்துள்ளன. மா எறிந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.





'கொமாண்டோ'வில் ஆரம்பித்து 'டேமினேட்டர்-3' வரைக்கும் கலக்கிய ஹொலிவூட் கனவு நாயகன், அமெரிக்காவின் முன்னாள் ஆணழகன் ஆர்னோல்ட் சுவாஸ் நேக்கர், இப்போது ஒரு பெண்ணின் கடைக்கண் பார்வைக் காகக் காத்திருக்கிறார். 56 வயதான அந்தப் பெண் வேறு யாருமல்லர் அவரது மனைவியேதான். வீட்டுப் பணிப் பெண்ணின் குழந்தைக்குத் தானே அப்பா என்று சுவாஸ் நேக்கர் ஒத்துக்கொண்டதை அடுத்து அவரது மனைவி யான மரியா விலகிப் போய்விட்டார். விவாகரத்துக்கும் விண்ணப்பித்து விட்டார். ஆனாலும் உடனடியாக இல் லாமல் 2016இல் அந்த வழக்கு எடுக்கப்படும்படி தவ ணையிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும் சுவாஸ்நேக் கர் விடுவதாக இல்லை. தான் பேசும் இடங்களில் எல் லாம் மனைவி புகழ்பாடிக் கொண்டே இருக்கிறார். திரும்பச் சேர்வதுதான் அவரது நோக்கம் என்கிறார்கள். பார்க்கலாம்.

'உகண்டா, சூடான், தென் சூடான், கொங்கோ நாடுகளைக் கடந்த 20 வருடங்களாகக் கலக்கி, திகிலடைய வைத்துவிட்டு இன்று, தன்னைக் காத்துக்கொள்ள கிலி பிடித்து ஓடிக்கொண்டிருக்கும் ஒரு மனிதன் இந்த ஜோசப் கோனி. தன்னைக் கடவுளின் அவ தாரம் என்று கிராமவாசிகளை நம்ப வைத்த கோனி, செய்த கொடுமைகள் கொஞ்ச நஞ் சமல்ல. சிறுவர்களைப் பிடித்துக் கொண்டு போய் தனது படையில் சேர்த்து, சண்டை களுக்கு அனுப்பி வீணே சாகக் கொடுத்தான். இப்போது கோனியை வேட்டையாடுவ தற்கு 5,000 படையினரைக் களமிறக்கி இருக் கிறது ஆபிரிக்க ஒன்றியம். பழிவாங்கும் வெறி யோடு அந்தப் படைக்குத் தனது 1,500 பேர் தயார் என்று அறிவித்திருக்கிறது உகண்டா.



இங்கிலாந்து அணியின் கால் பந்தாட்டப் பிரபலம் டேவிட் பெக் காமின் மனைவி மரியா. அவரும் பிரபலம்தான். மொடல் அழகி. நான்கு பிள்ளைகளுக்குத் தாய் ஆன பின்னாலும் 'சிலிம்' உடலுக் குப் போர் போனவர். அதற்காக வாரத்தில் 6 நாள்கள் ஓடுவதுதான் காரணம் என்று சொல்கிறார். பெக் காமும் பயிற்சி, போட்டி என்று நாடு நாடாகச் சுற்றுவதால் இரு வரும் இணைந்து சுற்றுவதற்கு நேரம் கிடைப்பதில்லையாம். ஆனால் அதற்குக் காரணம் பெக் காம் இல்லை. அவருடன் சேர்ந்து ஊர் சுற்றத் தன்னால்தான் நேரம் ஒதுக்க முடியவில்லை என்று மூக் கைச் சிந்தியிருக்கிறார் மரியா. கடைசியாக பெக்காமுடன் சேர்ந்து சுற்றி 3 ஆண்டுகள் ஆகிவிட்ட தாம். 3 ஆண் பிள்ளைகள் மற்றும் குட்டிப் பெண்ணின் பணிகள் பார்க்கவும் தனது மொடலிங் குக்கு நேரம் ஒதுக்கவுமே சரியாக இருக்கிறதாம். அதையும்விட, வீட்டில் சிறுவர்கள் இருப்பதால் சிறுவர் திரைப்படம் தவிர வேறு படங்கள் பார்த்தும் ஒரு வருடம் ஆகிவிட்டது என்று புலம்பியிருக் கிறார் மரியா. ஊரைக் கூட்டி வைத் துச் சினிமா பார்க்கும் தமிழ் அப்பா, அம்மா அவரது கருத்தைக் கவனித் தால் கொஞ்சம் நல்லது.



சிரியாவின் ''டயானா'' என்று வர்ணிக்கப்பட்டவர் அஸ்மா அல்-அசாத். உலக நாடுகளின் போர்க் குற்றங்களுக்கு உள்ளாகியுள்ள சிரிய ஜனாதிபதி அல்-அசாத்தின் மனைவி. பிரிட் டனைச் சேர்ந்த அஸ்மா பெரும் பணக்காரி. சிரிய அதிபரை மணந்துகொண்டபின் 'பாலை வன ரோஜா' என சிரிய மக்களால் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடப்பட்டார். இளவரசி டயனாவாகவே சிரிய மக்கள் இவரைப் பார்த்தார்கள்; கொண்டாடினார்கள். வோஜ் என்ற இயற் பெயரைக் கொண்ட அஸ்மா சிரிய அதிபரை மணம் முடித்தபோது முஸ்லிம் பெயரை மாற்றிக் கொண்டார். சிரியாவில் மக்கள் கிளர்ச்சி வெடித்ததைத் தொடர்ந்து, அப்பாவிகள் மீதும் ஆயுதம் தரிக்காதவர்கள் மீதும் குண்டுகளை வீசிக் கொல்லு மாறு இவரது கணவர் அசாத் உத்தரவிட்டார் என்று உலக நாடுகள் போர்க் குற்றங்களைச் சுமத்துகின்றன. கணவரின் இந்தக் கொடூரத்தை பிரிட்டனில் பிறந்த அஸ்மா கண்டிக்காமல் இருக்கிறார் என்று மேற்குலக ஊடகங்கள்குற்றஞ்சாட்டின. இதனை மறுத்து, தனது கணவரின் நிலைப்பாட்டை நியாயப்படுத்தி தனது இணையத்தில் எழுதினார் அஸ்மா. ஆனால் என்ன நினைத்தாரோ உடனேயே அதைத் தூக்கிவிட்டார். அதன் பின்னர் அவரைப் பற்றிய செய்திகள் மிகக் குறைவாகத்தான் வந்தன. இப்போது அவர் எங்கிருக்கிறார் என்பதே தெரியவில்லை என்கின்றன மேற்கு ஊடகங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ தாதியர் தெரிவு சீர்படுமா?

■ மங்காத்தா

மக்களுக்கெல்லாம் உணவளிக்கும் விவசாயிகள் எவ்வாறு முக்கிய இடம் வகிக்கிறார்களோ அதே போல் இந்த மக்களுக்கு மருத்துவ சுகாதார சேவையை வழங்குவதில் ஒவ்வொரு நாடுகளிலும் சுகாதார அமைச்சு மிகப் பிரதானமான இடத்தை வகிக்கிறது.

இந்த அமைச்சு மருத்துவத்துறை, தாதியத்தறை, சுகாதாரத்தறை எனப் பல பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இதுவரை காலமும் தப்பிப் பிழைத்து வந்த எஞ்சியிருந்த இத்துறைகள் தற்போது அரசியல் மயப்படுத்தப்பட்டு சீர்கெட்டுப் போகத் தொடங்கியுள்ளன.

தனித்துவமான இந்தத் துறை எந்தக் காலத்திலும் சீர்கெட்டுப் போக இடமளிக்கக் கூடாது. நாட்டின் அரசியலில் நிலைமை மாறலாம், ஆட்சியாளர்கள் மாறலாம். எது எப்படி நடந்தாலும் எதுவித பாதிப்புமின்றி இயங்க வேண்டியது சுகாதாரத்துறை மட்டுமே.

இந்தத் துறையைச் சார்ந்தவர்களுக்கு உரிய வசதி வாய்ப்புக்கள் செய்து கொடுக்கப்பட வேண்டும். தேவை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படல் வேண்டும். சரியான முறையில் அது நியமனம் செய்யப்படல் வேண்டும்.

ஆனால், வடக்கு கிழக்கில் அது சீர்கெட்டுப் போகின்றது என்று பலதரப்பட்டோரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சரியான முறையில் நடந்து கொள்ளவில்லை என்பது ஒரு குற்றச்சாட்டாக இருக்கும் அதே வேளை சுகாதார அமைச்சிலும், இந்த அமைச்சுடன் சம்பந்தப்படாது வடக்கு, கிழக்கிலுள்ள அமைச்சர்கள் சிலரினதும் அரசியல் காய் நகர்த்தலாக இது உருமாற்றம் அடைந்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

வைத்தியர்கள், தாதியர்களுக்கு ஏனைய இடங்களை விட வடக்கில் தேவை அதிகமாகக் காணப்படுகிறது. யாழ்.தாதியக் கல்லூரியின் ஊடாக வருடாந்தம் இரண்டு அணியினர் வெளியேறுகின்ற போதும் யாழ். போதான வைத்தியசாலையில் மட்டும் இன்னும் எழுநூறுக்கும் மேற்பட்ட தாதியர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகிறது.



இங்கு முக்கிய விடயம் என்னவெனின் தாதியர்களாகத் தெரிவு செய்யப்படுவதில் தற்பொழுது உள்ள அரசியல் விளையாட்டாகும். தமது அரசியல் பிழைப்பு நடத்த இந்தத் துறையை விளையாட்டுப் பொருளாகக் கையிலெடுத்துள்ளனர் அமைச்சர்கள்.

தாதியர் பற்றாக்குறை நிலவும் இந்த நிலையில் தாதியராக இணைந்து கொண்ட மாணவர்களில் 52 பேர் எதுவித அறிவிப்புமின்றிக் கல்லூரிப் பக்கமே போயிருக்கவில்லை. அவர்களுக்கு என்ன நடந்தது, தாதிய நியமனம் கிடைத்தும் எதற்காக கல்லூரிக்குச் செல்லவில்லை என்பது புரியாத புதிராக உள்ளது.

வடக்கில் உள்ள தாதிய வெற்றிடங்களை நிரப்ப வட பகுதியில் தாதியத்துக்குத் தகுதியுள்ள பல மாணவர்கள் விண்ணப்பங்களையும் அனுப்பி விட்டு நியமனத்துக்காக எதிர்பார்த்திருக்கின்றனர். இந்த நிலையால் கிழக்கு மாகாணத்திலிருந்தே நூற்றுக்கும் மேற்பட்டோர் யாழ். தாதியக் கல்லூரிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதும் இங்கு கருத்தில் கொள்ளப்படவேண்டிய ஒரு விடயமாகவே உள்ளது.

அதற்குக் கிழக்கிலுள்ள அமைச்சர்களின் தலையீடே காரணம் என்ற விமர்சனங்களும் எழாமல் இல்லை.

வழமையாகவே வடக்கில் தெரிவாகும் மாணவர்களுக்கு யாழ். தாதியர் கல்லூரியூடாக நியமனக் கடிதங்கள் பெறுவதற்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப் படும். இந்த முறையும் சுகாதார அமைச்சிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டன. அதனால் அது உரியவர்களுக்குப் போய்ச் சேர்ந்ததா, அவர்களின் பதில் என்ன என்பது தொடர்பாக எதுவும் அமைச்சுக்குக் கூட இன்று வரை தெரியவரவில்லை.

இந்த நிலைமையாலும் 52 பேரின் வெற்றிடங்கள் வீண் செய்யப்பட்டுள்ளன. பயிற்சி வகுப்புகள் தொடங்கி குறித்த காலத்தைக் கடந்து விட்டதால் அந்த வெற்றிடத்துக்கு ஏனையவர்களுக்கும் நியமனம் செய்ய முடியாமல் போய்விட்டது. இந்த விடயத்தில் உரிய நேரத்தில் சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கத் தவறியது எதற்காக என்ற கேள்விகளும் எழாமல் இல்லை.

தாதிய நியமனம் என்பது அரச உத்தியோகமாகும். அவ்வாறு அரச உத்தியோகம் பெற்ற ஒருவருக்கு மீண்டும் இன்னொரு அரச உத்தியோகம் பெற்றுக் கொடுத்தாரம் வடக்கிலுள்ள மற்றொரு அமைச்சர். குறித்த நபர் அமைச்சர் ஐயாவுக்குச் சொந்தக்காரராம் என்றால் பாருங்களேன்.

வடக்கில் வேலையில்லாமலும் பலர் அலைந்து திரிய அமைச்சரின் இவ்வாறான செயற்பாடுகளில், நியமனத்தை எதிர்பார்த்த மாணவர்கள் பலர் உள ரீதியாகப் பாதிப் படைய வேண்டிய நிலைக்கும் தள்ளப் பட்டுள்ளனர்.

எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம் பெறாதிருக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறிப்பாக சுகாதார அமைச்சு கவனம் செலுத்த வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு வைத்தியசாலைகளில் குறிப்பாக யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்தியர்கள் மற்றும் வைத்திய நிபுணர்களுக்கும் பற்றாக்குறை காணப்படுகிறது. இந்த நிலையில் தென் பகுதியிலிருந்து பணிக்கென போதனா வைத்தியசாலைக்கு நான்கு வைத்திய நிபுணர்கள் வந்திருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆனால் அவர்களுக்கான விடுதி வசதி பெற்றுக் கொடுப்பதில் பணிப்பாளர் அசிரத்தை காட்டியதாகவும் பின்னர் ஏனைய வைத்தியர்கள் மூலமாக அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

மக்களுடன் தொடர்புபட்ட இந்தத் துறை எதிர்காலத்திலும் இவ்வாறு சீர்கெடக்கூடாது என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பு. ✱

# அமைச்சர் சொன்னால் ஓடும்...

■ தீவான்

வீதி அபிவிருத்தி அதிகார சபை போன்று நாங்களும் நடந்து கொண்டால் என்ன என்று நினைத்துவிட்டனர்போலும் போக்குவரத்துச் சபையினரும்.

உள்ளூர் போக்குவரத்துச் சேவையில் அதுவும் தனது குளறுபடிகளை இப்போது ஆரம்பித்து விட்டது போலும் தெரிகின்றது.

நெடுந்தீவுக்கான உள்ளூர் போக்குவரத்துச் சேவையில் உள்ள பஸ் இப்போது சேவையில் ஈடுபட புதிய நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. கிடைக்கும் வருமானத்தில் எரிபொருளை வாங்கி சேவையை நடத்த வேண்டும் என்பதே அந்த நிபந்தனையாக உள்ளது. இது நெடுந்தீவு மக்களுக்கு எழுதப்படாத விதியாகி விட்டது.

நெடுந்தீவைப் பொறுத்தவரை அங்குள்ள மக்கள் பெருமளவில் வருமானத்தைக் கொண்டவர்கள் அல்லர். சில யார் தூரத்துக்கும் பஸ்ஸில் பயணிக்க வேண்டிய நிலைமையில்தான் அவர்கள் உள்ளனர். தினமும் பெரும் எண்ணிக்கையான மக்கள் பஸ்ஸையே நம்பியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

போக்குவரத்துச் சபை அதிகாரிகளின் கணிப்பின்படி அங்குள்ள அத்தனை மக்களும் பஸ்ஸில் தினமும் பயணித்தால் கூட அதில் இருந்து பெறப்படும் வருமானத்தில் பஸ்ஸுக்கான எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியுமா என்பது கேள்விக் குறியான ஒரு விடயமாகத்தான் உள்ளது.

போதிய போக்குவரத்து வசதிகள் இல்லாமையால் மேற்கே பனங்காணியில் இருந்தும் கிழக்கே தோட்டப் பகுதிகளில் இருந்தும், வைத்தியசாலைக்கும் துறைமுகப் பகுதிகளுக்கும் வரும் மக்கள் மிகவும் நீண்ட தூரத்தைக் கடக்க மாட்டு வண்டில்களையே நம்பியிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

ஆனால் மாட்டு வண்டி மூலம் துறைமுகத்தை உரிய நேரத்துக்குச் சென்றடைய முடியுமா என்பது வேதனைதரும் ஒரு விடயம்தான்.

ஒரு சமயம் கிழக்குப் பகுதியில் இருந்து படகில் செல்ல வேண்டிய பயணி ஒருவர் மாட்டு வண்டி ஒன்றைக் கூலிக்கு அமர்த்தி துறைமுகத்துக்கு வந்தார். அப்போது படகு புறப்பட்டுச் சென்று நீண்ட நேரமாகிவிட்டதாகக் கூறப்பட்டது. குறிப்பிட்ட நபர் தனது பயணத்தைத் தொடர முடியாத நிலையில் திரும்பிச் சென்றார். மறுநாள் அதே நபர் வேறு ஒருவரது வண்டிலைப் பிடித்துக் கொண்டு துறைமுகம் சென்றார். அப்போதும் இதே நிலைமைதான் காணப்பட்டது.

இவ்வாறு காலம் காலமாக இருந்து வந்த நிலையை மாற்றியமைத்து மக்கள் ஒரு சீரான பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டு சேவையும் இடம்பெற்றது.

தற்போது வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது.

எதையுமே ஆரம்பித்துச் சீராக நடத்துவதும், பின்னர் அது குறித்த சிந்தனைகளே இல்லாமல் போவதும், நெடுந்தீவைப் பொறுத்தவரை அதிகாரிகளின் கோட்பாடாகிவிட்டது என்று மக்கள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப் படுகின்றது. நெடுந்தீவு படகுச் சேவைபற்றிப் பார்த்தாலும் அதுவும் இப்படித்தான் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

வந்த புதிதில் ஒரு சில நாள்கள் ஒழுங்காக ஓடிய வடதாரகை இன்று என்ன நிலையில் இருக்கிறது. குமுதினியும் இந்த நிலையில்தான் தனது வாழ்க்கையை ஓட்டுகிறது. ஓட்டங்களும் பின்னர், அடிக்கடி ஸ்தம்பிதமடைந்து கவனிப்பின்றிக் கிடப்பதும் அனைவரும் அறிந்ததே.

இது போன்றுதான் பஸ் சேவையும் தற்போது ஆட்டம் காணத் தொடங்கியுள்ளது. பயணிகளிடம் இருந்து கிடைக்கும் வருவாயில் இருந்து எரிபொருளைப் பெறுங்கள் என்றால் இது எந்த விதத்திலும் சாத்தியப்படக் கூடிய விடயம் இல்லை.

இப்படியே கூறி ஒட்டுமொத்தமாகச் சேவையை நிறுத்துவது தான் இவர்களின் நோக்கமா என்று எண்ணத் தோன்றுகின்றது என மக்கள் குறிப்பிடுகின்றனர்.

அரச சேவைகளான தரை, கடல் போக்குவரத்து இரண்டுமே நெடுந்தீவு மக்களைத் துன்பப் படுத்து[illegible]

அமைச்சர் 'போன்' எடுத்தால் ஓடுவதும் அடுத்து வரும் நாள்களில் ஒதுங்கிக் கொள்வதுமாகவே இந்தச் சேவைகள் உள்ளன.

சில காலங்களுக்கு முன் படகு துறைமுகத்தைச் சேரும் நேரத்தில் மேற்கு, மத்தி, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த மக்களை உரிய இடங்களில் சேர்க்கக் கூடியதான நல்ல ஒரு போக்குவரத்துச் சேவையை மாட்டுவண்டிக் காரர்கள் வழங்கி வந்தனர்.

பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டதும் அவை மெல்ல மெல்ல அருகி இப்போது முற்றிலுமே மறைந்துவிட்டது. 'ஊதிக் கெடுத்தான் ஆண்டி' என்றவாறு பஸ்ஸை ஓடிக் கெடுத்து விட்டார்கள். தற்போது இரண்டும் கெட்ட நிலையில்தான் நெடுந்தீவு மக்கள் அவலத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இன்றைய நிலையில் பஸ் சேவை அத்தியாவசியமானதும், தவிர்க்க முடியாததுமாகிவிட்டது. இந்த நிலையில் இவ்வாறான செயற்பாடுகளால் அவர்கள் பெரிதும் நொந்துபோயுள்ளனர்.

நெடுந்தீவைப் பொறுத்தவரை அமைச்சர்கள் சொல்வதொன்று அதிகாரிகள் செய்வதொன்றாகவே உள்ளது. மின் விநியோகம் போன்ற முக்கிய விடயங்களில் எல்லாம் இந்த நிலையே கையாளப்படுகின்றது. இரண்டாவது பஸ் என்றாகிவிட்டது.

நல்ல வேளை பஸ் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோரின் சம்பளத்தையும் டிக்கெட் காசில் இருந்து எடுத்துக் கொள்ளுங்கள் என தமக்குக் கூறவில்லை என்ற திருப்தியில் இருக்கிறார்கள் ஊழியர்கள். ✱

> "போதிய போக்குவரத்து வசதிகள் இல்லாமையால் மேற்கே பனங்காணியில் இருந்தும் கிழக்கே தோட்டப் பகுதிகளில் இருந்தும், வைத்தியசாலைக்கும் துறைமுகப் பகுதிகளுக்கும் வரும் மக்கள் மிகவும் நீண்ட தூரத்தைக் கடக்க மாட்டு வண்டில்களையே நம்பியிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரமேஷின் படுகொலை

# தெளிவான போர்க் குற்ற ஆதாரம்



மிகப் பெரிய படுகொலைகளுக்குப் பின்னால் மறைந்திருந்த திட்டமிட்ட சதியை வெளிச்சத்துக்கு கொண்டு வருவதற்கு மனிதர் ஒருவரின் கொலைச் சம்பவம் முக்கிய புதிய ஆதாரமாக, ஆவணமாக உள்ளது.

இலங்கையில் நடந்த இந்தப் பிரச்சினை இன்று ஐ.நாவிலும் விவாதிக்கப்படுகிறது. கிட்டத்தட்ட ஓர் ஆண்டின் பின்னர் தற்போது ஆச்சரியப்படத்தக்க காணொலியை இணையத்தளத்தில் பார்வையிடக் கூடியதாக உள்ளது.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் இந்தப் புதிய சாட்சியங்களைக் கொண்ட காணொலி வெளிவந்துள்ளது.

இந்தக் காணொலியில் இலங்கை இராணுவப் படைகளால் மனிதர் ஒருவர் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கிறார் என்று காண்பிக்கப்படுகிறது. அதன் பின்னர் அவர் படுகொலை செய்யப்பட்டு கிடக்கும் காட்சிகளும் காண்பிக்கப்படுகின்றன.

ஆகவே இலங்கை அரச படைகளால் சிறைப்பிடிக்கப்பட்டு அவர்களது காவலில் வைக்கப்படும் இந்த மனிதன் கொல்லப்பட்டு உடல் அகற்றப்படும் வரை உண்மையில் என்ன நடந்ததென்பதை தொடர்புபடுத்திப் பார்ப்பதற்கு ஏற்ற வகையில் இப்புதிய காணொலிக் காட்சிகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

தனிப்பட்ட ஒருவரின் கொலையைக் காண்பிக்கும் இந்தக் காணொலியில் குறித்த நபர் கொலை செய்யப்பட்டபோதும் அதற்கு முன்னரும் எடுக்கப்பட்ட காட்சிகள் அடங்கியுள்ளன. இலங்கைப் படை அதிகாரிகளிடம் சரணடைந்த போர்க் கைதிகள், பொதுமக்கள், ஆயுத அமைப்பின் உறுப்பினர்கள் ஆகியோர் பெருமளவில் திட்டமிடப்பட்ட ரீதியில் கொல்லப்பட்டுள்ளனர் என்பதை ஆதாரபூர்வமாக நிரூபிப்பதற்கு இந்த ஒரு கொலைக் காட்சிகளே போதுமான ஆதாரங்களாக உள்ளன.


இவ்வாறான படுகொலைகளை இலங்கை அரசு தான் ஒரு போதும் மேற்கொள்ளவில்லை எனக் கூறிவருகின்றது. பின்னர் எப்படி இத்தகைய காணொலிக் காட்சிகள் வெளிவருகின்றன என வினவுகின்றபோது, அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறவே இல்லை என்று அல்லது தமிழ்ப் புலிகளேஇவ்வாறானகொலைகளை மேற்கொண்டனர் என்று இலங்கை அரசு தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்துள்ளது.

படுகொலைகளை இலங்கை அரசு மேற்கொண்டிருந்தால் அதற்குரிய ஆதாரங்களை முன்வைக்குமாறும் இலங்கை அரசு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது.

இந்த நிலையிலேயே, இறுதி நாள்களில் போர் வலயங்களில் உண்மையில் என்ன நடந்ததென்பதை சாட்சிப்படுத்தும் ஆவணக் காட்சிகளை, ஒளிப்படங்களை இலங்கைப் படையினர் சிலர் வழங்க முன்வந்தனர். அத்துடன் சிலர் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக வாக்குமூலங்களையும் வழங்கியுள்ளனர்.

இலங்கையில் புரியப்பட்ட பல மனித உரிமை மீறல்களை, களமுனைகளில் நடந்த சம்பவங்களை நேரில் பார்த்த பல படையினர் தமது செல்பேசிகள், ஒளிப்படக் கருவிகள் போன்றவற்றின் மூலம் பதிவு செய்தனர்.









அவர்கள் பதிவு செய்துள்ள இவ்வாறான படுகொலைச் சம்பவங்களின் காட்சிகளில், சில இளைய படையினர் சிரித்தபடி இருப்பதையும் அவர்கள் தாம் செய்யவுள்ளவைகள் தொடர்பாக வேடிக்கையாகப் பேசுவதையும் காணலாம். எனவே இத்தகைய சம்பவங்கள் இடம்பெறவே இல்லை என்று மறைக்க முடியாது. இவற்றை இரகசியமாகப் பேண முடியாது. அதாவது இந்த இராணுவத்தினர் தமது கட்டளையைத் தளபதிகளால் தமக்கு வழங்கப்பட்ட கட்டளைகளையே நிறைவேற்றினர் என்பதால் அவற்றைப் பதிவு செய்வது எதிர்காலத்தில் ஆபத்தாக முடியும் என்று அவர்கள் ஒரு போதும் கருதியிருக்கவில்லை.

இலங்கையில் நீண்ட காலம் தொடர்ந்த உள்நாட்டுப் போர் இறுதியை நெருங்கியபோது, 330,000 தமிழ் மக்கள் மற்றும் தமிழ்ப் புலிகளை மிக ஒடுங்கிய சதுப்பு நிலப்பகுதிக்குள் இலங்கைப் படையினர் சுற்றிவளைத்தனர்.

புலிகள் தோற்கடிக்கப்பட்டு வந்தபோதிலும்கூட, அவர்கள் இராணுவத்திடம் சரணடைய மறுத்துவிட்டனர். இலங்கை அரச படைகளின் தாக்குதலில் இருந்து தப்பிக் கொள்வதற்காக விடுதலைப் புலிகள் தமது சொந்தப் பொது மக்களையே மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தினர்.

இது தெரிந்திருந்தும் இலங்கைப் படையினர் புலிகள் மீதும் பொதுமக்கள் செறிந்து வாழ்ந்த இடங்கள் மீதும் தாக்குதல்களை மேற்கொண்டனர். விமானக் குண்டுத் தாக்குதல்களையும், முன்னேற்றத் தாக்குதல்களையும் நடத்தினர். இலங்கை இராணுவத்தினருக்கும் புலிகள் அமைப்புக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட உக்கிர தாக்குதல்களில் பத்தாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில், இலங்கை அரச படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தப்பிச் செல்ல முயன்ற பொதுமக்களுடன் புலி உறுப்பினர்களின் ஒரு தொகுதியினரும் இருந்தனர். தமது ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு அவர்களும் தப்பிச் சென்றனர். மே 18, 2009 அன்று இறுதிச் சண்டை இடம்பெற்றது. பொதுமக்களுடன் இணைந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்ல முயன்ற புலி உறுப்பினர்களுள் ரோமியோ சேரா என அழைக்கப்படும், கேணல் ரமேஷும் தப்பிச் செல்ல முயற்சி செய்தார். ரி.துரைராஜசிங்கம் என்பது இவரது இயற்பெயராகும். தமிழ்ப் புலிகள் அமைப்பின் கிழக்குப் பகுதிக்கான மூத்த கட்டளைத் தளபதியாக இவர் விளங்கினார். இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்படும் மனிதன் இந்த ரமேஷே ஆவார்.

தனது குழந்தைகளில் ஒருவரை கைகளில் தூக்கியவாறு மே 17 அன்று தனது குடும்பத்தவர்களுடன் இராணுவத்திடம் சரணடைவதற்காக சென்ற புலிகளின் மூத்ததளபதியான ரமேஷ் வெள்ளை நிறச் சேட்டும் சாரமும் அணிந்திருந்தார். போரில் புலிகள் தோல்வியடைந்த நிலையில், தன்னையும் தனது குடும்ப உறுப்பனர்களின் உயிர்களையும் பாதுகாத்துக் கொள்வதற்காக மிக நம்பிக்கையுடன், ரமேஷ் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தப்பிச் செல்ல முற்பட்டிருந்தார். ஆனால் இலங்கை இராணுவத்தினர் அவரை அடையாளங் கண்டு கைது செய்தனர்.

ரமேஷைக் கைது செய்த படையினர், அவரை வவுனியாவில் உள்ள தடுப்பு முகாம் ஒன்றுக்கு கொண்டு சென்றனர். இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட போதும் ரமேஷ் வெள்ளை சேட்டும் நீலநிற கோட்டிட்ட சாரமும் அணிந்திருந்தார் என்று ஒருவர் சாட்சியமளித்துள்ளார். ஆகவே மே 22 அன்று ரமேஷ் இராணுவத்தின் தடுப்பு முகாமிலிருந்து வேறிடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார் என்பதை எம்மால் அனுமானிக்க முடிகின்றது.

புதிய காணொலியில் காணப்படும் காட்சிகளில், இராணுவ கவச வாகனம் ஒன்றில் ரமேஷ் கீழே இருக்கும் காட்சியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவர் புதிய சறம் மற்றும் சேட் அணிந்திருப்பது தெரிகின்றது. நீண்ட காலமாக போர்க் களத்தில் சண்டையிட்டவர் போல் அவரது தோற்றம் காணப்படவில்லை.

அதற்குப் பதிலாகப் போரின் இறுதிப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்ட ஏனைய புலி உறுப்பினர்கள் போலவே ரமேஷும் பொதுமக்கள் அணிகின்ற ஆடைகளையே அணிந்திருந்தார். அவரை படம் பிடித்துக் கொண்டிந்த நபர் ரமேஷின் பாதத்தின் கீழ் நிற்பதை அவதானிக்க முடிகின்றது.

அடுத்து, ரமேஷ் சேட் போடாதவாறு இருத்தி வைக்கப்படுகிறார். இராணுவ நீளக்காற்சட்டை ஒன்றும் ரமேஷுக்கு வழங்கப்படுகிறது. அவர் தற்போது இராணுவத்தினரின் கவச வாகனத்தில் அமர்ந்துள்ளார். பின்னர், இவரை ஆறு தொடக்கம் எட்டு வரையான இராணுவ உடையணிந்தவர்கள் விசாரணை செய்கின்றனர். இந்தப் படையினர் அணிந்திருந்த வெள்ளை நிற பருத்தியிலான இடுப்புப் பட்டிகள் இவர்கள் பௌத்தர்கள் என்பதைக் காண்பிக்கின்றன.

ரமேஷை விசாரணை செய்யும் இராணுவத்தினர் சிங்களவர்கள் என்பதாலும், சிறைப்பிடிக்கப்பட்ட ரமேஷ் தமிழர் என்பதாலும் இவர்கள் தமக்கிடையில் அசாதாரண ஆங்கில மொழியில் உரையாடுகின்றனர். இக்குறுக்கு விசாரணை முடிந்த பின்னர், இலங்கை இராணுவமும், பொலிஸாரும் பயன்படுத்துகின்ற சிங்கள மொழியில் அங்கிருந்த படையினர் தமக்கிடையில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதுடன், சைகை மூலமும் பேசிக் கொண்டனர்.

ரமேஷின் முதுகில் காணப்படும் புதிய காயமொன்றுக்கு மருந்திட்டுக் கட்டப்பட்டுள்ளது. இவரைப் படம் பிடித்துக் கொண்டிருந்த படையினர் பழைய காயம் ஒன்றைச் சுட்டிக் காட்டிய போது,

(06 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரமேஷின் படுகொலை தெளிவான போர்க்குற்ற ஆதாரம்



*(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

அக்காயம் 1988இல் ஏற்பட்டதாகவும் அதிலிருந்து தான் பல தடவைகள் காயமடைந்தார் என்றும் ரமேஷ் கூறுகின்றார்.

ரமேஷைப் போலவே ரமேஷின் முதுகிலிருந்த காயத்தின் மீது போடப்பட்டிருந்த மருந்தும் புதிதாக இருந்தது. இவர் இறுதிக் களமுனையில் காயமடைந்திருந்ததால், அக்காயத்திற்கான மருந்து தடுப்பு முகாமில் வைத்தே போடப்பட்டுள்ளது. ஏனெனில் பல மாதங்கள் முற்றுகையிடப்பட்டிருந்த போர் வலயத்திலிருந்து வந்த ஒருவருக்கு, நந்திக் கடல்நீரேரியில் வைத்து மருந்து கட்டப்பட்டிருக்கும் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

ரமேஷின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்ட காணொலியின் ஒரு கட்டத்தில், அதில் நின்ற படையினரில் ஒருவர் தனது சகாக்களைப் பார்த்து ''நீங்கள் எதைச் செய்ய வேண்டுமோ அதனைச் செய்யுங்கள், அதனைச் செய்யுங்கள்'' எனச் சிங்களத்தில் கூறுகின்றார்.

தற்போது இக்காணொலிக் கருவியானது இராணுவ கவச வாகனம் மற்றும் மண்ணாலான கிடுகால் வேயப்பட்ட குடிசை ஆகிய இரு இடங்களை நோக்கி நகர்கின்றது. இந்தக் குடிசையின் சுவர் உடைந்துள்ளது. பிறிதொரு சுவரில் துவாரம் ஒன்று காணப்படுகின்றது. அழுக்கு ஆடைகள் சிதறிக் காணப்படுகின்றன. இந்த இரண்டாவது இடத்தை ரமேஷ் அடைந்தபோது மீண்டும் அவரது உடைகள் மாற்றப்பட்டன.

தற்போது ரமேஷ் மிகவும் அச்சமடைந்திருக்கிறார். முதலில் ரமேஷிடம் விசாரணை செய்த இராணுவ ஆள் அவரிடம் ''பயப்படவேண்டாம். நாங்கள் உங்களிடம் சில தகவல்களை மட்டுமே பெற விரும்புகிறோம். நீங்கள் தற்போது பாதுகாப்பாக உள்ளீர்கள். இங்கே இராணுவத்தினர் உள்ளனர். நாங்கள் உங்களை சித்திரவதை செய்ய மாட்டோம். ஆகவே நீங்கள் உண்மையை மட்டும் எம்மிடம் தெரிவியுங்கள்'' எனக் கூறுகின்றார்.

ஆனால் புலிகளின் மூத்த கட்டளைத் தளபதியாக இருந்த ரமேஷுக்கு என்ன நடக்கப் போகின்றது என்பது தெளிவாகத் தெரிந்திருந்தது. அவர் தனது வறண்ட உதடுகளை நாக்கால் தடவிக்கொள்கிறார். கைகளை உயர்த்துமாறு ரமேஷுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்ட போது அவர் அச்சம் அடைந்தார். இதனால் அங்கு நின்ற இராணுவத்தினர் கோபம் கொண்டதுடன் அவரை அச்சுறுத்தினர். அதன் பின்னர் ஒளிப்படக் கருவி நிறுத்தப்பட்டதால் என்ன நடந்ததென்பதை எம்மால் பார்க்க முடியவில்லை.

இந்த இரு இடங்களிலும் ரமேஷிடம் கேட்கப்பட்ட விசாரணைகளில் இருந்து எம்மால் சில தகவல்களைப் பெறமுடிகிறது. ரமேஷின் பெயர், அவரது பிறந்த திகதி, புலிகள் இயக்கத்தில் அவரது நிலை, புலிகள் அமைப்பில் அவர் இணைந்து கொண்ட திகதி போன்றவற்றை அறிந்து கொள்ள முடிகின்றது. புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாகத் தான் செயற்பட்டார் என்று குறிப்பிடுகிறார். அத்துடன் தனது மனைவியின் பெயர், மூன்று பிள்ளைகளினதும் பெயர் மற்றும் வயது போன்ற விவரங்களை ரமேஷ் அந்த விசாரணையில் தெரிவிக்கிறார்.

தனது மகனுக்கு ஏழு வயது எனவும், ஒன்பது மற்றும் இரண்டு வயதுகளில் மகள்மார் உள்ளனர் என்றும் குறிப்பிடுகின்றார். அவர்கள் வவுனியாவில் உள்ள தடுப்பு முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதையும் ரமேஷ் உறுதிப்படுத்துகிறார். மிகவும் உறுதியான, உண்மையான, உயர் பண்புகளைக் கொண்ட, துணிச்சலுள்ள ஆயுதப் போராளியான ரமேஷ் தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்ற நம்பக்கையுடன் படையினரின் விசாரணைகளுக்குச் சலிக்காது முகம் கொடுக்கின்றார். புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் சிலரின் பெயர்களையும் அவர் விசாரணையின்போது குறிப்பிடுகிறார்.

அத்துடன் மட்டக்களப்பில் மேற்கொள்ளப்பட்டு வந்த புலிகளின் செயற்பாடுகள் தொடர்பாகவும் தெரியப்படுத்துகின்றார். அதாவது மட்டக்களப்பை இராணுவத்தினர் கைப்பற்றிய போதிலும்கூட, புலிகளின் மட்டக்களப்பு இராணுவ நடவடிக்கைகளுக்கான பொறுப்பாளரான குமரனும் அரசியற் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக தயாமோகனும் தொடர்ந்தும் பணியாற்றி வந்தனர் எனக் கூறுகிறார்.

''நீங்கள் நந்திக்கடலில் தலைவரின் மனைவியைப் பார்த்தீர்களா?'' என ரமேஷிடம் வினவப்படுகின்றது. கேணல் ரமேஷுக்கு பொறுப்பாளராக, புலிகள் அமைப்பின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரன் மட்டுமே காணப்பட்டார்.

''உங்களது தலைவரின் மகள் எங்கே'' எனவும் ரமேஷிடம் வினவப்பட்டது. ஆகவே இலங்கை இராணுவத்தினர் புலிகளின் தலைவரின் குடும்ப உறுப்பினர்கள் பற்றி அதிகம் விசாரிப்பதை நாம் இங்கே அவதானிக்கலாம். நாம் பெற்றுக் கொண்ட பல்வேறு சாட்சியங்களிலிருந்து, இவ்வாறான சம்பவங்கள் இறுதி யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்ட மே 18 அன்று அல்லது அதன் பின்பு இடம்பெற்றது என்பதை அறிய முடிகிறது.

இந்தத் திகதியில் அல்லது அதன் பின்னர், புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் 12 வயது மகனான பாலச்சந்திரன் உயிருடன் பிடிக்கப்பட்டு படுகொலை செய்யப்படுகின்ற காட்சிகளை 'சனல்-4' தொலைக்காட்சியின் 'தண்டிக்கப்படாத குற்றங்கள்' என்ற ஆவணப்படத்தில் காணலாம். ஆகவே இச்சம்பவம் பெரும்பாலும் மே 18 அன்று இடம்பெற்றிருக்கலாம். பாலச்சந்திரன் படுகொலை செய்யப்பட்டதற்கும், ரமேஷ் படுகொலை செய்யப்பட்டதற்கும் இடையில் பல்வேறு வித்தியாசங்கள் காணப்படுகின்றன. 12 வயது நிரம்பிய பாலச்சந்திரன் என்ற இந்தச் சிறுவன் மிகக் கோரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளான். ரமேஷ் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ரமேஷ் படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் அவரிடம் விசாரணை செய்த இலங்கைப் படையினரும் ரமேஷும் 2006இல் கிழக்கு மாகாணத்தில் உள்ள தொப்பிகல என்ற இடத்தில் இடம்பெற்ற தாக்குதலில் பங்கேற்றிருந்தனர். ''தொப்பிகலவில் இடம்பெற்ற சண்டையில் நீங்கள் பங்குபற்றியிருந்தீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஏனெனில் நானும் அந்தச் சண்டையில் பங்குபற்றியிருந்தேன்'' என ரமேஷிடம் விசாரணை செய்தவர் தெரிவித்திருந்தார்.

இருப்பினும் இது இவ்விருவருக்கும் இடையில் உறவைப் பலப்படுத்திக் கொள்ளப் போதுமானதாக இருக்கவில்லை. விசாரணையாளர் ரமேஷிடம் கேட்டதும் ரமேஷ் பதிலளிக்கத் தடுமாறிய குறுகிய நேரத்தில் குறிப்பிட்ட இராணுவ ஆளுக்குக் கோபம் வந்துவிட்டது. ''நீ பொய் சொல்ல வேண்டாம்'' என அவன் சத்தமிடுகிறான். இதற்கு ''நான் விளங்கிக் கொள்கிறேன். நான் விளங்கிக் கொள்கிறேன்'' என ரமேஷ் தற்காத்துக்கொள்ளும் நோக்குடன் தனது கைகளை உயர்த்தியவாறு பதிலளிக்கிறார். இவ்விருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளவில்லை என்பதை நேர்காணலிலிருந்து [illegible] [illegible] மற்றும் அவரை விசாரணை செய்த இராணுவத்தினருக்கு மத்தியில் இடம்பெற்ற உரையாடல்களில் இருந்து இந்த இருவரும் தவறான விளக்கங்களை கொண்டிருந்தனர் என்பதை அறிய முடிகின்றது. அதாவது மே 22, இவ் விசாரணை மேற்கொள்ளப்பட்டபோது, ''இடம்பெயர்ந்தோர் முகாமுக்கு நீங்கள் எப்போது திரும்பப் போகிறீர்கள்?'' என ரமேஷிடம் குறித்த விசாரணையாளன் வினவுகிறான். அவனது ஆங்கிலம் மிகவும் பிழையாக இருந்தது. அதாவது ''நீங்கள் எப்போது இடம்பெயர்ந்தோர் முகாமைச் சென்றடைந்தீர்கள்?'' என்றே கேட்டிருக்க வேண்டும். இந்த விசாரணை மேற்கொள்ளப்படுவதற்கு ஐந்து நாள்களுக்கு முன்னர் அதாவது மே 17 காலை 4.30 மணிக்கு வவுனியா தடுப்பு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

மே 22, 2009 வேறு இராணுவத்தினரால் எடுக்கப்பட்ட ஒளிப்படங்களும் புதிய சாட்சியங்களாக உள்ளன. இதில் ரமேஷிடம் மேற்கொள்ளப்படும் விசாரணை, ரமேஷ் உடைகள் மாற்றுதல், அவரை வேறிரு இடங்களுக்கு கொண்டு செல்லுதல் போன்ற காட்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனால் உண்மையில் ரமேஷ் எந்த வழியில் கொல்லப்பட்டார் என்பதை இக்காணொலிக் காட்சிகள் காண்பிக்கவில்லை. மிகப் பெரிய கலிபர் ரக துப்பாக்கியால் ரமேஷின் தலை குறிவைத்துச் சுடப்பட்ட பின்னர் ரமேஷ் இறந்து கிடக்கும் காட்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

'குளோபல் மெயில்' ஊடகமானது ரமேஷின் படுகொலைக் காட்சிகள் மற்றும் ஏனைய காட்சிகள் தொடர்பாக மூத்த பொலிஸ் புலன் விசாரணையாளர்கள் மற்றும் சட்டவாளர்கள் ஆகியோரைக் கொண்டு பரிசோதித்துள்ளது. இந்த ஒளிப்படங்கள் உண்மையானவை எனவும், ரமேஷ் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்பதில் ''எவ்வித சந்தேகமும் இல்லை'' எனவும் இதனை ஆராய்ந்த முன்னாள் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார். அதாவது படுகொலை செய்யப்பட்ட நேரம், திகதி, இடம் மற்றும் ஏனைய காட்சிகளைக் கொண்டு இதனை உறுதிப்படுத்த முடிவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரபாகரனின் மகள் துவாரகா, மற்றும் மூத்த மகனான 22 வயதுடைய சாள்ஸ் அன்ரனி ஆகியோர் போரின் இறுதி மாதங்களில் கொல்லப்பட்டுள்ளனர். போரின் இறுதி மாதங்களில் பல நூற்றுக் கணக்கானவர்கள் திட்டமிட்ட முறையில், பலாத்காரமாக, பாலியல் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர் என்பதை ஆதாரப்படுத்தும் ஒளிப்படங்கள் மற்றும் காணொலிகள் என்பன கிடைக்கப்பெற்றுள்ளன. அத்துடன் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களின் உடலங்களை இராணுவத்தினர் அழிக்கின்ற காட்சிகளும் உள்ளன.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஐ.நா. வல்லுநர் குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் இலங்கையில் இடம்பெற்ற போர்க் கால மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பாகவும் பல புதிய நம்பகமான சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் தஞ்சம் புகுந்திருந்த இடங்கள் மீது குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டமை, மக்களைப் பட்டினி போட்டமை, மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியமை, சரணடைந்த போர்க் கைதிகளை சட்ட ரீதியற்ற முறையில் சித்திரவதைப்படுத்தி படுகொலை செய்தமை, பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் போன்றவற்றை இலக்கு வைத்து தாக்குதல் நடாத்தியமை போன்றவற்றை ஐ.நா. வல்லுநர் குழு தனது அறிக்கையில் சாட்சியங்களுடன் முன்வைத்தது. இவ்வாறான மீறல்கள் தொடர்பாக நேர்மையான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டது.

இந்த நிலையில் இலங்கை அரசு மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட அழுத்தங்கள் காரணமாக உள்ளக விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்கான ஆணைக்குழுவை இலங்கை அரசு நியமித்த போதிலும், உண்மையில் போர்க் கால மீறல்கள் தொடர்பாக அந்த ஆணைக்குழு முழு அளவில் விசாரணை செய்யவில்லை.

இலங்கையில் உள்ள சிங்கள மற்றும் தமிழ்ச் சமூகங்களுக்கு இடையில் அமைதி பேணப்பட வேண்டியது முக்கியமாகும். ஆனால் இலங்கை அரசானது தொடர்ந்தும் தன்னால் மேற்கொள்ளப்பட்ட மீறல்களை ஏற்றுக் கொள்ளாது அவற்றைத் தட்டிக்கழித்து வருகின்றது. இதனால் தற்போது ஐ.நா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன இலங்கை மீது அழுத்தங்களை மேற்கொண்டு வருகின்றன. அத்துடன் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவின் ஆதரவுடன் முன்வைக்கப்படும் முன்மொழிவானது இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு உதவியாக அமையும்.

இலங்கையில் போர் நடந்த போது பொதுமக்கள் கொல்லப்படவில்லை என இலங்கை அரச தலைவர்கள் தொடர்ந்தும் கூறிவருகின்றனர். இலங்கை அரசானது தன் மீது அனைத்துலக சமூகத்தால் முன்வைக்கப்பட்டுள்ள அழுத்தங்களைப் பொருட்படுத்தாது, தொடர்ந்தும் தனது முன்னாள் இராணுவ முக்கிய அதிகாரிகளை இராஜதந்திரப் பதவிகளில் நியமித்து வருகின்றது. அத்துடன் இவர்களை ஐக்கிய நாடுகள் சபையிலும் இலங்கையின் பிரதிநிதிகளாக அனுப்பி வைத்துள்ளது. இந்த நிலையில் இலங்கையின் நட்பு நாடான இந்தியா தற்போது இலங்கைக்கு எதிராக நிற்கின்றது.

''அமெரிக்காவானது இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டு வருவது தொடர்பாக அதிர்ச்சியடைகிறோம். அமெரிக்கா தனது பலத்தை எம்மீது பிரயோகிக்க முயல்கின்றது. இவ்வாறு அழுத்தம் மேற்கொள்ளப்பட்டால், எமது இணக்கப்பாட்டு முயற்சிகள் தாமதமடையும்'' என இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

12 வயதுடைய பாலச்சந்திரனின் படுகொலையைக் காண்பிக்கும் ஒளிப்படங்கள் மற்றும் காணொலிகளை காரியவசம் ஏற்க மறுக்கின்றார். இலங்கை அரசானது மீள் இணக்கப்பாட்டு முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும், சர்வதேச சமூகத்தின் இவ்வாறான விமர்சனங்கள் அந்த முயற்சிகளுக்கு ஊறுவிளைவிப்பதாகவும் கடந்த மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் உரையாற்றிய இலங்கையின் மனித உரிமைகள் அமைச்சரான மஹிந்த சமரசிங்க தெரிவித்திருந்தார்.

ஜூன் 2009 இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் சிறப்புக் கூட்டத் தொடரின்போது இலங்கை அரசானது கைக்கொண்ட போர் யுக்திகள் பிழையானவை என மேற்குலக நாடுகளால் விமர்சிக்கப்பட்டு முன்மொழிவு ஒன்று முன்வைக்கப்பட்ட போது, இலங்கை அதனை எதிர்த்து வெற்றி கொண்டது.

போர்க் காலத்தில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பாகக் கிடைக்கப்பெற்றுள்ள பல்வேறு சாட்சியங்களில் மிகவும் சக்திமிக்க சாட்சியமாக கேணல் ரமேஷின் படுகொலைச் சம்பவம் உள்ளது. போரின்போது படுகொலை செய்யப்பட்ட பத்தாயிரக்கணக்கானவர்களின் உண்மையான சம்பவங்களை வெளிக்கொண்டு வருவதற்கும், இவற்றை மேற்கொண்ட கொலையாளிகளை இனங்கண்டு கொள்வதற்கும் ரமேஷின் படுகொலையும் அது தொடர்பான நம்பகமான சாட்சியங்களும் துணையாக நிற்கும். ✱

*(நன்றி: புதினப்பலகை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம்

# ஏவுகணை செலுத்தும் வட கொரிய திட்டம்

## அண்டை நாடுகளில் அதிர்ச்சி அலைகள்

**தொலைதூர ஏவுகணை மூலம் செயற்கை கோள் ஒன்றை விண்ணில் செலுத்தும் வடகொரியத் திட்டம் அணு ஆயுத பரிசோதனைக்கான முயற்சி – அதிர்ச்சியில் ஆழ்ந்து போயுள்ளன அண்டை நாடுகள்.**

தொலை தூர ஏவுகணை ஒன்றைப் பயன்படுத்தி செயற்கைக் கோள் ஒன்றை விண்ணில் செலுத்துவதற்கு வடகொரியா நடவடிக் கையில் இறங்கியிருப்பதாக வெளிவந்துள்ள செய்தி அதன் அண்டை நாடுகளையும், ஐப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

செயற்கைக் கோள் செலுத்தும் போர்வையில் அணு ஆயுதம் ஒன்றையே வடகொரியா பரீட்சித்துப் பார்க்க முயல்கிறது என்று தென் கொரியா குற்றஞ்சாட்டியுள்ளது. தொலைதூர ஏவுகணைத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி அணு ஆயுதத்தைச் சோதிக்க முயல்கிறது என்று தென்கொரியா கூறுகிறது.

ஏப்ரல் மாதம் 12-16 ஆம் திகதிகளுக்கிடையில் இந்த ஏவுகணையைச் செலுத்த திட்டமிட்டிருப்பதாக வடகொரியாவிலிருந்து செய்தி வெளிவந்துள்ளது. அப்படி ஒரு ஏவுகணை செலுத்தப்படுமானால் அதனை இடைமறித்து அடித்து நொறுக்கி செயல் இழக்கச் செய்யப் போவதாக ஐப்பானும் முன் உரைத்துள்ளது.

இந்த ஏவுகணை செலுத்துவதானது, தனது அமைதிக்கான விண்வெளி ஆய்வின் ஒரு பகுதியாக இருக்கும் என்று வடகொரியா அறிவித்திருப்பதுடன், வட கொரியாவின் தேசிய தந்தையான அதிபர் கிம் இல் - சங்கின் 100 ஆவது பிறந்த தினத்தை குறிப்பதாகவும் அமையவிருக்கின்றதும் கவனத்துக்குரியது.

இது குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுத்துறை பிரதம அலுவலர் கெதரின் ஆஷ்ரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த ஏவுகணை செலுத்தலானது வடகொரியாவின் சர்வதேச கட்டுப்பாடுகளுக்கு குறிப்பாக ஐ.நா பாதுகாப்புச் சபையின் 1874 ஆவது தீர் மானத்துக்கும் முரணானது என்று குறிப்பிட்டுள்ளார்.

வட கொரியா ஏவுகணை செலுத்தியதையும், 2009 ஆம் ஆண்டு அணு ஆராய்ச்சியில் இறங்கியதையும் அடுத்து ஐ.நா பாதுகாப்புச் சபை அவைகளைத் தடை செய்து தீர்மானம் நிறைவேற்றியது. எந்தவொரு காரணத்துக்காகவும் ஏவுகணை ஆராய்ச்சியில் இறங்கலாகாதென இந்தத் தீர்மானம் வட கொரியாவைத் தடை செய்துள்ளது.

வடகொரியாவின் அணு ஆயுத ஆராய்ச்சி தொடர்பான ஆறு நாடுகளின் மகாநாட்டை நடத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் ராஜதந்திர முயற்சிகளுக்கும் இது இடைஞ்சலாக அமைந்து விடும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 ஆம் திகதி ஆறு நாடுகள் மாநாட்டிலிருந்து வடகொரியாவை வெளி நடப்புச் செய்தன. நெடுந்தூர ஏவுகணையொன்றை விண்ணில் செலுத்தியதுடன்செயற்கைக்கோள் ஒன்றை விண்ணில் செலுத்தவும் முயற்சி எடுத்தமையை ஐ.நா பாதுகாப்புச் சபை கண்டித்ததுடன் பொருளாதார தடைகளையும் கடின மாக்கியதால் இந்த வெளிநடப்பு இடம்பெற்றது. இந்தப் பேச்சு வார்த்தைகளில் வட கொரியா, தென் கொரியா, சீனா, ஜப்பான், ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் கலந்து கொண்டிருந்தன. தொலைதூர ஏவுகணை ஆராய்ச்சி என்ற போர்வையில் அணுகுண்டை பரீட்சிக்க முயல்கிறது என்று அமெரிக்காவும் மற்ற நாடுகளும் கருதுகின்றன.

வடகொரியாவிடம் ஆறு அல்லது எட்டு அணு குண்டுகளைத் தயாரிக்கக் கூடிய புளுட்டோனியம் இருக்கக்கூடும் என்று மேற்குநாடுகள் கருதுகின்ற அதே வேளையில் ஏவுகணையில் பொருத்தக் கூடிய அணு குண்டு அதனிடமிருக்கின்றதா என்பது இன்னமும் தெளிவாகத் தெரியவரவில்லை.

வடகொரியா செயற்கைக் கோள் ஒன்றை தொலைதூர ஏவுகணையொன்றின் மூலம் விண்ணில் செலுத்துவதற்கு தீர்மானித்திருக்கும் செயல் தொடர்பாக, அந்த நாட்டின் பிரதிநிதிகளுடன் சீனா ஒளிவு மறைவு அற்ற விதத்தில் பேச்சுக்கள் நடத்தியிருப்பதாக அறிவித்துள்ளது.

வடகொரிய அறிவித்தல் வெளிவந்த சில மணி நேரங்களுக்குள் சீன வெளியுறவு உதவி அமைச்சர் ஸாங்ஷிஜிஷன் சீனாவிலுள்ள வட கொரியத் தூதுவரை அழைத்து தமது நாட்டின் கவலைகளைத் தெரிவித்துக் கொண்டார்.

வடகொரியா ஏவுகணைச் சோதனையொன்றை நடத்துவதற்கு தீர்மானம் எடுத்துள்ள நிலையில் தென் கொரியாவும் தனது ஏவுகணை பாயும் தூரத்தை அதிகரிப்பதற்கு அமெரிக்காவுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்வது பற்றியும் ஆலோசிக்கத் தொடங்கியுள்ளது.

வடகொரியாவின் தாக்குதலுக்குள்ளாகும் பட்சத்தில் தனது தொலை தூர ஏவுகணை பாயும் எல்லைத் தூரத்தை அதிகரித்து தனது பாதுகாப்பைப் பலப்படுத்திக் கொள்ள தென்கொரியா விரும்புகின்றது என்ற வகையில் அந்த நாட்டின் அதிபர் லீமியுங்-பாக் ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளர். தொலை தூர ஏவுகணை வீச்சுத்தூரம் தொடர்பாக அமெரிக்காவுக்கும் தென் கொரியாவுக்குமிடையில் 2001 ஆம் ஆண்டு உடன்பாடு ஒன்று செய்து கொள்ளப்பட்டது. அந்த ஒப்பந்தத்தை மறுசீரமைப்பது தொடர்பாக இரு நாடுகளும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன. தங்களிடமுள்ள ஏவுகணை 300 கிலோ மீற்றர் தூரம் மட்டுமே பாயக் கூடியது என்றும், அது வடக்கு எல்லையை மட்டுமே உள் அடக்கும் என்றும் தெரிவித்த அதிபர் இதில் தாக்குதல் நடத்தும் எல்லை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

### சிரிய அதிபருக்கு பாதுகாப்பு சபை எச்சரிக்கை

ஐ.நாவின் சிறப்புத் தூதுவரான கோபி அனான் சமர்ப்பித்துள்ள அமைதித் திட்டத்துக்கு இணங்கி செயற்பட்டு சிரியாவில் விரைவாக அமைதி ஏற்படுவதற்கு ஒத்துழைக்கும் படி ஐ.நா. பாதுகாப்பு சபை கோரிக்கையொன்றை விடுத்துள்ளது. மேற்குநாடுகளால் தயாரிக்கப்பட்டுள்ள இந்தக் கோரிக்கை அறிக்கைக்கு சீனாவும், ரஷ்யாவும் ஆதரவு தெரிவித்துள்ளன.

ஆயுத மோதல்களை நிறுத்தி ஜனநாயக மறுசீரமைப்புக்கு உடன்படும் படியாக பாதுகாப்புச் சபை சிரிய அதிபரை அறிக்கை மூலம் வற்புறுத்தியுள்ளது. நிலைமை தொடருமானால் சர்வதேச நடவடிக்கைகள் பிற்காலத்தில் எடுக்க நேரலாம் என்று அறிக்கையில் மறைமுகமாகத் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அவதானிகள் கருதுகிறார்கள்.

ஐ.நா மற்றும் அரபு லீக்கின் தூதுவராக சிரியாவுக்குச் சென்று திரும்பியுள்ள முன்னாள் ஐ.நா செயலாளர் நாயகம் கொபி அனான் சிரியாவில் போர் ஓய்வைக் கொண்டு வர எடுத்துவரும் முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதாக பாதுகாப்புச் சபையின் இந்த அறிக்கை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அறிக்கையின் வாசகத்திலுள்ள கடுமையான தன்மைகளைக் குறைக்காவிடில் கையெழுத்திடப் போவதில்லையென ரஷ்யா அறிவித்ததையடுத்து அறிக்கையில் மாற்றம் செய்ய மேற்கு நாடுகள் ஒப்புக் கொண்டன. அறிக்கையில் அதிபர் ஆசாத்துக்கு காலக்கெடு விதிக்கப்படுவதை ரஷ்யா, கடுமையாக எதிர்த்துள்ளது.

பாதுகாப்புச் சபையின் 15 நாடுகளின் பிரதிநிதிகளும், ஒருநாள் முழுவதுமாக ஆலோசனைகள் நடத்தியதன் பின்னர் அறிக்கையின் வாசகம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

ஐ.நா மற்றும் அரபு லீக்கின் தூதுவர் சமர்ப்பித்துள்ள அமைதித் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆசாத் தவறுவாராரனால், மேல் நடவடிக்கைகள் தொடர்பாக சபை ஆலோசனை நடத்தும், என்று அறிக்கையில் வரும் வாசகம் கடும் எதிர்ப்புக்குள்ளானதாக ராஜதந்திரிகள் கூறுகிறார்கள்.

சிரியாவில் அமைதியைத் தோற்றுவிப்பதற்காக கொபி அனானின் ஆலோசனையின் பேரில் சபை தயாரிக்கும் எந்த அறிக்கையையும் ஆதரிக்க நாங்கள் தயார். ஆனால் அதில் காலக்கெடு எதுவும் விதிக்கப் படலாகாது என்று ரஷ்யா தெரிவித்திருக்கிறது.

### ஆஸாத் தவறுகள் இழைத்துள்ளார்

கடந்த செவ்வாய்க்கிழமை சிரியத் தலைநகரில் நடந்த எதிர்ப்புப் போராட்டத்தில் 30 பேர் கொல்லப்பட்ட நிகழ்வையடுத்து, சிரியா அதிபரின் நட்பு நாடான ரஷ்யா வெளியிட்ட அறிக்கையில் ஆசாத் நிறைய தவறுகளை இழைத்துள்ளார் என்று குற்றஞ்சாட்டியிருக்கிறது.

தலைநகரில் நடைபெற்ற மோதல்களில் 30 பேர் வரையில் அரச படைகளால் கொல்லப்பட்டனர். இவர்களில் இருவர்தான் பொதுமக்கள் என்று மனித உரிமைக் கண்காணிப்பகம் ஒன்று தெரிவித்துள்ளது.

[illegible] பாதுகாப்புப் படை முகாம்கள் மீது தற்கொலைப் படைத்தாக்குதல்களும் இடம் பெற்றன.

சிரியாவில் வன்செயல்கள் ஒரு பக்கமாக நடைபெறவில்லை. எதிர்ப்புப் படைகளாலும் ஆள்கடத்தல்கள், சித்திரவதைகள், பாதுகாப்புப்படை உறுப்பினர்கள், மற்றும் அரச ஆதரவாளர்கள் படுகொலை செய்யப்படுவது போன்றவையும் இடம்பெறவே செய்கின்றன என்று நியூயோர்க்கைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கி வரும் மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

அமைதியாக ஆரம்பிக்கப்பட்ட மக்கள் எழுச்சியானது இப்பொழுது ஆயுதப் போராட்டமாக மாறியுள்ளது. அரச படைகள் நாடு முழுவதுமாக பெப்ரவரியில் ஆரம்பித்த போராட்டக்காரர்களுக்கு எதிரான தாக்குதல்களையடுத்து இது அப்பொழுது இரு தரப்புப் போராட்டமாக மாறியிருக்கிறது என்று மனித உரிமை அமைப்புகள் தெரிவிக்கின்றன.

அமைதியான போராட்டத்துக்கு எதிராக சிரிய அரசாங்கம் ஆரம்ப நடவடிக்கையையே தவறான முறையில் கையாண்டுள்ளது என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கே லாவ்ரோவ் தெரிவித்துள்ளார். ரஷ்ய ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள நேர்காணல் ஒன்றில் சிரிய தலைமைத்துவமானது எமது பல்வேறு ஆலோசனைகளின் போதும் வழங்கிய வாக்குறுதிகள் அப்படியே இருக்க ஏராளமான தவறுகளை இழைத்து வருகின்றது என்று கூறியுள்ளார்.

### ரஷ்யாவின் முயற்சி

உலகப் பார்வை ஒரு கண்ணோட்டம்

சிரியாவில் போர் நிறுத்தம் ஒன்றை உருவாக்கி அங்குள்ள பிரச்சினைக்கு ராஜதந்திர முறையில்தீர்வொன்றை ஏற்படுத்த ரஷ்யா கடந்த பல மாதங்களாக முயன்று வருகின்றது. அந்த வகையில் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கே லாவ் ரோவ் சிரியாவுக்கு நேரடியாகச் சென்று பேச்சுக்களில் ஈடுபட்டுத் திரும்பியிருந்தார். ஆனால் அதிபர் பஷர் அல்-ஆசாத் அசைந்து கொடுக்கவில்லை. எதிர்த்தரப்பினர் ஆயுதப் போராட்டத்தைக் கைவிடும் வரை கைவிடப் போவதில்லை என்று விடாப்பிடியில் இருக்கிறார் அவர். அதேவேளை ஆயுதம் ஏந்திப் போராடி வரும் எதிர்த்தரப்பினரோ, ஆசாத் ஆட்சியை வன்முறையின் மூலமே வீழ்த்த வேண்டும் என்ற கொள்கையில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறார்கள். பேச்சு வார்த்தை எதற்குமே அவர்கள் சம்மதிப்பதாக இல்லை என்று அவதானிகள் கூறுகின்றனர்.

இதற்கிடையில் ரஷ்யாவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் கூட்டாக விடுத்துள்ள ஒரு கோரிக்கையில் மோதலில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினரும் மனிதநேய அடிப்படையில் தினமும் போர் ஓய்வொன்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுள்ளன. இருந்தாலும் இந்த முயற்சியினால் அங்கு இரத்தக் களரியை நிறுத்திவிட முடியாது என்று அவதானிகள் கருதுகிறார்கள்.

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கே லாவ்ரோவுக்கும் ஐ.சி.ஆர்.சி சர்வதேசக் குழுவின் தலைவர் ஜேகொப் கெல்வன் பேர்கருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பொன்றினை அடுத்து மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டது.

### பத்து வயதுச் சிறுவனின் துணிச்சலான செய்கை

எரிந்து கொண்டிருந்த வீட்டினுள் பாய்ந்து சென்று அங்கிருந்த தன் ஆறு வயதுத் தங்கையைக் காப் பாற்றியிருக்கிறான் பத்து வயதுச் சிறுவன். நியுபேர்க் கென்ரக்கி என்ற இடத்திலுள்ள தங்கள் வீடு தீப்பற்றி எரியத் தொடங்கியதைப் பார்த்த பத்து வயது அன்ரொயின்பேர்க்ஸ் என்ற சிறுவன் தப்பித்து வீட்டுக்கு வெளி யில் வந்தான். அப்பொழுது தனது தங்கை வீட்டுக்குள் இருப்பது நினைவு வரவே எரியும் தீக்குள் பாய்ந்து சென்று தங்கையைக் காப்பாற்றிக் கொண்டு வெளியில் வந்தான்.

"அவளுக்கு ஏதும் நடந்திருந்தால் நான்தான் பொறுப்பு. ஏனென்றால் நான்தான் அவளுடைய அண்ணன். அவளைக் காப்பாற்ற வேண்டியது என் பொறுப்பு" என்று அவன் பின்னர் கூறினான். லண்டன் - டெய்லிமிரர் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

### இதயத் தாக்கத்தை முன்கூட்டியே அறியலாம்

இதயத் தாக்கம் (Heart attack) ஏற்படவிருப்பதை மிக மலிவான ஒரு இரத்தச் சோதனை மூலம் முன் கூட்டியே அறிந்து கொள்ளக் கூடிய வசதி அடுத்த ஆண்டு முதல் நடைமுறைக்கு வர இருக்கின்றது. இரத்தத்தில் காணப்படும்ஒருவித மாற்றத்தை வைத்துவிஞ்ஞானிகள் இதனைக் கண்டு பிடித்து விடுவார்களாம்.இதயத் தாக்கம் ஏற்படவிருப்பதை இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு முன்பே கண்டுபிடித்து விடலாம். பின்னர் இரத்தத்தை மெலிதாக்குவதற்கான மருந்தொன்றைக் கொடுத்து டாக்டர்களால் அந்த நோய் வராமல் காப்பாற்றி விட முடியும். இதயத்துக்கு வரக்கூடிய ஆபத்துக்களை முன் கூட்டியே அறிவிக்கும் நுண்கருவிகளை உடலில் பொருத்திக் கொள்ளும் வசதி களும் எதிர் காலத்தில் பாவனைக்கு வந்து விடும் என்கிறார்கள் இந்த ஆராய்ச்சியில் ஈடு பட்டுள்ள அமெரிக்க ஆய்வாளர்கள். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நித்தியா*

# புலம்பெயர் வாழ்வின் அவலங்கள்



இன்று ஈழத்தமிழர் பெரும்பாலானோர் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று வாழ்வதையே பெரிதும் விரும்புகின்றனர். அந்த நாடுகளுக்குச் சென்றால் நிறையவே பணத்தைச் சேர்த்து குறைவின்றி வாழலாம் என்றதொரு நப்பாசை. அந்த நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்கள் அனுபவிக்கும் இன்னல்கள் துன்ப துயரங்கள் பற்றி வாய்வழியாகவும் பத்திரிகைச் செய்திகள் வாயிலாகவும் அறிந்திருந்தும் வெளிநாட்டு மோகம் அவர்களை விடுவதாக இல்லை.

புலம் பெயர்வு என்றால் என்ன? ஆரம்பத்தில் ஈழத் தமிழர் தமது தாய் நாட்டை விட்டுப் புலம் பெயர வேண்டியதன் அவசியம் என்ன என்பதைப் புரிந்து கொள்ளாத சிலர் இந்த நாட்டில் தமக்குக் கிடைக்கும் சிலவகையான வசதி வாய்ப்புக்களையும் உதறிவிட்டு திரைகடல் ஓடி திரவியம் தேடப் புறப்பட்டுச் செல்கின்றார்கள்.

அங்கு சென்ற பின்னர்தான் அந்த நாடுகள் பூட்டப்படாத சிறைச்சாலைகள் என்பதை உணர்கிறார்கள். அதனால் அவர்கள் அடையும் சொல்லெணாத் துன்பங்கள் 'பட்ட பின் தான் புத்தி வரும்' என்பதை நிரூபிப்பனவாக உள்ளன. விரும்பிச் சென்றவர்களை விட வேறு நாட்டில் தஞ்சம் அடைந்தே தீர வேண்டும் என்று சென்றவர்களும் துன்பங்களுக்கு ஆளாகின்றனர்.

முதலில் ஒவ்வொருவரும் 'புலம்பெயர்' என்றால் என்ன என்பதை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். ஒரு தனி நபரோ அல்லது குடும்பமோ அன்றி ஒரு குழுவினரே தமது பாரம்பரிய வாழ்விடங்களில் இருந்து வாழ்வாதாரம், அரசியல் சுதந்திரம், அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் தமது பண்பாட்டுடன் தொடர்பு அற்ற அந்நிய நாட்டுக்குள் பிரவேசித்தலே புலம்பெயர்வு.

இந்தப் புலம்பெயர்வு மானிட இனத்துக்கு மட்டுமே உரியதொன்றில்லை. பறவைகள், மிருகங்கள் கூடப் பருவமாற்றங்கள், பாதுகாப்பு மற்றும் இனவிருத்தி போன்ற பல்வேறு தேவைகளுக்காகப் பிறந்த இடங்களை விட்டு புலம்பெயர்ந்து செல்கின்றன. விலங்குகள், பறவைகளாக இருந்தாலும் சரி, மனித இனமாக இருந்தாலும் சரி இடம் விட்டு இடம் மாறுவதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. இருந்த போதும் முக்கியமான காரணம் இருத்தலுக்கான தப்பிப் பிழைத்தலே.

ஆதி காலத்தில் நாடோடிகளாகப் புலம்பெயர்ந்த மக்கள் பின்னர் சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் காரணங்களுக்காகப் புலம் பெயர வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அந்த வகையில் இலங்கையில் ஏற்பட்ட இன முரண்பாட்டுப் பிரச்சினைகள் புலம் பெயர் மக்கள் மத்தியில் ஈழத் தமிழர்களின் எண்ணிக்கையை நிறைத்தன. இனவாத அடக்குமுறை, பயங்கரவாதத் தடைச்சட்டம், தனிச் சிங்கள் மொழிச் சட்டம் போன்ற கொடிய சட்டங்கள், அன்றைய காலத் தமிழர் படுகொலை, சிறை வாழ்க்கை தமிழ் அமைப்புகளுக்கு இடையில் ஏற்பட்ட மோதல்கள் காரணமாக நாட்டைவிட்டுத் தப்பிச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையே ஈழத் தமிழர்களுக்கு ஏற்பட்டது.

அவ்வாறு உலகின் பல்வேறு நாடுகளிலும் பரந்துள்ள ஈழத்தவர் சமூகம் வடக்கே கனடாவிலிருந்து தெற்கே ஆஸ்திரேலியா, நியூசிலாந்துவரை விரிந்துள்ளது.

ஒரு குடும்பமே வெவ்வேறு கண்டங்களில் வெவ்வேறு நாடுகளில் சிதறுண்டு கிடக்கிறது. இவ்வாறு சிதறுண்டவர்கள் அனைவரும் பல்வேறு கால கட்டங்களில் தப்பிப் பிழைத்து ஓடியவர்கள். அதேசமயம் ஏதோவொரு பாதிப்புக்கு ஆளானதால்தான் அந்த நிலைமை ஏற்பட்டது. அந்த வலி, துயரம் இறக்கும் வரை அவர்களை விட்டு அகலாது. நாட்டில் உண்மையான ஓர் அமைதி நிலை திரும்பும்வரை உறவுகளின் சிதறல்களினால் உண்டான துன்பியல் வாழ்க்கையே அவர்களுக்கு உரித்தானது. இந்த உணர்வு புலம்பெயர் எழுத்தாளர்களின் ஆக்கங்களினூடாகவும் வெளிப்படுகின்றது. ,

''யாழ் நகரில் என் பையன்
கொழும்பில் என் பெண்டாட்டி
வன்னியில் என் தந்தை
தள்ளாத வயதில்
தமிழ் நாட்டில் என் அம்மா
சுற்றம் பிராங் போட்டில்
ஒரு சகோதரியோ
பிரான்ஸ் நாட்டில்
நானோ
வழி தவறி அலாஸ்கா
வந்துவிட்ட ஒட்டகம் போல்
ஒஸ்லோவில்''

உலகின் பல்வேறு திக்குகளுக்கும் தூக்கி எறியப்பட்ட ஈழத் தமிழர்கள் சட்டரீதியான குடியுரிமையும் இன்றி எதிர்காலம் பற்றிய நிச்சயமற்ற நிலையில் கனவுகளுடனும் மனரீதியான ஏக்கங்களுடனும் அந்நிய நாடுகள் சுமத்திய சுமைகளுடனும் வாழும் வாழ்க்கையை இந்தக் கவிதை பிரதிபலிக்கின்றது.

இதேவேளை புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் பல்வேறு விதமான கலாசார சிக்கல்களுக்குள்ளும் சிக்கித் தவிக்கும் நிலைமையும் ஏற்படுகிறது. இதனால் ஏற்படும் உளைச்சல் உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே பாதிக்கின்றது. புதிய கலாசாரப் பின்னணியும் அதனால் ஏற்படும் விளைவுகளும் நோயாக உருவெடுத்து துன்பத்தோடு வாழ்க்கையைக் கழிக்க வேண்டிய நிலைக்கு அவர்களை இட்டுச் செல்கிறது. அதுமட்டுமன்றி தேவைக்கு மிஞ்சிய ஆசைகள், போட்டிகள், பொறாமைகள், குழந்தை வளர்ப்பில் ஏற்படும் சிக்கல்கள், திருமணத்தில் ஏற்படும் பிரச்சினைகள் எனப் பல்வேறு சிக்கல்களுக்குப் புலம்பெயர் ஈழத்தமிழர்கள் முகம் கொடுக்க வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

இனிவரும் சந்ததியினருக்கும் இத்தகையதொரு அவல வாழ்க்கை தொடரக்கூடாது. அவர்கள் தமது சொந்த நாட்டில் தாய்மார்களின் சுவாசக் காற்றில் சிறந்ததோர் உறவுப் பாலம் அமைத்து வாழவேண்டும். இதுவே அனைவரதும் எதிர்பார்ப்பாகும். ✱

> "ஒரு குடும்பமே வெவ்வேறு கண்டங்களில் வெவ்வேறு நாடுகளில் சிதறுண்டு கிடக்கிறது. இவ்வாறு சிதறுண்டவர்கள் அனைவரும் பல்வேறு கால கட்டங்களில் தப்பிப் பிழைத்து ஓடியவர்கள். அதேசமயம் ஏதோவொரு பாதிப்புக்கு ஆளானவர்கள்.

# இனிமேல் வாலாட்ட முடியாது

*பிறேமினி*

பெண்கள், சிறுவர்கள் மீதான வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன'' என்பதே அண்மைக் காலமாகப் பரபரப்பாகப் பேசப்படும் செய்தியாக இருக்கின்றது. ஆனால் இந்த வன்செயல்களைப் புரிவோரைச் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டனையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என இப்போது குரல்கள் ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றமை புதிய செய்தியாக இருக்கின்றது.

இதுவரை பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறை நடக்கின்றது எனப் புள்ளி விவரங்களைத் திரட்டிக் கொண்டு அமைதியான முறையில் தம்மால் முடிந்த சட்ட ஆலோசனைகள், உளவள ஆலோசணைகள் என்பவற்றை வழங்கி, தம்மால் முடிந்தளவுக்குப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி வந்தவர்கள் இப்போது தங்கள் மௌனத்தைக் கலைக்கத் தொடங்கியிருக்கின்றார்கள்.

ஆங்காங்கே சில எழுச்சிக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றன. ''தப்புச் செய்தவன் சரியான தண்டனையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்'' அதனைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்'' என்பதில் சில அமைப்புக்கள் குறியாகச் செயற்படத் தொடங்கியிருக்கின்றன. பாதிக்கப்பட்டவர்களுக்கான நேசக்கரம் நீண்டிருக்கின்றது. அதே நேரம் குற்றங்களைப் புரிந்துவிட்டு இலகுவாகத் தப்பித்து விடலாம் என்று பகல் கனவு கண்டவர்களுக்கு இப்போது மெல்லப் பயம் எட்டிப் பார்க்கத் தொடங்கியிருக்கின்றது.

முன்பெல்லாம் வயதுக்கு வந்த பெண்களைப் பற்றியே யோசிக்க வேண்டிய நிலை பெற்றவர்களுக்கு இருந்தது. ஆனால், இப்போது நிலைமை மாறியிருக்கிறது. இரத்த உறவுகளிடமிருந்தே பிள்ளைகளை, குழந்தைகளைப் பொத்தி வளர்க்க வேண்டிய பொறுப்புக்கு ஒரு தாய் தள்ளப்படுகின்றாள்.

சிறுவர் இல்லங்களில் கூடப் பாதுகாப்பு இல்லை. 'வேலியே பயிரை மேய்ந்த கதைகள், இப்போது வெளிச்சத்துக்கு வரத் தொடங்கியிருக்கின்றன.

இப்போது குழந்தைகள், சிறுவர்களைக் கூட வெளியில் அனுப்புவதற்குப் பெற்றவர்கள் தயக்கம் காட்டுகின்றார்கள். ஏனெனில் அண்மைக் காலத்தில் காமுகர்களின் பசிக்கு இரையாகிப் போவது ஏதுமறியாப் பருவத்து பாலகிகளே.

இன்று, குறிப்பாக யாழ்ப்பாணத்தில், எங்கோ ஒரு மூலையில் நாளாந்தம் உடல் ரீதியான பெண்[illegible] துஷ்பிரயோகம் நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றது. ஆனால் இவற்றில் வெளியில் வருவது மிக சொற்பமே. புள்ளி விவரக் கணக்குகளில் பதியப்படாமல் பெற்றவர்கள் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கவனத்தில் கொண்டு பலவற்றை மூடி மறைத்து விடுகிறார்கள்.

''3 தசாப்த காலமாக நடைபெற்ற போரின்போது கூட இவ்வாறான அளவுகளில் பாதிப்புக்கள் ஏற்படவில்லை. வன்னியில் பெரும் போர் முனைப்புப் பெற்ற காலத்தில் கூட இப்படியான சம்பவங்களை கேள்விப்படவில்லை. ஆனால் நிரந்தர சமாதானம் உருவாக்கப்பட்ட 3 ஆண்டுகளுக்குள் இவ்வறான சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமை பெரும் மன வேதனையைத் தருகிறது'' என யாழ். அரச அதிபர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இன்று நம்மிடையே அதிகரித்துக் காணப்படும் தொடர்பு சாதனங்களின் விருத்தி இதற்குக் காரணம் என்று பொதுவாகக் கூறப்படுகின்றது.

பெற்றவர்கள் தங்களின் சுகத்துக்காகப் படிக்கும் பிள்ளைகளின் கைகளில் 'கைத்தொலைபேசி' களைக் கொடுக்கிறார்கள். பிள்ளை வேண்டாதவர்களோடெல்லாம் தொடர்பைப் பேணிக்கொள்கின்றது. [illegible] பதைக் கவனிக்கப் பெற்றோர்களுக்கு நேரமில்லை. அதைவிட வசதி இருக்கிறதோ இல்லையோ, தேவை இருக்கின்றதோ இல்லையோ வீட்டுக்கு வீடு கணினி வந்துவிட்டது. பிள்ளைகள் கணினிக்கு முன்னால் அமர்ந்து கொண்டு இன்ரநெற்றில் வேண்டாத பகுதிகளுக்கெல்லாம் சென்று மேய்ந்து வருகின்றார்கள். அதே போல் தொலைக்காட்சியில் நாடகங்களின் முன்னால் பிள்ளை தவம் கிடக்கிறது.

இவை எல்லாவற்றையும் கண்டும் காணாமலும் இருக்கும் பெற்றோர்களால் பிள்ளை வழி தவறிப் போகின்றது என்பது பெரும் வேதனைக்குரிய விடயமாகின்றது. எனவே முதலில் பெற்றவர்கள் பிள்ளைகள் மீது விழிப்பாய் இருந்தால் போதும். பாதிப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிடும்.

முன்பெல்லாம் எங்களது குடும்ப அமைப்புக்கள் கூட்டுக் குடும்பமாக இருந்தன. குழந்தைகளுக்கு நல்லது கெட்டதைச் சொல்லி வளர்ப்பதற்கு வயதில் மூத்தவர்கள் இருந்தார்கள். தாத்தா, பாட்டி, பேரன், பேர்த்தி, மாமன், மாமி, சித்தி என ஒவ்வொருவரும் எந்தெந்த வரையறைக்குள் இருக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொடுத்தார்கள். அதனால் வரம்பு மீறாத உறவுமுறை ஒன்று வளர்க்கப்பட்டிருந்தது. ஆனால், இன்று தனிக்குடித்தனம், உறவுகள் பற்றிய புனிதத்தை இழக்கச் செய்கிறது. உறவுகளே குழந்தைகளைக் குதறும் அளவுக்கு இன்று இட்டுச் சென்றிருக்கின்றது.

மூத்தவர்கள் பெரியவர்களின் அன்பை உறவுமுறைகளை ஆலோசனைகளைப் பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பும் பெற்றவர்களுக்கே உரியதாகின்றது. பழமையான விழுமியங்களை, பண்பாட்டைக் கலாசாரத்தைச் சின்ன வயதிலேயே பிள்ளைகளுக்கு ஊட்டி வளர்க்க வேண்டிய கடப்பாடும் பெற்றவர்களின் கைகளிலேயே தங்கி இருக்கின்றது.

இது ஒருபுறமிருக்க பிரச்சினை என்று வந்துவிட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி என்பது சரியான முறையில் கிடைக்க வேண்டும் என்பதே எல்லோரதும் ஆதங்கமாக இருக்கின்றது.

சமூகத்தை வியாபார நோக்கமாக பார்க்காது சகல தரப்பினரும் தன்னலமற்ற சுயநலமற்ற எண்ணத்தோடு செயல்பட்டு இந்தச் சமூகப் பிரச்சினையை ஒவ்வொருவரும் தங்களது வீட்டுப் பிரச்சினையாகக் கருதி மனித மனங்களில் மாற்றம் வருமாக இருந்தால் விரைவில் இந்தப் பிரச்சினைக்கான தீர்வு எட்டும் என்பதில் ஐயமில்லை. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதனில் இராமனை காண்கிறாள் கோசலை



இலக்கியக் காட்சி 127

மட்டுவில் நல்லதம்பி

கேகய நாட்டிலிருந்து மீண்ட பரதனுக்கு அயோத்தியில் நடந்த சம்பவம் ஒன்றும் தெரியாது. தெரிவிக்காமலே அழைத்துவரும்படியே தூதுவர் பணிக்கப்பெற்றனர்.

இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்து அயோத்தியின் ஆட்சியை ஒப்படைத்துவிட்டுத் தான் தீர்த்த யாத்திரை செல்லவேண்டும் என்பதே தசரதன் எண்ணியது. பட்டாபிஷேகம் என்றதும் கைகேயியின் சூழ்வினையால் இராமன் வனஞ் செல்ல புத்திர சோகத்தால் தசரதன் இறக்க அமங்கலமான கோலத்தில் இருக்கும்போது தான் பரதன் அயோத்தியில் நுழைகிறான்.

புறநகர்ப் பகுதியிலே வரும்பொழுது பகல் வேளையிலும் உறங்கிக் கிடப்பது போல அயோத்தி அவனுக்குத் தென்பட்டது. அயோத்திக்கு என்ன நடந்தது? ஏன் இவ்வாறு அமைதியாக மயான அமைதியாக இருக்கிறது என எண்ணியவாறு கைகேயிடம் போகிறான் பரதன். கைகேயியோ எதுவும் தெரியாதவள் போல் தனது தாய்நாட்டின் உறவினர்களைப் பற்றியே கதை கேட்கிறாள். பரதன் வார்த்தை சுருங்கக் கூறிவிட்டு ''தந்தை எங்கே? அண்ணன் எங்கே? மற்றையோர் எங்கே?'' என்று அயோத்தி நகர்ப் புதினங் கேட்கிறான்.

அதற்குக் கைகேயி,

''தேனமர் தெரியலான் தேவர்
கைதொழ
வானகம் எய்தினான்; வருந்தல் நீ
என்றாள்'' என்று கம்பர் அவளது அலட்சியப் போக்கைக் காட்டுவது சிந்திக்கற்பாலது. இப்படியும் ஒரு தாய் சொல்கிறாளே! பரதனுக்குக் கோபம் பொங்கியது.

''தீ எரி செவியில் வைத்தனைய தீயசொல்
நீ அலது உரை செய நினைப்பரோ?''
என்றான் பரதன்.

பரதன் மேலும் பலவாறு ஏசி அழுது இராமன் எங்கே என்று கேட்க,

''வெவ்வுரை வல்லவள் மீட்டும்
கூறுவாள்
தெவ் அடுசிலையினாய் தேவி தம்பி
என்று
இவ்விருவோரொடும் கானத்தான்''
என்றாள். ''அண்ணன் இராமன் ஏன் போனான்? தந்தை இறந்த பின்னரா, இறக்க முன்னரா போனான்'' என்று தொடர்ந்து கேட்கிறான் பரதன்.

''போயது தாதைவிண் புக்க பின்னரே?
ஆயதன் முன்னரோ? அருளுவீர்
என்றான்'' என்பது கம்பர் கூற்றாகும். இராமன் வனம் போனது பகைவரால் பெற்றோரால் அன்றித் தெய்வத்தால் ஆகவில்லையெனில் அவன் வனம் போகக் காரணம் என்ன?'' என்று மேலும் வினவுகிறான் பரதன்.

இவ்வளவு தூரம் பரதன் கேட்டபின்னரே இதற்கெல்லாம் காரணம் தானே தான் என்பதை வெளிப்படுத்துகிறாள் கைகேயி.

''வாக்கினால் வரந் தர கொண்டு,
மைந்தனைப்
போக்கினேன், வனத்திடை; போக்கி
பார் உனக்கு
ஆக்கினேன்; அவன் அது பொறுக்க
லாமேயால்
நீக்கினான் தன் உயிர்; நேமிவேந்து''
என்கிறாள்.

புத்திர சோகத்தால் இறப்பது என்ற சாபம் ஏற்பட்ட சம்பவத்தை கோசலைக்குத் தசரதன் கூறியிருக்கிறான். ஆயினும் கைகேயியிடம் இதுபற்றிக் கூறியிருக்கவில்லை என்பதை வாசகர் அறிந்து கொள்ள வேண்டும்.

எனவே கைகேயி தான் கேட்ட 'வரத்தால்தான் இவ்வளவும் நடைபெற்றன என்பதை ஒத்துக்கொண்டு கதைசொல்லவே பரதன் தாயைக் கொல்லாத குறையாகத் தன் கோபத்தைக் காட்டி ஏசுகிறான்.

பின்பு பரதன், ''தந்தையைக் கொன்றதும் அண்ணனைக் காட்டுக்கு அனுப்பியதும் நான் என்பதால் அதிலே நின்பிழை உண்டோ? பழி உண்டோ? இல்லை. ஆகவே எனது பழி நீங்க நான் கழுவாய் தேடவேண்டும். எல்லாம் இப்படி நடக்க யான் இங்கு இருந்து நாட்டை ஆளவேண்டுமா? இதற்காகத் தான் பரதன் அவர்களை வனம் அனுப்பினான் என்ற பழியை நான் சுமப்பதா?''

இவ்வாறெல்லாம் கூறி அழுதுவிட்டுத் தாய் கோசலையிடம்போய் அவளது காலைக் கட்டிக்கொண்டு அழுது புலம்பினான்.

''எந்தை எங்கே? என் முன்னவன்-இராமன் எங்கே? யான் இதற்காகவா இவ்வுலகில் இருக்கிறேன்?

கொடியவளான என்தாய் வயிற்றில் பிறந்த யான், இன்று பெரும் கள்வனானேன். இத்துயரம் என்னால் பொறுக்க முடியவில்லை. யானும் உயிர் துறப்பேன். எங்களது தொன்மை வாய்ந்த குலம் இப்பரதனால் பழிக்கு ஆளானது என்றுதான் உலகம் சொல்லும். தந்தை தசரதனை வானகத்துக்கு அனுப்பி அடுத்த தலைமகனைக் கானகத்துக்கு அனுப்பி இரு கண்களையும் இழந்த நாடு போல அயோத்தியை ஆக்கின பழி என்மேல் சுமத்தப்பட்டுள்ளது''

இவ்வாறெல்லாம் புலம்பும் பரதனைத் தேற்ற வழியின்றித் தவித்த கோசலை ''நின்னிடம் எந்தப் பிழையும் கண்டிலேன்; இது கை கயர் கோமகள் செய்த சூழ்ச்சியால் விளைந்தது என்பதை நீ அறியாய் போலும்?'' என்று சொல்ல ''அப்படியானால் என்தாய் தேடிய பழியினால் நான் நரகம் அடைவேனாக'' என்று மேலும் அழுகிறான் பரதன் எனக் காட்டுகிறார் கம்பநாடர்.

அப்பொழுது அந்தப் பரதனை இராமனாகக் காண்கிறாள் கோசலை எனக் காட்சிப்படுத்துகிறார் கம்பர்.

''தூய வாசகம் சொன்ன தோன்றலை
தீய கானகம் திருவின் நீங்கி, முன்
போயினான் வரக்கண்ட பொம்மலாள்
ஆயகாதலால் அழுது புல்லினாள்
(கம்பர்) (பொம்மல்- மகிழ்ச்சி)

உன்னைப் போன்று உங்கள் குலத்து முன்னுள்ளோர்களும் இல்லை பின்னும் இல்லையெனக் கூறிப் பரதனை வாழ்த்துகிறாள் கோசலை.

அந்த நேரம் வசிட்ட முனிவர் அங்கே வருகிறார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

# சிறகொடிந்த பறவைக்கு...!




சின்னத்துரை கிருஷாந்தி
புலோலி.

உயிரை விடுவதே அவளிடம்
எஞ்சியுள்ள முடிவென அவளைச் சூழ்ந்து வந்த
சோதனைகள் உணர்த்தின.

அன்று ஞாயிற்றுக்கிழமை. விடுமுறை நாள் என்பதனால் ரேணுகா கடற்கரையில் நின்றாள். தனது வேதனைகளை கடல் அலைகளுடன் பகிர்ந்து கொண்டு மனம் ஆற ஆசைப்பட்டாள். கடலலை ஓசையையும் கடந்து அவளது மன அலைகளின் ஓசையே அவளை, அவளின் மௌனத்தை ஆட்படுத்திக் கொண்டது. கடந்த கால நினைவுகள் அவளின் கண்வழி மனக் காட்சிகளாகி அந்த மாலைப் பொழுதின் அழகைக் குலைத்தன.

இருள் பூசிக் கொண்டே நேரங்கள் கடந்தன. தனது கடமையை முடித்துச் செல்லும் ஆதவன், அழகிய வானம், புல், பூண்டு, செடி கொடி எல்லாமே அவளது சோகக் கதைக்குள் மூழ்கி இருண்டன.

அமைதியான கிராமம். கிராமத்தின் நடுவே ஒரு சிறிய வீடு. கூட்டில் பறவைகள் போல் சந்தோஷமாக வாழ்ந்தது ரேணுவின் குடும்பம். அன்பான அம்மா, பொறுப்புள்ள அப்பா, பாசமான அண்ணா என அனைவருடனும் அன்புடன் சேர்ந்து வாழ்ந்தவள் ரேணுகா. நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த அவளின் தந்தை பாடசாலை ஆசிரியராகப் பணிபுரிபவர். நேர்மை, கடமை என்பவற்றைக் கண்ணாகக் கடைப்பிடிப்பவர்.

தனது குடும்பத்துக்காக அயராது உழைப்பவர். தனது குழந்தைகளை நல்லபடியாகப் படிப்பிக்கவே ஆசைப்பட்டார். [illegible] படிப்பித்தார். [illegible] இருவருமே பல்கலைக்கழகப் படிப்பை முடித்து வேலையில் சேர்ந்தனர். விடுமுறை நாள்களில் கோயில், சினிமா, பீச் என அவர்களின் வாழ்க்கை மகிழ்ச்சியாய்ப் போய்க் கொண்டிருந்தது. ரேணுவுக்கு வயது இருபத்தாறு நெருங்கிய போது தந்தை வரன் தேட ஆரம்பித்தார். ஒரு நல்ல வரன் கிடைத்த போது வீட்டார் அனைவருமே ஆனந்தமுற்றனர். ஆனால் பெண்களின் திருமணத்துக்குத் தடையாக உள்ள சீதனம் எனும் பேய் ரேணுகாவின் திருமணத்திலும் தலை விரித்தாடியது. தனது மகளுக்காக அவளின் பெற்றோர் சேர்த்து வைத்த பணம் முழுவதையும் கொடுத்து ரேணுவின் திருமணத்தைக் கோலாகலமாக நடத்த அவர்கள் சம்மதித்தனர். எனவே மாப்பிள்ளை வீட்டாரும் தாம் கேட்ட பத்து லட்சம் நகை, வீடு, என்பவற்றுடன் ரேணுகாவைத் தமது மருமகளாக்க மனம் கொண்டனர்.

தமது எண்ணங்கள் நிறைவேறப் போகிறது என்று ரேணுகா வீட்டார் சந்தோசத்தில் குதுகலித்தனர். மிக தடல்புடலாக வீட்டில் அவர்களின் திருமண ஏற்பாடுகள் நடைபெற்றன. உற்றார், உறவினர் அனைவருமே அந்த நல்ல நாள் நெருங்குவது கண்டு ரேணுகாவின் வீட்டில் ஒன்று கூடினர். ரேணு அந்தத் திருமண நாளை எதிர்பார்த்து மிகவும் சந்தோஷமாக இருந்தாள். அந்த நாளுக்கு இன்னும் இரண்டு நாள்களே இருந்தன. தந்தை முரளி ரேணுவின் திருமணத்தைக் கொண்டாடி மகிழ வங்கியில் பணம் எடுக்கப் புறப்பட்டார். பணத்தை எடுத்துக் கொண்டு வீடு நோக்கிப் பயணிக்க எண்ணித்

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கம் தோன்ற வழி

ரம்யன்

உலகப் படத்தில் அதுவும் ஆஸியாவை மட்டும் எடுத்துக் கொண்டு பார்த்தாலும் இலங்கைத் தீவானது இந்திய உப கண்டத்தின் தெற்கில் இந்து மா கடலில் ஒரு சுண்டைக்காய் அளவில்தான் மிதந்து கொண்டிருக்கிறது.

இவ்வளவு சிறிய நாட்டில் பென்னம் பெரிய நாடுகள் எல்லாம் தலையிட்டு நியாயம் தீர்க்க ஓடிவரவேண்டியிருக்கிறது என்றால் அதற்கு காரணம் என்ன?

மனிதனுக்கு இருக்கும் இரு கைகளில் ஒன்றில் ஐந்து விரல்கள். இந்த ஐந்தும் ஒழுங்காக அமைந்திருப்பது அந்தக் கைக்கு அழகைத் தருகிறது. கை சிறப்பாகப் பயன்படுவதற்கு அந்த ஐந்து விரல்களும் ஒத்துழைக்கின்றன. அதில் ஒரு விரல் போய் விட்டாலும் செயற்திறன் குறைந்து விடும். அதுமட்டுமல்ல அந்த ஐந்து விரல்களும் அது அதற்குரிய இடத்தில் அமைந்து அதற்குரிய பணியை ஆற்றிட வேண்டும். பெருவிரல் இருக்கிற இடத்தில் சுண்டு விரலும் சுண்டு விரல் இருக்க வேண்டிய இடத்தில் சுட்டு விரலும் மாறி மாறி இருக்குமானால் கை எப்படி இருக்கும், அதன் செயற்பாடு எப்படி இருக்கும்.

**அசை போட ஒரு விடயம் 21**

இது ஒரு சிந்தித்துப் பார்க்க வேண்டிய விடயம் அல்லவா? இதைத்தான் ''விரலுக்கேற்றாற் போல்தான் வீக்கம் இருக்க வேண்டும்'' என்று இன்னொரு வகையில் சொல்வார்கள். சுண்டு விரலின் வீக்கம் அந்த விரலுக்கு அளவாகத்தான் இருக்கும்- இருக்க வேண்டும். பெரு விரலைப் போல் வீங்க வேண்டும் என்று சுண்டுவிரல் ஏங்குமானால் அது பொருத்தமாக இராது. வெடித்துச் சிதறினாலும் சிதறிவிடும்.

நமது நாடு சிறிய நாடுதான்- மிஞ்சினால் ஒன்றரைக் கோடி மக்கள் தான் இருக்கிறார்கள். பெரிய நாடுகளைப் போல பல மொழிகளோ பல இனங்களோ பல கலாசாரங்களோ இல்லை. குறிப்பிட்டுச் சொன்னால் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் மற்றும் மலே இனத்தவர்கள் வசிக்கின்றனர். இவர்கள் பேசும் மொழிகள் இரண்டே இரண்டு, கூடினால் மூன்று என்று வைத்துக் கொள்ளலாம். அவரவர்கள் பின்பற்றும் சமயங்களைச் சார்ந்து கலாசாரங்களும் அமைந்துள்ளன.

இந்த நிலைமையில் மிக எளிதாகவும் புரிந்துணர்வோடும் இந்த நாட்டின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு சகல மக்களும் அவரவர் மொழியையும், கலை கலாசாரங்களையும் பேணிக்கொண்டு அமைதியாக இந்த நாட்டை உலகுக்கோர் உன்னத முன்மாதிரியாக நிலைபெறச் செய்ய முடியாமல் போனமை கவலைக்குரியது. அந்த அளவுக்கு நமது முன்னோருக்கு ராஜதந்திரம் இல்லாமல் போய் விட்டது.

ஓர் இனத்தை- அதன் கலை கலாசாரத்தை, மொழியை அழிப்பதன் மூலம் பெரும்பான்மையோர் தம்மையும், தம் மொழியையும் கலை கலாசாரத்தையும் வளர்த்துக் கொண்டு ஏனையவர்களை காலில் போட்டு மிதித்து சதாகாலமும் அடிமைகளாக வைத்துக் கொள்ளலாம் என்று நினைத்து மேற்கொண்ட காரியங்கள் இன்று சர்வதேச பேரவைகளில் கேலியாகப் பேசப்படுகின்ற அளவுக்கு போய்விட்டது.

நாட்டுக்கும் நாட்டின் தலைவர்களுக்கும் இன்று உலக அளவில் ஏற்பட்டுள்ள தோல்வியானது இன்றைய தலைமுறையினரால் உருவாகிக் கொண்ட நிலைமையன்று. இந்த நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்த காலத்தில் இருந்து அந்த சுதந்திரத்தை ஏனைய இனங்களோடும் முறையாகப் பகிர்ந்து கொண்டு அனுபவிப்பதற்கான மனப்பாங்கு பெரும்பான்மைத் தலைவர்களிடம் இல்லாமல் போனமைதான் காரணம். இன்றும் கூட அந்த மனப்போக்கு மாறிவிட்டதாகத் தெரியவில்லை.

போர் முடிந்து ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் முடிந்துவிட்டன. அந்தப் போரில் பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டுவிட்டார்களே, எண்ணிறந்தவர்கள் காயமடைந்துள்ளார்களே, வீடு வாசல்களை விடுத்து காடுமேடாகத் திரிந்து ஆயிரக்கணக்கானவர்கள் ஆண், பெண், சிறுவர், வயோதிபர் என்று சொல்லொணாத் துயரத்துக்குள்ளாகி இன்னமும் மீள முடியாமல் தவிக்கிறார்களே. அந்த மக்களுக்காக இந்த அரசாங்கத் தலைவர்கள், இந்த அமைச்சர்கள் ஒரு வார்த்தை ஒரே ஒரு வார்த்தையில் வருத்தம் தெரிவித்திருப்பார்களா? என்று கேட்டால் இல்லை என்றுதான் பதில் வருகின்றது.

அந்த அபிவிருத்தி, இந்த அபிவிருத்தி, வீதித் திருத்தம் என்றெல்லாம் பேசுகிறார்கள். இவையெல்லாம் அழிந்தமைக்கு போர்தான் காரணம் என்பதை உணர்ந்து அந்தப் போர் நடந்தமைக்கான காரணத்தினை இதுவரை ஆராய்ந்திருப்பார்களா என்றால் அதற்கும் இல்லை என்பதுதான் பதில் வரும்.

போருக்கான அதன் அடிப்படைக் காரணம் தெரிய வேண்டுமானால் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது முதல் தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைப் பற்றி ஆராய வேண்டும். எல்லாவற்றுக்கும் புலிகள் தான் காரணம் என்று எழுந்தமானமாகக் கூறிவிட்டால் எதனையும் மறைத்துவிட முடியாது. அந்தப் புலிகளும் அவர்களைப் போன்ற ஆயுதம் தூக்கிய ஏனைய போராளிகளும் ஏன் தோன்றினார்கள், எப்படித் தோன்றினார்கள் அதற்கு யார் காரணம் என்று எண்ணிப் பார்க்கிறார்கள் இல்லை. அவ்வாறு செய்தால் அதற்கான காரணத்தைக் கண்டுபிடித்து- தீர்வு கண்டால் இந்த நாட்டில் மிக இலகுவாக தேசிய நல்லிணக்கத்தைத் தோற்றுவித்து விடலாம்.

அமெரிக்கா தீர்மானம் கொண்டு வரவேண்டியதுமில்லை, அந்தத் தீர்மானத்தை முறியடிக்க அரசாங்கம் குத்திமுறியவும் தேவையில்லை.

போர் முடிந்த கையோடு தேசிய நல்லிணக்கத்துக்கான முயற்சிகள் ஆரம்பிக்கப் பட்டிருக்க வேண்டும்.

அமெரிக்காவும் பிரிட்டனும் கனடாவும் ஆஸ்திரேலியாவும் அதனைச் சுட்டிக்காட்டும் வரை காத்திருக்க வேண்டியும் இருந்திருக்காது.

அவ்வளவுக்கு ஏன், போரில் ஒரு பங்காளியாக ஆயுதங்களும் ஆலோசனைகளும் வழங்கிய பக்கத்து நாடான இந்தியாவுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளே நிறைவேற்றப்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஷ்மன் கிரியெல்ல இதுபற்றி பின்வருமாறு இடித்துக் காட்டியுள்ளார்.

''தமிழ்நாட்டில் உள்ள அனேகமான எல்லாக் கட்சிகளுமே இந்திய மத்திய அரசை அழுத்தத்துக்குள்ளாக்கியமை ஆச்சரியத்துக்குரியதல்ல. இது ஏன் நடந்ததென்றால் இலங்கை அரசாங்கம் தேசிய பிரச்சினை தீர்வு தொடர்பாக 13 ஆவது திருத்தத்தின்படி அரசியல் தீர்வு காணப்படும் என்று பொய்யான வாக்குறுதிகளை வழங்கியிருந்தமைதான்'' என்றார் அவர்.

சீனாவைக் காட்டி இந்தியாவை அச்சுறுத்தலாம் என்ற ராஜதந்திரம் எல்லாக் காலங்களிலும் பலிக்காது. ஏனென்றால் இந்தியாவும் காலம் வரும் வரை காத்திருந்து காலை வாரிவிடும் என்பது இப்பொழுது வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

நெஞ்சத்தில் நிலைத்த நினைவு ''நெஞ்சில் நிலைத்த நினைவுகள்''

இந்த வசனத்தை அனேகர் பயன்படுத்துவதை பார்க்கின்றோம். குறிப்பாக காலமாகி விட்ட தமது உறவுகளின் நினைவாக வெளியிடும் அறிவித்தல்களில், விளம்பரங்களில் இந்த அழகான சொற்றொடர் பயன்படுத்தப்படுவதுண்டு. இதில் வரும் மூன்று மோனைகளும் அர்த்தமுள்ள சொற்கள்.

நெஞ்சில் என்பது மனதைக் குறிக்கும். இந்த மனம் மனிதனின் அனுபவங்களை எல்லாம் சேகரித்து வைத்திருந்து அவன் விரும்பும் நேரங்களில் தன்பாட்டில் திரைப்படம் போல மீளவும் காட்டி உணர்வு கொள்ளச் செய்யும். இந்த நெஞ்சு உண்மையில் ஒரு திரை போன்றதுதான். பழைய நினைவுகள் அந்த திரையில் ஓடும் போது மனிதன் ஓவியனாகி அவைகளை ஓவியமாகத் தீட்டுவான். ஓவியம் கைவராதவன் கவிதையாக வடிப்பான். அதுவும் முடியாதவன் வசனமாக ஒப்புவிப்பான். எழுத்தாற்றல் உள்ளவன் எழுதித்தள்ளுவான். இந்தத் திரை எல்லாருக்குமே தெளிவாக அமைந்து விடுவதில்லை. அதனைத் தெளிவாக வைத்துக் கொள்வதற்குத்தான் பேச்சாளர்கள், எழுத்தாளர்கள் போன்றோர் குறிப்புகளை வைத்துக் கொள்கிறார்கள். இந்தக் குறிப்புகளை வைத்துக்கொண்டு மிகச்சரளமாக மேடைகளில் பலர் பேசுவதைப் பார்க்கின்றோம். நெஞ்சுத்திரை சிலருக்கு மிகத் தெளிவாக இருப்பதுண்டு. இவர்களுக்கு குறிப்பு ஒன்றும் தேவையில்லை. கடல் மடை திறந்தது போல் பேசுவார்கள். பேச்சை நிறுத்துவதே பெரும் சங்கடமாக இருக்கும்.

இன்னும் சிலர் இருக்கிறார்கள் இவர்களிடம் சாதாரணமாகப் பேச்சு கொடுத்து விட்டால் போதும் நிறுத்தமாட்டார்கள். பேச வந்தவரையே மடக்கி தம் நெஞ்சில் கிடப்பதை எல்லாம் கொட்டிவிடுவார்கள். இவ்வாறு இந்த நெஞ்சு என்ற திரை மனிதர்களுக்குப் பெரும் உதவியாக இருக்கிறது.

நெஞ்சில் நிலைத்துப் போகும் விடயங்களும் உண்டு, நிலைக்காமல் மறந்து போகும் விடயங்களும் உண்டு. ஒருவர் நம்மோடு நெருங்கிப் பழகுகிறவராகவும், நெருங்கிய உறவினராகவும், உடன் பிறந்த சகோதர சகோதரிகளாகவும் ஏன் பெற்றோராகவும் இருந்துவிட்டால் அவர்கள் பற்றிய நினைவுகள் நிச்சயமாக நெஞ்சில் நிலைத்துவிடும். அதனால்தான் அப்படியானவர்களைப் பற்றி எழுதும் போது நெஞ்சில் நிலைத்த நினைவுகள் என்று எழுதுகிறார்கள். ✱

# கிரிக்கெட் மட்டைகள் எங்கே உற்பத்தியாகின்றன?

அருணா தருமலிங்கம்,
வந்தாறுமூலை கிழக்கு, செங்கலடி.

கிரிக்கெட் போட்டியில் பிரபல்யமான விளையாட்டு உபகரணமாகத் திகழ்வது கிரிக்கெட் மட்டை. இதனை சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கின்ற செயின் புளோக், பஷீர் அக்ரம், இன் சமாம் உல் ஹக், மஹேல ஜெயவர்த்தனா, டிராவிட் போன்றவர்களும் உறுதிப்படுத்துகின்றனர்.

உலகளாவிய ரீதியில் கிரிக்கெட் மட்டை தயாரிக்கும் தொழிற்சாலைகள் மும்பாய், சென்னை, லண்டன், மெல்போன் போன்ற மாநகரங்களில் காணப்படுகின்றன. எமது அண்டைய நாடான பாரதத்தில் குறிப்பாகத் தென் இந்திய மாநிலத்தில் பல்வேறு தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டு திறம்பட இயங்கி வருகின்றன. அவற்றில் ஒன்று கோவை மாவட்டத்திலுள்ள கிரிக்கெட் மட்டை தயாரிக்கும் ஆலை.

கோவை மேட்டுப் பாளையம், தேசிய நெடுஞ்சாலையிலுள்ள பன்னிமடை என்னும் நகரில் இந்தத் தொழிற்சாலை அமைந்துள்ளது. அக்கால கட்டத்தில் இலங்கையில் கடதாசி(Paper), சிமெந்து (Cement) போன்றவற்றுக்கு பெயர்போன இடங்களாக வாழைச்சேனையும் காங்கேசன்துறையும் திகழ்ந்ததை நாமறிவோம். அதேபோன்று கிரிக்கெட் மட்டைக்குப் பெயர் போன இடமாக பன்னிமடை திகழ்கின்றது.

இதற்குப் பிரதான காரணம் தென்னிந்தியாவில் முதல் கிரிக்கெட் மட்டைத் தொழிற்சாலை இங்குதான் நிறுவப்பட்டது.



இந்தக் கிரிக்கெட் மட்டைத் தொழிற்சாலையை இங்கு நிறுவியவர் கேரள ரஞ்சி கிரிக்கெட் வீரரென்றும் அறிய முடிகிறது.

கிரிக்கெட் மட்டை தயாரிப்பதற்கான மரத்தை பிரிட்டன், இந்தோனேசியா, போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றனர். இங்கு ஐ.சி.சி.யின் விதிமுறைப்படி தரக் கட்டுப்பாட்டிற்கு (Quality control) முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட நிலையில் கணிசமான அளவு கிரிக்கெட் மட்டைகள் தயாரிக்கப் படுகின்றன.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கான வீரர்கள் பாவனைக்கென்று பன்னி மடையிலிருந்து கிரிக்கெட் மட்டைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு கிரிக்கெட் வீரர்களும் அவர்களது 'ஸ்ரைலுக்கு' ஏற்ப கிரிக்கெட் மட்டையைத் தயாரிக்கும்படி கண்டிப்பான நிபந்தனைகளை விதிப்பதுண்டு. இதனால் கிரிக்கெட் மட்டை உற்பத்தியாளர்கள் சிரமத்தை எதிர்நோக்க வேண்டிய சந்தர்ப்பங்களுக்கு இருக்கத்தான் செய்கின்றன.

இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து பிரிட்டன், தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள் போன்ற நாடுகளிலுள்ள கிரிக்கெட் வீரர்கள் இங்கு உற்பத்தி செய்யும் மட்டைகளை விரும்பிப் பயன்படுத்துவார்கள்.


இங்கு உற்பத்தியாகும் கிரிக்கெட் மட்டைகள் மூவாயிரம் முதல் பதினோராயிரம் ரூபா வரையான இந்தியப் பண மதிப்பீட்டுக்கு கிடைப்பதாகவும் அறிய முடிகிறது. சர்வதேச சந்தையில் இதன்விலைமேலும்அதிகரிக்கலாம்.

பிரிட்டனிலுள்ள 'இங்கிலீஷ்வில்லே' மரங்களைக் கிரிக்கெட் மட்டை தயாரிக்கப் பயன்படுத்தும் அதேவேளை காஷ்மீர் பில்லோ மரங்களையும் இந்த உற்பத்திக்குப் பயன்படுத்தலாம் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

சிக்ஸர் அடிப்பதற்கு கிரிக்கெட் மட்டையின் தரமும் ஒரு விதத்தில் மறைமுகமாகத் துணை புரிகிறது என்ற கருத்துக்களும் உள்ளன. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவிகளும் தேவதையும்





ஆறு அழகான மலைகள் சூழ்ந்த கிராமம். மலைகளின் ஊடாக சலசலவென பாய்ந்து ஓடும் ஆற்றின் கரையோரத்தில் இரண்டு குருவிகள் ஒரு மரத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தன.

ஒரு சமயம் பெண் குருவி மூன்று முட்டைகள் இட்டது. முட்டைகளிலிருந்து குஞ்சுகள் எப்போது வெளியேவரும் என எண்ணிக் குருவிகள் இரண்டும் ஆவலாகக் காத்திருந்தன.

ஒருநாள் ஆற்றில் நீரோட்டம் அதிகமாக இருந்தது. ஆற்றில் அலை உயர்ந்து கொண்டே இருந்தது. காற்றும் வேகமாக வீசிக் கொண்டிருந்தது. அப்போது ஓர் அலை மேலெழுந்து குருவிகளின் கூட்டையும் அதோடு சேர்த்து உள்ளிருந்த முட்டைகளையும் ஆற்றுக்குள் தூக்கிப் போட்டது. ஆற்று வெள்ளத்தில் முட்டைகள் அடித்துச் செல்லப்பட்டன. இதை சற்றும் எதிர்பாராத குருவிகள் இரண்டும் மனம் வருந்தி அலறின. ஆற்று தேவதையை நோக்கிப் பிரார்த்தனை செய்தன.

எனினும் ஆற்று தேவதை அவைகளின் பிரார்த்தனைக்கு செவிசாய்த்ததாகத் தெரியவில்லை. மனம் வருந்திய குருவிகள் தங்களது சிறிய அலகுகளால் ஆற்று நீரை எடுத்துக் கரையில் கொட்டிக் கொண்டிருந்தன. இப்படியே நாள்கள் பல சென்றன.

ஒருநாள் அந்த வழியே வந்த நாரதர், "குருவிகளே, என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். குருவிகள் நடந்ததை விளக்கிக் கூறின. குருவிகள் கூறிய கதையைக் கேட்ட நாரதர் சிரித்துக் கொண்டே, "நீங்கள் செய்யும் இந்த முயற்சி வீண்! ஒருநாளும் ஆற்று நீர் முழுவதையும் உங்களால் எடுத்துவிட முடியாது" என்று கூறிவிட்டுச் சென்றார்.

அவர் கூறியதை எண்ணி மனம் வருந்தாமல், தாங்கள் செய்து கொண்டிருந்த பணியைத் தொடர்ந்து செய்தன அந்தக் குருவிகள். எத்தனை நாள்கள் தொடர்ந்து செய்தாலும் ஆற்றுநீர் குறைந்தபாடில்லை. திடீரென்று ஒருநாள் ஆற்றின் நடுவே ஒரு அழகிய தேவதை தோன்றினார்.

தேவதையின் முகத்தில் புன்னகை. தேவதை பரிவுடன் குருவிகளிடம், "குருவிகளே, நான்தான் ஆற்று தேவதை; இதோ பெற்றுக் கொள்ளுங்கள் உங்களது முட்டைகளையும் கூட்டையும். நான் இதை உங்களிடம் ஒப்படைத்ததற்குக் காரணம், நாரதர் உங்களை எள்ளி நகையாடினாலும், நீங்கள் விடாமுயற்சியுடனும் மன உறுதியுடனும் உங்களது பணியைத் தொடர்ந்து செய்ததுதான்" என்று கூறிவிட்டு முட்டைகளையும் கூட்டையும் ஒப்படைத்துவிட்டு மறைந்து போனது. சிறார்களே விடாமுயற்சி என்றுமே வெற்றியை அள்ளி வழங்கும்.

## விடை தெரியுமா? 152

### உங்களுக்கும் பரிசில்கள்

1. விண்வெளியில் நடந்த முதல் மனிதன் யார்?
2. உடல் ஊனமுற்றோர் தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகிறது?
3. முதன் முதல் நினைவுத் தபால் தலையை வெளியிட்ட நாடு எது?
4. தொலைக்காட்சியில் பயன்படுத்தப்படும் அடிப்படை நிறங்கள் எவை?
5. பாம்பு எதன் மூலம் வாசனையை அறிகிறது?

### விடைகள் 150

1. வியட்நாம்
2. கரியன், வீட்டுக்காகம், காகம்
3. 1827 ஆம் ஆண்டு
4. நவகாளி
5. ஆஸ்திரேலியா


### வெற்றி பெற்றோர் விவரம் (150)

★ க.கபிலன், தரம் -9, உடுவில் மான்ஸ் ம.வி.
★ சி.சயன், தரம்-3டி, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
★ சி.டல்றிகா, தரம்-8, மருதங்கேணி இ.த.க. பாடசாலை
★ கு.மாதங்கி, தரம்-4எ, இணுவில் இந்துக் கல்லூரி
★ சி.வனோஜா, தரம் - 3, சாவகச்சேரி, இந்து ஆரம்பப்பாடசாலை

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 31.03.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

## இலகுவில் வசியமாகும் மயில்



இலங்கை, இந்தியா, மியன்மார் ஆகிய நாடுகளில் மட்டுமே மயிலினம் உள்ளது மயிலின் பரம விரோதி பூனை, புலி, சிறுத்தை. சிறுத்தைக்கு மயில் இறைச்சி என்றால் அதிகம் பிரியம். புலி, சிறுத்தை போன்ற விலங்குகள் வண்ணத்தோகை கொட்ட மயில்களைப் பார்த்ததும். அவைகளின் விழிகளையே இமை வெட்டாமல் பரிவுடன் பார்த்தே வசியப்படுத்திவிடும். மயில் சுயநினைவை இழந்து சிலை போல் நின்றபடியே இருக்கும்போது அவை மயிலைப் பாய்ந்து ருசிபார்த்து விடுகின்றன.

சா.பபிதா
யா.கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வி.

## இவற்றின் தந்தையர்

கணினி - சாள்ஸ் பவேஜ்
மின்சாரம் - மைக்கல் பரரே
அரசியல் - அரிஸ்ரோட்டில்
பொருளியல் - அடம்ஸ் சுமித்
மருத்துவம் - கிப்போ கிறட்டிஸ்
கணக்கியல் - லூக்கா பேசியொலி
சமூகவியல் - மார்ஸ் வெபர்
சாரணர் இயக்கம் - பேடன் பவல்


சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

## நீர் வீழ்ச்சி


ஊழி முடிந்திடும்
ஓசை எழுந்திட
உலகு நடுங்கிடவே
ஆழி கவிழ்ந்தது
போல விழுந்திடும்
அருவியிதற் புதமே!
சிதறிய திவலைகள்
சிவனுடைக் கண்பொறி
சினந்தது போல் எழுமே
அதிரும் இசைக் கழல்
அன்னையின் கூத்தென
ஆடிவரும் புனலே

சா.பபிதா,
யா/ கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வி.




ச.தக்ஷிகன்
கொக்குவில் இந்துக் கல்லூரி




கே.விதுர்சனா
சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை



கே.விதுர்சனா
சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை



நா. பதுஷன்
கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வி.



த.அனுஜிற்றா
யா/ ஜோன் பொஸ்கோ



வி.ஜோன்சன்
யாழ்.மத்திய கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசுரனும் அமரனும்



பந்தக் கால் நட்ட நாள் முதலாய்,
'அந்தநாள்' ஏறியிருந்தது இமைகளில், எதிர்பார்ப்பாய்!
இவ்வகைக் 'களரி' ஊருக்குப்புதிசு!
பழசுகளுக்கு பத்தோடு ஒன்றாயும்,
இளசுகளுக்கு இனிமேல் இனிதாயும் ,
கனவுகளை இரவல் கொடுத்தது
'கூத்து விளம்பரம்',

வேலி வரிச்சுகளிலும் செருகிக் கிடந்தது
கனல் வசனங்கள், அனல் காட்சிகள்,
தினவெடுத்த தோள் 'நடிகர்கள்',
புனல் வழி கண்ணுடை நேயர்கள்
கூடிக் கிடந்தனர்

அசுரன்-கொடூரன்!
பிள்ளைக் கறி தின்னி,
பெண்ணுடல் விரும்பி!
நிலம் அவாவிப் பேய்க்குணம் அவனது!
'ஊரடித்து' உலையிட்டுக் காய்ச்சி
உண்பதே உற்ற பணி!

அமரன்-'மேடைக்கு' நல்லவன்!
மீட்பன் மாதிரி , மேனி மினுக்கி!
போன பருவத்துக் கூத்தொன்றில்,
இவனை, ''அசுரனாய் நடித்து அசத்தினான்'' என்பதாய்,
ஊர்க்காதில் கடித்தார்கள் யாரோ?
அவனை, இவன் வதைப்பதே -வரிக்கதை


மொத்தவூரும், மேடைமுன் வந்த பின்னே
அண்ணாவியாரும் , பாட்டுக்காரரும்
பக்கவாத்தியரும் , ஒப்பனைக்கிழவியும்
மறைப்புக்குள் வந்தனர்!

பேசிடப் போகும், வசன வாள்கள் ,
முன்னோட்டமாய் மின்னின!
அசுரனின் தலை விழும், அபூர்வக் காட்சி
வெண்படலத்திலிருந்து, விழித்திரைக்கு நகர்ந்தது!
கால் முடியிடுக்கில், கரண்டடித்தது!


அமர ஆண்மை-
யாண்டும் எய்தும் எழுச்சிப் பொருள்!
திரை திறப்பதாய் இல்லை?
தண்ணி குடிக்க எழும்பி, தற்செயலாய் விலக்கிய
ஒப்பனையறைப் பழஞ்சீலை அப்படியே இருக்க
பொத்தல் விழுந்து கிழிந்தது, நம்பிய நெஞ்சம் !

...அசுரனின், கடைவாய்ப் பற்களுக்கு
இரத்தம் பூசிக் கொண்டிருந்தான் அமரன்??

-அபிதவன்.



# உலகம்



அமைதியானவனாக வாழ்
உலகம் உன்னை அடக்கும்
நேர்மையானவனாக வாழ்
உலகம் உன்னைத் தண்டிக்கும்
நீதியானவனாக வாழ்
உலகம் உன்னை அநீதிக்கு இட்டுச் செல்லும்
உண்மையானவனாக வாழ்
உலகம் உன்னைப் பொய்யன் ஆக்கும்
மனிதனாக வாழ்
உலகம் உன்னை மிருகம் ஆக்கும்.

கி.ஜெ.ஷென்
கிளிங்ரன்

# செந்தமிழ்



சங்கத்திலே பிறந்து
சாகாவரம் பெற்று வாழும் என் தமிழே
பல்லவர் காலத்தில் பக்தியாய்
பாரினில் தவிழ்ந்த பண்புத் தமிழே
சோழர் காலத்தில் காவியமாய்த் தவழ்ந்தாய்
நாயக்கர் காலத்தில்
சிலேடை கலந்து வாழ்ந்தாய்
நவீன இலக்கியத்தில் நயப்புடன் வாழ்ந்தாய்
நானிலம் மீதிலே நற்றமிழாய் வாழ்கிறாய்
செம்புலத்து படர் நீர் போல்!
செந்தமிழாய் மாநாடு கண்டாய்
செவிக்கினிய செய்திகளை
சேர்க்கின்றாய் என்னருகே
மண்ணுலகம் உள்ளவரை
விண்ணுலகம் வாழும் வரை
சிந்தை நெஞ்சம் உள்ளவரை-பல
விந்தை நீ செய்து கொண்டு
செம்மலையாய் வாழ்கின்றாய்
செந்தமிழாம் என் தாயே
இனிதே நீ வாழ்க!..

கி.துஸ்யந்தினி

# இங்கே !

எங்கட ஊருக்கு
திரும்பினோம் யுத்தத்தில்
தப்பிப்பிழைந்தவர் மட்டும்

கண் மூடிக்கிடக்கிறது
வயல் வெளி
குண்டடிபட்டு இருக்கிறது
பலாமரமும் படித்த பள்ளியும்
கும்பிட்ட கோயிலும்
இடிந்து...
கூவையும்
கோட்டானும் தான்
எஞ்சி வாழ்கின்றனவோ?
எங்கோ சத்தமிட்டு கேட்கிறது
சொத்திநாய் ஒன்று தெருவில்
கிடந்து ஊளையிடுகிறது
ஓர் இறுதி ஊர்வலம் போகிறது
விரல் விட்டு எண்ணத்தக்க
அளவினருடன்
வாழ்க்கையின் அர்த்தம்
தொலைஞ்சு போச்சு
வீசுகின்ற காற்றுக்கும்
விடும் மூச்சிற்கும் இடையே
பெரிய இடைவெளி இங்கே



ஆ.முல்லைதிவ்யன்

# காதல்



கண்ணீர் உப்பாக இருப்பதனால்
அதனை கண்கள் வெறுப்பதில்லை
அன்பே நீ என்னை விரும்பாத போதும்
நான் உன்னை வெறுக்கவில்லை
நீ என்னை விரும்புகின்ற பொழுதும்
நான் உன்னை வெறுக்கவில்லை
நீ என்னை விடினும்...
நான் உன்னை எண்ண மறப்பதில்லை
ஏனோ என் மனம் உன்
அன்பைத் தேடுகிறது
இது தான் காதலா?

வி.விஜயகிருஷ்ணா,

# விடியலைத் தேடி ...

தாங்காத சோகங்களை என்னுள்ளே
புதைத்துக் கோண்டே-நான் வாழ்கிறேன்
கைகோர்த்து-நாம் சென்ற இடங்களும்
புன்னகையுடன் புது கவிதைகளை -நீ
சோன்ன பூங்காவும்

தனிமையில்.....
நான் மட்டும் செல்கையில் உயிர்
தோலைந்து விட்ட
மௌனம் உறைந்துவிட்ட
நிசப்தத்தில் மூழ்கிக்கிடக்கிறது.

வி.சிறானி, நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசேகர ஆஷாத்

# தடுமாறும் இலங்கை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் கடந்த 22 ஆம் திகதி 9 வாக்குகளால் வெற்றிபெறுவதற்கு முன்னர் எழுதப்பட்ட கட்டுரை. தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களித்திருந்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அமெரிக்காவால் இலங்கை மீது கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தை ஆதரிக்கப் போவதாகவும் இலங்கை மீதான தீர்மானத்தின் இறுதி வரைவுக்காகக் காத்திருப்பதாக இருந்தாலும் அந்தத் தீர்மானத்தை ஆதரிக்க எண்ணியுள்ளதாகவும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இந்திய ஜனாதிபதியின் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசும் உரையின்போது தெரிவித்திருந்தார். ஓர் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை எட்டும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் ஏனைய தரப்புகளுடனும் பேச்சுக்களை நடத்த வேண்டும் எனவும் அதிகாரப் பகிர்வு தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தும் என அவர் தெரிவித்திருந்தார்.

### சிதறடிக்கப்பட்ட எதிர்பார்ப்பு

இது இலங்கை அரசியலில் பெரும் அதிர்வலைகளையும் சர்ச்சைகளையும் உருவாக்கியுள்ளது. அண்மையில் நாடாளுமன்றத்தில் இந்திய நிதியமைச்சர் எந்த ஒரு நாட்டுக்கும் எதிரான தீர்மானத்தையும் இந்தியா ஆதரிக்கப் போவதில்லை எனவும் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா அமெரிக்காவின் தீர்மானத்தை ஆதரிப்பதா, இல்லையா என்ற முடிவு நீண்டகால இலங்கை இந்திய உறவின் அடிப்படையிலேயே எடுக்கப்படும் எனவும் தெரிவித்திருந்த வேளையில் அக்கருத்துகளுக்கு நேர்மாறான முறையில் இந்தியப் பிரதமர் இப்படியான ஒரு கருத்தைத் திடீரென அறிவித்திருப்பது இலங்கையின் எதிர்பார்ப்புகளைச் சிதறடிக்கும் வகையில் அமைந்துள்ளது.

இந்திய அமெரிக்கப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பது என்பது ஒரு வாக்குப் பலம் என்பதற்கும் அப்பால் தென்னாசிய அரசியலில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இலங்கை சீனா பக்கம் சாயப்போவதாக ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தி மிரட்டுவதன் மூலம் நான் செய்யும் மானிடகுல விரோத நடவடிக்கைகளுக்கும் தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறைக்கும் தொடர்ந்தும் இந்திய ஆதரவைப் பெற முடியுமா என்ற கேள்வியையும் இம்முடிவு எழுப்பியுள்ளது.

### மஹிந்தவின் குரல்கள்

இந்த அறிவிப்பு வெளியானதுமே இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு இலங்கை தொடர்பாக அமெரிக்கத் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கும்படி கேட்டுள்ளார். இதற்குப் பதிலளித்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் இது இந்திய நாடாளுமன்றத்தில் உள்ள கட்சிகளின் கோரிக்கைகளுக்கு அமைவாகவே எடுக்கப்பட்டது எனத் தெரிவித்திருந்தார்.

இலங்கைக்கு திருப்தியளிக்கும் வகையில் நம்பிக்கையளிக்கும் வகையில் எவ்வித பதிலையும் வழங்கவில்லை.

இம்முடிவு தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிப்படையாக எவ்விதமான கருத்தையும் வெளியிடாவிட்டாலும் அவரின் குரலாக ஒலிக்கும் சிங்களக் கடும்போக்குவாதிகள் துள்ள ஆரம்பித்துவிட்டனர்.

ஜாதிக ஹெல உறுமயவின் சோபித தேரர் இந்த முடிவின் மூலம் இந்தியா, ராஜீவ்காந்தியை மீண்டும் கொலை செய்துவிட்டது எனக் கடுமையான முறையில் தாக்கியுள்ளதுடன் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் காணி பொலிஸ் அதிகாரங்களைத் தமிழர்களுக்கு வழங்க அனுமதிக்கப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார். தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ச இந்தியப் பொருள்களைப் பகிஷ்கரிக்க வேண்டும் என அறைகூவல் விடுத்தால் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

அதேவேளையில், கொழும்பிலிருந்து வெளிவரும் அரச சார்பு ஆங்கில ஊடகங்கள் இம்முடிவு தொடர்பாகக் கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ளன. இம்முடிவைக் கண்டித்து ஆசிரியத் தலையங்கங்கள் தீட்டியுள்ளன. இன்னொரு ஆங்கில நாளேடு முன்பக்கத்தில் மன்மோகன் சிங் தனது இந்தியத் தலைப்பாகையைக் கழற்றிவிட்டு அமெரிக்கத் தொப்பியை அணிந்திருப்பதாகக் கார்ட்டூன் பிரசுரித்துள்ளது.

### சிங்களப் போக்காளரின் ஆர்ப்பாட்டம்

எதிர்வரும் நாள்களில் சிங்களக் கடும்போக்காளர்கள் இந்தியாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தி மன்மோகன் சிங்கின் உருவ பொம்மையை எரித்தாலும் அது வியப்புக்குரிய விடயமல்ல. அப்படி இடம் பெறும் வேளையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்த்தோ, ஆதரித்தோ எதுவும் சொல்லாது மௌனம் காப்பார் என்பதையும் எதிர்பார்க்கலாம்.

ஞாயிறு காரம்

இவ்வாறு இந்த முடிவு கொழும்பைப் பெரும் குழப்பத்திலும் ஏமாற்றத்திலும் தள்ளியுள்ள வேளையில் இது தமிழக மக்களை முழுமையாகத் திருப்தி செய்யவில்லை என்ற ஒரு தோற்றப்பாடும் உருவாகியுள்ளது. இம்முடிவு தொடர்பாகத் தமிழக முதல்வர் ஜெயலலிதா கருத்து வெளியிடுகையில், இந்தியப் பிரதமரின் உரை ஒரு மழுப்பலானது எனவும் இலங்கை அரசுமேற்கொண்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை எனவும் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்பதாக அரங்கேற்றும் நாடகத்துக்கு துணைபோகும் வகையிலேயே இது அமைந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார். இதேவேளை புதுச்சேரி மாநிலத்தில் ஜெனிவாப் பேரவையில் இந்தியா அமெரிக்கப் பிரேரணைக்கு ஆதரவு வழங்க வேண்டுமெனக் கோரி அண்ணா தி.மு.கவினர் முழுநேரக் கடையடைப்பை நடத்தியுள்ளனர்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள பிரதமரின் கருத்து மழுப்பலானதும் கருணாநிதி அரங்கேற்றும் நாடகத்துக்கு துணை போவதாகவும் உள்ளது என்பது பலரையும் சிந்திக்கத் தூண்டும் வகையிலேயே அமைந்துள்ளது. கடந்த காலத்தில் தமிழக மக்களும் இலங்கைத் தமிழர்களும் சந்தித்த சில அனுபவங்களின் அடிப்படையில் பார்க்கும் போது தமிழக முதல்வரின் கருத்துக்களை எவரும் அலட்சியம் செய்துவிட முடியாது.

### கருணாநிதியின் அறிவிப்பு

போரின் இறுதி நாள்களின்போது பொதுமக்கள் கொல்லப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையும் மனித உரிமை அமைப்புகளும் இலங்கை அரசிடம் மீண்டும் மீண்டும் கோரிக்கைகளை முன் வைத்தன. இந்தியா மூலம் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க முயற்சிகள் மேற்கொண்டன. இந்த நிலையில் பொதுமக்கள் கொல்லப்படுவது நிறுத்தப்படாவிட்டால் தங்கள் நாடாளுமன்றப் பதவிகளை ராஜிநாமா செய்யப் போவதாகக் கருணாநிதி அறிவித்தார். கருணாநிதியின் மகள் கனிமொழியும் தனது ராஜசபா உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்வதாக முன்னாள் முதல்வரிடம் கடிதம் கொடுத்தார். இந்தபரபரப்பான அறிவிப்புக் காரணமாக இலங்கைத் தமிழ் மக்களும் தமிழக மக்களும் ஏதோ நடக்கப் போவதாக எதிர்பார்த்தனர். இலங்கை அரசு மக்கள் வாழும் பகுதிகள் மேல் கனரக ஆயுதங்களைப் பாவிப்பதில்லை என அறிவித்த மத்திய அரசு கருணாநிதிக்கு அறிவிக்க அவர் தங்கள் போராட்டம் வெற்றி பெற்றதாகக் கூறித் தன் ஏமாற்று நாடகத்தை முடிவு செய்து ராஜிநாமாவைக் கைவிட்டார். ஆனால் அதேவேளையில் இலங்கையில் ஒவ்வொரு நாளும் எறிகணை வீச்சுகளாலும் விமானக் குண்டு வீச்சுகளாலும் ஆயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தனர்.

தமிழகத்தில் ஆர்ப்பாட்டங்களும் தீக்குளிப்புகளும் எனப் போராட்டம் வலுக்கவே போர் வலயத்தில் அகப்பட்ட மக்கள் வெளியேறும் வகையில் போர் நிறுத்தம் செய்யப்படவேண்டும் எனக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். அன்று மாலையே போர் நிறுத்தத்தை இலங்கை அரசு மேற்கொண்டுவிட்டதாகக் கூறி உண்ணாவிரதத்தைக் கைவிட்டார். ஆனால் போர் வலயத்தில் ஒரு வினாடி கூடப் போர் நிறுத்தம் செய்யப்படவில்லை. மனிதப் படுகொலைகள் தமிழ் மக்கள் மீது தொடர்ந்த வண்ணமே இருந்தன.

இவ்வாறு முன்னாள் முதல்வர் அப்போது தமிழ் மக்களுக்கு ஆதரவாக மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்பதாகக் கூறி ராஜிநாமா, உண்ணாவிரதம் என நாடகங்களை அரங்கேற்றிக் கொண்டிருந்த அதேவேளையில் நாற்பதாயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் போர் வலயத்தில் கொல்லப்பட்டனர். ஏராளமானோர் ஊனமுற்றனர். ஆயிரக் கணக்கான தமிழ்ப் பெண்கள் விதவைகளாகினர்.

போரின் பின் இடம்பெயர்ந்த மக்கள் இலட்சக் கணக்கில் உணவு, நீர், மருத்துவம் போன்ற வசதிகள் வழங்கப்படாமல் மிருகங்கள் போல அடைத்து வைக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்களின் நிலையைக் கண்டறிய ஒரு குழு அனுப்பப்பட்டது. அறிக்கை சமர்ப்பிக்க அந்தத் தி.மு.கவைச் சேர்ந்த குழுவினர் இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு எல்லா வசதிகளையும் வழங்குவதாக நற்சான்றிதழ் கொடுத்துவிட்டுப் போய்விட்டது. அதாவது இலங்கை அரசின் நடவடிக்கைகளுக்கு இந்திய அரசு துணைபோக அவற்றை மறைக்கும் வகையிலும் நியாயப்படுத்தும் வகையிலும் தமிழக மக்களை ஏமாற்றும் விதத்தில் நாடகமாடி வந்தமையே முன்னாள் முதல்வர் கருணாநிதியின் வரலாறாக விளங்கி வந்திருக்கிறது.

இவ்வகையில் முன்னாள் முதல்வர் கருணாநிதி இலங்கை தொடர்பாக அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் எனவும் அப்படி ஆதரிக்கத் தவறினால் தாங்கள் மத்திய அரசில் தமது அமைச்சுப் பதவிகளை ராஜிநாமா செய்யப் போவதாகவும் அறிவித்தார்.

### மன்மோகன் ஆதரவு

இந்த அறிவித்தலை அடுத்து அமெரிக்கப் பிரேரணைக்கு ஆதரவு வழங்கப் போவதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே ஏற்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் இது இந்திய மத்திய அரசும் முன்னாள் முதல்வர் கருணாநிதியும் இணைந்து நடத்தும் நாடகத்தின் ஒரு பகுதியே என்ற சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாததாகும். அதே அடிப்படையிலேயே தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

அதாவது போரின் இறுதிக் கட்டத்தின் போது நடத்திய ராஜிநாமா, உண்ணாவிரதம் போன்றே தற்சமயம் அமைச்சரவையிலிருந்து விலகப் போவதாகக் கருணாநிதி விடுத்த அறிவிப்பும் அதையடுத்து ஜெனிவாவில் அமெரிக்கப் பிரேரணையை ஆதரிக்கப் போவதாக மன்மோகன்சிங் விடுத்த அறிவிப்பும் ஒரு நாடகம் எனத் தமிழக முதல்வர் குற்றம் சாட்டியுள்ளார். அமெரிக்கப் பிரேரணையை இறுதி வரைவு இன்னும் கைக்குக் கிடைக்கவில்லை என்ற இந்தியப் பிரதமரின் பதிலில் மழுப்பல் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனிவாவில் அமெரிக்கப் பிரேரணையை இந்தியா ஆதரித்தாலும் அப்பிரேரணையின் வீரியத்தைக் குறைக்கும் வகையில் இந்தியா சில முயற்சிகளை எடுக்கக் கூடும் என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையிலேயே ஏற்கனவே போரின் இறுதி நாள்களின் போது பெற்ற அனுபவங்கள் உள்ளன.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை தமிழ் மக்கள் திருப்திப்படும் வகையில் இல்லை. ஆனால் அது அதன் பரிந்துரைகளைக் கூட இலங்கை அரசு நிறைவேற்றாது ஏமாற்றி வரும். எனவே தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

### சிறப்பம்சம் என்ன?

எனினும் அமெரிக்கப் பிரேரணையின் சிறப்பம்சம் ஒரு வருட காலத்தில் இது எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பது தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பேரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுதான். அமெரிக்கப் பிரேரணையிலிருந்து இந்த அச்சம் நீக்கப்பட்டால் இதில் எவ்வித பயனுமில்லை (தீர்மானத்தில் அந்த அம்சம் நீக்கப்படவில்லை). இப்போ இந்திய ஆதரவின் பின்னால் இந்த அம்சம் நீக்கப்படக் கூடுமோ என்ற அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் எழுவது தவிர்க்க முடியாதுள்ளது. அந்த அச்சம் நியாயம் என்பதை நிரூபிப்பது போன்று அமெரிக்கத் தீர்மானத்தில் திருத்தம் கொண்டு வர இந்திய முனைந்தது. எனினும் அமெரிக்கா அதை நிராகரித்துவிட்டதால் இந்தியாவின் இலங்கையைக் காப்பாற்றும் இறுதி முயற்சி முறியடிக்கப்பட்டது. எனினும் தீர்மானத்தில் ஒருசில சொற்கள் திருத்தப்பட்டுள்ளன.

எப்படியிருப்பினும் இந்தத் தீர்மானம் சில பலவீனமான அம்சங்களைக் கொண்டிருப்பினும் இது நல்ல ஆரம்பமாகவே பார்க்கப்படுகிறது. தொடர்ந்தும் இலங்கை சர்வதேசத்தை ஏமாற்ற முடியும் எனவும் அவ்வேளைகளில் தங்களை இந்தியாவால் காப்பாற முடியும் எனவும் இலங்கையின் ஆட்சியாளர்கள் கொண்டிருந்த நம்பிக்கைக்கு ஒரு உச்சத்தலையடி விழுந்துள்ளது என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பெண்மையின் மகத்துவம்

நந்து.



தரணியிலே பெண்ணாகப்
பிறந்தமையால்-உன்
தன்மானத்தை இழந்து
வாழ்வதா பெண்ணே?
தாயாகி உலகில் என்றும்
பல ஜீவன்களை -நீ
சுமந்தாய்-அதற்காக
இவ்வுலகு தந்த -
விலையில்லாச் சீர் வரிசை
கைவிலங்கு தானே
உனக்கு பெண்ணே
பாலூட்டிச் சீராட்டி-உன்
மகவை நீ வளர்த்தாய்
இறுதியிலே
எதைக் கண்டாய்
பெண் அடிமைத்
தனத்தைத் தானே
பாலூட்டும் போதே-நீ
பெண்களைப் பெண்ணாக
நோக்கும் பண்பையும்
கற்றுக்கொடுத்திருக்க
வேண்டும்- இனியும்
தாமதியாது பெண்ணே!
உன் மகவுக்குக்
கற்றுக்கொடு பெண்மையின்
மகத்துவத்தை..

# பெண்மையின் முழுமை தாய்மை



நித்தியா.

தாய்மை என்பது பாசத்தின் முகடு. அன்பு கடல் என்றால் அதன் அடி ஆழம் தாய்ப்பாசம். பேசத் தெரியாத நாள் தொடக்கம் பேசமுடியாத நாள்வரை ஓர் உயிரைப் புரிந்துகொள்ளக்கூடிய அனுபவ அகராதி தாய் மட்டுமே.

பெண்மையின் முழுமை தாய்மைதான். கருப்பை வெறும் பாதுகாப்புப் பெட்டியல்ல. உயிரின் தியான மண்டபம்.

பொதுவாக ஒரு பெண் பிறரால் விரும்பப்படுகிறாள். ஆனால் ஒரு தாய்தான் பிறரால் மதிக்கப்படுகின்றாள். ஆசியப் பெண்கள் பிறரால் விரும்பப்படுவதை விடவும் மதிக்கப்படுவதையே அதிகம் விரும்புகிறார்கள். மேலைநாடுகளில் பெண்மைதான் கொண்டாடப்படுகிறது.

தாய்மையை அதிகம் புகழ்வதே பெண்மைக்கு எதிரான ஒரு சூழ்ச்சி என்று ஒரு சில பெண்ணியவாதிகள் கருதுகிறார்கள். இப்படிப் புகழ்வதன் மூலம் வஞ்சனையாகக் குழந்தைச் சுமையைப் பெண்மீது சுமத்தி அவளை ஆண்கள் அடிமையாக்குவதாகப் புரட்சிப் பெண்கள் மேடையேறி முழங்குகிறார்கள். இவர்கள் இயற்கையைப் புரிந்து கொள்ளவேண்டும்.

தாய்மைக்கு ஏன் இத்தனை புனிதத் தன்மை தரப்பட்டது தெரியுமா? இழத்தல், தன்னைக் கரைத்துக் கொள்ளுதல் என்கின்ற தியாக உணர்வின் உற்பத்தி ஸ்தானமாக விளங்குவதால்தான்.

விலங்கானாலும் சரி மனிதரானாலும் சரி தாய்மையில்தான் [illegible]கத்தின் தரிசனம் உருவாகிறது.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# பெண்கள் மீதான வன்முறைகள்



இதுவரை காலமும் இல்லாத அளவுக்கு குடும்பப் பெண்கள் ஆண்களால் (கணவன் ) தாக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவது தற்போது அதிகரித்து வருகிறது.

இதுபற்றிப் பாதிக்கப்பட்ட பெண்கள், கசிப்பு மற்றும் போதைப் பொருள்கள் அருந்தும் கணவன்மாரால் தாக்கப்பட்டதாகவே கூறுகின்றனர். பிற பெண்களுடன் இரகசியத் தொடர்பு வைத்துள்ள திருமணமான ஆண்களால் தாக்கப்பட்ட மனைவிகளும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது ஏன் என சமூகம் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆண் ஆதிக்கம் அதிகமுள்ள யாழ்.மாவட்டத்தில் பெண்கள் கண்மூடித்தனமாகத் தாக்கப்படுவதைச் தட்டிக் கேட்கச் சமூகம் ஏன் இன்னமும் முன்வரத் தயங்குகிறது? அடுத்த வீட்டுக் குடும்பச் சண்டையில் நாம் தலையிடக்கூடாது என்ற தப்பான எண்ணம் எம் மனதில் இருப்பதே காரணம்.

பக்கத்து வீட்டுக் குடும்பச் சண்டையை வேடிக்கை பார்க்கும் கூட்டம் இதனைத் தடுக்க முன்வராவிடினும் இவ்வாறான குற்றச் செயல்களைத் தடுக்கவென நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்களின் பெண்கள் வன்முறைப் பிரிவுக்குத் தொலைபேசியில் அறிவித்தால் தாக்கப்படும் பெண்ணுக்கு உதவி புரிவதாக அமையும்.

அதுமட்டுமன்றி பக்கத்து வீட்டுக்காரர்கள் பொலிஸாருக்கு அறிவித்துவிடுவார்கள் என்ற பயத்தை இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபடும் ஒவ்வோர் ஆணின் மனதிலும் உருவாக்கும். நாட்டில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் பெண்கள், சிறுவர் வன்முறைக்கு எதிரான பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்குப் பொறுப்பாக 24 மணி நேரமும் செயற்படக்கூடிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்றனர். இந்தப் பிரிவுகளோ, குடும்பப் பெண்கள் கணவரால் தாக்கப்படுவது தொடர்பாகப் பெண்களோ அல்லது அயல்வீட்டுக்காரரோ அறிவிப்பதில்லை எனக் கூறுகின்றன.

ஒவ்வொரு கிராமத்திலும் மகளிர் அமைப்புகள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் உருவாக்கப்பட்டு இயங்கிவருகின்றன . ஆனால் அவை செய்யும் பணிதான் என்ன?சங்கங்களின் பதவிகளுக்காகப் போட்டி போட்டு பதவிகளைப் பொறுப்பேற்று பதவிக்காலம் முடியும்வரை இருந்துவிட்டுச் சென்று விடுகிறார்களே தவிர பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையையும் எடுப்பதாக இல்லை.



பல விடயங்களுக்குப் போராட்டங்கள் நடத்தும் பெண்கள் அமைப்புகள் கணவனால் தாக்கப்படும் பெண்கள் குறித்துப் போராட்டங்கள் நடத்த ஏன் முன் வருவதில்லை? போராட்டங்கள் நடத் தாவிடி னும் கிராமத்தில் நடைபெறும் குடும்பப் பெண் கள் தாக்கப்படும் சம்பவங்கள் குறித்து அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப் பாடு கூடச் செய்வதில்லை.

யாழ். மாவட்டத்தின் முக்கிய பதவிகளில் பெண்களே இருக்கிறார்கள். யாழ். அரச அதிபர், யாழ். பல்கலைக்கழக உபவேந்தர், யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், யாழ். மாநகர சபை முதல்வர் போன்றோருடன் அரச திணைக்கள அலுவலகங்களில் பெண்கள் தலைமை உத்தியோகத்தர்களாக உள்ளனர். பெண்கள் வன்முறைக்கு எதிரான செயற்பாடுகளுக்கு இவர்களும் ஒத்துழைக்க வேண்டும். அடுத்து என்ன செய்யவேண்டுமென்ற திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தவேண்டும்.

பல்கலைக்கழகத்தில் சமூகவியல் பிரிவு என்னும் அலகு இயங்கிவருகின்ற போதிலும் அந்தப்பிரிவு சமூக மட்டத்தில் இறங்கி வேலை செய்ய முன்வரவேண்டும்.

பல்கலைக்கழக சமூகவியல் பிரிவினர் மக்கள் மத்தியில் இறங்கி அவர்களின் குறைநிறைகளை ஆய்வு செய்து அவற்றைத் தீர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் சமூகத்தில் ஏற்படும் பல்வேறு குறைபாடுகள் நீங்கி பல்வேறு அபிவிருத்திகளைப் பல கிராமங்கள் கண்டிருக்கும். பொறுப்பான பதவிகளில் உள்ளவர்கள் சமூகத்தையும் சற்று சிந்தித்திருந்தால் சிறந்த பயன் கிடைத்திருக்கும்.

பாதிக்கப்பட்ட பெண்கள் பலருடன் கலந்துரையாடியபோது தமது கணவன் தவறு செய்வதை ஒத்துக் கொண்டாலும் தவறு செய்த கணவனைத் தண்டிக்க விரும்பாமல் பொலிஸாரோ நீதித் துறையினரோ அவரை அழைத்து எச்சரிக்கை செய்தால் போதும் எனக் கூறுகின்றனர்.

இந்தக் கூற்று 'கல்லெல் அடித்தாலும் கணவன் புல்லா குடித்துவிட்டு வந்தாலும் புருஷன்' என்று சினிமா ஒன்றில் தெரிவிக்கப்பட்ட நகைச்சுவையே நினைவுபடுத்துகிறது.

தென்னவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ்க் கலைமேதை இன்னிசை வேந்தன் நா.முருகையா

36

இசைநாடகம் என்பது ஈழத்தமிழர்களின் மரபுரிமைக் கலையாகும். சங்கரதாசு சுவாமிகளின் தோற்றத்துக்கு முன்னரே எமது முன்னோரால் வட்டக்களரியில் இசைநாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன. இந்தத் துறையில் வரலாறு படைத்த திறன்கொண்ட பரம்பரையில் தோன்றிய பிறவிக் கலைஞராகவும் புதிய இசைநாடகங்கள் பலவற்றை இயற்றி நெறியாள்கை செய்து மேடையேற்றிய நாடக ஆசானாகவும் சிறந்த ஹார்மோனியக் கலைஞராகவும் அறுபது ஆண்டுகளுக்கும் மேலான கலைத்துறை அனுபவம் கொண்ட முதுகலைஞராகவும் விளங்குபவர் பல்கலை அரசு நா.முருகையா.

மறைந்த நாராயணசாமி சின்னம்மா தம்பதியரின் மகனாக 17.03.1932இல் தொல்புரத்தில் இவர் பிறந்தார். தொல்.அமெரிக்கன் மிஷன், தொல்.விக்னேஸ்வரா, பண்ணாகம் மெய்கண்டான், பண்டைத்தரிப்பு இந்து மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் கற்ற இவர் அக்காலத்தில் எஸ்.எஸ்.சியில் ஆங்கில மொழியில் சித்தியடைந்து பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்று ஆசிரியராக உயர்வு கண்டார்.

கலைச் சூழலில் பிறந்து வளர்ந்த இவர் சிறு வயதிலேயே நாடகம், இசை, தமிழ் போன்ற துறைகளில் ஈடுபட்டு வந்த போதிலும், கல்வியிலும் உயர்வு கண்டு 1956இல் ஆசிரிய நியமனம் பெற்று பதுளை சரஸ்வதி வித்தியாசாலை, புதுக்குடியிருப்பு சுப்பிரமணிய வித்தியாசாலை, தொல்புரம் விக்னேஸ்வரா போன்ற பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றியதுடன் மாத்தளை கௌருப்பளை மகாவித்தியாலயம், கரியவள தேவஹூவா முஸ்லிம் மகா வித்தியாலயம் தொல்.விக்னேஸ்வரா, மூளாய் அ.மி.த.க. போன்ற பாடசாலைகளில் முதல்தர அதிபராகவும் கடமையாற்றி 1992இல் ஓய்வு பெற்றார்.

அரச பணியில் பல்வேறு இடங்களில் சேவையாற்றிய இவரது கலைத்துறை வளர்ச்சியும் உயர்ச்சியும் தனித்துவமானவை என்றே கூறலாம். சிறுவயதில் செல்லத்துரை என்னும் இசை ஆசிரியரிடம் ஹார்மோனியத்தைக் கற்றுக்கொண்ட இவர், இசைவல்லார் குப்பிளான் வி.செல்லத்துரையிடம் திருமுறை இசையையும் வரன்முறையாகக் கற்றுக்கொண்டார். பள்ளிப் பருவத்திலேயே ஹார்மோனியக் கலைஞராக வளர்ச்சி கண்டவர், அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த பரராசசிங்கம் நாட்டியக் குழுவில் கருவியாளராகவும் பாடகராகவும் பணியாற்றி வந்தார்.

அத்துடன் இசைநாடகங்களில் சாவித்திரி, வள்ளி, பவளக்



சாதனைக் கலைஞரைச்
சந்திப்போம் சிந்திப்போம்

கொடி, சத்தியபாமா, புலந்திரன் போன்ற பாத்திரங்களில் சிறப்புடன் நடித்துவந்த இவர் இசைநாடகங்களுக்கான சிறந்த ஹார்மேனியக் கலைஞராகவும் அக்காலத்தில் விளங்கினார். வரகவி பொன்னாலை கிருஷ்ணரின் நெறியாள்கையில் உருவான பல இசைநாடகங்களில் நடித்து வந்த இவர் ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் மாணிக்கம் , சுந்தரன், திலகவதி, எமதர்மன் தீர்ப்பு, எனக்கேன்ரா சேமிப்பு போன்ற நாடகங்களை எழுதி மாணவர்களுக்குப் பயிற்சியளித்துப் போட்டிகளிலும் வெற்றிபெறச் செய்தவர்.

1972ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் தொல்புரம் கலாலயத்தின் தயாரிப்பில், இவரால் எழுதப்பட்டு நெறியாள்கை செய்யப்பட்ட குந்தியின் செல்வன், இரணியன் செல்வன், தசரதன் செல்வன், பக்தகுசேலர், கிருஷ்ண லீலா போன்ற புதிய இசைநாடகங்கள் பொன்னாலையிலும் ஏனைய பல இடங்களிலும் மேடையேற்றப்பட்டன. இசைத்திறனும் நடிப்பாற்றலும் மொழியறிவும் கொண்டிருந்த இவரால் நெறிப்படுத்தப்பட்ட இந்த நாடகங்கள் மக்கள் வரவேற்பைப் பெற்றுப் புகழடைந்தன.

1976இல் வில்லிசை மேதை சின்னமணியின் வில்லிசைக் குழுவில் இணைந்துகொண்ட இவர் ஹார்மோனியக் கலைஞராகவும் பாடகராகவும் நகைச்சுவையாளராகவும் தனது கலைத்திறன்களை வெளிப்படுத்தி வந்தார். ஈழத்தின் பட்டி தொட்டியெங்கும் பெரும் புகழ்பெற்ற இக்குழுவில் இணைந்துகொண்ட இவர் அந்தக் குழுவினருடன் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு கலைப்பயணத்தையும் மேற்கொண்டார். முத்தமிழ் மாமேதையான சின்னமணியின் ஆற்றுகைகளுக்கு ஈடுகொடுத்துக் கருவியிசை வழங்கியும் பக்கப்பாட்டுப் பாடியும் அனைவரதும் வரவேற்பைப் பெற்றுக்கொண்ட இவர் பல்துறை மேதையாக மக்களால் போற்றப்பட்டவர்.

பல வகையான பாடல்களை இயற்றியிருக்கும் இவரால் எழுதப்பட்ட "வந்தாடும் மாமயில் ஏறிய கந்தா உன் சேவடி தொழுதேன்" என்னும் காவடிப்பாடலானது ஈழத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் பெரும் புகழோடு விளங்குகின்றது. நாராயணன் நாமம் எனத்தொடங்கும் நாரதர் வரவுப் பாடலானது இசைநாடகத் துறையில் அனைவராலும் பாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

1996இல் கனடாவுக்குச் சென்ற இவர் மொன்றியல் தமிழ் இணையம் என்னும் கல்வி நிறுவனத்தின் தலைவராகப் பத்தாண்டுகள் பணியாற்றியதுடன் தனது பதவிக் காலத்தில் மாணவர்களுக்கான நாடகப் பயிற்சிகளை வழங்கிப் பல நாடகங்களை மேடையேற்றியவர். மொன்றியல் திருமுருகன் ஆலயத்தில் தனது துணைவியாருடன் இணைந்து தமிழ் கற்பித்த இவர் கனடாவில் மேடையேற்றப்படுகின்ற இசைநாடகங்கள், காத்தவராயன் கூத்து , பாடசாலை நிகழ்வுகள் போன்ற அனைத்துக்குமான சிறந்த ஹார்மோனியக் கலைஞராகவும் இன்று வரை பணியாற்றி வருகின்றார்.

'செய்யும் தொழிலே தெய்வம்' என்பார்கள் புனிதமான இரண்டு துறைகளில் சரி சமமாக ஈடுபட்டதை என்னால் மறக்க முடியாது. பகலில் ஆசிரியனாகவும் இரவில் கலைஞனாகவும் ஒன்றை ஒன்று பாதிக்காத வகையில் பணியாற்ற வேண்டிய தேவை அக்காலத்தில் எனக்கு இருந்த போது அதனைச் சவாலாகவே எடுத்துக் கொண்டேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் சோர்வடைந்து விடவில்லை.

இசைநாடகம், வில்லிசை, காத்தவராயன் கூத்து, கிராமியப்பாடல்கள், கிராமிய நடனங்கள் போன்ற எமது கலைகளில் ஈடுபடுகின்றமையானது ஒருவகையான இறைதொண்டே என்பதில் எதுவித ஐயமும் இல்லை. கலைத்துறையில் திறனுடனும் தூய்மையுடனும் ஈடுபடும் ஒருவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புக் கிடைக்கும். ஏனெனில் கலைத்திறன் என்பது கடவுளால் அருளப்படுவதாகும்.

**வசாவிளான் தவமைந்தன்**

மருத்துவராக, பொறியியலாளராக, விமானியாக, விஞ்ஞானியாக, ஆன்மிகவாதியாக எவரும் வரலாம். ஆனால் கலைஞனாக எல்லோராலும் உருவாக முடியாது. கருவிலே திருவுடையோரால் மட்டுமே ஒரு கலைஞனாக முடியும். எனவேதான் முற்காலத்தில் அரசர்கள் கலைஞர்களைப் போற்றியும் வாழ்வளித்தும் வந்தார்கள். இக்காலத்தில் உயர் பதவிகளில் இருக்கும் எவரும் கலைகளையோ கலைஞர்களையோ மதிப்பதில்லை என்று தனது கருத்துக்களை இவர் கூறுகின்றார். ✦

**சோபனா**

# குடி தரும் சுகம் என்ன?

குடிகாரன் பேச்சு விடிஞ்சாப் போச்சு என்பது பொதுவான கருத்து. போதைக்கு அடிமையான ஒருவர் தான் செய்யும் காரியங்கள் என்ன என்று கூடத் தெரியாத அளவுக்குத் தன் சுயநினைவுகளை இழந்து ஏதோ சொல்வார்! செய்வார்!

தனது சுயநினைவைக் கூட இழக்கச் செய்யும் அளவுக்கு குடிப்பதன் தேவை என்ன? என்று அவனால் சிந்திக்க முடியாது.

போதையைத் தனக்கு அடிமையாக்கிக் கொள்வதை விடுத்து போதைக்குத் தான் அடிமையாகியதால்தான் அதன் விளைவு பாரதூரமானதாக அமைந்து விட்டது. சுயமதிப்பையும், சுயநினைவையும் இழக்கச் செய்யும் இந்தக் குடியை நான் தொடர வேண்டுமா? என ஒவ்வொரு மதுப்பிரியர்களும் சிந்திக்க வேண்டும்.

"குடி குடியைக்கெடுக்கும்" என்று சும்மாவா சொல்லி வைத்தார்கள். மதுப்பிரியர்கள் தம்மை மட்டுமல்லாது தமது குடும்பத்தினதும் நன்மதிப்பையும் காற்றோடு பறக்க விடுகிறார்கள் என்று தான் கூற வேண்டும்.

வெளிநாட்டவர்கள் தமது இடங்களின் காலநிலைக்கு ஏற்றால் போல் உடல் மருந்துத் தேவைகளுக்குப் பயன்படுத்திய இந்த மதுசாரத்தை எம்மவர்கள் நாள்க் கணக்காக இருந்த இடத்தில் இருந்து குடித்துக் குட்டிச் சுவர் ஆகிக் கொண்டிருக்கிறார்கள்.

இதன் விளைவாகப் போதையின் உச்சக் கட்டம் தேவையற்ற வன்முறைச் சம்பவங்களில் கூட ஈடுபடத் தூண்டுகிறது. அத்துடன் போதைக்கு அடிமையானவரின் உடலையும் அவர்கள் அறியாமலேயே அரித்துக் கொண்டு போகின்றது என்பதை பல மதுப்பிரியர்கள் அறியாமல் இல்லை.

தற்போதைய இளைய தலைமுறையினிடையே மதுப்பாவனை கொடிகட்டிப் பறக்கிறது.

விபத்துகளால் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வருவோரில் 50 வீதத்துக்கு மேற்பட்டவர்கள் மது போதையில் வாகனம் செலுத்தியதன் காரணமாகவே விபத்துக்கு ஆளானார்கள் என்பது புள்ளி விவரங்கள் ஊடாகத் தெரிய வந்துள்ளது.

குடிப்பவன் ஒருவனை மறித்து நீ எதற்காகக் குடிக்கிறாய் என்றால் சரி அரைவாசிப் பேர் சொல்லும் காரணம் கவலையை மறக்கக் குடிக்கிறோம் என்பதுதான். மீதி அரைவாசிப் பேர் சந்தோஷத்துக்காகக் குடிக்கிறோம் என்றும் காரணம் சொல்வார்கள்.

மனிதனுடைய சந்தோசங்களையும், துக்கத்தையும் போக்குவதற்கு "மது" தான் சரியான வழியென்றால் அனைவரும் குடிகாரர்களாகத்தான் இருக்க வேண்டும்.

கடந்த காலங்களை விட தற்போது எமது பிரதேசத்தில் போக்குவரத்து வசதிகள், தென்னிலங்கையுடனான தொடர்புகள் அதிகரிப்பதால் எல்லாமே தரிசனமாகக் [illegible] மதுவுக்கு அடிமையாக வேண்டிய நிலைதான் தொடர்கிறது.

வாழ்க்கை நடைமுறை மாற்றம் எமது பிரதேசத்தை, மக்களை எந்தளவுக்கு மாற்றி விட்டது; மாற்றமடையச் செய்துவிட்டது என்பதற்கு இவை சிறந்த எடுத்துக் காட்டாகும்.

யாழ்ப்பாணத்தில் ஒரு கலாசாரம் இப்போது புதிதாக முளைவிட ஆரம்பித்து விட்டது. பெற்றோர் தமது பிள்ளைகளின் பிறந்த நாள் கொண்டாட்டங்களுக்கு பிள்ளைகளிடம் பணத்தைக் கொடுத்து சாட்டி, கஜூரினா என கடற்கரைப் பக்கம் செல்வதற்கு அனுமதிக்கிறார்கள்.

இதனால் பிள்ளைகள் தமது நண்பர்களின் உந்துதலால் சிறு வயதிலேயே மதுவுக்கு அடிமையாகிறார்கள். இது தொடர்பாகப் பெற்றோர் சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது.

எமது துக்கத்தையும், சந்தோஷத்தையும் பகிர்ந்து கொள்வதற்கு எத்தனை வழிகள் உள்ளன. அவற்றைப் பற்றித் துளிகூடச் சிந்திக்காது மதுதான் சந்தோசம் என்று




அவர்கள் மதுவுக்கு அடிமையாவது எந்த வகையில் நியாயம்.


மதுப்பிரியர் ஒருவரது வீட்டுச் சூழலில் இருந்து சுகாதாரப் பரிசோதகர் ஒருவரால் ஒரு பெட்டி சாராயப் போத்தல் மீட்கப்பட்டதான செய்தி கொஞ்சம் அதிர்ச்சியைத்தான் ஏற்படுத்தியது. இவ்வாறு மீட்கப்பட்டவை ஒரு சில வாகத்தான் இருக்கமுடியும். இதைப்போன்று இன்னும் எத்தனை பேர் வீடுகளில் இவை வைக்கப்பட்டுள்ளனவோ யாருக்குத்தான் தெரியும்.

இதனால் மதுப் பிரியர்களுக்கு கிடைக்கப்போவது என்ன? தமது பணத்தையும் வீணடித்து குடும்ப சந்தோசத்தையும் தொலைத்து தமது பிள்ளைகளின் எதிர்காலத்தையும் வீணடித்துக் கொள்வது தான் மிச்சம். இவற்றை விட எதுவும் கிடைக்கப் போவதில்லை.

இந்த விடயத்தில் எமது எதிர்கால சந்ததியினர் மிகவும் தெளிவாக இருக்கவேண்டும் என்பதுதான் இன்று அனைவரதும் எதிர்பார்ப்பாக உள்ளது. ✦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 207




அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. பிழைத்துப் போவது
4.பத்திரிகை தங்கியிருப்பது இவனில்
7. சுமத்தல்
8.ஒன்றாக்கு
9. மயானம்
10.காலில் அணிவது
12. கை
13. பாவனை
15. பாடல்
16. படி
17. கன்னை
18. கூற
20.பஞ்சு மரத்தில் இருந்து எடுப்பது
22. மீண்டும் வரல்
23. இரும்பில் பிடிப்பது

### மேலிருந்து கீழ்

1. பேய்
2.உபாத்தியாயர்
3.பூக்கொய்யும் கூடை
5.அனைத்தும்
6. உடலின் மிகச் சிறிய அலகு
10. தலை
11. குதிரை
12. கெண்டை மீன்
13. தலைவன்/ உருந்தாளன்
14.பட்டணம்
15.தலையை முண்டத்தோடு இணைப்பது
17.சீடர்களை வழிப்படுத்துபவர்
19.உயிர்ப்பின் ஆரம்பநிலை
20. தந்தம்
21. செல்வம்

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலா னோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 205 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

**இடமிருந்து வலம்**

(1) முப்பது (4) செம்பு (6) கும்பல் (7) மதிப்பு (9) வசதி (11) திரிபு (12) கும்மி (13) விடை (14) பாசி (16) கடைதல் (18) விடுதி (19) விலைவாசி (21)புயல் (22) வில்வம்

**மேலிருந்து கீழ்**

(1) முழுமதி (2) பகுப்பு (3) தும்பு (4)செல்வம் (5) புத்தி (8) திரிசடை (10) சமிபாடு (12) குடை (13) வில்லை (15) சிதிலம் (16) கம்பு (17)தவில் (18) விசில் (20) வாவி.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 207**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 04.04.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.207 இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 08.04.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 205 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:**

**1 ஆம் பரிசு**
**ந.சாளினி,**
நாவலடி, புலோலி மத்தி, பருத்தித்துறை.

**2 ஆம் பரிசு**
**ச.மெளலீசன்,**
இல.86, உப்பளம் வீதி, பெரியகடை, மன்னார்.

**3 ஆம் பரிசு**
**திருமதி த.சுகந்தினிதேவி,**
புதுமுறிப்பு, உருத்திரபுரம், கிளிநொச்சி.

**4 ஆம் பரிசு**
**கு.ஆரணன்,**
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

**5 ஆம் பரிசு**
**வ.இரத்தினசிங்கம்,**
கம்பர்மலை, வல்வெட்டித்துறை.

**பாராட்டுப் பெறுவோர்**

**திருமதி சதாசிவதேவி முத்துராசா**
நாச்சிமார் முருகன் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.

**வி.தர்சனன்,**
இல.31/2, அத்தியடி புதுவீதி, யாழ்ப்பாணம்.

**சத்தியகுமார் வாசுகி,**
ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலா[illegible] அனுப்பிவைக்கப்படும்.*

## பரதனில்....

*(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

உடனே அழுதுகிடந்த பரதன் எழுந்து முனிவரை முறையின் வணங்கி உபசரித்து நிற்கிறான். தசரதனின் ஈமக்கிரியைகளைக் கவனிப்பதற்காக முனிவர் பரதனை அழைத்துச் செல்கிறார். அப்பொழுதுதான் தந்தையின் உடலைக் காண்கிறான் பரதன்.

ஆயினும் தந்தையின் பிரேத பூசனைக்குப் பரதனை விடாமல் சத்துருக்கனையே ஏவுகின்றார் முனிவர்.

அப்பொழுது பரதன் ''சூரிய குலத்துப் பிறந்தும் என் தந்தைக்குப் பிரேத பூசனை செய்யும் பாக்கியங் கூடச் செய்திலேன்; வெறும் அரசாட்சியை மட்டும் செய்யவோ என் அன்னை என்னைப் பெற்றாள்'' என்று கண்ணீர் மல்கக் கலங்கி அழுகிறான் என்கிறார் கம்பர்.

''........................
இரவிதன் குலத்து எந்தை முந்தையோர்
பிரத பூசனைக்கு உரிய பேறு இலேன்
அரசு செய்யவோ ஆவது ஆயினேன்'' என்பதாகப் பரதனது கூற்றைக் காட்டுகின்றார் கம்பர்.

பட்டத்து அரசிகளாக இருந்த கோசலை, கைகேயி, சுமித்திரை தவிர்ந்த வேறு பெண்கள் பலர் தசரதனின் உடல் எரியும் தீயில் தாமும் வீழ்ந்து மூழ்கின்றனர்.

பத்துநாள் கழித்து வசிட்டர் பரதனை அணுகி அயோத்தியில் அரசனில்லாக் குறையை எடுத்துக்கூறி அவனை அரச பாரத்தை ஏற்கும்படி கேட்கிறார்.

அதற்கு மறுப்புக் கூறிய பரதன், இராமனை அழைத்து வருவேன் என்று கூறிக் கானகம் செல்ல ஆயத்தஞ் செய்கிறான். அப்பொழுது நாட்டு மக்கள் அனைவரும் மகிழ்ச்சி ஆரவாரஞ் செய்கின்றனர். கங்கைக் கரையிலே பரதனின் நிலையைக் கண்ட படகோட்டி குகன், ''ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ?'' என்று பாராட்டியதும் வாசகர் அறிவர் அன்றோ! ✱

## சிறகொடிந்த

*(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

தனது சைக்கிளைத் திருப்பினார். பாதையில் மகளின் திருமணக் கற்பனையோடு வந்து கொண்டிருந்தவரை வழிமறித்த அந்தக் கொடிய கொள்ளையர்கள் தனித்து வந்த அவரைச் சூழ்ந்து ரேணுகாவுக்காக எடுத்து வந்த பணப் பையைப் பறித்துச் சென்றனர். கொள்ளையர்களால் அடிபட்ட தந்தை வீதியிலேயே விழுந்து விட்டார். யாரோ நல்லவர்கள் அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். இந்தச் செய்தி கேட்டு சிறகொடிந்த பறவை போல செய்வதறியாது குடும்பத்தினர் திகைத்தனர். 'திடீரெனச் சூழ்ந்த கொடிய துன்பத்தில் தத்தளித்தனர். அண்ணன் வேணுவும் ரேணுவும் வைத்தியசாலையை நோக்கி விரைந்தனர். தந்தையைக் காப்பாற்றப் பல இடங்களில் ஓடியோடிக் கடன் கேட்டுக் கையேந்தினர். எல்லாமே பயனற்றுப் போக அப்பாவின் உயிரைக் காப்பாற்ற அவர்களால் முடியவில்லை. எந்த நாளை சந்தோஷமாக எதிர்பார்த்து காத்திருந்தாளோ அந்த நாளிலே தந்தை இறந்தார். திருமணத்துக்காக அலங்கரித்த வீட்டில் கருமாரி நடைபெற்றது. மங்கல ஒலி ஒலிக்க வேண்டிய இடத்தில் அழுகை ஒலி கேட்டது. இவற்றை எல்லாம் ரேணுவால் ஜீரணிக்க முடியவில்லை. தந்தையின் சடங்குகள் முடிந்தன.

நாள்கள், வாரங்கள், மாதங்களாகி காலம் உருண்டோடியது. மாப்பிள்ளை வீட்டாரோ சீதனம் இன்றித் திருமணத்துக்கு சம்மதிக்க முடியாது எனக் கூறி நழுவிவிட்டனர். அவளுடைய திருமணம் நின்று போனது. வாழ்க்கை சூனியமானது.

ரேணுவின் குடும்பத்தின் மீது காலதேவனுக்கு என்ன விரோதமோ மீண்டும் ஓர் இழப்பு. அவளுடைய அண்ணன் போர்ச் சூழலில் புதைக்கப்பட்ட கண்ணிவெடியில் சிக்குண்டு இறந்தான். அவளோ இப் பொழுது தனிமரமானாள். அன்னையைத் தவிர அனைவரையும் இழந்து அனைத்துக்கும் தானே பொறுப்பெனும் பாரத்தைச் சுமக்கத் தனி ஒருத்தியாகத் தள்ளப்பட்டாள். பல கடன் காரருக்கு பதில் சொல்ல வேண்டிய நிலையிலே ரேணுவினுடைய வாழ்க்கை கஸ்ரத்தையும் துயரத்தையும் அதிகரிக்கச் செய்தது. அதனைப் பார்த்த தாயும் படுத்த படுக்கையானாள் அன்னையின் மறைவும் மிக விரைவிலேயே நிகழ்ந்தது. அவள் தனித்து விடப்பட்டாள். சிறகுகளை இழந்த பறவையாகி பறக்கவும் முடியாமல் இறக்கவும் முடியாமல் வேதனையில் வருந்தும் பறவையானாள். தற்கொலை ஒன்றே அவளிடம் எஞ்சியுள்ள முடிவென அவளைச் சூழ்ந்து வந்த சோதனைகள் உணர்த்தின. ஆனால் அதற்கான எண்ணம் அவளிடத்தில் வராதபடி பார்த்துக் கொண்டாள்.

கடல்அலைகள் உயர எழுந்து மோதின. கண்ணீர்த் துளிகள் அந்த மணற்றரையில் வீழ்ந்து மடிந்தன.மனவேதனை சிறிதும் குறைந்ததாகத் தெரியவில்லை. இருட்டுக்கு முன்னர் வீட்டுக்கு செல்வதற்காக எழுந்த அவளை எழுந்திருக்க விடாமல் ஒரு கை ஆதரவாகத் தோளில் தொட்டது. அதை உணர்ந்து திடுக்கிட்டு திரும்பியவள் சிறிது நேரம் பிரமை பிடித்தவள் போல் எதுவும் பேசாது நின்றாள். அவளது வாழ்வின் சோகத்தைப் பார்த்தும் கேட்டும் அறிந்தவன் கவலையுடனும் கண்ணீருடனும் ரேணுவின் அருகிலே நின்றான். நின்றவன் வேறுயாரும் அல்ல அவளைப் பெண் பார்த்துச் சென்ற அதே பரத்! அவள் ஆச்சரியத்தோடும் மிகுந்த விருப்போடும் அவனைக் கைகளால் பற்றினாள். இருவருமே நீர் நிரம்பிய விழிகளுடன் நின்றனர். கடல் அலைகள் வாழ்த்த, சூரியன் பொற்கதிரால் சாமரம் வீச பூமித்தாய் ஆசீர்வதிக்க அந்த இரு உள்ளங்களும் ஒன்றாகின. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்துடன் முடிந்துவிடக் கூடாது

-சங்கர்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் வெற்றியடைந்துள்ள நிலையில், தமிழக உறவுகள் மற்றும் புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள ஈழத் தமிழர்கள், ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்தி தமது மகிழ்ச்சியை வெளிப் படுத்தி வருகின்றனர். நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதிகளிலும் ஆங்காங்கே வெடிகொளுத்தும் மனோநிலை இருந் தாலும் நிலைமை கருதி கட்டுப்படுத் தப்படுகிறது.

சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் இலங்கையின் பேரினவாத அரசுக்கு இருந்த தீர்மானம் அவமானத்தையும், தலைகுனிவையும் ஏற்படுத்தியுள்ளதாக பொதுவான கருத்து நிலை ஒன்றுண்டு.

அதேபோன்று இந்தத் தீர்மானத்தால் அரசும் சிங்கள மக்களும் கோபம் அடைந்துள்ளதால், அதன் பிரதிபலிப்பை வெளிப்படுத்தும்போது ஈழத் தமிழர்களுக்கு அது பாதிப்பாக அமையும் என்றும் ஒரு சாரார் கூறுகின்றனர்.

அதாவது, மீண்டும் இலங்கையில் இனக் கலவரம் வெடிக்கலாம் என இத்தகையவர்கள் கூறுகின்றனர். 1983ஆம் ஆண்டில் இடம்பெற்றது போன்ற கலவரம் ஏற்படலாம் என்பதே அவர்களின் அச்சம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு, தமிழர்கள் மீதான வன்முறையை ஏதோ ஒரு வடிவத்தில் கட்டவிழ்த்து விடலாம் என்ற அச்சம் கணிசமான தமிழ் மக்களிடம் இருக்கிறது. இதற்காக சிங்களக் காடையர்களையோ அல்லது சிங்கள இராணுவம் மற்றும் பொலிஸாரையும் பயன்படுத்த அரசு முயலும் என்றும் அவர்கள் கருத்துகின்றனர். இதற்கு, அண்மைக் காலங்களில் அமைச்சர்கள் சிலர் வெளியிட்ட அறிக்கைகளே காரணம்

ஆனால், இன்றைய சர்வதேச சூழலில் அப்படி நடப்பதற்கான சாத்தியங்கள் வெகு குறைவு. எனவே அடுத்தடுத்துள்ள கட்டங்களை நோக்கி ஈழத் தமிழ் இனம் முன்னேறவேண்டும்.

> “அமெரிக்காவின் தீர்மானத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான பொறிமுறைகள் முன்னெடுக்கப்படுவதற்கான அழுத்தங்களை தமிழக உறவுகளும் புலம்பெயர் ஈழத் தமிழர்களும் கொடுக்கவேண்டும்.

இலங்கை மீதான தீர்மானத்தை வெற்றி பெறச் செய்வதற்காக தமிழக உறவுகளும் புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள ஈழத் தமிழர்களும் மேற்கொண்ட தீவிர முயற்சியை ஈழத்தமிழர்கள் எளிதில் மறந்துவிட மாட்டார்கள்.

அமெரிக்காவின் தீர்மானத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான பொறிமுறைகள் முன்னெடுக்கப்படுவதற்கான அழுத்தங்களை தமிழக உறவுகளும் புலம்பெயர் ஈழத் தமிழர்களும் கொடுக்க வேண்டும்.

ஜனாதிபதி நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு வழங்கப்பட்ட காலக்கெடுவில், பொறுப்புக் கூறத் தவறின் சர்வதேச நீதிமன்றத்தின் முன்னிலையில் நாட்டின் பேரினவாத அரசை முற்படுத்தவும் இவர்களே அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும். அதை அவர்கள் செய்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

தமிழர்கள் மலையளவு எதிர்பார்த்த போதும், அமெரிக்கத் தீர்மானம் மூலம் கடுகளவு நன்மையாவது கிடைக்கும் என தமிழர்கள் திருப்திப்பட்டுக்கொள்ளும் நிலையே தற்போதுள்ளது. எமது மக்களின் போராட்டங்கள், தியாகங்கள், அர்ப்பணிப்புகள், கனவுகளை இந்தத் தீர்மானம் மூலம் ஈடுசெய்ய முடியாது. ஆனாலும் அதற்கான முதல்படியாக இதனை எடுத்துக்கொள்ளலாம்.

அதைச் செய்வதில் ஈழத் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கும் தமிழக மற்றும் புலம்பெயர் தேசங்களிலுள்ள ஆதரவாளர்களுக்கு, பெரும் பொறுப்புள்ளது. அதாவது தமிழ்மக்கள் ஒற்றை ஆட்சிக்குக் கீழ் தம்மைஆள்வதா அல்லது பிரிந்து சென்று தனித் தமிழீழம் அமைப்பதா என்ற முடிவுக்கு வர வேண்டியுள்ளது.

அதற்காக சர்வதேச முன்னிலையில் பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும். அதற்கு எமது ஆதரவாளர்கள் சர்வதேசத்துக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

அதேநேரம் தீர்மானத்தின் வெற்றியால் கடுப்படைந்துள்ள அரசு, தமிழ்மக்களைப் பழிவாங்குவதிலிருந்து பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# தொடரும் போராட்டம்

ஜமுனா

இந்தியாவில் குறிப்பாக கூடங்குளம்-இடிந்தகரைப் பகுதியில் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கூடங்குளம் அணு உலைப்பணிகளாலும் கூடங்குளம் பகுதியில் அணு உலை அமைப்பதால் அந்தப் பிரதேசத்தை அண்டியுள்ள பகுதிகளின் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் என்றும், அதனால் பலதரப்பட்ட பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிடும் என்றும் குற்றம் சாட்டி உதயகுமார் தலைமையில் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்று வருவது அனைவரும் அறிந்த விடயம்.


இந்தநிலையில் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் மீண்டும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று தமிழக அரசு சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மாநில அரசால் அமைக்கப்பட்ட நிபுணர்குழு அளித்த அறிக்கை மற்றும் அணுமின் திட்டத்துக்கு எதிரானவர்களின் மனு என்பவை விரிவாக ஆராயப்பட்டு நில நடுக்கம் மற்றும் சுனாமி என்பன ஏற்படக் கூடிய வாய்ப்பு இல்லை என்பதோடு எவ்வாறான நிலையிலும் இந்த அணுமின் நிலையம் பாதுகாப்பானது மட்டுமல்லாது சிறப்பான பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இவற்றின் அடிப்படையில் இடிந்தகரை மக்களிடையே நிலவும் ஐயப்பாடுகளுக்கு மத்திய அரசால் அமைக்கப்பட்ட நிபுணர்குழு பதிலளித்துள்ளதைக் கருத்தில் கொண்டும் கூடங்குளம் அணுமின் நிலையத்தை உடனடியாகச் செயற்படுத்த வேண்டும் என அந்தத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளார் ஜெயலலிதா.

இதன் அடிப்படையில் சுமார் 7 மாதங்களின் பின்னர் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் பணிபுரிந்த300 ஊழியர்கள் பணிக்குத் திரும்பினர். எனினும் இடிந்த கரையில் அணு உலைக்கு எதிரான போராட்டம் தொடர்ந்து கொண்டிருந்தது. போராட்டக் குழுத் தலைவரான உதயகுமார் மற்றும் அவருடைய குழுவைச் சேர்ந்தவர்கள் 2 ஆவது நாளாகவும் உண்ணாவிரதம் இருந்தனர்.

எனினும் பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டு போராட்டத்தில் பங்கெடுத்த 18 பேர் இரவோடு இரவாகக் கைது செய்யப்பட்டனர். அது மட்டுமல்லாமல் அணு உலையை எதிர்த்து வீதி மறியலில் ஈடுபட்ட 185 பேர் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இதனை யடுத்து 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் கடற்கரைக் கிராமங்களின் போக்குவரத்து நிறுத் தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் 3,000 பொலிஸார் கூடங்குளம் பகுதியில் பாதுகாப்புக்காகக் குவிக்கப்பட்டு, அவர்களின் பாதுகாப்புடன் கடந்த 19 ஆம் திகதி அணுமின் நிலையம் திறக்கப்பட்டு 300 தொழிலாளர்கள் பணிகளில் ஈடுபட்டனர். இதனையடுத்து ரஷ்ய விஞ்ஞானிகளும் பணிக்குத் திரும்பியுள்ளனர்.



“இது சிறப்பான நாள் இந்த நாளுக்காகத் தான் காத்திருந்தோம். இனி நாம் துரிதமாகப் பணிகளை முடிப்போம். அணு உலை எதிர்ப்பாளர்கள் மக்களை தவறான வழியில் அழைத்துச் செல்கின்றனர்.மக்களும் அதைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை” என்று இந்த திட்ட வேலை களில் ஈடுபட்டுள்ள ரஷ்ய விஞ்ஞானிகள் மாமிமோவ் அலெக்சாண்டர் மற்றும் கிரகோரி ஆகியோர் தெரிவித்துள்ளனர். எது எப்படியோ அணுமின் நிலையத்தில் முழுமையாகப் பணிகள் நிறைவடைந்து அதன் பயன்பாடு முற்றுமுழுதாகக் கிடைக்கப் பெறுமா என்பது தான் அனைவர் மனதிலும் எழுந்துள்ள ஐயப்பாடு.

கூடங்குளம் அணுமின் நிலையம், தமிழ்நாட்டில், திருநெல்வேலி மாவட்டத்தில் கூடங்குளத்தில் இந்திய அணுமின் கழகத்தின் நிர்வாகத்தில் உருவாகிவரும் அணுமின் நிலையமாகும். இந்தத் திட்டத்துக்கான ஒப்பந்தத்தினை அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியும் ரஷ்ய நாட்டுப் பிரதமர் மிக்கைல் கொர்பசோவும் 1988ஆம் ஆண்டில் கையெழுத்திட்டனர்.

ஆனால் ரஷ்யா பல நாடுகளாகப் பிரிந்து போனதாலும், இந்தியா அணுக்கரு வழங்குவோர் குழுமத்தின் ஒப்புதல் பெறப்படவில்லை என்ற காரணத்துக்காகவும் அமெரிக்கா அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததாலும், இந்தத் திட்டம் பத்தாண்டுகளுக்கு கிடப்பில் போடப்பட்டது. பின்னர் இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான ஒப்பந்தம் 2001 ஆம் ஆண்டில் கையெழுத்தானது. இதற்கான திட்ட மதிப்பீடு சுமார் 3.5 பில்லியன் அமெரிக்க டாலராகும்.

இந்தியாவின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இங்கு ஒரு கடற்படைத் தளத்தை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதன் அடிப்படையில் 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதி அன்று இங்கு ஒரு சிறிய துறைமுகத்தை நிறுவினார்கள். கடல் வழியாக வரும் அணுமின் நிலையத்துக்கான பாகங்களை இந்த துறைமுகம் வழியாகக் கொண்டு வந்து 1.5 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்த அணுமின் நிலையத்துக்கு கொண்டு வந்தார்கள். அதற்கு முன் தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து வீதி வழியாக பாகங்களைக் கொண்டு வரவேண்டிய கட்டாயம் இருந்தது. இந்த வழி கரடு முரடாக இருந்ததால், சில பாகங்கள் பழுதடைந்ததுடன், போக்குவரத்துச் சிக்கல்களால் கால தாமதமும் ஏற்பட்டது. முதலில் கூடங்குளத்தில் wer 1200 1000 மெகா வாற் அணுமின் திறன் கொண்ட இரு அணு உலைகள் விரைவில் செயற்படும். இரண்டு உலைகளும் செயற்படும் பொழுது, இந்தியாவில் மிக அதிகமான செயற்திறன் கொண்ட அணு நிலையமாகக் கூடங்குளம் அணுமின் நிலையம் திகழக் கூடும்.

2008 ஆம் ஆண்டில் கூடுதலாக மேலும் ஆறு அணுமின் உலைகளை இங்கு உருவாக்க இந்திய அணுமின் கழகம் ரஷ்ய நாட்டுடன் உடன்படிக்கை செய்து கொண்டது. இதன் அடிப்படையில், ரஷ்யா 1170 மெகா வாற் அணுமின் திறன் கொண்ட நான்கு நான்காம் தலைமுறை wer 1200 வகை அணுமின் உலைகளை வழங்கும். இந்தியா இப்பொழுது அணுக்கரு வழங்குவோரின் குழுமத்தின் ஒப்புதலையும் இதற்குப் பெற்றுள்ளதால், இந்தியாவில் மேலும் அணுமின் நிலையங்கள் மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்து வழங்குவதில் தடைகள் இருக்காது.

ஆரம்பத்தில் இருந்தே அணு உலைக்கான எதிர்ப்பு ஓரளவு இருந்து வந்தாலும், அண்மையில் ஜப்பான் நாட்டில் புக்குஷிமா டா இச்சி அணு ஆலையில் நடந்த அணு உலை விபத்துகாரணமாக ஏற்பட்ட விழிப்புணர்வு மற்றும் ஜப்பான், ஜேர்மனி போன்ற நாடுகள் தங்கள் அணு உலைகளை மூட முடிவெடுக்கும் பின்னணியில் கூடங்குளம் பிரதேசம் மற்றும் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி போன்ற மாவட்ட மக்கள் இதற்கு தற்போது கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். 2011 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி முதல் இடிந்தகரை என்ற கிராமத்தில் 10,000 மக்கள் சுழற்சி முறையில் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூறையாடப்படும் செம்மலை வளம்

பாண்டியம்மா

"எங்களுக்கென்று இப்ப நிரந்தரமாக இருப்பது இந்தக் கடல்வளம் மட்டும்தான். அதையும் விட்டுவைக்காமல் சுரண்டும் வேலையில் தென் இலங்கையைச் சேர்ந்தவர்கள் தொடங்கிவிட்டார்கள். "இதில் பாதிப்படைவது நாங்கள்தான். எங்கட வாழ்வாதாரம் எங்கட சீவியம் என்று நிம்மதியாக வாழ வழி கிடைக்கேல்ல. நடப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறென்னதான் எங்களால் செய்யமுடியும்."

வன்னி மாவட்டம், முல்லைத்தீவு, செம்மலைப் பகுதிக் கடற்றொழிலாளருக்கு இப்போது ஒரு புதுப்பிரச்சினை. இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் கடல்வளத்தைச் சுரண்டுவதற்கு தென் இலங்கையிலிருந்து ஒரு தொகுதி தொழிலாளர்கள் செம்மலைக் கடற்கரைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டம் செம்மலைப் பிரதேசத்தில் தற்போது வசிக்கும் குடும்பங்களில் 70 வீதத்துக்கும் மேற்பட்டவை கடற்றொழிலைப் பிரதான தொழிலாகக் கொண்டுள்ளன. இந்தக் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைக்கும் செயற்பாடாக இது அமைந்துள்ளது.

வன்னியில் இடம்பெற்ற போரின் பின்னர் மீளவும் தமது சொந்த இடங்களில் குடியமர்வு செய்யப்பட்டபோதும் தமக்கான ஒரு நிரந்தர இருப்பிடம், நிரந்தரத் தொழில், நிம்மதியான வாழ்வு கிடைக்கவில்லை என்று அவர்கள் அவலப்படுகின்றனர்.

இதனால் இவர்களின் வாழ்வாதாரம் மட்டுமல்ல தொழில் அபிவிருத்தியும் வீழ்ச்சியைக் கண்டது. கடலில் தொழில் செய்வதற்கு அனுமதி கிடைக்கவில்லை. இதன் காரணமாக இங்குள்ள கடற்றொழிலாளர்கள் தமது நாளாந்த சீவியத்தை நடத்தப் பெரும்பாடுபட்டு வந்தனர்.

தொழில் வல்லமை இருந்தும் நிரந்தர தொழிலைக் கைவிட்டு கூலி வேலை செய்து பிழைப்பை நடத்தி வந்தார்கள். காலங்கள் கடக்க அரசுக்குக் கொடுத்த நெருக்கடிகள் காரணமாக மீளக்குடியமர்வு செய்யப்பட்டு செம்மலை கடற்றொழிலாளர்களுக்கு கடலுக்குச் சென்று தொழிலை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

இதன்காரணமாக கடற்றொழிலாளர்கள் தமக்கு ஒரு புதுவாழ்வு கிடைத்து விட்டதாக நினைத்து சந்தோசத்துடன் தொழிலை மேற்கொள்ள ஆரம்பித்தார்கள்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் கடைக்கண் பார்வையும் செம்மலைக் கடற்றொழிலாளரின் பக்கம் திரும்பியது. இதன் பயனாக ஒரு சில கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் உபகரணங்களும் கிடைக்கப்பெற்றன. இதனைவிட சில கடற்றொழிலாளர்கள் தமது முயற்சியின் பயனால் வங்கிகள் மூலம் கடன் உதவிகள் பெற்று தேவையான உபகரணங்களை வாங்கினார்கள்.

இவ்வாறு காலம் தாழ்த்தி கடற்றொழிலாளரின் முயற்சியால் மீளவும் செம்மலைக் கடலில் கடற்றொழில் செயற்பாடுகள் இடம்பெற்றன.

"அப்பாடா" என நிம்மதியுடன் கடற்றொழிலை மேற்கொள்ள முடியும் என நினைத்த தொழிலாளர்களுக்கு இப்போது புதுப் பிரச்சினை தென்னிலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தென்னிலங்கை கடற்றொழிலாளர்கள் விளங்குகின்றார்கள் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் ஒரு புது உத்தியாக வடமாகாணத்தின் வளங்களைச் சூறையாடிக்கொண்டிருக்கும் தருணத்தில் பெருந்தொகுதிக் கடல் வளத்தை விட்டு வைக்கவா போகிறார்கள்.

எங்கெல்லாம் நுழைந்து தம்மால் சூறையாடமுடியுமோ அங்கெல்லாம் தமது உத்திகளைச் செயற்படுத்துவதற்கு தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் சற்றும் தயங்கவில்லை. இவர்களின் இத்தகைய செயற்பாட்டால் பெரிதும் பாதிப்படைவது அன்றாட சீவியத்தை நடத்த அல்லற்படும் அப்பாவிக் குடும்பங்கள் தான்.

"நாங்கள் கடற்றொழில் செய்வதற்கு தொழிலுக்குத் தேவையான கடற்றொழில் உபகரணங்கள் இல்லாமல் அல்லல்பட்ட போது அரசு எதுவித உதவியும் செய்வதற்கு முன்வரவில்லை. ஆனால் இப்ப தென்னிலங்கையிலிருந்து தொழிலுக்கு வந்துள்ளவர்களுக்கு தேவையான வசதிகளை அரசு பெற்றுக் கொடுத்துள்ளது.

எங்களுக்கென்று சொந்தமாய் நிரந்தரமாக இருப்பது கடல் மட்டும் தான் என்று நினைச்சம். ஆனால் இப்ப எல்லாமே கைவிட்டுப் போச்சு" பாதிப்படைந்துள்ள செம்மலைக் கடற்றொழிலாளரின் உள்ள குமுறல்கள் இதுவாக உள்ளது. மீளவும் ஒரு புதுத்துயர் வாழ்வாதாரத்தைக் கவிழ்க்கும் செயற்பாடாகத் தற்போது நடைபெறுவதாக இவர்கள் விசனம் சொல்லாமல் இல்லை.

இங்குள்ள கடல்வளத்தை தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் சுரண்டிச் செல்கிறார்கள். இதனால் செம்மலை மீனவர்களுக்கு எதுவித லாபமும் கிடைக்கப் போவதில்லை. இவர்களின் தொழில் அபிவிருத்தி ஒரு பின்னடைவைச் சந்திக்கும் துர்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. தொழில் அபிவிருத்தியில் ஏற்பட்டுள்ள பின்னடைவு செம்மலைப் பிரதேச மக்களை ஓர் வறுமைக்குள் தள்ளிக்கொண்டுபோகிறது.

எகிறிக்கொண்டு போகும் விலைவாசி உயர்வு எதிர்காலத்தில் தங்களின் வயிற்றுப் பசியைக் கூட பூரணமாக நிறைவேற்ற முடியாமல் போய்விடுமோ என இங்குள்ள குடும்பங்கள் அஞ்சுகின்றன. கடல் வளத்தை சீவியத்துக்காக நம்பி வாழும் குடும்பங்களின் தொழிலைச் சூறையாடும் தென்னிலங்கை கடற்றொழிலாளர்களை கட்டுப்படுத்துவற்கு அல்லது தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்பதே இங்குள்ள கடற்றொழிலாளர்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

# அம்மன் தாலியின் உண்மையான மகத்துவம்

பிரம்மஸ்ரீ-சண்முக-தியானேஸ்வரசர்மா

ஜோதிடர், நுணாவில் மத்தி, சாவகச்சேரி

திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது. இது அக்காலம் முதல் எல்லோரது நாவிலும் உச்சரிக்கப்படும் ஒரு வாசகம். அந்த வாசகம் இன்றைய தலைமுறையினரால் ரொக்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்று மாற்றம் பெற்றிருக்கிறது.

அன்றைய காலங்களில் வாழ்ந்தவர்கள் உண்மையான, விசுவாசமான, மனமொத்த வாழ்க்கையை வாழ்ந்திருந்தார்கள் என்பதே உண்மை. காதலில் கொடுத்த வாக்குறுதியை நிறைவு செய்பவர்களாகவும், ஒருவனுக்கு ஒருத்தி என்ற கொள்கையின் முன்னுதாரணமாகவும் வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள்.

ஆனால் இன்றைய காலத்தை எடுத்துக் கொண்டால் இவையெல்லாம் தலைகீழாக மாறியிருக்கிறது. இன்றொரு சட்டை, நாளையொரு சட்டை என்பதுபோல் தமது வாழ்க்கையையும், மேலை நாட்டுக் கலாசாரம் போல் சிலர் மாற்றியமைக்கிறார்கள்.

இது போன்ற பிரச்சினைகள் குடும்ப வாழ்க்கையில் புரையோடாமல் இருப்பதற்காகவும், குடும்பத்தில் கருத்தொற்றுமை நிலவவும், சந்தோஷம், அன்னியோன்னியம், சினேகம், தாம்பத்திய பந்தம் சிறப்புறுவதற்காகவும் திருமணப் பொருத்தம் என்ற விடயத்தில் இன்றைய காலகட்டத்தில் அதிக சிரத்தை எடுக்க வேண்டியிருக்கிறது.

திருமணப் பொருத்தங்கள் பதினைந்தாக இருப்பினும், மிக முக்கியமான ஒன்பது பொருத்தங்களில் கவனம் செலுத்தியே ஆக வேண்டும்.

முக்கிய பொருத்தங்களில் கிரகப்பொருத்தம் என்பது தருமார்த்த காமமோட்சம் என்று கூறப்படுகிறது. இதில் தனஸ்தானம் என்று கூறப்படும் 02 ஆம் வீடு, களஸ்திரஸ்தானம் என்று கூறப்படும் 07ஆம் வீடு , இலாபஸ்தானம் என்று கூறப்படும் 11ஆம் வீடு, தாம்பத்தியத்தின் சிறப்பைச் சொல்லக்கூடிய சயனஸ்தானம் என்று கூறப்படும் 12ஆம் வீடுகள் முக்கியமாகப் பார்க்கப்படுகின்ற வீடுகளாகும். இதனை விட செவ்வாய்தோஷம், களஸ்திர தோஷம், புத்திரதோஷம், மாங்கல்ய தோஷம் என்பன கிரகங்களின் அடிப்படையிலேயே அமைகின்றன. இதில் 07ஆம் அதிபன் 03 இல் இருப்பதால் ஏற்படும் களஸ்திரதோஷம் அல்லது தாரதோஷம், அதேபோன்று பெண்ணினுடைய ஜாதகத்திலுள்ள அட்டமஸ்தானத்தில் சூரியன் அல்லது செவ்வாய் நீசமடைந்து, அல்லது பகை பெறுதலால் ஏற்படும் மாங்கல்ய தோஷமும், எச்சரிக்கையாக ஆராயப்படல் வேண்டும். ஏனெனில் இவை திருமண பந்தத்தில் ஏற்படும் பிரிவு, கணவரின் ஆயுளுடன் சம்பந்தப்பட்ட விடயங்களைக் குறித்து நிற்கின்றன. இத்தகைய தாக்கமுடையவர்களும் அம்மன் தாலியைச் சிந்திப்பது உகந்ததாகும்.

அடுத்ததாக, ஆயுள் விருத்தியைக் குறிப்பிடுகின்ற தினப்பொருத்தம் அல்லது நட்சத்திரப் பொருத்தமும் திருமணப் பொருத்தத்தில் முக்கிய பொருத்தமாகும்.

அதேபோன்று சரீர சுகத்தைக் கூறுகின்ற கணப்பொருத்தம் என்னும் பொருத்தமும் திருமணப் பொருத்தத்தில் முக்கியமானது.

அடுத்ததாக அன்பைக் குறிக்கின்ற முக்கியமான பொருத்தமாகக் கருதப்படும் யோனிப் பொருத்தம் முதன்மையானதாகும்.

அதேவேளை, குலம் சிறந்து விளங்குவதைக் குறிக்கும் குலவிருத்திப் பொருத்தமான இராசிப் பொருத்தமும் திருமணப் பொருத்தத்தில் முக்கியமான பொருத்தமாக அமைகிறது.

அதேபோன்று சந்தோஷம், அன்னியோன்னியத்தைக் குடும்ப வாழ்க்கையில் சிறப்பாகக் கொடுக்கக்கூடிய பொருத்தமான, வசியப் பொருத்தமும் முக்கியபொருத்தமாக அமைகின்றது.

அடுத்ததாக, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷம் கொடுக்கக்கூடிய முக்கியமான சந்ததி விருத்தியைச் சொல்லும் புத்திரப் பொருத்தமும் மிகவும் முக்கிய பொருத்தமாக அமைகிறது. இது பற்றிய விரிவான விளக்கத்தை " சர்ப்பதோஷமும் அதன் தாக்கமும்" என்ற பகுதியில் விரிவாகத் தந்திருந்தேன்.

மற்றுமொரு முக்கியமான பொருத்தமாக இருவரும் பூரணமாக ஆயுளை நிறைவு செய்து கொள்ளும் ஆயுள் பொருத்தமும் அமைகிறது.

அதேவேளையில் மிகவும் முக்கியமான பொருத்தமாகக் கருதக்கூடிய இரச்சுப் பொருத்தம் அல்லது தாலிப்பொருத்தமுமே திருமணப் பொருத்தத்தை [illegible] செய்கிறது. இப் பொருத்தத்தை [illegible] வைத்துத்தான் அம்மன் தாலியைத் தீர்மானிக்கிறார்கள். உண்மையிலேயே தாலிப்பொருத்தம் இல்லாதவிடத்தில் மட்டுமன்றி, களஸ்திரதோஷம், மாங்கல்ய தோஷம் அல்லது ஒரு தரப்பிற்கு 07இல் தோஷம் தரக்கூடிய செவ்வாய் இருப்பினும் அம்மன் தாலியை அணிவதே சிறப்பு.

முன்னைய காலங்களில் எமது மரபுப்படி தாலியாக இருந்தது மஞ்சள்தான். அந்த மஞ்சளை மஞ்சள் நூலில் இறுகக்கட்டி அணிந்ததே தாலியின் வரலாறு. பெண்ணினுடைய கழுத்தில் மஞ்சள் நூலால் மூன்று முடிச்சுப் போட்டு, மூன்று முடிச்சுக்குமான தனித் தனிச் சிறப்புக்களுடன் கழுத்தில் தொங்கியதே எமது அன்றைய மரபுவழித் தாலி.

ஆனால், இன்றைய காலகட்டத்தில் தாலிக் கொடி என்பது அவரவர் கௌரவத்தைப் பறைசாற்றும் ஒரு பொருளாக மாறிவிட்டது. அவரவர் ரொக்கத்தின் பெறுமதிக்கேற்ப தாலிக் கொடியின் பெறுமதியும், அல்லது பவுணின் எண்ணிக்கையும் அமைகிறது எனலாம்.

முன்னயை காலங்களில் மஞ்சளில் கட்டிய தாலிகளே இன்றைய காலங்களில் தங்கத்தில் கொம்புத்தாலி அல்லது பிள்ளையார் தாலி, சிவன் தாலி, அம்மன் தாலி, என்ற பரிணாமங்களை எட்டி நிற்கின்றன. தாலிப் பொருத்தம் இல்லாது போனாலோ, அல்லது பொருத்தம் பார்க்காத திருமணமானாலோ அம்மன் தாலியைக் கட்டி திருமணம் செய்யலாம் என்று தீர்ப்புக்கள் வழங்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட தாலிகளில், அம்மன் தாலி அடங்கலாக, விவாகப்பொருத்தம் அல்லது தாலிப்பொருத்தம் இல்லாத நிலையில் பெண்ணின் கழுத்தில் ஆண் கட்டினால் தோஷம் தோஷமே. தாக்கம் தாக்கமே.

உண்மையில் தாலிகள் பல பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டாலும், அவை மஞ்சளிலிருந்து தங்கமாக பரிணாமம் பெற்றாலும், இந்தியாவில் இன்னும் சகல சமூகங்களைச் சார்ந்தவர்களும் மஞ்சள் நூலில் தாலியைக் கோர்த்து மூன்று முடிச்சுப் போட்டு [illegible] கொள்கிறார்கள்.

[illegible] இலங்கையில் பிராமண சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகளவில் அதே முறையைப் பின்பற்றி வருகிறார்கள்.

தென்னிந்தியாவில் மாங்கல்யதோஷம் அல்லது தாலிப்பொருத்தம் அல்லது திருமணப் பொருத்தம் இல்லாதவர்கள், மஞ்சளை மஞ்சள் நூலில் கட்டி, அல்லது தங்கத்தில் அம்மன் தாலியை மஞ்சள் நூலில் கோர்த்து, அம்பாளின் பாதத்தில் வைத்து பூசை செய்வதுடன், அம்பாளுக்கும் பொட்டுத்தாலி கொடுத்து, வஸ்த்திரம் கொடுத்து குங்கும அர்ச்சனை செய்து, சுமங்கலி பூசை செய்து, பெண்ணே அம்பாளின் பாதத்தில் வைத்து எடுத்துக் கொண்டு, தன் கையால் தனது கழுத்தில் கட்டும் வழக்கமே அம்மன் தாலி என்று கருதப்படுகிறது. இதன்மூலம் தனது கணவரின் ஆயுளை அல்லது வாழ்க்கையின் சந்தோஷத்தை அம்பாளிடமே பொறுப்புக் கொடுப்பதாக அர்த்தப்படுகிறது. அங்கு சட்டபூர்வமான திருமணமே இருவருக்கும் அமைகிறது. மேற்படி கட்டும் அம்மன் தாலியே, மருவிய நிலையில் பவுணில் அம்மன் படம் போட்ட அம்மன் தாலியாக ஓர் ஆண் பெண்ணின் கழுத்தில் கட்டும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. தோஷமுடையவர்கள் எந்தத் தாலியானாலும், ஆண், பெண்ணின் கழுத்தில் கட்டுவது என்பது அர்த்தமற்றதாகவே அமையும். எனவே தாலிப்பொருத்தம் இல்லாதவிடத்தில் அந்தப் பொருத்தத்தைப் தவிர்ப்பது நல்லது. தவிர்க்க முடியாதவர்கள் மேற்சொன்ன விதத்தில் அம்மன் தாலியைக் கட்டுவது உகந்தது.

இந்தியாவிலுள்ளோரானாலும் சரி, இங்குள்ள பிராமணர்கள் ஆனாலும் சரி நூலில் கோர்த்துக் கட்டிய எவ்விதமான பவுண் தாலியின் நூல் பழுதடைந்தாலும், புதிய நூலை, பழைய நூல் இருக்கக்கூடியதாக தாலியின் துவாரத்தினுள் செலுத்தி, கோர்த்து கணவரால் மூன்று முடிச்சுப் போடப்பட்ட பின்னர்தான், பழைய நூல் அவிழ்த்து எடுக்கப்படுகிறது. அந்தளவுக்குத் தாலியின் மகத்துவம் பேணப்படுகிறது.

எனவே அம்மன் தாலியின் உண்மையான மகத்துவத்தைப் பின்பற்றி தாலி கட்டுவதே உன்னதமான, சந்தோஷமான வாழ்வுக்கு வழி வகுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவது ஒன்று(மில்லை)

வீகேளம்

யார் குத்தியாவது அரிசியாகட்டும். ஆக்கிபதமாக உண்டுவிடலாம் என்று சோம்பேறிகள் சிலர் எண்ணிக் கொண்டு அன்றைய விடியலை எதிர் கொண்டனர். நீண்ட நாள் பாடுபட்டு உழைத்ததுக்கு ஏதோ மன நிறைவாகக் கிடைத்திருக்கிறது என்று பலநாள் முயற்சியாளர்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபட்டிருந்தனர். ஏதோ சுனாமி பேரலை இன்னும் சற்று நேரத்தில் வரப்போகிறது, நாட்டு மக்கள் அனைவரையும் காப்பாற்ற வேண்டும் என்ற வேட்கையோடு இன்னுமொரு பகுதியினர் ஆரவாரப்பட்டுக் கொண்டனர்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் உலகளவிலான விமர்சனங்களுடன் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அது இலங்கையில் இறுதிப்போர் நடைபெற்ற போது இடம் பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் இலங்கை அரசின் பொறுப்புக் கூறல் குறித்தும் அமைந்திருக்கிறது.

இலங்கை மீது, தமிழ் மக்கள் மீது கரிசனை கொண்ட வல்லரசு நாடுகளின் இந்தத் தீர்மானம் எதிர்காலத்தில் இலங்கையிலுள்ள சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு நீதிவேண்டிக் கொடுப்பதற்காக, அவர்களது உரிமைகளை அவர்களிடமே பெற்றுக் கொடுப்பதற்காக என்ற பொது அரசியல், மனு நீதிக்கு என்பவற்றுக்கு அப்பால் சுயநல ஏகாதிபத்தியக் கொள்கை வெளிப்பாடாகவே கருதமுடியும்.

மாறாக, இல்லையில்லை அமெரிக்கா இலங்கை மீதும் இலங்கைத் தமிழ் மக்கள் மீதும் கரிசனை கொண்டுள்ளது, அது மனு நீதி அடிப்படையில் பணியாற்றியிருக்கிறது என யாராவது குறிப்பிட்டால், அதை அமெரிக்கா 'களையை முளையில் கிள்ளி'யிருக்க வேண்டும். தமிழ் மக்கள் தங்களைக் 'காப்பாற்றுங்கள்' 'காப்பாற்றுங்கள்' என்று கதறும் போது காப்பாற்றியிருக்கவேண்டும்.

உலக வர்த்தகமையம் மீதான செப்ரெம்பர் தாக்குதலுக்குப் பின்னர் விடுதலைப் புலிகள் மீதான அமெரிக்காவின் போக்கு, மீண்டும் 2002 சமாதான உடன்படிக்கையின் பின்னர் விடுதலைப்புலிகளிடம் இருந்து அமெரிக்கா எதிர்பார்த்த சில உதவிகள் என்பன காரணமான விரிசல், இவர்களுக்கிடையில் ஓர் அதிகார வேற்றுமையையும் பழிவாங்கும் உணர்வையும் ஏற்படுத்திக்கொண்டது.

இருந்த போதும் விடுதலைப் புலிகளை முற்றுமுழுதாக அழித்துவிடவேண்டும், அவர்களின் வளர்ச்சி அபரிமிதமானது என்று அமெரிக்கா எண்ணுவதற்குப் பதிலாக அவர்களை ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் எதற்காவது பயன்படுத்தலாம் என்பதை அது மனதளவில் வைத்துக்கொண்டது.

இந்த சித்து விளையாட்டுகளுக்கு மத்தியில் நீண்டநாள் பகை கொண்ட இன்னொரு தரப்பு, விடுதலைப் புலிகளை எப்படியாவது அழிக்கவேண்டும் என்பதில் குறியாக இருந்தது. ஆனாலும் அதை வெளிப்படையாகக் காட்ட விரும்பாத அது மறைமுகமாக இலங்கை அரசைப் பயன்படுத்தியது.

இறுதிப் போரில் இந்தியாவின் பங்களிப்பு தொடர்பிலான மாறுபட்ட கருத்துக்கள் வெளியாகி அவை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், இந்தியா அமெரிக்காவின் பிரேரணைக்கு ஆதரவை கடைசி நேரத்தில் வழங்கி இலங்கை அரசைக் குழப்பத்தில் விட்டுள்ளது.

இந்தச் சூத்திரம் என்ன என்பதை இலங்கை அரசு அறிய இப்போதுதான் முற்படுகிறது. அது சுயலாப அரசியல் சித்தாந்தம் என்பதை உணராமல் 'நம்பி நடுத்தெருவுக்கு' வந்த கதையாகிவிட்டது.

இந்தியா, ஈழத்தமிழர்கள் மீது கரிசனை கொண்டுள்ளதா? அது மனப் பூர்வமாக அமெரிக்கப் பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்ததா? என்ற கேள்விகளுக்கு பதில் இல்லை என்பது மட்டும்தான்.

இந்தியா, தமிழ் மக்களையும், தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கக் கூடிய பலம் வாய்ந்த அரசியல் பாரம்பரியத்தையும் கொண்ட நாடு. இலங்கையின் அயல் நாடு. அது ஈழத்தமிழர் விடயத்தில் அமெரிக்காவின் சொல்லைத்தான் கேட்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் கிடையாது. சுயமாக ஒரு இனத்தின் மீதான அரச வன்முறைகளைத் தட்டிக் கேட்கும் உரிமை, பாரம்பரியம், கடமை, பொறுப்பு அதற்கு இருந்திருக்கவேண்டும்.

ஆனால் அயல் நாட்டில் நடந்தேறிய இனப்படுகொலைக்கு அது தூண்டுதலாகவும் உடந்தையாகவும் இருந்திருக்கிறது.

இந்த நிலையில் இந்திய உள்நாட்டு அரசியல் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு புதிய முடிவை சுயநலத்தின் பேரில் எடுத்திருக்கிறது. அதுவே அமெரிக்கப் பிரேரணை மீதான இந்தியாவின் ஆதரவு நிலைப்பாடு.

அமெரிக்க பிரேரணையை சீனா, ரஷ்யா எதிர்த்திருக்கின்றன. அது அவர்களது சுயநலம். அமெரிக்காவுக்கு நாம் அடிமையில்லை, அந்த நாட்டில் நாங்கள் தங்கியிருக்கவில்லை என்பதை வெளிப்படையாக அறிவிக்கும் வாய்ப்பை அவர்கள் இலங்கைப் பிரச்சினையைப் பயன்படுத்தி அறிவித்துள்ளார்கள் என்பதுதான் உண்மை.

அடுத்து பிரேரணைக்கு எதிராக 15 நாடுகளும் யார் பக்கமும் இல்லை என்று 8 நாடுகளும் தீர்ப்புக் கொடுத்திருக்கின்றன. விழுந்தாலும் மீசையில் மண்முட்டவில்லை என்று இலங்கை மார் தட்டிக் கொள்ளும் அடுத்த சந்தர்ப்பம் இது. அவர்களும் சுயம் என்ற நிலைப்பட்டில் இருந்துதான் அந்த முடிவை எடுத்திருக்கிறார்கள் என்பது வெளிச்சம். சிலவேளை வாக்களிப்பில் பங்குபெறாமைக்கு 'வரட்டுக் கௌரவம்' கூட காரணமாக அமைந்திருக்கலாம். அல்லது ஐயோ அமெரிக்கா! என்ற பயம்.

எல்லாவற்றையும் தாண்டி தமிழ் மக்கள் தாங்க முடியாத அளவுக்கு துன்ப துயரங்களை அனுபவித்து விட்டனர். இன்னமும் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கின்றனர். அவர்களது பார்வையில் பிரேரணை நிறைவேற்றம் என்பது எப்படிப் பார்க்கப்படும் என்றால் ஆபத்துக்கு உதவாப்பிள்ளை, அரும்பசிக்கு உதவா அன்னம், கோபத்தை அடக்கா வேந்தன், குரு மொழி கொள்ளா சீடன், தாகத்தை அடக்கா தண்ணீர், தரித்திரம் அறியா பெண்டிர்..... என்ற பயனற்ற விடயங்கள் போல இதுவும் ஒன்று என்றுதான் யாரோ தங்கள் சுயலாபத்துக்காக எங்கள் பிரச்சினையைத் தூக்கி நேர்த்திக்கடன் நிறை வேற்றுகிறார்கள் என்பது தான் அவர்கள் நிலைப்பாடு.

அமெரிக்காவின் பரீட்சைக்கு விடை கிடைத்திருக்கிறது. அதன்படி அவர்கள் எதிர்கால அரசியல் இராஜ தந்திரங்களை வகுப்பார்கள்.அதுதான் அவர்களது இலக்கு.ஆனால் தமிழர் பிரச்சினையை வைத்து அரசியல் நடத்தவும், அரிசியாக்கி சமைத்து உண்ணவும் உள்ளேயும் வெளியேயும் பலர் காத்திருக்கிறார்கள் என்பதுதான் வெளிப்படை. இதைவிட புதிய மாற்றம் எதுவும் நிகழப் போவதில்லை என்றே தமிழ் மக்கள் கருதுகின்றனர். *

# செயல் வடிவிலான நடவடிக்கை தேவை

ஜனநாயகன்

மனித உரிமைகளைப் பற்றி எமக்கு யாரும் பாடம் புகட்ட முடியாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் தெரிவித்திருந்தார்.

ஜெனிவாப் பிரேரணை வெற்றிகரமாக அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதை அடுத்தே ஜனாதிபதியால் குறித்த கருத்து ஆவேசத்துடன் வெளியிடப்பட்டது.

இதேவேளை சர்வதேச சக்திகளின் தலையீடுகளுக்கு இடமளிக்க முடியாது ஜெனிவா பிரேரணையால் எம்மை எதுவும் செய்து விட முடியாது என பாதுகாப்புச் செயலர் கூறுகிறார்.

இவ்வாறு ஜெனிவா மாநாட்டில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை அடுத்து அரச உயர்மட்டங்களால் இத்தகைய கருத்துக்கள் கோபாவேசமாக வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அரசு தம்மை நியாயப்படுத்த முற்பட்டாலும் உலக நாடுகளிடம் தமது உணர்வுகளை, ஆத்திரத்தை வெளிக்காட்டும் முகமாக அறிக்கைகளை வெளியிட்டாலும் அது தன்னைத் தானே உணர்ந்து கொள்ளத் தயாராக இல்லை என்பதே அவர்களின் கருத்துக்கள் மூலம் பகிரங்கமாக வெளிக்காட்டப்படுகின்றது.

மனித உரிமை விடயத்தில் இலங்கை அரசு போர் இடம்பெற்ற காலப் பகுதியிலும் போர் முடிவுற்ற காலப் பகுதியிலும் மெத்தனப் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது என பரவலான குற்றச் சாட்டுக்கள் மனித உரிமைகள் கண்காணிப்பகம் மூலமாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை மூலமாகவும் அடிக்கடி வெளியிடப்பட்டன.

இவை மட்டுமல்ல பல ஐ.நா. நிறுவனங்களும் இலங்கையில் இடம் பெறுவதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் விவகாரங்களைப் பகிரங்கமாகவே சுட்டிக் காட்டிக் கருத்துக்களை வெளியிட்டன.

இன்றைய இலங்கை அரசியலில் இராணுவத் தலையீடு; தனிநபர் செல்வாக்கு விரவிக் காணப்படுவது இவை மனித உரிமைகளைக் குழிதோண்டிப் புதைக்க வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதாகப் பரவலான குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன.இதனை நியாயப்படுத்துவது போல் அரசின் செயற்பாடுகளும் அமைந்துள்ளன.

குறிப்பாகப் போர் இடம்பெற்ற காலப் பகுதியில் மனித உரிமை என்பது இலங்கையில் வெறும் பேசு பொருளாக மட்டுமே இருந்தது. பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகால சட்டம் என்பன இலங்கை அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்ட 18 அடிப்படை மனித உரிமைகளையும் குழி தோண்டிப் புதைக்க வாய்ப்பேற்படுத்திக் கொடுத்தன.

சந்தேகமென்ற பெயரில் கைது செய்தல், தனி நபர்களின் சொந்த விவகாரங்களில் தலையீடு, சொத்துப் பறிமுதல், வீடுகளை உயர் பாதுகாப்பு வலயமாக்கி கபளீகரம் செய்தல், கடத்தல், வதைக்கூடங்கள் அமைக்கப்பட்டு சிறைக் கைதிகள் சிறைக் கம்பிகளுக்குள் தள்ளப்படல் போன்ற பல மனித உரிமைகளை முற்றாகப் புறக்கணிக்கும் செயற்பாடுகள் அரச படைகளாலும் அவர்களை நிர்வகிக்கும் அரச உயர் மட்டத்தாலும் திட்ட மிட்டு மேற்கொள்ளப்பட்டன.

இதன் காரணமாக தமிழ் இளைஞர்கள் வகை தொகையின்றி கைது செய்யப்படுவதும் அவர்கள் சிறைக் கூடங்களுக்குள் [illegible] வதற்கும் பின் முகவரி அறியப்படாத பதுங்கு குழிகள் மனிதப் புதைகுழிகளுக்குள் புதைக்கப்படவும் வாய்ப்புக்களைத் தாராளமாக வழங்கின.

இதைவிட அடிப்படை உரிமைகளில் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் உரிமைகள் கூட இலங்கையில் மறுக்கப்பட்டன. பேச்சுரிமை, எழுத்துரிமை, ஊடக சுதந்திரம் என்பன இலங்கையில் பொருத்தமற்ற வார்த்தைப் பிரயோகமாகவே இந்தக் காலத்தில் விளங்கின. அரசை விமர்சிக்கும் உரிமை அடிப்படை உரிமைகளில் ஒன்றாகக் கூறப்பட்டாலும் அரசை விமர்சித்த பல ஊடகவியலாளர்கள் இந்தக் காலத்தில் கொடூரமாகக் கொன்று புதைக்கப்பட்டனர்.

இதைவிட ஒவ்வொரு மனிதனுக்கும் கட்சியை நிறுவும் உரிமை, கட்சியில் அங்கத்துவம் பெறும் உரிமை, அரசியல் நடவடிக்கையில் ஈடுபடும் உரிமை ஆகிய உரிமைகள் பற்றி இலங்கை அரசியல் யாப்பில் தெளிவாகக் கூறப்பட்டிருந்தாலும் அவை யாவும் இலங்கையில் செல்லாக் காசாக இருந்தன.

போரின் இறுதிக் காலத்திலும் பல மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றதை சனல் - 4 அம்பலப்படுத்தியது. மருத்துவமனைகள் பொது மக்கள் மீதான விமானத் தாக்குதல், மருந்துப் பொருள் தடை, உணவுப் பொருள் தடை எனப் பல அடிப்படை மனித உரிமை மீறல் சம்பவங்கள் இலங்கையில் தாராளமாக இடம் பெற்றன. இவை குறித்து அந்தக் காலத்தில் பலவேறு விமர்சனங்கள் முன் வைக்கப்பட்ட போதும் அரசு அதை காதில் போட்டுக் கொள்ளவே இல்லை.

இவை அனைத்தும் ஒன்றாக சேர்ந்தே ஐ.நா. மனித உரிமை மாநாட்டின் தீர்மானமாக வெளிவந்துள்ளது.

இதையும் இலங்கை அரசு உதாசீனப்படுத்தியே வருகின்றது என்பதை அவர்களது வார்த்தைப் பிரயோகங்கள் உறுதிப்படுத்துகின்றன என்ற கருத்துகளும் தெரிவிக்கப்படுகின்றன.

போர் முடிந்த பின்னர் மனித உரிமை விடயத்தில் இலங்கை அரசின் அவதானம் வெறும் பேச்சளவில் மட்டுமே உள்ளதாகத் தொடர்ச்சியாக பகிரங்கமான குற்றச்சாட்டுக்கள் வெளிவந்த வண்ணமுள்ளன. குறிப்பாகப் போர் முடிவடைந்து மூன்றாண்டு கடந்து விட்ட நிலையிலும் அரசியல் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

அத்துடன் சர்வதேச மனித உரிமை அமைப்பொன்று அண்மையில் விடுத்த தகவலைப் போல் கடத்தல்கள் ஓய்ந்திருப்பதான வெளிப்பாடும் இன்னும் அரச தரப்பில் இருந்து காட்டப்படவில்லை. காணாமல் போனோர் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. இவ்வாறு மனித உரிமைக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகள் இலங்கை தேசத்தில் இடம்பெறும் போது மனித உரிமைகளை கடைப்பிடிப்போம் என்று கூறுவதும் மனித உரிமை பற்றிக் கூறும்போது ஆத்திரமடைவதும் எந்த வகையில் ஏற்புடையது எனக் கேட்கிறார்கள் மக்கள்.

ஜனநாயகம், ஊடக சுதந்திரம் என்பன கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் போது மனித உரிமை அமுலாக்கம் எந்த வகையில் சாத்தியம் என்ற கேள்வியும் மக்களிடம் இயல்பாகத் தோன்றுவது தவிர்க்கமுடியாததாகிவிடுகின்றது.

தாங்கள் நல்லவர்கள் என அறிக்கைகளில் காட்டுவதை விடுத்து அதனைச் செயல் வடிவில் நிரூபிப்பதன் ஊடாகவே ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கிய உலக நாடுகளின் பயணத்தில் இலங்கையும் இணைந்து கொள்ளமுடியும். அதுவரை இத்தகைய பிரேரணைகள் இலங்கையின் கசப்பான அரசியல் வரலாற்றுப் பக்கங்களாக விளங்கும். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அருட்தந்தை
சூ.ம.ஜெயசீலன்

# பல்வேறு வடிவங்களில் வதைப்பட்ட தமிழர்கள்

## உணர்வுகளை இறக்கி வைத்த நேரம்






இடப்பெயர்வுகளின் போது இடம்பெயர்ந்த பலரது வசதியான வீடுகள் இன்று இராணுவக் குடியிருப்புக்களாக மாற்றப்பட்டிருக்கின்றன.

வீடுகளின் உரிமையாளர்கள் பல ஆண்டுகளாகவே வாடகை வீடுகளிலும் உறவினர் வீடுகளிலும்தான் தங்கியிருக்கின்றார்கள்.

இரவு வேளைகளில் நகரம் கிராமம் எங்கும் அமைதியே குடிகொண்டிருக்கின்றது. போர் முடிந்ததாக அறிவிக்கப்பட்ட காலங்களில் மாலை நேரத்தில் வீதிகளின் குறுக்கே முள் வேலிகளைப் போட்டு பாதைகளை அடைத்து விட்டதாகவும் வெளியேற அனுமதிக்கப்படவில்லை என்றும் குமுறினார்கள்.

இப்போதுகூட 7 மணிக்குப் பிறகு வாகனங்களில் பயணிக்கும் யாவருக்கும் பல்வேறு முனைகளில். விசாரணை நடக்கிறது. துப்பாக்கி மொழி மட்டும் தெரிந்திருக்கும் அவர்களிடம் சிங்களம் பேசி சிறிது புன்னகைப்பவர்கள் எளிதில் கிளம்பிவிடலாம். தமிழ் மட்டும் தெரிந்தவர்கள் தங்களை விளங்கப்படுத்துவதற்குள் விக்கித்து போய் விடுவர்.

சந்தேகம் எல்லாம் சாட்சிகளாக்கப்படும். இராணுவத்தில் துப்பாக்கி பாதுகாப்பில்தான் தமிழர்கள் சிறைவைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலை யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வடக்கு மாகாணத்தில் மற்ற இடங்களில் இருந்தும் கிழக்கு மாகாணத்திலிருந்தும் என்னைப் பார்க்க வந்தவர்களும் இதே வாழ்க்கை முறையில் தாங்கள் அவதிப்படுவதையே கண்ணீரோடு சொன்னார்கள். நானும் கண்டு வந்தேன்.

பூநகரி வழியாக முழங்காவில் என்ற இடத்துக்கு இரு சக்கர வாகனத்தில் நண்பருடன் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. சென்றுவர ஐந்து மணிநேர பயணம். மழைக்கோட் அணிந்து கொண்டுதான் பயணித்தோம். மழையெல்லாம் பெய்யவில்லை. நாம் அப்படித்தான் சொல்லமுடியும். சாலைகளின் தரம் அப்படி. அதில் கிளம்பும் புழுதியும் அப்படி .

வாகனத்தில் அமர்ந்திருந்தாலும் குதித்துக் கொண்டுதான் செல்ல வேண்டும். எனக்கு உடல் வலி தெரியவில்லை. சுற்றும் முற்றும் பார்வையை பரவவிட்ட எனக்கு என் மக்கள் மூட்டை முடிச்சுகளோடு பதறி ஓடிய விளை நிலப் பகுதியும் மறைந்து கொண்ட புதர் பகுதிகளும் கொன்று வீசப்பட்ட நிலப் பகுதியும் ஈனஸ்வரமாக கலந்து போன கதறல்களாகவுமே காட்சிகள் கண்ணில் படர்ந்துகொண்டிருந்தன.

பூநகரியில் வெள்ளை ஸ்தூபி ஒன்று பறக்கும் வெள்ளை புறாவை சுமந்தபடி நிற்கிறது. அதன் அருகே சிறிய பாலம் ஒன்று போருக்குப் பிறகு கட்டப்பட்டுள்ளது. ஆனால் இராணுவத்தின் கோரப் பார்வையைப் பார்க்காமல் பாலத்தில் ஏறவும் முடியாது இறங்கவும் முடியாது.

முழங்காவில் செல்லும்வரை சிறுநீர் கழிக்கக்கூட ஓரிடத்தில் நாம் இறங்க முடியாதபடிக்கு திசையெங்கும் இராணுவத்தினர் துப்பாக்கிகளோடு நிற்கிறார்கள். அது வனம் நிறைந்த பகுதி என்பதால் படையினர் ஒருவர் நிற்கிறார் என்றால் அவருக்குப் பின்புறமாக ஒரு இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருப்பதையும் நாம் காண முடியும். சரியான இடைவெளியில் 'சர்வ சமாதானத்தின் தந்தை' என்ற அறிவித்தலுடன் விளம்பரத் தடியில் ரபஜபக்ஷ நின்று கை அசைத்துக் கொண்டிருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் இருந்த மாவீரர் துயிலும் இல்லம் தடம் தெரியாமல் அழிக்கப்பட்டு வீரர்களின் வீர சுவாசத்தின் மீது இராணுவ முகாம் அமைத்திருக்கின்றது என்பதையும் மாவீரர் துயிலும் இல்லம் இருந்ததாக சொல்லப்படும் இடத்தில் நின்று நிழற்படம் எடுத்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்பதையும் என் நண்பர் வழியாக தெரிந்து வைத்திருந்த எனக்கு முழங்காவிலில் இருந்த மாவீரர் துயிலும் இல்லத்தை பார்க்க வேண்டும் என்ற ஆவல் பிறந்தது. போனோம் சுற்றும் முற்றும் பார்த்தோம்.

எங்கும் புல் புதர்கள்தான் இருந்தன. அருகில் இருந்த கட்டடத்தை அடையாளமாக வைத்து இந்த இடத்தில்தான் துயிலும் இல்லம் இருந்தது என்று நண்பர் சொன்னார். வரலாற்றையே அழிப்பவர்களுக்கு வீரத்தை மட்டும் போற்றவா தெரியப் போகின்றது. 200 மீற்றர் தூரத்தில் நின்று கொண்டிருந்த படையினரின் கண்களில் சிக்கிவிடாமல் வாகனத்தில் அமர்ந்தபடியே கையெடுத்து கும்பிட்டுவிட்டு படம் ஒன்று எடுத்து கொண்டேன்.

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஜூலை 23 அன்று நடைபெற்றது. அன்றைய நாளில் தான் 1983 இல் இலங்கை முழுவதும் தமிழர்களுக்கு எதிராக அடக்கு முறைகளும், அழித்தொழிப்புகளும் கொடூர முறையில் கட்டவிழ்த்து விடப்பட்டன. தமிழர்களுக்கு ஜூலை 23 என்பது கறுப்பு ஜூலையாகும். பல்வேறு வடிவங்களில் அந்த நாளில் தான் தேர்தல் நடத்தப்பட்டது.

இந்த தேர்தலில் வெற்றி பெறவேண்டும் என்ற வெறியுடன் தமிழர்கள் எப்படியும் தம்மையும் தம் கொலைக் கும்பலையும் சர்வதேசத்தின் கழுகுப் பார்வையில் இருந்து பிணை எடுப்பார்கள் என்ற கற்பனைக் கனவுகளுடனும் டக்ளஸ் தேவானந்தாவும் ராஜபக்ஷவும் சுற்றிச் சுற்றிச் செயலாற்றினார்கள்.

அபிவிருத்திக்காக இணைந்த கரங்கள் என்ற சுவரொட்டிகள் எங்கும் இருந்தன. அதி பாதுகா[illegible]கின்றோம், [illegible] மேம்படு[illegible] செய்கின்றோம், சாலைகள் திறந்து விடுகின்றோம், மீளக் குடியமர்த்துகின்றோம் என்று சொல்லி பிரச்சாரத்தை ஆரம்பித்தவர்கள் ஒவ்வொன்றுக்கும் விழா எடுக்க ஆரம்பித்தார்கள்.

புதிது புதிதாக கட்டடங்களையும் திறக்க ஆரம்பித்தார்கள். கட்டடம் திறப்பதில் எந்த அளவிற்கு ஆர்வமாக இருந்தார்கள் என்றால். ஒரே கட்டடத்தை ஒரே நாளில் மூன்று பேர் அடுத்தடுத்து திறந்து வைத்தார்கள். நல்லூர் தமிழ் கலவன் பள்ளிக் கூடத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவில் காலை 10.30 மணிக்கு ஈ.பி.டி.பி. கட்சியின் சில்வெஸ்திரி அலஸ்ரின் முக்கிய விருந்தினராக கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

பின்னர் ஒரு மணிநேர இடைவெளியில் அங்கு அமைச்சர் கிஸ்புல்லா வந்தார். அமைச்சரின் ஆதரவாளர்கள் மீண்டும் நாடாவை கட்டும்படி வற்புறுத்தினர். அதன்படி அக்கட்டடத்தை நாடா வெட்டி அமைச்சர் திறந்து வைத்தார். இவை முடிந்து சிறிது நேரத்தில் பிரதி அமைச்சர் கருணா அங்கு வந்தார். மீண்டும் நாடா கட்டப்பட்டது. மூன்றாவது முறையாக கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

அந்த நாள்களில் செய்தி ஆசிரியர் ஒருவர் ஒரு தினசரியில் தனது கவலையை பதிவு செய்திருந்தார்.

எனது நண்பர் ஒருவர் புது வீடு கட்டி முடித்த பிறகு அதன் கூரையில் ஒரு பகுதியை பிரித்து தரையில் வைத்து விட்டார். ஏன் என கேட்ட பொழுது, புது கட்டடம் என இதையும் திறப்பதற்கு வந்துவிட்டால் என்ன செய்வது?

கட்டட திறப்பு விழா இப்படி என்றால் மீள்குடியமர்வு எப்படியானது என்பது இன்னும் சுவாரசியமானது.

1991 ஆம் ஆண்டு வாக்கில் சிங்கள காடையர்களால் வசந்த கிராமம் வலிதுண்டல், கீரிமலை மாவிட்டபுரம் பகுதிகளிலிருந்து தமிழர்கள் இரத்தத்தோடும் காயங்களோடும் அடித்து விரட்டப்பட்டு 20 ஆண்டுகள் கழிந்து விட்டன. இப்போது அப்பகுதியில் மீள்குடியமர்வுக்கு மக்கள் வரலாம் என அனுமதி வழங்கியிருக்கிறது அரசு.

நாங்கள் அவ்விடத்தைப் பார்ப்பதற்குப் போனோம். ஆண்டுகள் 20 ஆன பிறகும் இன்னும் தனது அழிபாடுகளை ஆதாரமாகச் சுமந்துகொண்டு பல்வேறு கட்டடங்கள் நின்று கொண்டிருப்பதையும் உயிர்களின் வேதனையைச் சுமந்திருப்பதையும் பார்த்தபடி சென்றோம். வசந்த கிராமம் கடற்கரையை பார்த்தபடி மீனவர்களுக்கு பாதுகாப்பாகவும் மீனவர்களுக்கு ஒளிவிளக்காகவும் இருந்த புனித அந்தோனியார் ஆலயம் சிதைக்கப்பட்டுள்ளது.

காயப்பட்ட அந்தோனியாரும், கரங்கள் சிதைக்கப்பட்ட சிலுவையில் அறையுண்ட இயேசுவும் இன்னும் சாட்சியாக நின்று கொண்டிருக்கின்றார்கள்.

கொஞ்சத் தூரம் சென்றால் வலித்தூண்டல் இருக்கின்றது. இங்கே இருக்கும் புனித அன்னாள் ஆலயம் குண்டுகள் பட்ட காயங்களுடன் அழிவுகளின் மொத்த உருவமாக காட்சி அளிக்கின்றது. குண்டுக் காயங்களுடன் புனித அன்னாள் இன்றும் கடற்கரையோரத்தில் வீற்றிருக்கின்றாள்.

பிறகு வருவது கீரிமலை. இங்குள்ள நகுலேஸ்வரம் கோவில் இலங்கையின் பிரசித்தி பெற்ற நான்கு ஈஸ்வரங்களில் ஒன்றாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன் இந்தியாவில் இருந்து வருகை தந்த விஜயன் என்னும் அரசனால் இது புதுப்பிக்கப்பட்டதாக வரலாறு கூறுகின்றது.

ஆனால் இந்த ஆலயமும் இராணுவ தாக்குதலிலிருந்து தப்பியதாக தெரியவில்லை. தொடர்ந்து பயணித்தால் மாவிட்டபுரம் வருகின்றது. இதன் அருகில்தான் பலாலி விமான தளமும் இருக்கின்றது. மாவிட்டபுரத்தில் புகழ் பெற்ற கந்தசுவாமி கோவில் இருக்கின்றது. இந்த புகழ்பெற்ற கோவிலின் தேரை சிங்களவர்கள் எரியூட்டி அழித்தார்கள். அழித்ததன் அடையாளமாக அந்தத் தேரின் அடிப்பகுதி மட்டும் இன்னமும் இருக்கின்றது.

வழிபாட்டுத் தலங்களுக்கே இப்படியென்றால் மக்களின் வாழ்விடத்தின் கொடுமையை நாம் உணர்ந்து கொள்ளலாம். உள்ளூராட்சி வீடமைப்பு பிரதி அமைச்சர் பி.சி. இம்புலானால் 1983 ஜூன் 2 ஆம் திகதி 80 வீடுகள் கொண்ட வசந்த கிராமம் திறக்கப்பட்டது. இன்று அதற்கான தகவல் கல் மட்டும் இருக்கின்றது. இந்த ஊர் அங்கு இல்லை.

இப்போதுதான் நோர்வே அரசின் நிதி உதவியுடன் சமூக வீடமைப்பு, வாழ்வாதாரம், சமூக உட்கட்டுமானம் என்ற பிரிவின் அடிப்படையில், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் நிலை மாற்றல் நிகழ்ச்சித் திட்டம் என்ற அமுலாக்கத்தின் அடிப்படையில் ஐம்பது வீடுகள் கட்டுவதற்கான வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

*(சந்திப்போம்...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவில் நடந்தது என்ன?

அதிரன்

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 19ஆவது அமர்வு ஒருவாறு நிறைவு பெற்றுவிட்டது. பெப்ரவரி 27ஆம் திகதி ஆரம்பமான இந்த அமர்வு மார்ச் 23 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்தது. இத்துடன் கிட்டத்தட்ட ஒரு மாதகாலமாக பேசப்பட்டு வந்த ஜெனிவா பற்றிய கதைகள் இப்போது முடிவுக்கு வந்துவிட்டன. ஆயினும் இலங்கை அரசைப் பொறுத்தமட்டில் இந்த ஜெனிவா அமர்வு இன்னும் தொடர்கதையாகவே இருக்கப் போகின்றது. அதற்குக் காரணம் ஜெனிவா மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானம்தான். இந்தத் தீர்மானம் இலங்கை அரசை ஒரு போதும் கட்டுப்படுத்தாது என கூறப்பட்டாலும் சர்வதேச கண்காணிப்பு ஒன்று இலங்கை அரசின் மீது விழுந்துள்ளமையை யாரும் மறுக்க முடியாது. இதனால் அரசு இந்தத் தீர்மானம் குறித்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்பது உண்மைதான்.


ஜெனிவா அமர்வில் இலங்கை மீதான தீர்மானம் ஒன்று ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் அது இவ்வளவு சூடு பிடிக்கும் என்பதை யாரும் எதிர்பார்க்கவில்லை. அந்தளவுக்கு ஜெனிவா கூட்டத்தொடர் கடைசிக் கட்டத்தில் படு சூடாக இருந்தது.

நாடுகளுக்கு இடையேயான ஒரு ராஜதந்திர போராகவே இந்தக் கூட்டத்தொடர் இறுதியில் முடிவடைந்தது. இலங்கை - அமெரிக்கா இடையிலேயே இந்த ராஜதந்திரப் போர் நிகழ்ந்தது. இந்தப் போரில் வெற்றியீட்டியது வல்லரசான அமெரிக்காதான். இலங்கைக்கு இதில் தோல்வியே மிஞ்சியது. இலங்கைக்குப் பின்னால் இருந்து உற்சாகம் கொடுத்த சீனாவுக்கும் இது ஒருவகையில் தோல்விதான். அமெரிக்கா கொண்டு வரும் எந்தவொரு தீர்மானத்தையும் இலகுவில் சீனா ஏற்றுக்கொள்ளாது. அவ்வாறே இம்முறையும் நடந்தது. ஆயினும் சீனாவின் முயற்சி வெற்றியளிக்கவில்லை.

ஜெனிவா அமர்வு ஆரம்பமானபோது இலங்கை மீதான தீர்மானம் குறித்து பேசப்பட்டபோதும் அவை அவ்வளவு கரிசனையுடன் நோக்கப்படவில்லை. ஆயினும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்டன் இலங்கை மீது ஜெனிவாவில் தீர்மானம் ஒன்றை கொண்டுவரவுள்ளமையை இலங்கை அரசுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தியிருந்தார். இதனையடுத்து தீர்மானம் ஒன்று வர இருக்கிறது என்பது உறுதியாகிவிட்டது. இதனால் அந்தத் தீர்மானத்தை முறியடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முயற்சியில் இறங்கியது இலங்கை. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பிரதிநிதிகளை இலங்கை அரசின் பிரதிநிதிகள் சந்தித்து ஆதரவு தேடத் தொடங்கினர். இதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சர்கள் மற்றும் ராஜதந்திரிகளை அவசர அவசரமாக அந்த நாடுகளுக்கு அனுப்பினார். இந்த அமைச்சர்களில் முக்கியமானவர் ஜீ.எல்.பீரிஸ். இவர் ஆபிரிக்க நாடுகள் உட்பட பல நாடுகளுக்கும் ஓடிச் சென்று இலங்கையைக் காப்பாற்றுவதற்கான ராஜதந்திர முயற்சிகளில் ஈடுபட்டார்.

இந்நிலையில் அமைச்சர்கள் அடங்கிய இலங்கைக் குழு ஜெனிவாவுக்குப் புறப்பட்டது. இந்தக் குழுவினர் ஜெனிவா அமர்வுக்கு வந்திருந்த ஏனைய உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுடன் ஆதரவு தேடிப் பேச்சுக்களை ஆரம்பித்தனர். இவையெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது எதுவும் பேசாமல் அமைதி காத்தது அமெரிக்கா.

ஆயினும் இலங்கை தனது பிரசாரத்தை விடவில்லை. தொடர்ந்து ஆதரவு திரட்டுவதில் குறியாகச் செயற்பட்டது. எப்படியாவது இந்தத் தீர்மானத்தை விவாதத்துக்கு வராமல் தடுத்து நிறுத்துவதில் இலங்கை அரச பிரதிநிதிகள் தீவிரமாகச் செயற்பட்டனர். அமைச்சர்களான மஹிந்த சமரசிங்க, ஜீ.எல்.பீரிஸ், டக்ளஸ் தேவானந்தா, றிசாத் பதியுதீன் மற்றும் இலங்கைக்கான ஜெனிவாத் தூதுவர் தமரா குணநாயகம், முன்னாள் சட்டமா அதிபரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான மொஹான் பீரிஸ் ஆகியோர் இதில் முக்கியமானவர்கள். இவர்களுடன் சுமார் 70 பேர் கொண்ட குழு ஜெனிவாவில் தங்கி




**100 ராஜதந்திரிகளையும் நெறிப்படுத்தி இலங்கைக்கு எதிரான தீர்மானத்தின் வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இணைந்து கொண்டார் அமெரிக்க வெளிவிவகாரச் செயலர் ஹிலாரி கிளின்டன். ஹிலாரி கிளின்டனின் வருகையை அடுத்து இலங்கை மீதான தீர்மானம் குறித்த பரப்புரைகள் மேலும் உத்வேகமடைந்தன.**

யிருந்து தீர்மானத்தை முறியடிக்கும் நடவடிக்கைகளில் மும்முரமாகச் செயற்பட்டது.

இவையெல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த அமெரிக்கா திடீரென மார்ச் 7 ஆம் திகதி நடைபெற்ற அமர்வில் இலங்கை மீதான தீர்மானத்தின் வரைவை சமர்ப்பித்தது. யாரும் எதிர்பாராத வகையில் அமெரிக்கா இந்தத் திடீர் நடவடிக்கையை மேற்கொண்டது. இந்த நேரத்தில் ஒரு சில தினங்கள் ஜெனிவாவில் நின்றுவிட்டு நாடு திரும்பியிருந்தனர் இலங்கை அரசின் முக்கிய புள்ளிகள். தீர்மானம் சமர்ப்பிக்கப்படப் போகிறது என்பது இவர்களுக்குத் தெரியாது. அமர்வின் இறுதி நாள்களிலேயே அது சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்ப்பு இருந்தமையால் நாடு திரும்பியிருந்தனர் அவர்கள். அமெரிக்காவின் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து அவர்கள் மீண்டும் ஜெனிவாவுக்கு ஓடினர்.

இந்த நேரத்தில் ஜெனிவா மனித உரிமைகள் கட்டடத்தில் பிரதான நிகழ்வு நடைபெற்ற இடத்துக்கு வெளியே பல உப நிகழ்வுகள் நடைபெற்றன. தீர்மானத்துக்கு ஆதரவு தேடும் உப நிகழ்வுகளை அரசசார்பற்ற நிறுவனங்கள், மனித உரிமை அமைப்புக்கள், புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் உள்ளிட்ட பல நிறுவனங்கள் ஏற்பாடு செய்தன. மறுபுறத்தில் இலங்கையும் தனக்கு ஆதரவு திரட்டுவதற்கான உப நிகழ்வுகளை நடத்தியது. இலங்கை விவகாரம் குறித்து 8 உப நிகழ்வுகள் அங்கு நடைபெற்றன. அவற்றில் இரு உப நிகழ்வுகளை இலங்கை அரசு ஏற்பாடு செய்திருந்தது. ஏனைய 6 உப நிகழ்வுகளையும் மனித உரிமை அமைப்புக்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் ஏற்பாடு செய்தன. பிரதான நிகழ்வைவிட இந்த உப நிகழ்வுகளிலும் இலங்கை தொடர்பான விவாதம் இடம்பெற்றது. அரச சார்பற்ற நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட உப நிகழ்வுகளில் இலங்கை அரசின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு கடும் விவாதங்களில் ஈடுபட்டனர். அரசின் பிரதிநிதிகள் சிலர் குறிப்பாக அரச ஊடகவியலாளர்கள் சிலர் இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டு கூக்குரலிட்டு அவற்றைக் குழப்பும் முயற்சியிலும் ஈடுபட்டனர். இவ்வாறான அநாகரிக நடவடிக்கையில் ஈடுபட்டவர்களை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை கண்டித்து வெளியேற்றிய சம்பவமும் அங்கு நடைபெற்றது. அத்துடன் அங்கு இலங்கை அரசின் அத்துமீறல்களைச் சுட்டிக்காட்டி தீர்மானத்தை ஆதரிக்குமாறு கோரி பிரசாரத்தில் ஈடுபட்ட மனித உரிமை செயற்பாட்டாளர்கள் பலர் இலங்கை அரச பிரதிநிதிகளால் அச்சுறுத்தப்பட்டனர். இதனால் இந்தத் தீர்மானம் தொடர்பான முடிவு பெரும் எதிர்பார்ப்பு நிறைந்ததாகவே இருந்தது. இலங்கை அரசு ஏற்பாடு செய்த இரு உப நிகழ்வுகளிலும் பல நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை. ஆயினும் மனித உரிமைகள் அமைப்புக்கள், புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்த இரு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு அரசின் உரிமை மீறல்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தனர். இதனால் இந்த நிகழ்வுகள் குழப்பத்தின் மத்தியிலேயே முடிவடைந்தன. குறிப்பாக சுனந்த தேசப்பிரிய, பாக்கியசோதி சரவணமுத்து, நிமல்கா பெர்ணான்டோ, சுனில் அபயசேகர ஆகிய மனித உரிமை செயற்பாட்டாளர்கள் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்துக்கு ஆதரவு தேடுவதில் கடுமையாக உழைத்தனர். இவர்களுடன் இணைந்து கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளிலுள்ள தமிழர் பேரவைகள், புலம் பெயர் தமிழர் அமைப்புக்கள் ஆகியனவும் கடும் பிரசாரத்தில் ஈடுபட்டன. இதனால் அரசுக்கு ஒருபுறத்தே உறுப்பு நாடுகளை சமாளிக்க வேண்டிய அதேவேளை மறுபுறத்தில் இந்த மனித உரிமை செயற்பாட்டாளர்களையும் கவனிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தநிலை அவர்களை அச்சுறுத்தும் அளவுக்குச் சென்றது.

இது இவ்வாறு இருக்க தீர்மானத்தைச் சமர்ப்பித்த அமெரிக்காவும் சும்மா விடுவதாக இல்லை. தனது தீர்மானத்துக்கு ஆதரவைத் திரட்ட - உறுப்பு நாடுகளை சம்மதிக்க வைக்க தன்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் அது மேற்கொண்டது. இதன் முதற்கட்டமாக அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவருமான ஜிம்மி கார்ட்டரை ஆதரவு திரட்டும் முயற்சியில் இறக்கினார் ஹிலாரி. அத்துடன் நின்றுவிடவில்லை அமெரிக்கா. ஐ.நா. நிபுணர் குழுவின் தலைவர் தருஷ்மனும் அமெரிக்காவினால் இந்தக் களத்தில் இறக்கப்பட்டார். இதனால் முன்னரை விட தீர்மானத்தில் ஆதரவாகவும் எதிராகவும் பிரசாரங்கள் தீவிரமடைந்தன. தான் எடுக்கும் எந்த முயற்சியிலும் இலகுவில் தோற்றுவிடக் கூடாது என்பது அமெரிக்காவின் எண்ணம். அதற்காக அது தனது முழுப் பலத்தையும் திரட்டி தீர்மானத்துக்கு ஆதரவு தேடும் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டது.

மறுபுறத்தில் சீனாவும் இலங்கைக்கு ஆதரவைத் திரட்டிக் கொடுக்க முயற்சிகளை மேற்கொண்டது. இந்நிலையில் அதிக எதிர்பார்ப்பு நிறைந்ததாக உருவெடுத்தது இந்தியாவின் முடிவு. தீர்மானத்தை ஆதரிக்குமா, எதிர்க்குமா என்ற நிலை இருந்தது. இந்தியாவும் இதுகுறித்து மௌனம் காத்ததுடன் இலங்கை அரசுடன் உள்ள நீண்டகால உறவைக் கருத்தில் கொண்டே தனது முடிவு அமையும் என்று கூறியது. இதனால் வெடித்தது போராட்டம். தமிழகத்தில் உள்ள பிரதான அரசியல் கட்சிகளான தி.மு.க., அ.தி.மு.க. உட்பட அனைத்துக் கட்சிகளும் ஒரே அணியில் நின்றுகொண்டு மத்திய அரசுக்கு அழுத்தத்தைக் கொடுத்தன. தீர்மானத்தை இந்தியா ஆதரிக்காவிட்டால் தனது அமைச்சர்கள் மத்திய அமைச்சரவையில் இருந்து ராஜினாமாச் செய்வர்கள் என மிரட்டினார் கருணாநிதி. ஜெயலலிதாவும் விடவில்லை. தன் பங்குக்கு மத்திய அரசை போட்டுத் தாக்கினார். சீமான், விஜய காந்த், ராமதாஸ், வை.கோ, நெடுமாறன் ஆகியோரும் அரசுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கினர். இவற்றுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலைவர தீர்மானத்தை ஆதரிப்போம் என நாடாளுமன்றத்தில் அறிவித்தார் பிரதமர் மன்மோகன்சிங்.

இந்தியாவிடமிருந்து தனக்கு ஆதரவு கிடைக்குமென எதிர்பார்த்திருந்த இலங்கைக்கு மன்மோகன் சிங்கின் அறிவிப்பு பேரிடியாக விழுந்தது. இலங்கை இதனை எதிர்பார்க்கவே இல்லை. உறுப்பு நாடுகள் பலவும் இந்த விடயத்தில் இந்தியா என்ன தீர்மானத்தை எடுக்கின்றது என்றே பார்த்துக்கொண்டிருந்தன. இந்தியாவின் இந்த அறிவிப்பு உறுப்பு நாடுகள் சிலவற்றின் மனதையும் மாற்றிவிட்டது. முன்னர் இலங்கையை ஆதரிப்பதாக இருந்த நாடுகள் பின்னர் இந்தியாவின் நிலைப்பாட்டினால் தமது நிலைப்பாட்டையும் மாற்றி தீர்மானத்துக்கு ஆதரவளித்தன. இலங்கைக்கு ஆதரவு அளிக்க இருந்த வேறு சில நாடுகளோ பேசாமல் வெளிநடப்புச் செய்தன. இந்தியாவின் இந்த அறிவிப்பை தனக்குச் சாதகமாக்கிய சீனா இலங்கைக்கு ஆதரவு திரட்டும் நடவடிக்கைகளை மேலும் முடுக்கி இலங்கையைத் தன்பக்கம் சாய்த்துக் கொள்ள வழி தேடியது.

இதற்கிடையே அமெரிக்காவின் அடுத்த கட்டத் தாக்குதலாக ராஜாங்கத் திணைக்களத்தின் 100 பேர் கொண்ட ராஜதந்திரிகள் தீர்மானத்துக்கு ஆதரவு தேடி ஜெனிவாவில் வந்திறங்கினார். அமெரிக்கா நன்கு திட்டமிட்டு இந்த பிரசார பணிகளை முடுக்கிவிட்டது. வந்து இறங்கியதுதான் தாமதம் அவர்கள் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளோடு பேச்சுக்களை நடத்தித் தீர்மானம் வெற்றிபெறுவதற்கான ஏதுநிலையை உருவாக்கிக் கொண்டனர். அத்துடன் நின்றுவிடவில்லை அமெரிக்கா. இந்த 100 ராஜதந்திரிகளையும் நெறிப்படுத்தி இலங்கைக்கு எதிரான தீர்மானத்தின் வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இணைந்து கொண்டார் அமெரிக்க வெளிவிவகாரச் செயலர் ஹிலாரி கிளின்டன். ஹிலாரி கிளின்டனின் வருகையை அடுத்து இலங்கை மீதான தீர்மானம் குறித்த பரப்புரைகள் மேலும் உத்வேகமடைந்தன. ஹலாரியே நேரடியாகக் களத்தில் இறங்கியமையால் அமெரிக்காவின் ராஜதந்திர நகர்வுக்கு ஏற்றவாறு இலங்கையினால் நின்றுபிடிக்க முடியவில்லை. சீனாவின் தந்திரமும் பலிக்கவில்லை.

இதற்கிடையில் இந்தத் தீர்மானத்தின் ஒரு சில சொற்களை இந்தியா திருத்தியமைத்தது. தீர்மானத்துக்கு ஆதரவு வழங்குவதான தனது உறுதிமொழியின் செல்வாக்கை வைத்துக்கொண்டு இந்தியா இதைச் செய்தது. இதனையடுத்து கடந்த 22 ஆம் திகதி பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் இலங்கை மீதான தீர்மானம் வாக்கெடுப்புக்கு வந்தது. அதில் தீர்மானத்தை ஆதரித்து 24 நாடுகளும் வாக்களித்தன. 15 நாடுகள் எதிர்த்தன. 8 நாடுகள் வெளிநடப்புச் செய்தன. இதனால் அமெரிக்காவின் தீர்மானம் வெற்றி பெற்றது. தீர்மானத்தின் மீது உரையாற்றிய அமைச்சர் மஹிந்த சமரசிங்க இதனை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்றார்.

ஒருவாறு இலங்கை மீதான அமெரிக்கத் தீர்மானம் குறித்த பேச்சுக்கள் இப்போது ஓய்வடைந்துள்ளன. ஆயினும் இந்தத் தீர்மானம் இலங்கை அரசுக்கு இனி எப்படி நெருக்கடி கொடுக்கப்போகிறது என்பது போகப் போகத் தெரியும். ✦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

தருபவர் - வித்தியா

## 25.03.2012 முதல் 31.03.2012 வரை

### மேடம்



திட்டமிட்டபடி காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். கலகலப்பான அனுபவங்களுக்கும் வாய்ப்பு உண்டு. அதேநேரத்தில், பொறுப்பான வேலை நெருக்கடிகளால் எரிச்சல், கோபம் உண்டாகலாம். சுகமான இனிய அனுபவங்களை எதிர்கொள்ளலாம். தகப்பனார் வழியிலும், மருத்துவ ரீதியாகவும் செலவுகள் அதிகரிக்கும். மன, உளைச்சல்கள் ஏற்பட்டாலும், மற்றவர்கள் பாராட்டும் வகையில் எந்தக் காரியத்தையும் சந்தோஷமாகச் செய்து முடிப்பீர்கள். இனிய பயணங்களாலும் மகிழ்ச்சி அடைவீர்கள். சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். புதிய தொழில் முயற்சிகளை முடிந்த வரை தவிர்க்க வேண்டும். எவ்வளவுதான் கஷ்டப்பட்டு உழைத்தாலும், பாராட்டுக் கிடைக்காத சூழ்நிலையே காணப்படும்.

### இடபம்



மற்றவர்களுக்காக உங்களுக்குப் பிடித்தமான ஒன்றை விட்டுக் கொடுப்பீர்கள். உடல் சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். உங்களின் ஊக்கம், உற்சாகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். எதிர்ப்புகள், போட்டிகள் இல்லாமல் நினைத்ததைச் சாதிப்பீர்கள். தொழில் ரீதியான விடயங்களில் அபிவிருத்தி காணப்படும். வேலையாள்களால் ஏற்பட்ட தொல்லைகள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். சட்டப் பிரச்சினைகள், வழக்கு விவகாரங்கள் சாதகமாக அமையும். எதிர்பாராத வகையில் சில செலவுகள் ஏற்பட்டாலும், அதை சமாளிக்கும் வகையில் பணவரவுகளையும் பெறலாம். சிலர் நீண்ட தூரப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். பெரிய மனிதர்களை, அரசியல்வாதிகளைச் சந்தித்து காரியம் சாதிக்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் கிட்டும். தந்தை, மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.

### மிதுனம்



ஊக்கம், உற்சாகம் குறையும். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் வேலைகளைச் செய்யலாம். சபலங்களால், பேராசைகளால் தண்டச் செலவுகளை எதிர்கொள்ளலாம். மறதியால் அவதியுண்டு. சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். வெளியிடங்களுக்குச் செல்லும்போது, சிலரை எதிர்பாராமல் சந்திக்கலாம். வெளியூர்ப் பயணங்கள் செல்லலாம். ஊக்கம், உற்சாகம் குறையும். உடல் நலம் பாதிக்கப்படலாம். எதிர்ப்புகள், போட்டிகள் உருவாகலாம். எதிர்பார்த்தது நடக்காமல் ஏமாற்றம் அடையலாம். எந்த வேலையையும் தாமதமின்றி, சுறுசுறுப்பாக முடித்துக் கொள்ள சந்தர்ப்பம் சாதகமாக அமையும். இளைய உடன் பிறப்புக்கள் உதவிகரமாக இருப்பர். உங்களின் உத்வேகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம்.

### கடகம்



ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். உருப்படியான சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். பிரியமான உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பு நிகழும். எந்த விடயத்திலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். சிறிய தவறுகள் கூட, பெரிய பிரச்சினையாகித் தொந்தரவு கொடுக்கலாம். தடுமாற்றம், அலைக்கழிப்பு, இடையூறு போன்றவற்றையும் எதிர்கொள்ளலாம். கடுமையாக, பொறுப்போடு பணிபுரிந்தாலும், உங்களின் குறைகளைச் சுட்டிக் காட்டுபவர்களே அதிகம். பாராட்டு என்பதே கிடையாது. பணிபுரிவோர் மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்துவது கடினமே. தாயார் உடல் நலன் தொடர்பான வகையிலும் செலவுகள் ஏற்படலாம். பெண்கள் தொடர்பான வகையில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். வாகனங்களாலும் தொல்லைகள் ஏற்படலாம். கலகலப்பான அனுபவங்களைச் சந்திக்கலாம்.

### சிங்கம்



மருத்துவ சிகிச்சைக்குச் செல்லும் சிலருடன் நீங்களும் துணைக்குச் செல்லலாம். உறவினர்கள் சிலர் கேட்ட உதவிகளைச்செய்து பெருமைப்படுவீர்கள். குழப்பம் இல்லாமல், எதிலும் தெளிவான முடிவு எடுப்பீர்கள். அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதன் மூலம் சந்தோஷம் அடைவீர்கள். ஏதாவது ஒரு வழியில் பணவரவுகள் வந்து கொண்டிருக்கும். நீண்ட நாள்களாக விற்க முற்பட்ட சொத்தை விற்கலாம். அடிக்கடி உணர்ச்சி வசப்படுவீர்கள். சில விடயங்களில் அவசரப்பட்டுச் செயற்பட்டு, பின்னர் கவலை அடைவீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் கவனம் அவசியம். எந்த விடயத்திலும் பொறுமை, நிதானமாக செயல்பட வேண்டும். தண்டச் செலவுகள் நேரும். வேலைப்பளுகூடும்.

### கன்னி



மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடிவடையாமல், அவற்றை நீங்களே செய்ய நேரிடலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். வீண் பேச்சுக்களைத் தவிர்க்கவும். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம். மனைவி வழியிலும், நீண்ட தூர பயணங்கள் செல்வதாலும் அலைச்சல், செலவுகள் உண்டாகலாம். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளிலும் இழுபறிகள் காணப்படும். பெண்களால் உருவான தொல்லைகள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். திட்டமிட்ட சில வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களை எதிர்கொள்ளலாம்.

### துலாம்



ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் சிலரின் செயற்பாடுகளால் உங்களின் வேலைகளில் தடை ஏற்படலாம். சிலர் உங்களிடம் கடன் கேட்கலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். சில விடயங்களில் முடிவுகள் எடுக்க முடியாமல், குழப்பங்களைச் சந்திக்கலாம். சிறிய வேலை ஒன்றுக்குப் பலமுறை அலைய நேரிடலாம். வீண்பேச்சுக்களால் சிக்கலில் மாட்டிக் கொள்ளலாம். அடிக்கடி காரியத்தடை, மண்டைக் குடைச்சல்களுக்கு ஆளாகலாம். எந்தக் காரியமும் நினைத்த வேகத்துக்கு முடிவடையாமல், புதிய பிரச்சினைகள் உருவாகலாம். ஊக்கம், உற்சாகம் குறைந்து, அதிருப்தி, ஆதங்கம் குடிகொள்ளும். யாருக்கும் அவசரப்பட்டு வாக்குக் கொடுக்க வேண்டாம்.

### விருச்சிகம்



சோர்வின்றி சுறுசுறுப்பாக ஏதாவது வேலைகளைச் செய்து கொண்டிருப்பீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு சில உதவிகளைச் செய்யலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளால் அவதிகளுக்கு ஆளாகலாம். உறவினர்கள் சிலர் உங்களுக்கு முக்கியமான யோசனைகள் சொல்லலாம். குதர்க்கமான சில வேலைகளைச் செய்து, மற்றவர்களின் கோபத்துக்கு ஆளாகலாம். பேராசைகளையும், அவசியமற்ற தேவைகளையும் முடிந்தவரை தள்ளிப் போட வேண்டும். வழக்கு விவகாரங்கள் மன அமைதியைப் பாதிக்கலாம். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளை எதிர்பார்த்து கிடைக்காமல் போகலாம். எந்த விடயத்திலும் ஒன்றுக்குப் பலமுறை யோசித்துச் செயற்பட வேண்டும். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில காரியங்களைச் செய்வீர்கள். திடீர் பயணங்கள் செல்லலாம்.

### தனுசு



குடும்பச் செலவுகளாலும், எதிர்பாராத செலவுகளாலும் பணப் பற்றாக்குறை ஏற்படலாம். முடிந்த வரை குதர்க்கமான பேச்சுக் களைத் தவிர்ப்பது நன்மை தரும். நீண்ட நாள்களாகப் பிற்போட்ட வெளியூர் பயணங்கள் செல்லலாம். சில வேலைகளைச் செய்து அதன்மூலம் நன்மை அடையலாம். அடுத்த சில தினங்களுக்குப் பின், செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம் இன்றே செய்து முடிப்பீர்கள். புதியவர்கள் நட்பு கிடைக்கும். பிள்ளைகளின் செயற்பாடுகள் பெருமைப்பட வைக்கும். தொழில் ரீதியான, மருத்துவ ரீதியான அலைச்சல்கள் அதிகரிக்கும். புதிய பொறுப்புகளால் வேலைப்பளு அதிகரிக்கும். மாற்று மதத்தினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.

### மகரம்



குடும்ப உறுப்பினர்கள் அல்லது சக ஊழியர்களின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். சிலரிடம் கொடுத்த பணம் திரும்பி வரலாம். பரபரப்பாகச் செயற்படும் நாள். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். வழக்கத்துக்கு மாறாகக் கூடுதல் நேரம் தூங்கலாம். எப்படியும் முடிந்து விடும் என்று நினைத்த வேலை ஒன்று, கடைசி நேரத்தில் முடியாமல் போகலாம். தந்தை வழியில் உருவான தொல்லைகள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். பல நாள் முயற்சி ஒன்றுக்குப் பலன் கிடைக்கும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறுவது தள்ளிப் போகலாம். உடன் பிறப்புக்கள் கேட்ட உதவியைச் செய்ய முடியாமல் போகலாம். தொழில் ரீதியான நெருக்கடிகள், வேலைப்பளு தொடரும். பணவரவுகளைப் பெறலாம். புதிய முயற்சிகளில் வெற்றி உண்டு.

### கும்பம்



ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். சிலரின் விமர்சனங்களை எதிர்கொள்ளலாம். மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். நீங்கள் பல நாள்களாக எதிர்பார்த்த பணவரவு ஒன்று இன்று திடீரென வரலாம். மற்றவர்கள் பாராட்டும் வகையில் சில காரியங்களைச் செய்வீர்கள். தொழில் ரீதியான விடயங்களில் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். உறவினர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். இல்லையெனில், பகை உருவாகலாம். எந்தக் காரியமும் நினைத்த வேகத்துக்கு முடிவடையாமல், தடை, தாமதங்கள் ஏற்படலாம். .

### மீனம்



உங்களின் வீட்டுக்கு இதுவரை வராத உறவினர் ஒருவர் வரலாம். எதற்காகவும் பெரியளவில் அலட்டிக் கொள்ளாமல் நிதானமாக செயற்படுவீர்கள். சில வேலைகளைச் செய்ய மறந்து, அதனால், தண்டச் செலவுகளுக்கு ஆள்படலாம். மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்ளலாம். தேக ஆரோக்கியத்தில் அடிக்கடி குறைபாடுகள் ஏற்பட்டு, உங்களின் உற்சாகத்தைக் குறைக்கலாம். கூட்டுத் தொழில் செய்வோர் முடிந்த வரை அனுசரித்துச் செல்வது நன்மை தரும். காரணம் இல்லாமல், அவ்வப் போது யாரிடமாவது சண்டை போடும் சூழ்நிலை உருவாகலாம். குடும்பத்தினரின் தேவைகளை, விருப்பங்களை குறைவின்றி, நிறைவேற்றி வைப்பீர்கள். உறவினர்கள் சிலருடன் நீண்ட தூரப் பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகும். தொழில் ரீதியாக அவ்வப்போது கவலைகள் ஆள்கொள்ளும். சிலர் ஏதாவது ஒரு காரணத்தால், பணியை விட்டு விலகலாம். அல்லது நீண்ட விடுப்பு எடுக்க நேரிடலாம். உள்ளம் மகிழும் செய்திகளைக் கேட்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ டிலீப்

# ரணில் ஏன் வந்தார்?



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முக்கிய பிரமுகர்களும் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் திடீர் சுற்றுப் பயணம் செய்தனர். குக்கிராமங்கள் வரை அவர்களின் ஊடுருவல் இருந்தது. வர்த்தக நகரங்களையும் இந்தச் சூறாவளிப் பயணம் விட்டு வைக்கவில்லை.

முதல் பயணம் சாவகச்சேரி நகருக்கானதாக இருந்தது. நகர மத்திய பேருந்து நிலையத்தில் மக்களைச் சந்தித்தார் ரணில். மக்கள், இலங்கையின் எதிர்கட்சித் தலைவரும் பல முறை தோல்விகளைச் சந்தித்தவருமான ஒருவர் தங்களை சந்திக்க வந்த ஆவலில் விடுப்புப் பார்க்கக் கூடினர்.

மக்களிடம் உரையாற்றுகையில், ''யாழ்ப்பாணத்து மக்கள் சுதந்திரமாக வாழவில்லை. இப்போதும் சிறைப்பட்ட வாழ்க்கையையே அனுபவிக்கின்றனர்'' என்று தொடங்கிய ரணில், ''வாழ்க்கைச் செலவினால் பட்ட துன்பங்கள் போதும் அதனை மாற்றியமைக்க வேண்டும். அதற்குத் தீர்வு இந்த அரசை மாற்றுவதே வழி'' என்றும் முழங்கினார். அவரது பேச்சை மக்கள் ஆரவாரம் ஏதுமற்று அமைதியாகக் கேட்டுக்கொண்டார்கள்.

சாவகச்சேரி நகர வர்த்தகர்களுக்கு கைலாகு கொடுத்துக் கொண்டு ஒரு நூறு மீற்றர் தூரம் நடந்து வந்த ரணில், வாகனத்தில் ஏறி அங்கிருந்து புறப்பட்டார்.

அவரது அணியின் வாகனங்கள் அடுத்ததாகச் சென்றது கச்சாய்ப் பகுதிக்கு. அரசியல்வாதிகளின் கடைக்கண் பார்வை படாத இடமான கச்சாய்க்கு ரணில் சென்றது பலருக்கும் ஆச்சரியம் அளித்தது. ஆனால் அங்கு சென்ற ரணிலுக்கோ அதிர்ச்சி. 50 பேருக்கும் குறைவானவர்களே அங்கு அவரை வரவேற்கக் காத்திருந்தனர்.

மக்கள் வராதத்தற்கான காரணத்தை உடனடியாகவே ஏற்பாட்டாளர்கள் ரணிலின் காதில் போட்டு வைத்தனர். ஜெனிவா பிரேரணைக்கு எதிராக அன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற இருந்த ஆர்ப்பாட்டத்துக்கு மக்களை காலையிலேயே அதிகாரத்துடன் அழைத்துச் சென்றதால்தான் அவரைப் பார்க்க அவர்கள் வரவில்லை என்றனர்.

இருந்தாலும், தன்னைப் பார்ப்பதற்காக அங்கு கூடியிருந்தவர்கள் சொற்பமானவர்கள் என்ற போதும் ரணில் அவர்களிடம் பேசினார். ''உங்களுக்கு என்ன பிரச்சினை இருக்கின்றது என்பதைக் கூறுங்கள்'' என்று அவர் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார். மக்களோ மடைதிறந்த வெள்ளமாக ''மின்சாரமில்லை, போக்குவரத்துப் பிரச்சினை'' என்று பிரச்சினைகளை அடுக்க ஆரம்பித்தனர்.

இடையில் குறுக்கிட்ட ரணில், ''இல்லை! எமது ஆட்சிக் காலத்தில் (2002ஆம் ஆண்டு) இந்தப் பகுதிக்கு மின்சார வசதி ஏற்படுத்தித் தரப்பட்டதே'' என்று விளித்தார். கூடியிருந்த மக்களோ ''அது எங்கள் பகுதிக்கு அல்ல. அருகிலுள்ள இடத்துக்குத்தான் மின்சார இணைப்புக்கள் கொடுக்கப்பட்டன'' என்றனர்.

அரசியல்வாதிகள் வராத இடத்திற்கு இவர் ஏன் வந்தார் என்பது அப்போதான் புரிந்தது. மின்சாரம் பெற்றுக் கொடுத்ததற்காக மக்கள் நன்றியுடன் வரவேற்பார்கள் என்று நினைத்திருப்பார். ஆனால், அது பிசுபிசுத்துப் போய்விட்டது.

இருந்தாலும் மக்கள் சொன்னவற்றைக் கேட்டுக் கொண்டார். கடைசியில் ''அமைச்சரிடம் சொல்லுங்கள் ஜெனிவா முக்கியமில்லை; கொடிகாமத்தில் உள்ள பிரச்சினையை முதலில் தீர்க்கும்படி'' என்றார்.

அதன் பின்னர் நெல்லியடி, பருத்தித்துறைக்கும் ரணில் அணியினர் சென்றனர்.

காலையில் சென்ற இடங்களில் எல்லாம் ரணிலின் 'பஞ்ச் டயலொக்காக' இருந்தது, ''வெள்ளை வான் கடத்தல்'' என்ற விடயமே. தன்னிடம் அகப்பட்டுக் கொண்டவர்கள் எல்லோரிடமும் ''இங்கு இப்போது வெள்ளை வான் கடத்தல் இருக்கிறதா? தென்பகுதியில் அரசு தமது உறுப்பினர்களையே வெள்ளை வானில் கடத்துகின்றது'' என்று ஓயாமல் சொல்லிக் கொண்டே வந்தார்.

மக்களோ அவரது இந்தக் கேள்விக்கு மௌனத்தையே பதிலாக வழங்கினர். அது பற்றி அவர்கள் பேசத் தயாராக இல்லை என்பதை தமது உதடுகளை இறுக மூடி வெளிப்படுத்தினர். அவர்களில் சிலர், ''இதில எத்தின சி.ஐ.டி. நிக்கிறானோ, நீங்க கேட்டிட்டுப் போடுவியள், நாளைக்கு எங்களையும் வந்து தூக்கிட்டுப் போடுயிவாங்கள்'' என்று முணு முணுத்தனர்.

மக்களின் இந்தப் பயத்தை ரணில் சென்ற இடங்களில் எல்லாம் காண முடிந்தது. வலுகட்டாயமாகவே மக்களின் பிரச்சினைகளை அவர்களிடமிருந்து அவர் பிடுங்கி எடுக்க வேண்டியிருந்தது. நெல்லியடியில் இளம் பெண் ஒருவர் ரணிலின் வற்புறுத்தலால் ஒரு பிரச்சினையை சொன்னார். தான் முல்லைத்தீவில் கல்வி கற்பிக்கிறார் என்றும் தனக்கு யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்றுத் தருமாறும் அவர் கோரினார். அவரது கேள்வி அங்கு நின்றிருந்தவர்கள் எல்லோரையுமே சிரிக்க வைத்துவிட்டது.

பொலிகண்டியில் அமைந்துள்ள ஆலயத்துக்கும், செல்வச்சந்நிதி ஆலயத்துக்கும் ரணில் விக்கிரமசிங்க சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். சந்நிதியான் கோயிலில் மக்களுடன் அமர்ந்து பந்தியில் உணவு உண்டார். கூட வந்தவர்களும் உண்டனர்.

அதன் பின்னர் மக்கள் மீளக்குடியமர்வுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட கோயிலின் அக்கரைக்குச் சென்றனர்.

அந்தப் பகுதியில் மக்கள் மீளக் குடியமரலாம் என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தாலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. தமது பரிதாப நிலையை அங்குள்ள மக்கள் ரணிலுக்கு புரிய வைக்க முயன்றனர். ''எங்களுக்கு எந்த வசதியும் செய்து தரப்படவில்லை'' என்று ஆரம்பித்து அவர்கள் அடுக்கிய குறைகளைக் கேட்ட ரணில் அவற்றை எல்லாம் மனுவாக எழுதித் தருமாறும் தான் இந்த விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்புவேன் என்றும் தெரிவித்தார்.

இதைத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் செய்கிறார்கள். நாடாளுமன்றத்தில் அவர்களும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றிப் பேசாத விடயங்கள் கிடையாது. ஆனால் ஒன்றும் நடந்தபாடாக இல்லை. ''அப்படியிருக்கையில் கொழும்பிலிருந்து வந்த ரணிலும் உங்கள் பிரச்சினையை நாடாளுமன்றத்தில் பேசுவேன்'' என்கிறார். நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு விவரங்கள் சேகரிக்கத்தானா அவர் இங்கு வந்தார் என்று அந்த மக்களிடையே சந்தேகம் எழுந்ததில் தவறிருக்க வாய்ப்பில்லை.

இதன் பின்னர் நீர்வேலியில் பெண்கள் மத்தியில் உரையாற்றிய ரணில், வடக்கில் நடைபெற்று வரும் தமிழ்ப் பெண்களுக்கு எதிரான வன்முறைகளையும் நெடுந்தீவில் சிறுமி கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பிலும் பேசினார். குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும் என்றார். நீதி வழங்கப்படுவதில் அரசியல் தலையீடுகள் இருக்கக்கூடாது என்றும் வலியுறுத்தினார்.

ஆனால், அவரது ஆட்சிக் காலத்தில் தீவகத்தில் நடந்த பாலியல் வல்லுறவுக்குட்படுத்திக் கொல்லப்பட்ட பெண்களின் விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டதைப் பற்றியும் அதில் குற்றஞ்சாட்டப்பட்ட படையினர் மீது விசாரணைகள் தானும் மேற்கொள்ளப்படாமை குறித்தும் அவர் எதுவும் பேசவில்லை.

சுன்னாகம் சென்ற ரணில், நகர வர்த்தகர்களுடன் கலந்துரையாடினார். பின்னர் தெல்லிப்பழையில் வித்தகபுரம் பகுதிக்கும் சென்றார். அந்தப் பகுதி மக்கள் தமது பிரச்சினைகளை அடுக்கடுக்காகச் சொன்னார்கள். சகலவற்றையும் தனக்கு எழுத்தில் தருமாறும் தான் இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவார் என்றும் ரணில் மீண்டும் மீண்டும் அந்த மக்களுக்கு உறுதியளித்தார். அத்துடன் இந்தப் பகுதிக்கு தான் முன்னர் ஒரு காலத்தில் பாடசாலை ஒன்றைத் திறந்து வைப்பதற்கு வந்தார் எனவும் நினைவுகூர்ந்தார். இந்தப் பகுதி பல தலைவர்களை உருவாக்கிய இடம் என்றும் குறிப்பிட்டார். அத்துடன் தமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுவாமிநாதன் கூட இந்தப் பகுதியைச் சேர்ந்தவர்தான் என்றார்.

மாதகலில் மக்களைச் சந்தித்த போது, பெரும்பான்மையானவர்கள் மீன்பிடியையே நம்பியிருப்பதால் இந்திய மீனவர்களின் அத்துமீறலால் தமது தொழில் பாதிக்கப்படுவதாக ரணிலிடம் முறையிட்டனர். அவர் அதனையும் கேட்டுக் கொண்டார். அந்தப் பிரச்சினை தனக்கு முன்பும் தெரியும் என்றார். பொன்னாலை, அராலி, மானிப்பாய் பகுதிகளுக்கும் அவர்கள் சென்றார்கள். அராலியில் எழுப்பப்பட்ட வில்லங்கமான கேள்விதான் ரணிலைச் சிறிது சங்கடப்படுத்தியது.

அங்கு எழுப்பப்பட்ட கேள்வி, ''நீங்கள் ஜனாதிபதியானால் தமிழருக்கு என்ன தீர்வு தருவீர்கள்?'' என்பதுதான் அது. அந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும்போது, ''நான் முன் வைத்த தீர்வைத்தானே பிரபாகரனும், புலிகளும் இணைந்து நிராகரித்தனர்'' என்றார். அங்கிருந்தவர்களோ கடந்த காலத்தை விடுங்கள் எதிர்காலம் பற்றிக் கூறுங்கள் என்பதுபோன்று, ''இனி நீங்கள் ஜனாதிபதியானால் என்ன தீர்வு தருவீர்கள்?'' என்று மீண்டும் கேட்டனர். ரணில் இந்தக் கேள்வி மீளவும் எழுப்பப்படும் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் சமாளித்துக் கொண்டு பதிலளித்தார். ''நான் கொள்கை அடிப்படையில் வேலை செய்பவன். என்னை நம்புங்கள்'' என்பதுவே அவரது பதிலாக இருந்தது.

ரணிலின் யாழ்ப்பாணப் பயணத்தின் பெரும்பாலான பொழுதுகள் வர்த்தகர்களுடன் கலந்துரையாடுவதிலேயே கழிந்தது. ரணிலுடன் வந்திருந்த கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க பெரும்பாலான மக்கள் சந்திப்புக்களில் ரணிலுடன் சேர்ந்து நிற்பதை தவிர்த்துக் கொண்டார். மக்களுடன் அவர்களின் மத்தியிலேயே நின்றார். ஏனையோர் ஒப்புக்குச் சப்பாணிகளாக இருந்தனர்.

ரணிலின் இந்த யாழ்ப்பாணப் பயணத்துக்கான காரணம் ஒன்றும் அவிழாத மர்ம முடிச்சு அல்ல. எதிர்வரும் மே தினத்தை யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவதன் மூலம் இங்கு தமிழ் மக்களிடையே தனது செல்வாக்கையும் கட்சியின் செல்வாக்கையும் வளர்த்துக்கொள்ள அவர் திட்டமிடுகிறார்.

தெற்கில் சஜித் பிரேமதாஸ அவரது தலைமைக்குச் சாவலை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் நிலையில், வடக்கில் மக்கள் ஆதரவைத் அவர் திரட்ட முயற்சிப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

இங்கு நேரடியாகக் களமிறங்குவது தோல்வியில் முடியும் என்பதால், எதிர்வரும் மே தினத்தை முன்னிட்டு எதிர்கட்சிகளின் கூட்டு ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் களமிறங்க அவருடன் அவரது கட்சியும் உத்தேசிக்கிறது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் சேர்த்துக் கொள்வதற்கு அது முயற்சிக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ இது தொடர்பில் தாம் இன்னும் முடிவெடுக்கவில்லை என்று தெரிவிக்கின்றது. ★

# நாயாற்றிலிருந்து ....

(சூரியகாந்தி முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட செயலிழந்திருக்கின்றன.

**இனி அங்கு என்ன நடக்கும்**

செம்மலை ஆழ்கடலும், அந்த நாயாறும் மீன் விளைநிலமும் அங்கு காலம் காலமாகத் தொழில் செய்யும் தமிழர்களுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். இனி அது பரகசியப்படப் போகின்றது. தமிழ் மீனவர்கள் அப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ப் போகின்றனர். அங்கு நமக்காய் விளைந்த செல்வமெல்லாம் இனி நமக்கில்லை.

கடந்த வாரம் வரை செம்மலைக் கிழக்கு கடற்கரையில் பிரபலமான கடற்தொழில் முறையாகவிருந்த தூண்டில் மீன்பிடி சுகம் இனி நம் பிள்ளைகளுக்கில்லை. அந்தப் பகுதியின் அனைத்தும் நீர்கொழும்புக்குப் அள்ளிச் செல்லப்பட்ப்போகின்றது.

குடியேறிகள் ஆற அமர்ந்த பின் வணங்குவதற்கு ஒரு புத்தர் கட்டாயம் தேவைப்படுவார். அரச மரங்கள் இப்போதே அடையாளம் காணப்பட்டிருக்கும். விரைவில் பிரபலமான புத்தர் கோயில் ஒன்று அங்கு முளைக்கும். சிங்கள வரலாற்றெழுத்தியலில் புத்தர் செம்மலைக் கடற்கரையில் இறங்கி, குருந்தனூர் பகுதிக்கு பயணம் செய்தார் என்ற ஐதீகம் உண்டு. இனி அந்தப் பொய் வரலாறும் உண்மையாகும்.

செம்மலைக்கு விரைவில் ஒரு புதுப் பெயர் சூட்டப்படும். அதற்காகத் தமிழரை அதிகமாய்க் கொன்று, பின்னர் இறந்துபோன படையினனின் பெயரும் தயாராகியிருக்கும். இப்போதே குடியேறிகள் இருக்கும் பகுதிக்கும் இந்த வீதிக்கும் தனிப் பெயர் சூட்டப்பட்டிருக்கலாம்.

திருகோணமலையில் இருந்து பரவத்தொடங்கிய சிங்களக் குடியேற்றம், அதன் தொடர்ச்சித் தமிழ் நிலங்களான புல்மோட்டை, கொக்குத் தொடுவாய், கொக்கிளாய், செம்மலை வரை வந்து விட்டது. அந்தப் பகுதிக்குள் இப்போது இடையிடையே பூர்வீகத் தமிழர்கள் குடியேறியிருக்கின்றனர். அந்தக் கொஞ்சப் பூர்வீகத் தமிழர்களால் எவ்வளவு காலத்திற்கு அங்கு வாழ முடியும்?

ஒதியமலை, திருகோணமலை அனுபவங்கள் சிங்களவர்களுக்கு எப்படித் தமிழர் நிலத்தைக் கையகப்படுத்த வேண்டும் என்பதை ஏற்கனவே சொல்லிக் கொடுத்திருக்கின்றன. அதுவே இங்கும் பிரயோகிக்கப்படும்.

**இதற்காக என்னதான் செய்வது?**

அதனை அனுபவிக்கும் சனங்களால் குமுறிக்கொள்வதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை. அதனையும் தாண்டி ஏதாவது செய்தால் செம்மலையில் இருக்கும் சில துப்பாக்கி ரவைகள் குறையும்.

அமெரிக்கா தலைமையிலான நாடுகள், இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் மற்றும் இன நல்லிணக்கம் போன்றவற்றை நடைமுறைப்படுத்தக் கோரிய பரிந்துரையை முன்வைத்த முதல் வாரப் பகுதியிலேயே இந்த அத்துமீறிய குடியேற்றம் நிகழ்ந்திருக்கின்றது.

இதனை மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் அரசியல் சார்ந்த கட்சிகள் கவனத்தில் எடுக்க வேண்டும். இதனை சரி யான பதிவிடலுக்கு உட்படுத்துவதன் ஊடாகவே இனிவரும் காலங்களில் நடைபெறப் போகும் ஐ.நா. மனித உரிமைக் கூட்டத் தொடர்களுக்கு இலங்கையிலிருந்து விவாதப் பொருள் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ டலீப்

# சாதனையும் சரிவும்

வரலாற்றுச் சாதனைகள் பலவற்றுடன் விடைபெற்றுச் சென்றிருக்கின்றது 2012 ஆம் ஆண்டு ஆசியக் கிண்ணத் தொடர். மிக விரைவான போட்டி அட்டவணையைக் கொண்டிருந்ததால் ரசிகர்களுக்கு அலுப்பின்றி, சுவாரசியமான போட்டித் தொடராக நடைபெற்று முடிவடைந்துள்ளது. அத்துடன் யாரும் எதிர்பார்க்க முடியாத வகையில் மிகச் சிறப்பான அதிர்சியான முடிவுகளையும் ஆசியக் கிண்ணம் வெளிப்படுத்தியிருக்கின்றது.

பங்களாதேஷில் கடந்த 10 நாள்களாக இடம்பெற்ற தொடரில் ஒவ்வொரு அணிகளும் எதிர்பார்ப்புக்களுடனே களமிறங்கின. இந்திய அணி உலகச் சம்பியன் என்றதால் எதிர்பார்ப்பு இருந்தாலும் மறு புறத்தில் ஆஸ்திரேலிய சி.பி. கிண்ணத் தொடரில் தோல்வியடைந்தமையால் அந்த அணி மீதான எதிர்பார்ப்பு குறைவாகவே இருந்தது. பாகிஸ்தான் அணியைப் பொறுத்தவரையில் மிகச்சிறப்பான அணியாக காணப்பட்டாலும் இங்கிலாந்துடனான ஒரு நாள் தொடரை முற்றாகவே இழந்ததால் அந்த அணியின் வெற்றிக் கேள்விக் குறியாக இருந்தது. இருப்பினும் அந்த அணிக்கு புதிய பயிற்றுவிப்பாளராக வெற்றிப் பயிற்றுவிப்பாளர் வட்மோர் பதவி ஏற்றமையால் பாகிஸ்தான் அணி இந்தத் தொடரில் ஏதாவது சாதித்துக் காட்டும் என்ற எதிர்பார்ப்பும் இழையோடியிருந்தது.

இலங்கை அணியைப் பொறுத்த வரையில் ஆசியக் கிண்ணத் தொடருக்கு நுழையும் போது பலமான அணியாகவே இருந்தது. ஆஸ்திரேலிய மண்ணில் இலங்கை அணி அசத்தியிருந்ததால் ஆசியக் கிண்ணத் தொடரிலும் சாதிக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. பங்களாதேஷ் அணியினைப் பொறுத்த வரையில் தனது சொந்த மண்ணில் விளையாடுகின்றமையால் ஏதாவது அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

தொடரின் முதலாவது ஆட்டத்திலேயே பங்களாதேஷ், பாகிஸ்தான் அணியை மிரட்டும் பாணியில் விளையாடியது. அதே நேரம் பாகிஸ்தான் அணி தனது திறமைகளை மீண்டும் நிரூபிக்கத் தொடங்கியது. இந்திய அணியைப் பொறுத்தவரையில் அந்த அணி சுமாரான ஆட்டத்தையே வெளிப்படுத்தியது. சச்சின் தனது சொந்த சாதனைக்கா இந்திய அணியின் வெற்றியை பங்களாதேஷிடம் தாரை வார்த்துக் கொடுத்ததாக இந்திய ரசிகர்கள் ஆதங்கம் கொள்கின்றனர்.

இலங்கை அணி இந்தத் தொடரில் சகல ஆட்டங்களிலும் தோல்வியடைந்து ஆசியக் கிண்ண வரலாற்றில் முதல் முறையாக இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெறாமல் வெளியேறியது. இலங்கை அணியில் சகலதுறை வீரர்களான மத்தியூஸ், திஸ்ஸர பெரேரா ஆகியோர் இல்லாதது அணியின் மத்திய வரிசையில் வெற்றிடத்தை ஏற்படுத்தியிருந்தது.

ஜெயவர்த்தன இந்திய அணியுடனான ஆட்டத்தில் அபாரமாக ஆடிய போதும் பாகிஸ்தான், பங்களாதேஷுடன் சுமாராகவே ஆடியிருந்தார். அதே போன்று இளம் வீரர்களான சந்திமால், திரிமன்னே பொறுப்பற்ற விதத்தில் தங்களின் ஆட்டத்திறனை வெளிப்படுத்தியிருந்தனர். ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற சி.பி. கிண்ணத் தொடரில் இலங்கை அணி எவ்வளவு தூரம் ஆக்ரோஷமாக விளையாடியிருந்ததோ அதற்கு நேர் எதிர்மாறான விதத்தில் ஆசியக் கிண்ணத் தொடரில் விளையாடியது.





பொறுப்பற்ற விதத்தில் துடுப்பாட்டம் அமைந்திருந்தமை மற்றும் எதிரணிக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் களத்தடுப்பு இல்லாமல் இருந்தமை இலங்கையின் வெற்றியை இலகுவாக பறித்திருந்தது.

ஒரு புறம் இலங்கை அணி ஆசியக் கிண்ண வரலாற்றில் கரும்புள்ளி பதித்த அதே வேளை பங்களாதேஷ் அணியோ புதியதொரு சகாப்தத்தை ஆசியக் கிண்ணத் தொடரில் எழுதத் தொடங்கியிருக்கின்றது.

பங்களாதேஷில் இடம்பெற்ற 'ரி-20' பிரிமீறியர் லீக் தொடர் அந்த அணியின் வீரர்களின் ஆட்டத் திறனை எந்தளவு தூரத்துக்கு மாற்றியிருக்கின்றது என்பதற்கு இந்தத் தொடரில் பங்களாதேஷ் ஆடிய அனைத்து ஆட்டங்களும் சாட்சிகளாக அமைகின்றன. பங்களாதேஷ் பாகிஸ்தானுடன் தோல்வியடைந்த முதலாவது ஆட்டமாகினும், இறுதி ஆட்டமாகினும் இரண்டிலும் கடுமையான போராட்டத்தை பங்களாதேஷ் வெளிப்படுத்தியிருந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தமிம் இக்பால் நான்கு ஆட்டங்களிலும் அரைச்சதம் விளாசி பங்களாதேஷுக்கு சிறப்பான ஆரம்பத்தை அமைத்துக் கொடுத்திருந்தார். அதனைப் பயன்படுத்தி பின்னணி வீரர்கள் சிறப்பாகவே கலக்கியிருந்தனர்.

பங்களாதேஷ் இறுதி ஆட்டத்தில் தோல்வியடைந்தாலும் கூட பல கோடி ரசிகர்களின் மனதில் பங்களாதேஷ் அணியே நியச் சம்பியன்.

# ஆஸிக்கு அடுத்த அடி

மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையிலான நான்காவது ஒரு நாள் சர்வதேச ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 42 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

சென் லூசியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி கேட்டுக் கொண்டதற்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆரம்பத்தில் அட்ரியன் பரத்தின் துடுப்பாட்டம் காரணமாக சிறப்பான ஆரம்பத்தைப்பெற்றது.

முதலாவது இலக்குக்காக அட்ரியன் பரத், ஜோன்சன் சார்ள்ஸ் ஜோடி 10 பந்து பரிமாற்றங்களில் 56 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அட்ரியன் பரத் 31 பந்துகளில் 41 ஓட்டங்களைப் பெற்று கிளின்ட் மக்காயின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இரண்டாவது இலக்குக்காக ஜோடி சேர்ந்த மார்லன் சாமுவேல்ஸ், ஜோன்சன் சார்ள்ஸ் ஜோடி மிக மெதுவாகத் துடுப்பெடுத்தாடியது. அடுத்த 10.5 பந்து பரிமாற்றங்களிலும் இந்த ஜோடி 27 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதில் 41 பந்துகளில் 11 ஓட்டங்களைப் பெற்ற மார் லன் சாமுவேல்ஸ் பிரட் லீயின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க அடுத் தடுத்து இலக்குகள் வீழ்ந்தன.

மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒரு கட்டத்தில் 35.4 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது. ஆட்டமிழந்தவர்களில் ஜோன்சன் சார்ள்ஸ் 37 ஓட்டங்களையும், டரன் பிராவோ 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

அதன் பின்னர் ஜோடி சேர்ந்த ருசல், பொலார்ட் ஜோடி 94 ஓட்டங்களை 10.4 பந்து பரிமாற்றங்களில் குவித்தது. 32 பந்துகளில் 34 ஓட்டங்களைப் பெற்றிருந்த ருசல் ஆட்டமிழந்ததும் ஜோடி சேர்ந்த அணித்தலைவர் டரன் சமி, பொலார்ட் ஜோடி மிக வேகமாக ஓட்டங்களைக் குவித்தது. 70 பந்துகளில் 102 ஓட்டங்களைப் பெற்ற பொலார்ட் இறுதிப் பந்து பரிமாற்றத்தில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 பந்து பரிமாற் றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 294 ஓட்டங்களைப் பெற்றது. மேற்கிந்தியத் தீவுகள் அணி இறுதி 12 பந்து பரிமாற்றங்களில் 145 ஓட்டங்களைக் குவித்தது. அணித்தலைவர் டரன் சமி இறுதிவரை ஆட்டமிழக்காது 13 பந்துவீச்சுக்களில் 31 ஓட்டங்களைக் குவித்தார்.

பந்து வீச்சில் ஆஸி. சார்பில் சிக்கனமாகப் பந்துவீசிய பென் ஹில்பன்ஹோஸ் 43 ஓட்டங்களை விட்டுக்கொடுத்திருந்த போதிலும், இலக்குகள் எதனையும் கைப்பற்றியிருக்கவில்லை. பிரட் லீ 72 ஓட்டங் களையும், டொகேர்ட்டி 64 ஓட்டங்களையும், வொட்சன் 55 ஓட்டங்களையும் விட்டுக் கொடுத்து தலா 2 இலக்குகளையும், மக்காய் 57 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

295 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி முதலாவது இலக்காக டேவிட் வோணரை இரண்டாவது பந்து பரிமாற்றத்திலேயே இழந்தது. இரண்டாவது இலக்குக்காக போறஸ்ட், வொட்சன் ஜோடி 55 ஓட்டங்களைப் பகிர்ந்த போதிலும், அதன் பின்னர் இலக்குகள் தொடர்ச்சியாக இழக்கப்பட்டன. ஆஸ்திரேலிய அணி 5 இலக்குகளை இழந்து 112 ஓட்டங்களுடன் தடுமாறியது. இறுதிநேரத்தில் பிரட் லீ சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய போதிலும், 42 ஓட்டங்களால் ஆஸ்திரேலிய அணி தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக பிரட் லீ 48 பந்துகளில் 59 ஓட்டங்களையும், டேவிட் ஹசி 57 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தொடர்ச்சியாக இந்தத் தொடர் முழுவதும் பிரகாசித்து வரும் சுனில் நரைன் 10 பந்து பரிமாற்றங்களில் 21 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்து ஒரு இலக்கைக் கைப்பற்றினார்.

ஆட்ட நாயகனாக வேகமான சதத்தையும், இலக்கு ஒன்றையும் கைப்பற்றிய பொலார்ட் தெரிவானார். 5 போட்டி கொண்ட இந்தத் தொடரில் நிறைவு பெற்றுள்ள 4 ஆட்டங்களின் நிறைவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 2-1 என்ற கணக்கில் தொடரில் முன்னிலை வகிக்கின்றது. (5)

# மீண்டும் செரீனா



பல நாள்களுக்கு பின்னர் மீண்டு வந்துள்ள செரினா வில்லியம்ஸ் ரெனிஸ் போட்டியில் சாங் சுயை வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளார்.

அமெரிக்காவின் மியாமி நகரில் நடைபெற்று வரும் ரெனிஸ் இரண்டாவது சுற்று போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

இதில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸும், சீனாவின் சுய்யும் மோதினர். ஆரம்பம் முதல் சிறப்பாக விளையாடிய செரீனா 6-2, 6-3 என்ற நேர் செட்டில் சீனாவின் சுயை வீழ்த்தினார்.

மற்றொரு போட்டியில் ரஷ்யாவின் ஷரபோவா 4-6, 6-3, 6-3 என்ற செட் கணக்கில் இஸ்ரேலின் ஷகர் பீரையும் வீழ்த்தினார்.


மற்ற ஆட்டங்களில் பெல்ஜியமைச் சேர்ந்த கிம் கிலிஸ்டர்ஸும், சீனாவை சேர்ந்த நா லீ ஆகியோரும் வெற்றி பெற்றனர். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் இந்த மாற்றம்....?



விஞ்ஞான கண்டுபிடிப்புகளில் குறுகிய காலத்தில் உற்பத்தி செய்யும் உணவுகளையும், இரசாயனம் கலந்த உணவுகளையும் சாப்பிடுவதால் உணவு போல் தன் ஆயுளையும் சுருக்கிக் கொண்டு தினமும் செத்துச் செத்து பிழைத்துக்கொண்டிருக்கிறான்.

நோயின்றி நூறாண்டு வாழ்ந்த முன்னோர்கள் எங்கே? தினமும் 10 மாத்திரைகள் விழுங்கும் நாம் எங்கே?

### ஏன் இந்த மாற்றம்....?

நவீனத்தின் புதுமைதான் இது. அதிக மன உளைச்சல், ஓய்வில்லாத உழைப்பு, தீய பழக்கங்களுக்கு அடிமை என பலவாறானவை மனிதனுள் புகுந்து இப்படி ஆட்டிப்படைக்கின்றன.

அரைவேக்காட்டு உணவு, எண்ணெயில் பொரித்த உணவுகள், டின்களில் அடைக்கப்பட்டு பதப்படுத்தப்பட்ட உணவுகள், கொழுப்புச் சத்து நிறைந்த உணவுகள், போதிய உடற்பயிற்சியின்மை, இவைதான் மனிதனை அதிகம் பாதிக்கின்றன.

உடம்பிலுள்ள ஒவ்வொரு உறுப்பும் மனிதனின் செயல்பாட்டுக்கு முக்கிய காரணிகளாகின்றன.

மனிதனின் செயல்பாடுகளில் முதன்மை வகிப்பதும் தாயின் கருவில் இருக்கும்போதே துடிக்க ஆரம்பித்து இறுதிவரை துடித்துக்கொண்டிருக்கும் இருக்கும் ஒரே உறுப்பு இதயம்தான்.

ஒவ்வொரு மனிதனின் கைப்பிடி அளவே இதயம் உள்ளது. 350 கிராம் எடை கொண்ட இதயம் நிமிடத்திற்கு 72 தடவை துடிக்கும்.

அரபு நாடுகளில் இதயத்தை உடலின் இளவரசன் என்பார்கள். சித்தர்கள் இதயத்தை சூரிய கிரகத்தோடு ஒப்பிடுகிறார்கள். சூரியன் எவ்வாறு உலக இயக்கத்திற்கு முக்கியப் பங்காற்றுகிறதோ அதுபோல் மனித இயக்கத்திற்கு முக்கியப் பங்காற்றுவது இதயம்தான். இதனால்தான் அன்பைப் பரிமாறும் காதலர்கள்கூட இதயத்தை முதன்மையாக வைத்து பேசுகிறார்கள்.

60 வயதிற்குள் ஒரு மனிதன் இதயம் ஆச்சர்யப்படும் வகையில் 22000 லட்சம் தடவை துடிக்கிறது. சுமார் 18000 தொன் இரத்தத்தை உள்ளிழுத்து வெளியேற்றுகிறது. இந்த இரத்தம் செல்லும் நாளங்கள் சுமார் 62000 மைல் நீளமுள்ளவை.

இப்படி பல அதிசயங்களை தன்னகத்தே கொண்ட இதயமானது தமனி, சிரையாக அமைந்து நான்கு அறைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. நல்ல இரத்தத்தை உடலெங்கும் தமனி எடுத்துச்செல்கிறது. சிரை அசுத்த இரத்தத்தை இதயத்திற்கு எடுத்துவரும் செயல்களைச் செய்கிறது.

இவ்வாறு இதயம் நிமிடத்திற்கு 72 முறை சுருங்கி விரிகிறது.

இந்த சுருங்கி விரியும் தன்மையின் அழுத்தமானது 120/80 என்ற கணக்கில் இருக்கும். டென்ஷன், மன அழுத்தம், மன எழுச்சி மிகுதியாகும் போது அழுத்தம் அதிகரிக்கும். ஓய்வெடுக்கும்போது சற்று குறைந்து காணப்படும். இந்த இரத்த அழுத்தம் சிஸ்டாலக் 100 இருந்து 140 வரையும், டயஸ்டாலக் 90லிருந்து 100 வரைகூட இருக்கலாம்.

இந்த இரத்த அழுத்தம் உடலமைப்பையும் வயதையும் பொறுத்து மாறும்.

இரத்த நாளங்களில் கொழுப்புகள் படிவதால் இரத்த ஓட்டத்தின் தன்மையைக் குறைக்கிறது. இதனால் இதயத்திற்கு தேவையான இரத்தம் கிடைப்பதில்லை. இதயம் அதிகம் சுருங்கி விரிய ஆரம்பிக்கும். இந்த காலத்தில் வாய்வுக்களின் சீற்றம் மிகுதியானால் பித்தம் அதிகரித்து பித்தநீர் இரத்தத்தில் சேர்வதால் இருதயத்தின் சுருங்கி விரியும் தன்மையை சீர்கேடடையச் செய்கிறது. இதனால் இருதய அடைப்பு ஏற்படுகிறது. இதனால் சிலர் சில நொடிகளில் மரண வாசலை நெருங்க நேரிடுகிறது.

இதய நோய் தாக்குவதை சில காரணிகளிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

### மார்புவலி

சிலருக்கு மார்பின் இடது பக்கத்தில் வலி வந்தவுடன் மாரடைப்பு என பயம் கொள்கின்றனர். மாரடைப்பானது இதயத்திலோ, மார்பின் இடப் பகுதியிலோ தோன்றுவதில்லை. வயிற்றில் அஜீரணக் கோளாறு ஏற்பட்டு வாய்வு சீற்றமாகி இதுபோன்ற வலியை ஏற்படுத்தும்.

### மூச்சு விடுதலில் சிரமம்

சிலருக்கு திடீரென மூச்சுத் திணறல் ஏற்பட்டால் உடனே மருத்துவரை அணுகுவது நல்லது. அதிக வேலை செய்யும்போதும், ஓய்வெடுக்கும்போதும் இவ்வாறு மூச்சுத் திணறல் ஏற்பட்டால் அது இதய நோயின் அறிகுறியாகும்.

### நெஞ்சு படபடப்பு

இதயம் வேகமாக துடிக்க ஆரம்பிக்கும். அப்போது இலேசாக மயக்கம் இருப்பதுபோல் தோன்றும், மேலும் வியர்வை அதிகமாக இருக்கும். அப்படி இருந்தால் அது இதய நோயின் அறிகுறியாகும். சிலருக்கு அதிர்ச்சியான தகவலைக் கேட்டாலோ அல்லது பயங்கரமான நிகழ்வுகளைப் பார்த்தாலோ இப்படி தோன்றலாம்... எனவே அதன் தன்மையை முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும்.

### கணுக்கால் வீக்கம்

இரண்டு கணுக்கால்களிலும் அடிக்கடி வீக்கம் உண்டாகும். சில நாள்களில் அந்த வீக்கம் அப்படியே இருந்துவிடும். மேலும், மார்பு, வயிறு, தொடை, முகங்களில் வீக்கம் உண்டாகும். அந்த இடத்தில் கை வைத்து அழுத்தால் பள்ளம் ஏற்படும். இப்படி இருந்தால் அது இதயநோயின் அறிகுறியாகும்.

( XI ஆம் பக்கம் பார்க்க)





விற்பனையில்....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேற்றுக் கிரகவாசிகள் என்பது யார்?

நீங்கள் வேற்றுக்கிரகங்ளைப் பற்றியும் அவர்களது பூலோக வருகையினைப் பற்றியும் , ந்திரிகையிலும் , படங்களிலும் , கதைகளிலும், தொலைக் காட்சியிலும் பார்த்தும் கேட்டும் படித்தும் அறிந்திருப்பீர்கள்.

வேற்றுக் கிரகவாசியானவர்கள் எம்மை விடத்தொழில் நுட்பத்தில் உயர்ந்தவர்கள் எனவும் அவர்களது பறக்கும்தட்டு மிகவும் நுட்பமான முறையிலும் அமைந்திருக்கின்றது எனவும் அறிந்திருப்பீர்கள்.

அவர்களது பறக்கும் தட்டு சிறிய ஓடமாகவே இருப்பதால் அவர்கள் அண்ட வெளியில் ஆகத்தொலைவில் இருந்து வந்திருக்க முடியாது.

ஏனெனில் அந்தச் சிறிய ஓடத்தால் பலகோடி பில்லியன் தூரத்தை கடந்து வருவதற்குரிய எரிபொருளையோ, உணவுக் களஞ்சியப்படுத்தலையோ கொண்டிருக்க முடியாது. இதுவரையில் அண்டவெளியில் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களில் எந்த உயிரினமும் வாழவதற்கான சாத்தியக்கூறு காணப்படவில்லை என விஞ்ஞானிகள் கூறியுள்ளார்.

ஆகையால் அந்த உயிரினம் வேற்றுக் கிரகத்திலிருந்து வந்ததென்பது நியாயப்படுத்த முடியாத வாதமாகிவிட்டது.

இந்த நிலையில், அவர்கள் வேற்றுக்கிரகவாசிகளல்ல இந்தப் பூலோகத்தைச் சேர்ந்தவங்களே ஆவர். ஆனால் அவர்கள் இப்போது இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் இல்லை. கிட்டதட்ட 3000 அல்லது 4000 ஆண்டுகள் பிற்பகுதியில் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் என்ற கருத்தும் நிலவுகின்றது.

இதனைப்பற்றி விரிவாகப் பார்ப்போமாயின் அங்கிகளின் கூர்ப்புக் கொள்கையைப் பற்றி நீங்கள் அறிந்திருக்கலாம்.

இங்கிலாந்தைச் சேர்ந்த இயற்கை விஞ்ஞானியான சார்ள்ஸ் டார்வின்(1809-1882) இந்த கொள்கையை உருவாக்கினார். ஒரு விலங்கு தனது சூழலுக்கு தகுந்தபடி காலப் போக்கில் தன்னை இயைபாக்கம் அடையச்செய்கின்றது என்பதாகும். மனிதனுக்கு இந்த பாலமான கைகளும், கால்களும் வாய்த்திருப்பதற்குக் காரணம் அவன் கடினமாக உழைத்து வேலை செய்யவேண்டியிருப்பதாலும் அவனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்காகவும் ஆகும்.

ஆனால் இப்பொழுது மனிதன் நவீன உபகரணங்களையும், பலவிதமான தொழில் நுட்பத்தையும் கண்டுபடித்திருப்பதால் அவனுக்கு கடினமான வேலை செய்ய வேண்டிய செய்யவேண்டிய அவசியமில்லாமல் போகின்றது.மூளை மட்டும் மிகமுக்கியமானதாகவும் , இப்போது காணப்படும் வழுவான கை, கால்கள்க்கொண்ட உடல் தேவையற்றதாக மாறிவிடும். இதனால் பல்லாயிரம் ஆண்டுகள் செல்லும் போது மனிதனது உடல் தேவையற்றதாக மாறிவிடும்..

இதனால் பல்லாயிம் ஆண்டுகள் செல்லும்போது மனிதனது உடல் இதற்கான இயல்பாக்கத்தை அடைந்து மெல்லிய கை, கால்ளைக்கொண்ட குறுகிய உடலாகவும் தலை மட்டும் அசாதாரணமாக வளாந்து பெருத்துக்காணப்படும். என ஒரு பரபலமான விஞ்ஞானி அறிக்கை விட்டுள்ளார்.அவர்குறிப்பட்ட அந்தத் தோற்றம் இன்றைய மக்கள் கண்டதாகக்கூறப்படுகின்ற வேற்றுக்கிரகவாசிகளின் தோற்றத்தை ஒத்ததாகக் காணப்படுகின்றது.

இதன் மூலம் வேற்றுக் கிரகவாசியெனக் கூறப்படுபவர்கள். இந்தப் பூலோகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்கள் தான் ஆனால் இன்று வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் அல்ல... பல்லாயிரம் ஆண்டுகள் பற்பகுதியில் வாழந்துகொண்டிருக்கும் மனிதர்கள் தான் என்பதை ஓரளவு ஊகிக்கலாம்.

அவர்களால் எப்படி இந்தக்காலத்திற்க்கு வரமுடியும் என நீங்கள் யோசிக்கலாம்.இன்றைய நூற்றாண்டிலேயே மனிதன் இவ்வளவு சாதனைகளைப்புரிந்துவிஞ்ஞாத்திலே கரைகண்டு பால்வீதியினையே தனது கண்பார்வைக்குள் வைத்திருக்கிறான் என்றால் இன்னும் பல ஆயிரம்

( XI ஆம் பக்கம் பார்க்க)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் மருத்துவ சேவையில் ஒரு மைல் கல்

**80 படுக்கைகளுடன் அனைத்து நவீன வசதிகளையும் கொண்ட மருத்துவ நிலையம்**



1979

இன்று ஞாயிற்றுக்கிழமை
காலை 9.30 மணிக்கு வைபவ ரீதியாக
யாழ். மக்களுக்கு சமர்ப்பணம்




2012

Northern
Central
Hospital
*for a healthier tomorrow*

342, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

Web: www.nchjaffna.com

Email: nchjaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விக்கல் ஏன் வருகிறது?

சிலநேரங்களில், தசைநார்கள் திடீரென்றும், தன்னிச்சையாகவும் சுருங்கி விரிந்து செயல்படுகின்றன. அப்போது ஏற்படுவதுதான் விக்கல்.

தன்னிச்சையாக என்றால்...?

உங்கள் விரும்பமோ, தேவையோ இல்லாமல் உங்கள் கட்டுப்பாட்டையும் மீறி தானாகவே நடக்கும் செயல்பாடுதான் அது.

உதாரணத்துக்கு ஒரு சம்பவம்:

நீங்கள் நடந்து சென்று கொண்டிருக்கிறீர்கள். கீழே தரையில் பெரிய கற்கள் கிடக்கின்றன. அவற்றை நம் கண்கள் பார்க்கின்றன. அடுத்த சில நொடிகளிலேயே நம் மூளையின் ஹைப்போதலாமஸ் பகுதியில் இருந்து ஒரு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

அங்கே பெரிய, பெரிய கற்கள் கிடக்கின்றன. அதனால், அந்த கற்களை தாண்டிச் செல்லவேண்டும். இல்லையென்றால், விலகிச் செல்ல வேண்டும் என்பதுதான் அந்த உத்தரவு. அந்த உத்தரவை மீறிச் சென்றால், காலில் ரத்தக்காயம் வாங்குவது நிச்சயம்.

சில அவசரமான நேரங்களில் மூளையின் ஹைப்போதலாமஸ் உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்பாகவே சில நடவடிக்கைகளை நாம் மேற்கொள்கிறோம்.

உதாரணம்: வேட்டி கட்டிய ஒருவர் ஒரு வெட்ட வெளியில் நடந்து சென்று கொண்டிருக்கிறார். திடீரென்று காற்று வேகமாக வீசுகிறது. அவரையும் அறியாமல் அவரது கை அவர் அணிந்திருக்கும் வேட்டியை பிடிக்கச் செல்கிறது. இந்த சம்பவத்தில், ஹைப்போதலாமசில் இருந்து உத்தரவு வருவதற்கு முன்பே கையானது நடவடிக்கையில் ஈடுபட்டு விடுகின்றன.

பெண்களில் பலர், தங்களது தாவணியை அடிக்கடி சரி செய்து கொண்டிருப்பார்கள். அது, ஏற்கனவே சரியாகத்தான் இருக்கும். இருந்தாலும், சரி செய்வார்கள். இது இயல்பாகவே இடம் பெறுகின்றது.

சரி... இனி விடயத்துக்கு வருவோம்...

விக்கல் நமது உடலுக்கு தேவையான - பயனுள்ள ஒன்றுதானா என்றால், இல்லை என்பதுதான் பதில். பெரும்பாலான விக்கல்கள் காரணம் இல்லாமலேயே தோன்றுகின்றன. அவ்வாறே தாமாகவே விரைவில் நின்றுவிடுகின்றன. ஓரிரு நிமிடங்களுக்கு மேல் அது நீடிப்பது மிகக் குறைவே.

அவ்வாறு விக்கல் ஏற்படும்போது, பொதுவாக ஒருவர் நிமிடத்திற்கு நான்கு முதல் 60 தடவைகள் விக்கக் கூடும். குறைந்தளவு நேரம் மட்டும் நீடிக்கும் அத்தகைய விக்கல்களுக்கு எவ்வித மருத்துவ சிகிச்சையும் தேவையில்லை.

ஆனால், சிலருக்கு சில நாள்கள்வரை இந்த விக்கல் விட்டுவிட்டு தொடரலாம். இதற்கு காரணம் ஏதாவது நிச்சயம் இருக்கும். அப்படிப்பட்ட நேரங்களில் உடனடியாக மருத்துவரை அணுகுவது தான் நல்லது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு மூலம் உங்கள் குணம் !



நீங்கள் உண்ணும் உணவு மூலம் உங்கள் குணம் வெளிப்படுகிறதாம்.

எல்லோரும் தான் சாப்பிடுகின்றார்கள். ஆனால் ஆரோக்கியமாக சாப்பிடுபவர்கள் குறைந்தளவானவர்களே. என்ன சாப்பிடுகிறோம் என்பது போலவே அதை எப்படிச் சாப்பிடுகின்றோம்.... சாப்பிடும் போது நம் உடலின் தன்மை என்ன போன்றவற்றையும் கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள்.

ஏனெனில் நாம் சாப்பிடும் பொருள்கள் வெறுமனே உடலுக்கு ஊட்டம் தருவதோடு நின்று விடுவதில்லை. நம் குணத்தை தீர்மானிப்பதிலும் அவை கணிசமான அளவு பங்கு வகிக்கின்றன.

உதாரணமாக ஒருவர் பால், நெய், காய்கள், பழங்கள், கீரைகள் , தானியங்கள், பருப்புவகைகள் என சாத்வீக உணவுகளை சரியான அளவில் சாப்பிட்டு வந்தால் அவர் அமைதியான குணம் கொண்டவராக இருப்பார். எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் பதட்டம் அடையாமல் தெளிவாக கிரகித்து முடிவுகள் எடுக்கும் பக்குவம் கொண்டவராக இருப்பார்.

காரம் உப்பு புளிப்பு என அழுத்தமான உணவுகளை உணவில் அதிகம் சேர்த்துக் கொண்டு மாமிசங்கள் எண்ணையில் பொரித்த உணவுகளை விரும்பி உண்பவர்கள் எப்போதும் பதட்டம் உள்ளவர்களாக காணப்படுவார்கள். உணர்ச்சிவசப்பட்டு தப்பான முடிவுகளை எடுத்துவிட்டு பின்பு வருத்தப்பட்டு விட்டு மீண்டும் அதே தவறைச் செய்வார்கள்.

அசுத்தமான உணவு புளித்துப்போனது குளிர்சாதனப்பெட்டியில் வைத்து குளிர்ந்திருக்கும் உணவுகள் பழைய உணவு கெட்டுப்போன உணவு போன்றவற்றை உண்பவர்கள் மந்தமாக இருப்பார்கள். நல்லது கெட்டது தெரியாமல் எதையும் நம்புவார்கள்.

# பற்களையும் கவனிப்போம்



நோய் வந்த பின்னர் வேதனையோடு சிகிச்சை பெற்றுக் கொள்வதைவிட வருவதற்கு முன்பே பாதுகாத்துக் கொள்வதுதான் ஆரோக்கியத்தின் இரகசியம். அதுவும் நமது உடலில் ஏற்படும் மாறுதல்களையும், நோய்களையும் நாமே உணர முடியும். பலதடவை கண்ணாடியின் முன் நின்று நமது முகத்தை ரசித்து பார்க்கும் நாம், நம் பற்களையும் ரசித்துப் பார்க்க வேண்டும். பற்களை நாக்கின் உணர்வினாலும், பற்களை துலக்கும்போதும், கைவிரல்களின் உணர்வினாலும் பற்களில் ஏற்படும் மாற்றங்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து தற்காப்பு முறைகளைக் கடைப்பிடிக்க ஆரம்பிக்க வேண்டும்.

பற்களைப் பாதுகாத்து கொள்ள கடைபிடிக்க வேண்டிய இலகுவான வழிகள் இதோ...

பல் சொத்தை, பயோரியா போன்ற பல் நோய்கள் வராமல் தடுக்க வாயை எப்போதும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்துக் கொள்ளவேண்டும்.

காலையிலும், இரவு படுக்கப்போகும் முன்பும் பற் தூரிகை மூலம் நன்றாக பல்லை துலக்க வேண்டும். பலர் பல் துலக்க வேண்டும் என்பதைத் தவறாகப் புரிந்து கொண்டு, கடுமையான அமைப்புள்ள பற் தூரிகைகளை வாங்கி தேய் தேய் என்று தேய்த்து பற்களை ஒரு வழி பண்ணி விடுகிறார்கள். இதனால் கிருமிகள் ஓடுகிறதோ இல்லையோ உங்கள் பற்களில் தேய்மானம் ஏற்பட்டு வலிமை இழந்து போய்விடும் ஜாக்கிரதை.

பிறந்த குழந்தையின் பற்களுக்கு தாய்ப்பால் மிகவும் அவசியம். பாலுக்கும் பல்லுக்கும் என்ன சம்பந்தம் என்கிறீர்களா? தாய்ப் பாலில்தான் குழந்தைக்குத் தேவையான ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.

அதுமட்டுமின்றி, அழகான முகத்தோடு குழந்தையின் முகம்-தாடை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதோடு பற்களுக்குள் நோய் வராமலும் தடுக்க தாய்ப்பால் உதவுகிறது.

பற்களில் ஒட்டிக் கொள்ளக்கூடிய வெண்சர்க்கரை கொண்ட மிட்டாய், சொக்லேட், ஐஸ் கிரீம் போன்றவற்றை குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுப்பதைத் தவிர்க்கவேண்டும். இல்லையெனில் குழந்தைகளின் பற்களை கொஞ்சம் கொஞ்சமாக அரித்துவிடும்.

காய்கறிகள், கீரை வகைகள், பழங்கள், தானியங்கள் பருப்பு வகைகளைக் கொடுத்து வந்தால், வளரும் குழந்தைகளுக்கு பற்களின் வளர்ச்சி முழுமையாகவும், நிறைவாகவும் இருக்கும்.

எந்தெந்த காய்கறிகளை அல்லது கீரைகளை சமைக்காமல் சாப்பிட முடியுமோ அவற்றையெல்லாம் நன்றாக மென்று சாப்பிட வேண்டும். ஏனெனில், அவை பற்களுக்கு பயிற்சி அளிப்பது மட்டுமல்லாமல் உடலுக்கு ஊட்டச்சத்தாகவும் இருக்கும்.

சாப்பிட்ட பின்பு வாய்நிறைய நல்ல தண்ணீரை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படியே அந்த தண்ணீரால் வாயைக் கொப்பளித்து விழுங்க வேண்டும். துப்பக்கூடாது. இதனால் வாய் சுத்தமாகும்.

ஒவ்வொரு முறையும் சாப்பாட்டுக்குப் பிறகு ஒரு தேங்காய் துண்டையோ அல்லது ஒரு கரட்டையோ நன்றாக மென்று சாப்பிட வேண்டும். இதனால் பற்களின் மேல் ஒட்டிக் கொண்டிருக்கும் உணவுத் துகள் நீங்கி பற்கள் இயற்கையாகவே சுத்தம் அடைந்துவிடுகின்றன.

பற்களின் இடுக்குகளில் உணவுப் பொருள் சிக்கிக் கொள்ளும்போது அவற்றை எடுக்க பல்குச்சியைப் பயன்படுத்துவதால், நம் பற்களுக்கும், ஈறுக்கும் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

சாப்பிடும்போது வாயின் இருபுறமும் சமமாக மென்று சாப்பிடுவது நல்லது.

புகையிலை, பான்பராக், குட்கா போன்றவைகளை அறவே தவிர்க்கவேண்டும். இது பல்லை நாறடித்து பிரச்சினை ஏற்படுத்துவதோடு வாய்ப்புற்றுநோயை ஏற்படுத்திவிடும்.

அதிக சூடான உணவுகளையோ பானங்களையோ, அல்லது அதிக குளிர்ச்சியானவற்றையும் தவிர்ப்பது நல்லது.

அதையும் மீறி நம் கண்களுக்குப் புலப்படாமல் நம் பற்களின் இடுக்குகளில் ஒளிந்திருக்கும் கிருமிகளை பல் மருத்துவ நிபுணரின் உதவியோடுதான் விரட்ட முடியும். எனவே, ஆறு மாதங்களுக்கொரு முறையாவது பல் மருத்துவரை அணுகி பரிசோதனைகள் செய்து சிகிச்சை பெற வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













**சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பீஎல்சீ**

தலைமை அலுவலகம்: இல.18, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
கம்பனி பதிவிலக்கம்: (PB 232 PQ) கூட்டிணைக்கப்பட்ட திகதி: 1995 செப்டெம்பர் 07
2011ம் ஆண்டு 42ம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கி நாணயச்சபையினால் உரிமமளிக்கப்பட்டுள்ளது.

ரூ 100,000 வரை - 4% வட்டிவீதம் (வ.தே.வ.வீ - 4.07%)
ரூ 100,000 க்கு மேற்பட்ட கணக்கு மீதிக்கு 8.5% வட்டிவீதம் (வ.தே.வ.வீ - 8.84%)
சாதாரண சேமிப்பு - 8.5% வட்டிவீதம் (வ.தே.வ.வீ - 8.84%)

உடனடி அழைப்பு:
**011 7 388 388**

கிளைகள் மற்றும் சேவைநிலையங்கள்: அநுராதபுரம் - 077-3487516 / பதுளை - 077-3435294 / பத்தரமுல்லை - 077-2016137 / மட்டக்களப்பு - 077-7755627 / சிலாபம் - 077-3403122 / தம்புள்ளை - 077-2242517
எம்பிலிப்பிட்டி - 077-2274866 / எலகந்த - 077-3688871 / காலி - 077-6340440 / கம்பஹா - 077-3660571 / ஜா-எல - 077-3863093 / யாழ்ப்பாணம் - 0777-393213 / கடுவெல - 077-3863094 / கதுருவெல - 077-7266259 / களுத்துறை - 077-2016125
கண்டி - 077-3647468 / கேகாலை - 077-3822933 / களனி - 077-3647… / … - 077-2070797 / மஹரகம - 077-2016126 / மாத்தறை - 077-2980136 / மத்துகம - 077-3856243
மொறட்டுவை - 077-3647472 / நீர்கொழும்பு - 077-3647471 / … - 077-3822934 / இரத்தினபுரி - 077-2858973 / திஸ்ஸமஹாராம - 0777-393210 / வவுனியா - 077-4463744 / வத்தளை - 077-3497325
… - 077-3497926 / … - 077-3822672 / … - 077-3822672


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஏன் இந்த மாற்றம்....?

( II ஆம் பக்கத் தொடர்ச்சி)

## இடது கை துடிப்புடன் வலி

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், நரம்பு தளர்ச்சிக்கு ஆளானவர்களுக்கும் மார்பு வலியுடன் இடது கை வலித்தால் உடனே மருத்துவரை அணுகுவது நல்லது.

## மயக்கம் ஏற்படுதல்

இதய நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலில் வியர்வை படபடப்புடன் மயக்கம் ஏற்படும் இதை நன்கு கவனித்து உடனே மருத்துவரை அணுகுவது நல்லது.

## அதிக இரத்த அழுத்தம்

இரத்த அழுத்தம் ஒரு நோய் அல்ல. ஆனால் அதை அப்படியே குணப்படுத்தாமல் விட்டு விட்டால் அது இதய நோய்க்கு காரணமாக அமைந்துவிடும். எனவே இரத்த அழுத்தத்தை சீராக வைத்துக்கொள்ள வேண்டும். சில நேரங்களில் இரத்த அழுத்தமானது கிட்னியை செயலிழக்கவும், கண் பார்வை மங்கவும் செய்துவிடும்.

இரத்த அழுத்தமானது பெற்றோர்களில் யாராவது ஒருவருக்கு இருந்தால்கூட அது 25% குழந்தைக்கும் வர வாய்ப்புள்ளது.

அதிக இரத்த அழுத்தம் நடுத்தர வயதிற்குப் பின்னரே தலைகாட்டும்.

கோபம், கவலை, இயலாமை, மன அழுத்தம், மன உளைச்சல், தூக்கமின்மை, அதிக வேலைப்பளு இவற்றால் இரத்த அழுத்தம் அதிகரிக்கும்.

இரத்த பாதிப்புகளிலிருந்து விடுபட புகை, மது போன்றவற்றை தவிர்க்க வேண்டும், உணவில் உப்பைக் குறைத்துக்கொள்ள வேண்டும், உடல் எடை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்,



மலச்சிக்கல் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும், டென்ஷனைக் குறைத்து மன அழுத்தம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும், தேவையான ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும். உடலை அதிகம் வருத்தக் கூடாது. உடற்பயிற்சி அல்லது நடைப்பயிற்சி செய்வது நல்லது, இதய நோயிலிருந்து விடுபட உணவு கட்டுப்பாடு மிகவும் அவசியம், சர்க்கரை மற்றும் இனிப்பு வகை உணவுகளை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும், வாயுவை உண்டாக்கும் கிழங்கு வகைகள், பருப்புகள் சில தானிய வகைகளை தவிர்ப்பது நல்லது, குளிரூட்டப்பட்ட பானங்கள், அதிக வாசனை கலந்த உணவுகள் சாப்பிடக் கூடாது. அதுபோல் பதப்படுத்தப்பட்ட உணவுகளையும் தவிர்ப்பது அவசியம், அதிகம் கொழுப்பு சேர்ந்த பொருள்களைத் தவிர்க்க வேண்டும். எண்ணெயில் பொரிக்கப்பட்ட உணவுகளை சாப்பிடுவதும் நல்லதல்ல. உணவில் அதிகம் காய்கறிகளையும், பழங்களையும், கீரைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

# வேற்றுக் கிரகவாசிகள் என்பது யார்?

( III ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுகள் கழித்திருக்கும் போது எத்தகைய முன்னேற்றத்தை அடைந்திருப்பான். இந்தப் பிரபஞ்சத்தையே ஆட்டிப்படைக்கத் தொடங்கியிருப்பான். தொழில்நுட்பம் , விஞ்ஞானம் ஆகிய இரண்டினதும் எல்லையினைத்தொட்டிருப்பான்.

எமது பரபஞ்சத்தில் கருந்துளை அல்லது கருமைத் துவாரங்கள் என அழைக்கப்படும் இறந்த நட்சத்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் அருகே செல்பவர்களுக்கு நேரம் மெதுவாகவே நகரும். ஆனால் இங்கே பூமியில் இருப்பவர்களுக்கோ நேரம் வழமை மாதிரியே ஓடும். இந்த நேர இடைவெளி பூமியிலே பல வருடங்களுக்கு சமமானதாகும்.

இந்த கருந்துளைகள் எப்படி உருவாகின்றன என்றால் நட்சத்திரங்கள் பல மில்லியன் வருடகாலத்துக்கு வாழ்கின்றன. இறுதியில் அவற்றுக்கும் அழிவுகாலம் வருகின்றது. தனது அணுசக்தி முழுவதும் முடிவடைந்ததும் ஈர்ப்புச்சக்திக்கு ஈடு கொடுக்கமுடியாது நட்சத்திரமானது சுருங்கத் தொடங்குகின்றது. இவ்வாறு இன்னமும் அதிகமாக சுருங்கி மாபெரும் அடர்த்தியுடன்கூடிய ஒரு புள்ளிப்பொருளாகலாம். இதுவே கருமைத் துவாரமாகும்.

இன்றே பால்வீதியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் மனிதன் இன்னும் பல ஆயிரம் ஆண்டுகள் கழித்திருக்கும் சமயத்தில் கருமைத் துவாரத்தை கைப்பற்றி அதன் நேர மாற்ற கோட்பாட்டை ஆராய்ந்து நோத்தை வெல்லும் கலையை அறிந்து விஞ்ஞான கற்பனைக் கதையில் வந்ததை போன்ற ஒரு டைம் மிஷினைத் தாயரிக்கலாம்.

இதன் மூலம் மனிதனால் நேரத்தை தனது ஆட்சிக்குட்பட்டதாக மாற்றமுடியும். நேரத்தை வெல்லுவதன் முலம் கடந்த காலத்துக்கு சென்று வருவதற்கான கலையை கண்டுபிடித்திருக்கலாம். இப்படி கடந்த காலத்தில் இருந்தவர்களை கண்ட பூலோக மக்கள் அவர்களின் பிரமிக்க வைக்கும் தொழில்நுட்ப வளர்ச்சியைக் கண்டு அஞ்சி தங்களை விட உயர்ந்த தொழில்நுட்பத்தை கொண்ட இவர்கள் வேறு கிரகமொன்றில் இருந்து வந்திருக்கவேண்டும் என முடிவெடுத்திருக்கின்றார்கள்.

வேற்றுக் கிரகவாசிகளாக இருந்திருந்தால் அவர்கள் மேலோட்டமாகப் பூமியில் ஆராய்ச்சி செய்யாமல் நேரடியாக தரையிறங்கி பூமியிலுள்ளவர்களுடன் தொடர்பு கொண்டிருப்பர்கள்.

ஆனால் இந்த மனிதர்களோ தம்து சிக்கலான தொழில் நுட்பத்தை இன்றைய மக்கள் புரிந்துகொள்ள மாட்டார்கள் என்பதனாலும் அப்படியே அறிந்துகொண்டால் அவர்களது இயல்பு வாழ்க்கை மாறிப்போய் எதிர்காலமும் கேள்விக்குறியாகிவிடும் என்ற பயத்தினாலுமே இந்த பூமியில் சட்டபூர்வமாக தரையிறங்காமலும் ,தடயங்களையும் , சாட்சிகளை மறைத்தும் சாதுரியமாக வந்து செல்லுகின்றார்கள் என்பதை ஊகிக்க முடிகின்றது. எனவே இந்த கருத்து அலட்சியப் படுத்தப்பட வேண்டியதல்ல ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட வேண்டியது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறிவேப்பிலை மகத்துவம்

உணவின் வாசனையை அதிகரிக்கத்தான் கறிவேப்பிலை பயன்படுகிறது என்று பலர் கருதுகின்றனர். இதனால்தான் சாப்பிடும்போது உணவில் கிடக்கும் கறிவேப்பிலையை எடுத்து கீழே போட்டு விடுகிறார்கள். ஆனால் இனிமேல் இப்படிச் செய்யாதீர்கள். ஏனெனில் கறிவேப்பிலையில் பல்வேறு மருத்துவ குணங்கள் இருப்பதாக சமீபத்திய ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

கறிவேப்பிலையின் தாவரப்பெயர் முரையா கோய்னிஜா. இது ருட்டேசி என்ற தாவரக் குடும்பத்தை சேர்ந்தது. கறிவேப்பிலையில் விட்டமின் ஏ, பி, சி, கால்சியம் போன்றவைகள் உள்ளன. மேலும் கறிவேப்பிலையில் கோயினிஜாக், குளுகோசைட், ஒலியோரெசின், ஆஸ்பர்ஜான் சொரின், ஆஸ்பார்டிக் அமிலம், அயாமைன், புரோலைன் போன்ற அமினோ அமிலங்கள் உள்ளன. இவைதான் கறிவேப்பிலைக்கு இனிய மணத்தை தருகிறது. பல மருத்துவ குணாங்களையும் வெளிப்படுத்துகிறது.

இந்திய சமையலில் வாசனைக்கு சேர்க்கப்படும் மசாலா அயிட்டமான கறிவேப்பிலை புற்றுநோயை ஆரம்பத்திலேயே கொல்லும் ஆற்றல் உடையது என்பதை அண்மையில் ஆஸ்திரேலிய உணவியல் அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர்.

நியூட்ரிசன் சைன்டிஸ்ட் ஆப் சிசைய்ரோ என்பது ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம். மசாலாப் பொருள்கள் நல்ல வாசனை உடையது மட்டுமல்ல அது பல மருத்துவ குணங்களை கொண்டது என்பதை அந்த நிறுவனம் கண்டறிந்துள்ளது.

இந்த நிறுவன தலைமை ஆராய்ச்சியாளர் லனேகோபயாக் கறிவேப்பிலை சிறந்த ஆண்டி ஆக்ஸிடென்டாக இயங்குகிறது என்கிறார். இது புற்றுநோய், இதய நோய்களை குறைக்கும் ஆற்றல் கொண்டது. மேலும் கறிவேப்பிலையால் ஞாபக சக்தி எளிதில் கிடைக்கிறது என்கிறார் இவர்.

கறிவேப்பிலையிலிருந்து எண்ணை எடுத்து அதை நுரையீரல், இருதயம், கண்நோய்களுக்கு தலைக்கு தேய்க்கும் எண்ணையாக பயன்படுத்தலாம் என இங்கிலாந்தில் உள்ள வேளாண் மருத்துவ ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

சாதாரணமாக 100 கிராம் கறிவேப்பிலையை அரைத்து சாற்றை எடுத்து 100 கிராம் தேங்காய் எண்ணையில் கலந்து இதமான சூட்டில் ஈரப்பதம் நீங்கும்வரை காய்ச்சி தினசரி தலைக்கு தேய்த்து வந்தால் உடல் உஷ்ணம் மங்கும். பரம்பரை நரை வராது. கண்பார்வை குறைவு ஏற்படாது. கறிவேப்பிலையை அரைத்து சாப்பிட்டால் நுரையீரல், இருதய சம்பந்தப்பட்ட ரத்த சம்பந்தப்பட்ட நோய்கள் வருவது குறையும் என்கிறது இந்நிறுவனம்.

திருவனந்தபுரம் பல்கலைக்கழகத்தில் கறிவேப்பிலையையும், கடுகையும் தாளிக்க பயன்படுத்தினால் அதனால் நன்மை உண்டா? என்பது பற்றி ஆராய்ந்தார்கள் மருத்துவ குழுவினர். அதில் கறிவேப்பிலையும், கடுகும் சேர்ந்து நமது திசுக்களை அழிவிலிருந்து பாதுகாக்கிறது என்பது தெரிய வந்தது. மேலும் பிரிரேடிக்கல்ஸ் உருவாவதையும் தடுக்கிறது. பிரிரேடிக்கல்ஸ் உருவாவதால்தான் டி.என்.ஏ. பாதிக்கிறது. செல்களிலுள்ள புரோட்டின் அழிகிறது. விளைவு கேன்சர், வாதநோய்கள் தோன்றுகின்றன. தாளிதம் செய்யும்போது நாம் பயன்படுத்தும் கறிவேப்பலையும், கடுகும் பிரிரேடிக்கல்ஸ் உருவாவதை தடுப்பதாக ஆய்வில் கண்டறிந்துள்ளனர்.

இதுதவிர நீரிழிவு நோயாளிகள் காலையில் 10 கறிவேப்பிலை இலையையும், மாலையில் 10 இலையையும் பறித்த உடனேயே வாயில் போட்டு மென்று சாற்றை விழுங்கி வந்தால் மாத்திரை சாப்பிடும் அளவை பாதியாக குறைத்து விடலாம் என்கிறார்கள் மருத்துவர்கள்.

தினசரி வெறும் வயிற்றில் கறிவேப்பிலை இலையை 3 மாதங்கள் சாப்பிட்டு வந்தால் நீரிழிவால் உடல் கனமாவது குறைக்கப்படும். சிறுநீரில் சர்க்கரை



வெளியேறுவதும் முற்றிலும் தடை செய்யப்படும். கறிவேப்பிலை ரத்தத்தில் இருக்கும் கொழுப்பை குறைக்கவும், அறிவை பெருக்கவும் உதவுகிறது. கறிவேப்பிலையை பச்சையாகவே மென்று தின்றால் குரல் இனிமையாகும். சளியும் குறையும் என்கிறார்கள் மருத்துவர்கள்.

# உணவை ஆரோக்கியமாக எப்படி சாப்பிடலாம்?

நாம் சாப்பிடும் ஒவ்வொரு உணவும் வயிற்றை நிரப்புவதற்காகவும், சுவைக்காகவும் சாப்பிடப்படுவதில்லை. சத்து, ஆரோக்கியம், உடல் இயக்கம் போன்றவைகளுக்காகவே உணவுகளை சாப்பிடுகிறோம்.

நீங்கள் விரும்பும் படியான ஆரோக்கியம் நீங்கள் சாப்பிடும் உணவில் இருக்க வேண்டுமானால், நீங்கள் சமையலுக்காக வாங்கும் பொருள்கள், அதை நறுக்கும் முறை, சமைக்கும் முறை, பரிமாறும் முறை, சாப்பிடும் முறை போன்ற அனைத்திலும் கவனம் செலுத்தவேண்டும்.

1. ஏற்கனவே சாப்பிட்ட உணவு ஜீரணமான பிறகே அடுத்தவேளை உணவை சாப்பிடுங்கள்.
2. ஆற, அமர உட்கார்ந்து சாப்பிடுங்கள். மென்று விழுங்குகள். நொறுங்கத் தின்றால் நூறு வயது.
3. மிக வேகமாகவோ, ரெம்பவும் மெதுவாகவோ சாப்பிடாதீர்கள். சாப் பிடும் போது பேசுவதும் நல்லதில்லை.
4. கோபம், மனவருத்தம், தன்னிரக்கம் என உணர்ச்சிக் குவியலாக இருக்கும்போது சாப்பிடாதீர்கள்.
5. பசி இல்லாத போது சாப்பிடாதீர்கள். பசிக்கும் போது சாப்பிடாமல் இருக்காதீர்கள்.
6. சாப்பிட்டதும் படுக்காதீர்கள். சாப்பிட்டு ஒரு மணி நேரம் கழித்துத் தூங்குவதுதான் நல்லது.
7. எப்போதும் உணவை வீணாக்காதீர்கள்.
8. காய்கறிகளை மிகச்சிறிய துண்டுகளாக ஒரு போதும் நறுக்கக்கூடாது. சிறிதாக நறுக்கும் போது, அவைகளில் இருக்கும் சாறு வெளியேறி சத்துக்கள் குறையும்.
9. சமையலுக்கு தரமான எண்ணையை பயன்படுத்தவேண்டும். பாத்திரத்தில் எண்ணையை ஊற்றி சூடாக்குவதற்கு பதில், பாத்திரத்தை அடுப்பில் வைத்து சூடாக்கிவிட்டு, அதன் பின்பு எண்ணையை ஊற்றவேண்டும். எண்ணையை ஊற்றிய பின்பு அடுப்பில் எரியும் தீயின் அளவை குறைத்துவிடுங்கள். இவ்வாறு செய்தால், எண்ணையில் இருந்து வெளி யேறும் ரசாயனத் தன்மையின் தாக்கமும் குறைவாகவே இருக்கும்.
10. நெய் சேர்க்கும் உணவில் சிலர், தனிச்சுவை கிடைக்க வேண்டும் என்பதற்காக சிறிதளவு எண்ணையும் சேர்ப்பார்கள். அப்படி சேர்ப்பது ஆரோக்கியத்திற்கு ஏற்றதல்ல.
11. பாகற்காய், வெந்தயம் போன்றவைகளில் இருக்கும் கசப்பு தன்மையை போக்க எந்த பொருளையும் அதனுடன் சேர்க்காதீர்கள். ஏன் என்றால் அவை இரண்டின் மூலமும் உடலுக்கு தேவையானதே கசப்புதான். அந்த கசப்பை நீக்கிவிட்டு அவைகளை சாப்பிட்டு எந்த பலனும் இல்லை.
12. முளைவிட்ட தானியங்களுடன் பயறை சேர்த்து சாப்பிடக்கூடாது. இவை இரண்டிலும் புரோட்டீன் மிக அதிகமாக இருப்பதால், ஜீரணம் ஆக மிகவும் தாமதமாகும்.
13. காய்கறிகளை ஒரு போதும் அதிகமான அளவு எண்ணை சேர்த்து வறுக்கக் கூடாது. காய்கறிகளில் தொடர்ச்சியாக ஏற்றப்படும் சூடு அவைகளில் இருக்கும் விட்டமின், தாதுச்சத்துகளை போக்கிவிடும்.
14. தினமும் ஒவ்வொரு நேரமும் எவ்வளவு உணவு சாப்பிட வேண்டும் தெரியுமா? காலையில் பாதி வயிற்றுக்கு உணவும் அதாவது 50 சதவீதம், மதிய உணவு 30 சதவீதம், நான்கு மணிக்கு 10 சதவீதம், இரவில் 20 சதவீதம் என்ற அளவிற்கு உணவு உண்ணவேண்டும்.
15. ஒரு சப்பாத்தி அல்லது ஒரு அகப்பை சாதம், பருப்பு குழம்பு, காய்கறி போன்றவை மதிய உணவில் சேர்க்கப்படவேண்டும். இதிலிருந்து கார் போஹைட்ரேட், புரோட்டீன், விட்டமின், கொழுப்பு, தாதுசத்துக்கள் போன்று உடலுக்கு தேவையான அனைத்தும் கிடைக்கின்றன.
16. மதிய உணவிற்கும், இரவு உணவிற்கும் இடையில் 7-8 மணிநேரம் இடைவெளி இருந்தால் மாலை நேரத்தில் எலுமிச்சை சாறு, பழச்சாறு, வறுத்த வேர்க் கடலை, வறுத்த முந்திரிபருப்பு போன்றவைகளை சாப்பிடலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

நீர்வேலி

# திருவருள் மிகு ஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி திருக்கோயில்

புனருத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் - 25.03.2012



## ஆலய வரலாறு

விவசாய கிராமம் எனப் பெற்ற நீர்வேலி கிராமத்திலே காலையில் எழுந்தால் ஆலயங்களின் காண்டாமணி ஓசை வேத பாராயணம், திருமுறை முழக்கம் இயல்பாகவே அமைந்துவிட்டன.

இந்நிலையில் நீர்வேலியின் வட பகுதியில் குடிசை அமைத்து வாழ்ந்தவர் செல்லாச்சி அம்மையார். முருக பக்தி நிறைந்த இவரது வீட்டு முற்றத்திலே ஒரு பலாமரம் பிஞ்சு பிடித்திருந்தது. இது கதிர்காமத்து வேற் பெருமானுக்கு என மனதில் அர்ப்பணித்துவிட்டார். ஆனால் ஓரிரு நாள்களில் காயாகிப் பழமாகிவிட திடுக்கிட்ட அம்மையார் என்ன செய்ய எனக் கலங்கி பலாப்பழத்தை வெட்டிக் கைகளில் ஏந்திக் கொண்டு பல மைல்களுக்கு அப்பாலுள்ள கந்தனை நினைத்துச் சிந்தித்துப் போற்றத் தொடங்கினார். சிறிது நேரத்தில் ஆளையோ காணவில்லை.

ஓரிரு மணி நேரத்தின் பின்னர் நீர்வடிகின்ற சேலை.... நீறணிந்த நெற்றி... தங்க வேலும் முருகயந்திரமும் மின்னும் வலக்கை.... கதிர்காமத்திலே நிவேதித்து பிரசாதமாக எடுத்த பலாப்பழத்துண்டு இப்படி வீட்டு முற்றத்திலே நின்றார்.

இவரைக் காணவில்லை எனத் தேடியோர் வியந்து நின்றனர். இறைவன் தம்மை ஒரு நொடியில் தென்கதிரமலைக்குக் கொண்டு சென்று மீள நீர்வேலியில் விட்டதாக அவர் கண்ணீர் சொரியக் கூறினார். அவர் கையிலுள்ள மின்னுகின்ற மேலும், யந்திரமும் கதிரமலையில் கிடைத்த அரியபொக்கிஷங்கள் இதனை 'நெல்லிமர நிழலில் இறைவனின் உத்தரவுப்படி வேல் பிரதிஷ்டை செய்யப்பட்டு இன்று பெரிய ஆலயமாக வளர்ச்சி பெற்றுள்ளது.

## கருணைக் கடவுள்



பல்லாண்டுகளுக்கு ஒரு முறை நிகழும் அதிபவித்ரமயமான திருக்குடநன்னீராட்டுப் பெருஞ்சாந்தி விழா நமது நீர்வை கதிர்காமப்பெருமானுக்கு நடைபெறுவது மகிழ்ச்சியளிக்கிறது.

கருணை வள்ளலாகிய இப் பெருமானின் திருக்கோயிற் திருப்பணியில் பங்கேற்றவர்கள், குடமுழுக்கு விழா செயற்பாட்டாளர்கள் அனைவருக்கும் நன்றிகளோடு கூடிய ஆசிகளை தெரிவிக்கின்றோம்.

வள்ளி கல்யாண ஸீந்தரனாகிய சித்ர மயூரவா கனன் நமது கதிர்காம பெருமான் யாவருக்கும் சகல செல்வயோகம் மிக்க பெரு வாழ்வருள இந்த உன்னத நாளில் பிரார்த்திப்போமாக. அனைவருக் கும் மஹாகும்பாபிஷேக வாழ்த்துக்களும் மகிழ்ச் சியும் உண்டாகப் பிரார்த்தித்து நிற்கிறோம்.

சிவஸ்ரீ கு. தியாகராஜ குருக்கள்
(தேவஸ்தான பிரதானாச்சார்யார்)

## புனிதமான நிகழ்வு



நீர்வேலியின் வடபால் கருணை பொழியும் கடவுளான கதிர்காம ஆண்டவனுக்கு திருக்குட நன் னீராட்டு விழா நடைபெறுகிறது.

தபஸ்வினியர் பூஜித்த வரலாற்றுச் சிறப்பு மிக்க இத்தலத்தில் வரலாற்று சிறப்புமிக்க தாக இந்நிகழ்வு அமைகிறது

எல்லோருக்கும் இந்நிகழ்வு சகல க்ஷேமங்களுடன் கூடிய வளமான நல்வாழ்வை அருளட் டும் என்று இத்தல இறைவனைப் பணிந்து ஆசி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

சிவஸ்ரீ சா. சோமதேவக் குருக்கள்
(கும்பாபிஷேக பிரதானாச்சார்யார்)

## முருகனின் திருவருள் கிடைக்கட்டும்



நீர்வையூரின் வடபால் கருணைத் தெய்வமாக வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் செல்லக்கதிர்காம வேற் பெருமானுக்கு இன்று மஹா கும்பாபிஷேகமாகும் திருப்பணிச் சபையினரின் ஒன்றுபட்ட முயற்சியினால் இம் மகிழ்ச்சி தரும் கைங்கரியமானது நிறைவேறியுள்ளது. ஆலய திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும். இந்த வேளையில் ஏற்பட்ட நிதிப்பற்றாக்குறை யினாலும் வேறு பல இடர்களினாலும் நாம் தளர்வுற்ற நிலையில் அவற்றையெல்லாம் எம் பெருமான் களைந்து இக்கருமம் இனிதே நிறைவுற அருள்புரிந்துள்ளார்.

திருப்பணி வேலைகள் முதலான ஆலய வளர்ச்சியில் பங்கெடுத்த அனைவருக்கும் மற்றும் எம் பெருமானின் அடியவர்களுக்கும் செல்லக் கதிர்காம முருகனின் திருவருள் கிடைக்கவேண்டுமென்று வணங்குகின்றேன்:

சிவலிங்கம் ரதீஸ்குமார் (பொருளாளர்), திருப்பணிச்சபை.

## மகத்துவம் மிக்க நிகழ்ச்சி



எல்லாம் வல்ல அரு...ளனாகிய நீர்வைக் கதிர்காம இறைவனுக்கு மஹாகும்பாபிஷேக வைபவம் நிகழ்கிறது. இத் திருத்தலம் கடந்த 14 ஆண்டுகளுக்கு பின் நடைபெறும் இந்நிகழ்வுக்காக புதுவர்ணம் பூசி தேவலோக கோலம் பூண்டிருக்கின்றது. எனவே இந்நிகழ்வுகளில் யாவரும் கலந்து கொண்டு பாக்கியசாலிகளாக வேண்டுமென வேண்டி இவ்வேளையில் முருகவேற் பெருமானின் திருவடிகளை போற்றுகிறேன்

இ. தயாகரன், தலைவர், திருப்பணிச்சபை

## திருப்பணிச்சபை செயலாளரின் வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாணத்திலே சைவமும், தமிழும் பேணிப்பாதுகாத்துவரும் கிராமங்களில் தலைசிறந்து விளங்குவது நீர்வேலி ஆகும். இந்த நீர்வைக்கிராமத்திலே வடக்கு கிராம அலுவலர் பிரிவின் மத்தியில் அமைந்திருப்பது அருள் மிகு செல்லக்கதிர்காம ஆலயமாகும். இந்த ஆலயத்திற்கு பல சிறப்புக்கள் உண்டு. அதில் முக்கியமாக குறிப்பிடக்கூடியது தென்பகுதியில் அமைந்துள்ள செல்லக்கதிர்காம ஆலயத்திற்கும் இவ்வாலயத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

அங்கு ஆடிமாதத்தில் உற்சவம் நடைபெறும் போது இங்கும் விசேட பூசை நடைபெறுவது வழக்கம் செல்லக்கதிர்காம ஆலயத்திலிருந்து வேல் கொண்டு வந்து வைத்து வழிபாடு செய்து வருகின்றனர் என்பது வரலாறு. இவ்வாலயத்தின் பதின்நான்கு ஆண்டுகளுக்குப் பின் திருப்பணி வேலைகள் நடைபெற்று கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இதன் சிறப்பு இதழாக பத்திரிகையில் வெளிவரும் இவ் இதழுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மு. கணேசானந்தன், செயலாளர், திருப்பணிச்சபை.


## விளம்பர அனுசரணை

நீர்வேலி
பலநோக்கு
கூட்டுறவுச்சங்கம் (வது)
நீர்வேலி.

ஜீவராஜ் தேநீரகம்
குறுக்கு வீதி,
நீர்வேலி.

சுகந்தன் பல்பொருள்
வாணிபம்
நீர்வேலி.

சிவா பல்பொருள்
வாணிபம்
திரு.ச. தவலிங்கம்
(பஞ்சுகடை)

திருமுருகன் திருமண
மண்டபம்,
திருமுருகன் பல்பொருள்
அங்காடி,
நீர்வேலி.

நீர்வேலி ஐக்கிய
கூட்டுறவுச்சங்கம்
நீர்வேலி.

லிங்கம் ஸ்ரோர்ஸ்
நீர்வேலிச்சந்தி, நீர்வேலி

ராஜ்மணி பந்தல் சேவை
குறுக்கு வீதி,
நீர்வேலி.

சிவா ஸ்ரோர்ஸ்
பருத்தித்துறை வீதி,
நீர்வேலி.

அற்புத விநாயகர் அறிவு ஆலை
நீர்வேலி வடக்கு.

பவானி
களஞ்சியம்
இராஜ வீதி,
நீர்வேலி.

கரன் யுவலர்ஸ்
205, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்
T.P : 021 2226083

சுப வேனுஜா மோட்டார்
... திருத்தகமும்
...கரிப்பு நிலையமும்
குறுக்கு வீதி, நீர்வேலி.

கிருஷ்ணா பந்தல்
சேவை,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org